மேலாண்மைக் கணக்குப் பதிவியல்

[MANAGEMENT ACCOUNTANCY]

ரெ. நரசிம்மன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—658

மேலாண்மைக் கணக்குப் பதிவியல்

(பட்டப் படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

ஆசிரியர்

ரெ. நரசிம்மன், எம்.காம்.,
வணிகவியல் இணைப் பேராசிரியர்,
அரசினர் கலைக்கல்லூரி,
கோயம்புத்தூர்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1975

T.N.T.B.S. (C.P.) No. 658

© Government of Tamilnadu

MANAGEMENT ACCOUNTANCY

R. NARASIMHAN

Price Rs. 6·20

'Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by

M/s Metropolitan Printers.

Madras-600002

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந்தாண்டு கள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழி லேயே கற்று வருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம், பிற பல் துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர் களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சி யைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப்பொரு ளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற் பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'மேலாண்மைக் கணக்குப் பதிவியல்'** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 658 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 693 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்த தாகும். தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவி களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	மேலாண்மைக் கணக்குப் பதிவியல்	...	1
2.	மேலாண்மைக் கணக்குப் பதிவியல்— வரையறைச் செயற்பரப்பு	...	8
3.	நிதி நிர்வாகம்	...	12
4.	பட்ஜெட் கட்டுப்பாடு	...	45
5.	இறுதிநிலைச் செலவு	...	59
6.	முதலீட்டுத் தீர்மானம் –இலாபத்தன்மையை அறிதல்	...	86
7.	நிதி அறிக்கைகளைப் பகுத்தாராய்தல்	...	101
8.	நிதி நடமாட்ட அறிக்கை	...	137
9.	ரொக்க நடமாட்ட அறிக்கை	...	212
10.	மேற்கோள் நூற்பட்டியல்	...	227
11.	கலைச்சொற்கள்	...	228

1. மேலாண்மைக் கணக்குப் பதிவியல்

முன்னுரை

அவ்வப்போது மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப ஒரு தொழில் நிறுவனம் தன்னைச் சரிசெய்துகொள்ள வேண்டிய இக் காலத்தில் மேலாண்மைச் சிக்கல்கள் பெருகத் தொடங்கிவிட்டன. தொழிற் புரட்சிக்கு முன்னர் மனிதனின் தேவைகள் மிகக்குறைந்தே இருந்தன. பிறகு ஏற்பட்ட உலக மாற்றத்தில் மனிதனுடைய தேவைகள் பன்மடங்கு கூடியுள்ளன. இதன் காரணமாகத் தொழில் நிறுவனங்களின் அமைப்பிலும் மாறுதல் தோன்றி யுள்ளது. தனி வணிகநிறுவனங்கள் கூட்டுநிறுவனங்களாக மாறி, கால முன்னேற்றத்தில் கூட்டுப்பங்குக் கம்பெனிகளாக மலர்ந்தன. நிறுவன அமைப்பில், குறிப்பாக, நிருவாகமும் உரிமையும் பிரிந்தன. மேலும், அதன் விளைவாகப் பல மாறுதல்கள் தேவைப்பட்டன. அதன் முதற்படியாகக் கணக்கியல் கலை தோன்றியது. ஆரம்ப நிலையில் அது நிதிநிலைக் கணக்குப் பதிவாகவே (Financial Accounting) இருந்துவந்தது. பிறகு, காலப்போக்கில் மேலாண்மைக்கலை (Management) உருவாகியது. நெடுநாள்களாக நிதிநிலைக் கணக்குப் பதிவியல் மட்டுமே தேவைப்பட்டது. மேலாண்மைக் கணக்குப் பதிவியல் என்பது யாதோர் எண்ணமுமே இல்லாமல் இருந்தது.

நிதிநிலைக் கணக்குப் பதிவியல் அளிக்கும் செய்திகள் கூட்டுப் பங்குக் கம்பெனியின் கடனீந்தோர்களுக்கும் முதலீடு செய்யும் பங்கு தாரர்களுக்குமே உதவக்கூடியவைகளாக இருந்தன. மேலாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிதிநிலைக் கணக்குப் பதிவியல் அளிக்கும் செய்திகள் பயனற்றவையாக இருந்தனவா? உறுதியாக இல்லவே இல்லை. மேலாண்மை அதிகாரிகள் இக் கணக்குப் பதிவியலையே நம்பி இருந்தனர்.

1. ஒரு குறிப்பிட்ட காலத்தின் இலாபம்
2. ஒரு குறிப்பிட்ட கால முடிவில் தொழிலின் நிதிநிலை

3. குறிப்பிட்ட காலத்தின் வரிப் பொறுப்பு.

4. பங்குதாரர்களுக்கு அளிக்கக்கூடிய இலாப ஈவு.

மேற்கூறிய செய்திகளனைத்தும் மேலாண்மை அதிகாரிகளுக்கு மிகவும் இன்றியமையாத செய்திகளாகும். இவை யாவும் அளிப்பது நிதிநிலைக் கணக்குப் பதிவியல். ஆகையால், மேலாண்மைக் கணக்குப் பதிவியலில் என்ன புதிதாக உள்ளது என்ற வினு எழலாம். உண்மையில் மேலாண்மைக் கணக்குப்பதிவியல் என்பது புதிய புட்டியில் ஊற்றப்பட்ட பழைய மதுவன்று. நிதிநிலைக் கணக்குப் பதிவியலினிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ள ஒரு புதிய கொள்கை என்று அதைக் கருதுவது மிகத் தவருகும். ஆக, மேலாண்மைக் கணக்குப் பதிவியல் தோன்றிய வரலாற்றை ஆராய்வோம்.

இக் காலத்தில் தொழில் செய்வது மிகவும் கடினமானதாகும். பல சிக்கல்களில் சிக்கி நிற்கும் வியாபாரத்தை நடத்திச் செல்வது மேலாண்மை அதிகாரிகளுக்கு விடப்பட்ட அறைகூவலாக உள்ளது. தொழிலின் சிக்கல்களை அகத்தது, புறத்தது என்று புரிந்து கொள்ள லாம். பேராசிரியர் ஷெல்டன் கூறுவது போல, 'அமைப்பு என்பது பயனுள்ள ஒரு பொறியை உண்டாக்குவதாகும். மேலாண்மை என்பது பயனுள்ள நிருவாகியை உண்டாக்குவதாகும். நிருவாகம் என்பது அமைப்பைத் தீர்மானிக்கிறது. மேலாண்மை, அந்த நிருவா கத்தைப் பயன்படுத்துகிறது. மேலும், நிருவாகம் குறிக்கோளைக் குறிப்பிடுகிறது. மேலாண்மை அக் குறிக்கோளை அடைய முயற்சி செய்கிறது. அமைப்பு என்பது மேலாண்மையின் ஒரு தத்துவம் (The Philosophy of Management) போன்ற சாதனமாகும்'. மேலாண்மைக் கணக்குப் பதிவியல் என்பது மேற்கூறிய எல்லாச் சிக்கல்களையும் தீர்க்கக்கூடிய முயற்சி என்று ' கூறலாம். மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் வரையறையைக் காணுமுன் நிதிநிலைக் கணக்குப் பதிவியலின் வினைகளைக் காணலாம்.

பதிவு செய்தல்: கணக்குப் பதிவியலின் மூல வினையாகும். மனிதநினைவாற்றலில் எல்லா நடவடிக்கைகளையும் காலப்படி நினைவு வைத்துக் கொள்வது என்பது இயலாத செயல். ஆகவே, வியாபார நடவடிக்கைகளைக் கால வரிசைப்படுத்திப் பதிவுசெய்தல் என்பது கணக்குப் பதிவியலின் மிகத் தேவையான வினையாகிறது. அப்படிப் பதிவு செய்வதில் குறிப்பேடு, பேரேடு, அறிக்கை என்பன இடம் பெற்றன. அவ்வாறு நடவடிக்கைகள் மாறிமாறிப் பதிவு செய்யப் படும்பொழுது அவற்றின் உண்மைநிலை சற்றே மாறுபட்டு விடுகிறது.

உறுதிசெய்தல்: கணக்குப் பதிவியலால் பயனடைபவர்கள் அனைவரும், கணக்குப் பதிவியல் அறிக்கைகளிலும் கூற்றுகளிலும் அடங்கிய செய்திகள் முற்றிலும் உண்மையானதாக இருக்கும் என்று உறுதிப்படுத்தும் வண்ணம் அமைதல் இன்றியமையாததாகும்.

அறிவித்தல்: நிதிநிலை பற்றிய உண்மைகளைத் தேவைப்படுபவர்களுக்குத் தெரிவிக்கும் மொழியாகக் கணக்குப் பதிவியல் அமைய வேண்டும். பதிவு செய்தல் வினைக்குத் தொடர்பாக இவ் வினை கருதப்படுகிறது.

உட்பொருள் உணர்த்துதல்: தொழிலின் நிதிநிலைச் சிக்கலை அகற்றிக் காட்டி அதன் உண்மையான உட்பொருளை உணர்த்துதலே கணக்குப் பதிவியலின் சீரிய நோக்கமாகும்.

நிதிநிலைக் கணக்குப் பதிவின் குறைபாடுகள்

மேலாண்மையின் தேவைகளைப்பற்றி மிகைப்படுத்திக் கூறத் தேவையில்லை. அதில் கொள்கை முடிவெடுத்தல் (Decision making) என்பது மிகத் தேவையான, சிறப்பான வினையாகும். மேலாண்மையின் தனிச்சிறப்பே கொள்கை முடிவெடுத்தலில் அடங்கியுள்ளது எனக் கூறலாம். அக் கொள்கை முடிவெடுத்தலில் நிதிநிலைக் கணக்குப் பதிவியலின் தன்மை அவ் வுதவிசெய்யப் பயனற்றவையாக உள்ளது. அதாவது, மேலாண்மைக்கு, கொள்கை முடிவு செய்வதில் நிதிநிலைக் கணக்குப் பதிவியலின் பங்கு மிகக்குறைவே. இவ்வகையில் நிதிநிலைக் கணக்குப் பதிவியலின் குறைபாடுகளாவன:

1. **உட்பொருள் உணர்த்துதல்:** நிதிநிலைக் கணக்குப் பதிவியலில் அளிக்கப்படும் எண் இலக்கங்கள் நடவடிக்கைகளைப் பதிவுசெய்யும் நோக்குடன் எழுதப்பட்டவையாயிருந்தன. ஆனால், தற்பொழுது கணக்குப் பதிவியலின் முக்கியமான வினையாகச் சொல்லப்படுவது உட்பொருள் உணர்த்துதலே ஆகும். கணக்கரின்நிலை இன்று நிதி நிலை ஆலோசகர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

2. **தொழில்நுட்பத்துறைப் புரட்சியின் விளைவு:** தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக மேலாண்மையில் சிக்கல்கள் அதிகரித்துள்ளன. கட்டுப்பாட்டின் படிநிலை (Hierarchy of control) விரிவடைந்துள்ளது. கட்டுப்பாடு என்ற கொள்கை தீவிர வழக்கில் உள்ளது. திட்டப்படி செயற்படுதல் தேவையாகிறது. இவற்றுக்கெல்லாம் கணக்குப் பதிவியலில் அளிக்கப்பட்ட செய்திகள் விரிவானதாகவும் பகுத்துரைக்கப்பட்டதாகவும் தேவையாயிற்று. நிதிநிலைக் கணக்குப் பதிவியலில்

கொடுக்கும் செய்திகள் யாவும் மிகவும் எளிய ஆரம்பநிலைச் செய்திகளாகவே இருக்கின்றன.

3. திட்டத்தின் நிலை: வியாபாரத் தீர்மானங்கள் செய்கின்ற காலங்களில் மதிப்பீடுகள், எதிர்பார்த்துச் செயற்படுதல் போன்றவை மேலாண்மையின் குறிக்கோளாக விளங்குகின்றன. ஆகவே, இன்றைய பிரச்சினையாவது எவ்வாறு கடந்தகாலப் பதிவேடுகளைப் பயன்படுத்திப் பிற்காலத் தேவைக்குகந்த திட்டங்கள் தீட்டுவது என்பதேயாகும். இக் கோணத்தில் பார்க்கும்பொழுது எவ்வாறு சவப் பரிசோதனையில் விளங்கும் உண்மையில் யாதொரு பயனுமில்லையோ அவ்வாறே நிதிநிலைக் கணக்குப் பதிவியலின் நிலைமையைக் கூறலாம். புத்திசாலித்தனமாக அடுத்த ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பு எவ்வாறு அமையும் என்று கூறுவது பயனுள்ளதாகும். கடந்த ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பைப்பற்றிய எந்த ஆராய்ச்சியும் பயனற்றதாகும். பண்டைக்காலக் கணக்குப் பதிவியலில் இருந்து மாறுபட்ட கொள்கைகளே தற்காலத்தில் தேவை.

4, அரசின் தலையீடு: எந்த நாட்டிலும் அரசின் தலையீடு என்பது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆகவே, மேலாண்மை அதிகாரிகள் செயலாற்றும் பொழுது அரசின் தலையீடுகளைக் கருத்தில் கொண்டு யாதொரு தீர்மானமும் செய்யநேரிடும். நிதிநிலைக் கணக்குப் பதிவியலில் கடந்தகால இயக்கங்களைப் பற்றியே சொல்லும் நாம் இவ்வாறு புதிய காரணிகளைக் கருத்தில் கொள்ளக் காரணமில்லை.

5. மேலாண்மை நிலையின் தேவைகள்: மேலாண்மையைப் பல நிலைகளாகப் பிரிக்கலாம்: (அ) உயர்மட்ட மேலாண்மை (Top-Management), (ஆ) செயல்துறை அதிகாரி (Executive), (இ) செயல்முறைக் கண்காணிப்பாளர் (Operating Supervisor). இந்த மூன்று நிலை அதிகாரிகளுக்கும், தேவையான செய்திகளை அவர்களுடைய தேவைக்கேற்ப அளிக்கும் திறன் நிதிநிலைக் கணக்குப் பதிவியலுக்கில்லை. அதாவது, உயர்மேலாண்மையின் தேவை திட்டங்களைப் பற்றியது. அமைப்பின் மாற்றப்பட்ட அதிகாரங்கள் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதைப் பற்றியது. செயல்துறை அதிகாரிகள் என்ன நேர்ந்தது, எப்படி நேர்ந்தது, இம் முடிவுக்கு யார் பொறுப்பு என்று ஆராய்கின்றனர். செயல்முறைக் கண்காணிப்பாளர் திட்டத்திற்கும் நடைமுறைக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றியும் கணக்குப் பதிவியல் துறையில் இருந்து செய்திகளை எதிர்பார்க்கின்றனர். இப்படிப் பலதரப்பட்ட தேவைகளை நிதிநிலைக் கணக்குப் பதிவியல் நிறைவேற்றுவது என்பது இயலாத செயல்.

மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் தோற்றம்

கடந்த நூற்றாண்டுக் காலத்தில் கணக்குப் பதிவியலில் பல வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அம் மாறுதலின் நேர் விளைவாகப் பற்பல புதிய கொள்கைகள் கணக்குப் பதிவியலில் வந்தடைந்தன. அவையாவன: நிதிநிலை மற்றும் பொருள் அடக்கவிலைப் பதிவேடுகள் (Cost Records), மதிப்பீடு (Budget), மதிப்பீட்டுக் கட்டுப்பாடு (Budgetary Control). இவையனைத்தும் பண்டைக்கால நிதி நிலைக் கணக்குப் பதிவியலின் நிலையை மிகவும் சிறியதாக்கிவிட்டன. இம் மாற்றங்கள் அனைத்தும் உருப்பெற்று ஒரு புதிய கலையாகத் தோன்றியுள்ளது. அதுவே, மேலாண்மைக் கணக்குப் பதிவியல் என்ற சொற்றொடர் முதன்முதலாக ஆங்கிலேயக் கணக்கர்களின் குழு ஒன்றால் கையாளப்பட்டது. பிறகு, இக் கலை அமெரிக்கக் குடியரசிலும் புழக்கத்திற்கு வந்து நன்கு பயன்பட்டுவந்தது.

நிதிநிலைக் கணக்குப் பதிவியலும் மேலாண்மைக் கணக்குப் பதிவியலும்

நிதிநிலைக் கணக்குப் பதிவியலினின்று முற்றிலும் வேறுபட்டதாக மேலாண்மைக் கணக்குப் பதிவியல் கலை உள்ளது என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகும். ஏனெனில், மேலாண்மைக் கணக்குப் பதிவியலிலும் நிதிநிலைக் கணக்குப் பதிவியலிலிருந்தே செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன. உண்மையில் செய்திகளைத் தேவைக்கேற்பப் பகுத்துத் தொகுத்தளிப்பதே, அதாவது மேலாண்மையின் தேவையைக் கவனத்திற்கொண்டு அறிக்கைகளையும் கூற்றுகளையும் தயாரிப்பதே மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் குறிக்கோளாகும். இருப்பினும் இவைகளிடையே எழும் பின்வரும் வேறுபாடுகளைக் காணலாம்:

1. நிதிநிலைக் கணக்குப் பதிவியல் வியாபாரத்தின் முழு அமைப்புப்பற்றிய செய்திகளை அளிக்கின்றது. ஆனால், மேலாண்மைக் கணக்குப் பதிவியல் ஒரு பகுதிக்குரிய செய்திகளை மேலாண்மையின் தேவைக்கேற்ப அளிக்கிறது. இருப்புநிலைக் குறிப்பு, இலாபநட்டக் கணக்கு போன்ற நிதிநிலை அறிக்கைகள் வியாபாரத்தின் முழுமையான முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. ஆனால், மேலாண்மைக் கணக்குப் பதிவியல் அறிக்கைகள் வியாபாரத்தின் ஒரு குறிப்பிட்ட துறையையோ, பொருளையோ பற்றிய செய்திகளை மட்டும் அளிக்கிறது.

2. நிதிநிலைக் கணக்குப் பதிவியலில் கடந்தகாலத்தைப் பற்றிய பதிவுகளே உள்ளன. ஆனால், மேலாண்மைக் கணக்குப் பதிவியல் வருங்காலத்தைப் பற்றியே வலியுறுத்துகிறது. திட்டமிடுவதில் கடந்தகாலப் பதிவேடுகளைப் பயன்படுத்துவதல்லாமல்

வேறு எவ்வகையிலும் கடந்த கால நடவடிக்கைகளை மேலாண்மைக் கணக்குப் பதிவியல் கருதுவதில்லை.

3. மேலாண்மைக் கணக்குப் பதிவியலில் செய்திகளை அளிக்கும் விரைவு பற்றி மிகவும் வலியுறுத்தப்படுகிறது. அதாவது, இருப்பு நிலைக் குறிப்புப் பொதுவாக ஓராண்டுக் கால முடிவிலேயே தயார் செய்யப்படுகிறது. ஆனால், மேலாண்மைக் கணக்குப் பதிவியலில் அறிக்கைகள் குறுகிய கால அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன.

4. நிதிநிலைக் கணக்குப் பதிவியல் பணச்சார்புடைய கடந்த காலச் செய்திக்குறிப்புகளைக் கையாள்கிறது. ஆனால், மேலாண்மைக் கணக்குப் பதிவியல் வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு செய்தி களைப் பயன்படுத்துகிறது.

5. மேலாண்மைக் கணக்குப் பதிவியலில் செய்திகளின் நுட்பத்தைப்பற்றி அதிக அக்கறை இல்லை. பொதுவாக, நெருங்கிய அளவீடுகளைப் பற்றியே கவனம் கொண்டுள்ளது.

6. நிதிநிலைக் கணக்குப் பதிவியல் கடனீந்தோருக்காகவே செய்திகளை வெளியிடுவதால் வரையறுக்கப்பட்ட முறைப்படி வெளியிடுவது இன்றியமையாத தேவையாகிறது. ஆனால், மேலாண்மைக் கணக்குப் பதிவியலில் அளிக்கப்படும் செய்திகள், மேலாண்மைக்குதவும் செய்திகளை மட்டும் அளிப்பதாலும், வெளியாரின் தொடர்பு இல்லாமையாலும் செய்திகளை அளிப்பதில் ஒரு குறிப்பிட்ட வரைமுறை கிடையாது. ஆகவே, நிதிநிலைக் கணக்குப் பதிவியல் செய்திகளை மாற்றியமைக்க முடியாது (Inflexibility). அதே நேரத்தில் மேலாண்மைக் கணக்குப் பதிவியலில் அளிக்கப்படும் செய்திகளை எப்படி வேண்டுமானாலும் சூழ்நிலைக்கேற்ப மாற்றி அமைக்கலாம்.

7. நிதிநிலைக் கணக்குப் பதிவேடுகள் ஏறத்தாழ எல்லா அலுவலகங்களிலும் சட்டப்படி தேவையுள்ளதாக இருக்கின்றன. ஆனால், மேலாண்மைக் கணக்குப் பதிவியல் பெரிய நிறுவனங்களில் மட்டும் இன்றியமையாததாக இருக்கிறது. இருப்பினும் அது சட்டப்படி கட்டாயமில்லை.

நிதிநிலை நடவடிக்கைகளைப் பதிவு செய்வதனைக் கப்பலில் வேக நிலையறி படத்திற்கு (Log Chart) ஒப்பிடலாம். மேலாண்மைக் கணக்கரின் (Management Accountant) வினை, கப்பல் மாலுமியின் நிலைக்குப் பொருந்தும். அதாவது, எதிர்காலத்தைப் பற்றிய எண்ணமாகும்.

அடக்கவிலைக் கணக்குப் பதிவியல் (Cost Accountancy):

மேலாண்மைக் கணக்குப் பதிவியல் தோன்றிய வரலாற்றை அறியும் முயற்சியில் அடக்கவிலைக் கணக்குப் பதிவியல் பல முன்னேற்றங்களைப்பற்றிக் குறிப்பிட்டுத்தானாக வேண்டும். ஏனெனில், அடக்க விலைக் கணக்குப் பதிவியலின் படிப்படியான முன்னேற்றங்களே மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் வரலாற்றை நோக்குங்கால் பண்டைக்காலத்தில் ஒரு பொருளின் அடக்கவிலையை மட்டும் நிர்ணயிப்பதிலேயே கவனமாயிருந்தனர் என்பது தெளிவாகிறது. உற்பத்தி செய்த பொருளின் அடக்கவிலையைக் கணக்கிடும் பொழுது பல உத்திகள் கையாளப்பட்டன. ஒரு தொழிற்சாலையில் ஏற்படும் எல்லாச் செலவுகளையும் உற்பத்தி செய்யப்படும் பொருளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் அளவுக்குச் செலவுகளைப் பிரித்து ஒவ்வொரு பொருளினுடைய அடக்கவிலையில் சேர்த்தனர். இப்படிப் பொருளின் அடக்கவிலையைக் கணக்கிடுவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்திப் பயனில்லை என்பதும் இத் தகவலால் மேலாண்மை அதிகாரிகளுக்கு யாதொரு சிறப்புப் பயனும் ஏற்படவில்லை என்பதும் புலனாயிற்று. தீவிர ஆராய்ச்சியின் பயனாக அடக்கவிலைக் கட்டுப்பாடு (Cost control) என்ற புதிய கொள்கை உருவாயிற்று. இக் கொள்கை பல தொழில் நிறுவனங்களில் பரவலாகக் கையாளப்பட்டு வந்தது. இவ் வொழுங்குப்பாட்டில் மதிப்பீட்டுக் கட்டுப்பாடு (Budgetary control) திட்ட அடக்கவிலை (Standard cost) போன்ற உத்திகள் தோன்றின. அடக்கவியலில் ஏற்பட்ட இந்த முதல் முன்னேற்றம் அடக்கவிலைக் கணக்குப் பதிவியலை மேலாண்மையின் உதவிக்கு எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய எண்ணத்துக்கு முன்னோடியாக விளங்கியது. அடக்கவிலையியல் மேலாண்மைக்குப் பயன்படுத்தப்பட்ட கட்டத்திலிருந்து மேலாண்மைக் கணக்குப் பதிவியல் என்ற கலை உருவாகியது. மேலாண்மைக் கணக்குப் பதிவியலுக்கும், அடக்கவிலைக் கணக்குப் பதிவியலுக்கும் உள்ள தொடர்பைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

மேலாண்மைக் கணக்குப் பதிவியல் = உற்பத்தி அடக்கவிலை
+
அடக்கவிலைக் கட்டுப்பாடு
+
மேலாண்மைக் கலை

2. மேலாண்மைக் கணக்குப் பதிவியல் - வரையறைச் செயற்பரப்பு

மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் செயற்பரப்பு விரிவடைந்து கொண்டே போவதால் ஒரு முறையான, இறுதியான இலக்கண மொன்றை அமைத்தல் இயலாத செயலாகும். எனினும், மேலாண் மைக் கணக்குப் பதிவியலின் பல இலக்கணங்கள் உள்ளன. பின் வரும் இலக்கணங்களை நன்கு விவரித்துப் புரிந்துகொள்ளும்பொழுது மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் செயற்பரப்பு எல்லை இல்லாதது என்ற உண்மை தெளிவாகிறது.

1. 'மேலாண்மைக் கணக்குப் பதிவியலென்பது கணக்கியல் செய்திகள் எவ்வாறு மேலாண்மைக்குப் பயனளிக்கும் வகையில் தொடர்பு கொண்டுள்ளது என்பது பற்றியதாகும்.' (Robert N. Anthony).

2. 'மேலாண்மைக் கணக்குப் பதிவியல் பொதுக் கணக்குப் பதிவியலில் கையாளப்படும் உத்திகளையும் கொள்கைகளையும் குறிக்கிறது. மேலும், அவ் வுத்திகளுடன் கலந்த சிறப்பு அறிவு மேலாண்மைக்கு உதவும் வகையில் எவ்வாறு இலாபத்தை மிகவும் கூட்ட முடியும் அல்லது நட்டத்தை மிகவும் குறைக்க முடியும் என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறது.' (Dr. J. Batty).

3. 'மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் தலையாய நோக்கம் யாதெனில், கொள்கை முடிவெடுத்தலிலும், கட்டுப்பாட்டிலும் மேலாண்மைக்கு உதவுவதேயாகும்.' (Brown and Howard).

4. 'எத் தொழிலையும் எவ்வாறு சீரிய முறையில் நடத்தக்கூடும் என்று விளக்கக்கூடிய எந்தக் கணக்கியல் முறையையும் மேலாண்மைக் கணக்குப் பதிவியலாகக் கருதலாம்.' (Institute of Chartered Accountants of England and Wales).

மேலாண்மைக் கணக்குப் பதிவியல்பற்றி மேற்குறிப்பிட்டுள்ள இலக்கணங்கள் அனைத்தும் ஏறத்தாழ மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் முழுப்பொருளையும் செம்மையாக விளக்கும்படி அமைந்துள்ளன.

செயற்பரப்பு

1. **பொதுக் கணக்குப் பதிவியல்:** புறநடவடிக்கைகள், ரொக்க வரவுசெலவு நடவடிக்கைகள் முதலியவற்றைப் பதிவுசெய்தல் இதனுள் அடங்கும். முறையான நிதிநிலைக் கூற்றுகள் பேரேட்டிலிருந்து தயாரித்தல் முதலியனவாகும்.

2. **அடக்கவிலைக் கணக்குப் பதிவியல்:** அடக்கவிலைக் கணக்குப் பதிவியலில் கையாளப்படும் உத்திகள் அனைத்தும் மேலாண்மைக்குப் பயனளிக்கும் வகையில் அமைத்தல்.

3. **மதிப்பீடு செய்தலும் உய்த்துணர்ந்து கூறுதலும்:** மதிப்பீடுகள் தயாரித்தல், அம் மதிப்பீடுகளைக் கொண்டு எதிர்காலம் பற்றி உய்த்துணர்ந்து கூறல் (Forecasting) முதலியன இதனுள் அடங்கும்.

4. **அடக்கவிலைக் கட்டுப்பாடு முறை (Cost control):-** நிறுவனத்திற்குள் பயன்படுத்தப்படும் அறிக்கைகள், உண்மைநிலை வினைமுறைக்கும், திட்டமிட்ட வினைமுறைக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

5. **அடக்கவிலைப் புள்ளிவிவரம்:** வியாபாரத்தின் பல்வேறு துறைகளுக்கும் தேவையான அடக்கவிலை பற்றிய புள்ளிவிவரங்களை அளித்தல்.

6. **வருமான வரி:** வருமானவரிச் சட்டத்தின்படி வியாபாரத்தின் மொத்த வருமானத்தைக் கணக்கிடல், வருமானவரி கொடுத்தல் முதலியன பற்றியதாகும்.

மேலாண்மைக் கணக்கர் (Management Accountant)

மேலாண்மைக் கணக்கர், நிதிநிலைக் கணக்கரைப் போன்றவரல்லர். நிதிநிலைக் கணக்கரின் தொழில், கணக்குப் புத்தகங்களை முறைப்படி வைத்திருத்தலாகும். அவருடைய வேலை மாறா மரபு முறைப்படுத்தப்பட்டது. ஆகையால், அவருக்குச் சிறப்பறிவு வேறு எந்த வகையிலும் தேவைப்படுவதில்லை. ஆனால், மேலாண்மைக் கணக்கரின் நிலை இதனின்று மிகவும் மாறுபட்டது. மேலாண்மைக் கணக்கருக்கு எல்லாத் துறைகளிலும் சிறப்பறிவு பெற்றிருத்தல் மிகவும் தேவையுள்ளதாகும். கணக்குப் பதிவியல் துறை அறிவு

மட்டும் பெற்றிருந்தால் மேலாண்மைக் கணக்குப் பதிவியலின் அறை கூவலை எள்ளளவும் சமாளிக்க முடியாது. இந்தியாவில் மேலாண்மைக் கணக்கர் பதவி இந்துஸ்தான் லீவர், யூனியன் கார்பைடு போன்ற மிகப்பெரிய நிறுவனங்களில் மட்டும் செயல் அளவிலுள்ளன. அமெரிக்காவில் மேலாண்மைக் கணக்கரைக் கட்டுப்பாட்டு அதிகாரி (Controller) என்றழைக்கின்றனர். நிறுவனங்களின் மேலாண்மைக் கணக்கரின் நிலையை நோக்கும்பொழுது அவரைக் கட்டுப்பாட்டு அதிகாரி என்று அழைப்பது அவ்வளவுசரியன்று என்றே தோன்றுகிறது ஏனெனில், மேலாண்மைக் கணக்கருக்கு நேரடியாகக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் பொதுவாக வழங்கப்படுவதில்லை. அவர்களை நேர்அதிகாரிகள் (Line Officers) என்று கூறுவது தவறாகும். அவர்களுடைய உண்மைநிலை அலுவலர் அதிகாரிகள் (Staff Officers) என்பதே சரியாகும் ஆகையால், சில ஆசிரியர்கள் இவரைக் கட்டுப்பாட்டு அறிவுரையாளர் (Control Adviser) என்றழைக்கின்றனர்.

அமெரிக்கக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நிறுவனம் (Controller's Institute of America) கட்டுப்பாட்டு அதிகாரிகளின் பணிகளைப்பற்றி ஏழு முக்கியக் குறிப்புகளை அளிக்கின்றது. அவையாவன:

1. நிறுவனத்தின் செயல்திட்டங்களை உருவாக்குதல், இவ்வகையில் மேலாண்மைக்கு உறுதுணையாக இருத்தல், இலாபத்தைப் பற்றிய திட்டமிடுதல், முதலீடு செய்வதுபற்றித் திட்டமிடுதல், விற்பனை மதிப்பீடு, செலவுகள் மதிப்பீடு, திட்ட அடக்கவிலை நிருணயம் செய்தல் முதலியனபற்றி அத் திட்டத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

2. செயல்முறைக்கும், செயல்திட்டத்திற்கும் ஏற்படும் வேறுபாடுகளைக் கண்டறிந்து மேலாண்மையின் பல நிலை அதிகாரிகளுக்கும் அறிவித்தல்.

3. நிறுவனத்தின் நோக்கங்களையடைவதற்கு மேலாண்மையின் பல பகுதி அதிகாரிகளையும் கலந்தாலோசித்தல்.

4. வரிக்கொள்கைகளை நடைமுறையில் நிறைவேற்றல்.

5. அரசு செயல்துணை நிறுவனங்களுக்குத் தயார் செய்யும் அறிக்கைகளை ஒருங்கிணைத்தல், மேற்பார்வையிடுதல்.

6. போதிய கட்டுப்பாட்டு முறைகள், தேவையான ஈட்டுறுதி முதலியவை மூலம் நிறுவனத்தின் சொத்துகளின் பணமதிப்பைப் (Monetary value) பாதுகாத்தல்.

7. பொருளாதாரத்தில் ஏற்படும் மாறுதல்களை அறிந்து ஆராய்தல், தொழில் நிறுவனங்களிடம் அரசின் போக்குப்பற்றி மேலாண்மைக்கு அறிவுறுத்தல்.

மேற்கூறிய பணிகள் யாவையும் மேலாண்மைக் கணக்கரைப் பற்றி நாமொரு கருத்தமைக்க உதவுகிறது. மேற்கூறிய பணிகளைச் செயலாற்றுவதற்கு உண்மையிலேயே பல துறைகளில் சிறப்பறிவு பெற்றிருத்தல் தேவையென்பது புலனாகிறது.

மேலாண்மைக் கணக்கரின் தகுநிலை (Status of Management Accountant)

மேலாண்மையின் படிநிலையில் மேலாண்மைச் கணக்கரின் இடம் எத்தகையது என்பது பற்றிய பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. நிறுவனத்தில் அவருடைய நிலை அவருக்கு அளிக்கப்படும் பணிகளைப் பொறுத்தமைந்துள்ளது. மேலும், அவருக்கு அளிக்கப்படும் பணி அவருடைய வேலை ஒப்பந்தத்தைப் பொறுத்துள்ளது. எனவே, மேலாண்மைக் கணக்கரின் நிலை எல்லா நிறுவனங்களிலும் ஒன்றாக இருக்கத் தேவையில்லை. மேலாண்மைக் கணக்கரின் செய்திகளை ஆதாரமாக வைத்தெடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்கள் பயனற்றுப்போனால் அதன் பொறுப்பு யாருடையது? இவ் வினாவுக்குப் பதிலளிப்பது மிகவும் கடினம். மேலும், அது சூழ்நிலையைப் பொறுத்தது. உண்மைச் செய்திகளைச் சார்பற்று, திரித்துக்கூறாமல் மேலாண்மை அதிகாரிகள் எளிதாகப் பகுத்துணரும்படி அளித்திருந்தால் தவறுகளுக்கு மேலாண்மைக் கணக்கர் பொறுப்பேற்கத் தேவையில்லை. ஆனால், மேலாண்மைக் கணக்கர் அளிக்கும் செய்திகள் பொய்யானவையாகவோ, சார்புள்ளவையாகவோ இருப்பின் அவரளித்த செய்திகளினால் தவறான முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தால் அதன் முழுப்பொறுப்பையும் மேலாண்மைக் கணக்கரே ஏற்க வேண்டும் என்று ஜே. பேட்டி (J. Batty) கூறுகிறார். அவர் கூறுவதுபோல் மேலாண்மைக் கணக்கரின் தகுநிலை அவருடைய பொறுப்பையொட்டியுள்ளது என்று கூறலாம்.

3. நிதி நிருவாகம்

(Administration of Finance)

கூட்டுப்பங்குக் கம்பெனிகளில் நிதி நிருவாகம் என்பது ஒரு சிறந்த வினையாகும். பெருமளவு வணிகம் செய்யும் நிறுவனங்களில் நிதித்திட்டம் தயாரிப்பது மிகவும் இன்றியமையாததாகும். அவ்வாறு திட்டமிடுவதை இரு படிகளாகப் பிரிக்கலாம்: திட்டமிடுதல், திட்டத்திற்கு மேல்நடவடிக்கை எடுத்தல். முதற்கட்டத்தில் கம்பெனியைப் பதிவு செய்தல், பலவிதமான பங்குகளை வெளியிடுவதுபற்றித் தீர்மானம் எடுத்தல் முதலியனப்பற்றி முடிவெடுப்பதாகும். கம்பெனி அமைக்கப்பட்ட பிறகு நிதித்திட்டத்திற்கு மேல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். முதற்கட்டமான திட்டம் தீட்டுவதில் முதலாய செயல் கம்பெனியின் நிதித்தொகையைத் திரட்டுவது பற்றிய முடிவாகும்.

அதாவது, மொத்த முதலீட்டில் பங்குகள், கடன்பத்திரங்கள் என்ன விகிதத்தில் இருக்கவேண்டும் என்று முதலில் தீர்மானிக்கப்படுகின்றது. திட்டத்தில் கடன்பத்திரங்கள்மீதான வட்டி, சலுகைப் பங்குகள் மீதான இலாபஈவு விழுக்காடு முதலியன பற்றியும் தீர்மானிக்கப்படுகின்றன. இவைகளைப்பற்றித் தீர்மானிப்பதற்குக் கம்பெனி சார்ந்துள்ள தொழில் (industry), முதலீடு செய்யவிருக்கும் மக்களின் விருப்பு வெறுப்புகள் முதலியவற்றைக் கருத வேண்டும். திட்டமிடுவதில் குறுகிய கால அடிப்படையில் செய்யாது நெடுநாளைய பயனை மனத்திற்கொண்டு திட்டம் தீட்டுவது தேவையாகும்.

திட்டம்தீட்டுவதன் இன்றியமையாமையை மிகைப்படுத்திக்கூறத் தேவையில்லை. திட்டமிடுவது என்பது எவ்விதத்திலும் நன்மை பயக்கும் என்ற உண்மையைக் கூறித் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. புதியதாகத் தொடங்கப்பட்ட பல நிறுவனங்கள் நிதித் திட்டம் தீட்டாமையால் தொடங்கிய சுறுசுறுப்புடனே மூடப்படுவதை

யும் கண்கூடாகப் பார்க்கிறோம். கம்பெனிகள் சரியாகத் திட்டத்தைத் தயாரிக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்தவே 'காளான்' போன்று கிளைத்தெழும் கம்பெனிகளில் முதலீடு செய்யும் மக்களுக்கு ஏற்படும் அல்லல்களைக் களையவே, கம்பெனியின் தகவல் அறிக்கையில் குறைந்தவளவு பங்கெடுப்புப் பற்றிய முழுவிவரமும் அளிக்கப்பட வேண்டும் என்று சட்டம் வற்புறுத்துகிறது. உதாரணமாக, ஒரு கம்பெனி ரூ. 10 இலட்சத்திற்கு இயந்திரச் சாதனங்கள் வாங்குவதாக வைத்துக்கொள்வோம். இரண்டு ஆண்டுகள் சென்ற பிறகு அவ் வியந்திரத்தில் ஓர் உறுப்புப் பழுது அடைந்துவிட்டது எனக் கொள்வோம். அவ்வாறு பழுதடைந்த உறுப்பிற்குப் பதிலாக மாற்றுறுப்பு வாங்க ரூ. 2 இலட்சம் தேவைப்படுகிறது என்று கொள்வோம். அச் சமயத்தில் கம்பெனியிடம் ரூ. 2 இலட்சம் இருக்கவேண்டும். அத் தொகையைக் கம்பெனி சமாளிக்க இயலவில்லை என்றால் இயந்திரத்தை வாங்கி என்ன பயன்? ஆகவே, கம்பெனியின் நெடுங்காலத் தேவைகளையும் கருத்திற்கொண்டு அவ்வாறு ஏற்படும் வருநிகழ்வுகளுக்கும் திட்டத்தில் போதுமான அளவுக்குத் தொகை ஒதுக்கி இருக்கவேண்டும். கம்பெனியின் தற்காலத் தேவைகளை மட்டும் கருத்திற்கொண்டு திட்டமிடுவது என்பது பாழுங்கிணற்றைக் கண்ணை மூடிக்கொண்டு கடப்பதற்கு ஒப்பாகும்.

திட்டமிடுவதில் கருத்திற்கொள்ள வேண்டியவை

நிதித்திட்டம் தீட்டுவதில் பின்வரும் காரணிகளைக் கருத்திற் கொள்ளுதல் மிக இன்றியமையாததாகும்:

1. எத் திட்டமும் கம்பெனியின் நிதி அமைப்பைச் சிக்கலாக்கக் கூடாது; மிகவும் எளிதான ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். கம்பெனியின் நிதியமைப்பு ஒரு சிலந்திக் கூடாகக் காட்சி அளிக்கக் கூடாது. அதாவது, பார்ப்பவர்கள் எளிதில் அமைப்பைப் புரிந்து கொள்ளும் வண்ணம் இருக்கவேண்டும். யாரிடமும் ஒரு கருத்தை நேரிடையாகச் சொன்னால் ஒப்புக்கொண்டு விடுவார்கள். ஆனால், அதே கருத்தைத் தேவையற்ற பல சொற்களை அடுக்கிக் கேட்பவர் வியக்கும்படி சொல்லிமுடித்தால் கேட்பவரின் ஐயம் மேலோங்கி அக் கருத்தை ஒப்புக்கொள்ளாமல் மறுக்கவும் செய்யலாம். எனவே, நிதி அமைப்பில் யாதோர் ஐயமும் ஏற்படாவண்ணம் மிக எளிய முறையில் அமைக்கவேண்டும். கம்பெனியின் நோக்கங்களை அடைவதற்கு வேண்டியஅளவு முதலை மட்டும் திரட்டுவது என்றால் நிதி அமைப்பு உறுதியாகச் சிக்கலற்று இருக்கும். ஆகவே, நோக்கச் சரத்தை வீணாக விவரித்து எழுதும் போக்கைக் கண்டிக்கவேண்டும்.

2. நிதியியல் மேலாளரின் தொலைநோக்கும் கண்கள், கம்பெனியின் நடப்பிற்குத் தேவையான நிதியைச் சரியாக மதிப்பிட வேண்டும். இஃது அவரின் சரியான தொலைநோக்கும் திறனைப் பொறுத்தது. இச் செயல் எள்ளளவுகூட எளிதானதன்று. பல சந்தை நிலவர ஆய்வுகள் கூறும் கருத்துகள் மிகவும் நிலையற்றவை.

3 திரட்டப்படும் நிதியில் ஒவ்வொரு ரூபாயும், ஏன், ஒவ்வொரு காசும் முழு அளவு பயன்படுத்தப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் கம்பெனியில் பயன்படுத்தா நிதி (idle fund) அறவே இருக்கக்கூடாது. மேலும், நிலைமுதலும் நடைமுதலும் சரியாகக் கணக்கிடப்படுவது என்பதும் மிகவும் கவனிக்கப்படவேண்டிய தாகும். ஏனெனில், நடைமுதல் மிகையாக இருந்தால் நிலைமுதலாகப் பயன்படுத்தமுடியாது. அதுபோலவே நிதிநிலை முதல் மிகையாக இருந்தால் அம் மிகையை நடைமுதலாகப் பயன்படுத்துவது நிதியை வீணடிப்பது போலாகும்.

4. தொழில் செய்வதில் எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்ச்சிகள் என்பது மிகச் சாதாரணம். ஆகவே, தொழிலுக்குத் தகுந்தாற்போல், வருநிகழ்வுகளுக்காகக் (Contingencies) காத்துக்கொள்ளல் ஓரளவு தவிர்க்க முடியாததாகும். இதை மெத்தனமாக அலட்சியப் படுத்துவதோ தேவையற்ற அளவு மிகைப்படுத்திக் காட்டுவதோ கூடாது.

5. பிறகு, கம்பெனியின் நிலையையும் கருத்திற் கொள்ள வேண்டும். கடன்பத்திரங்களை மக்கள் விரும்புகிறார்கள் என்ற காரணத்திற்காக மட்டும் அவைகளை வெளியிடுதல் கூடாது. கம்பெனியின் நலனைப் பாதுகாக்கப் பங்குகளை வெளியிடுதலே சிறந்தது என்ற நிலையில், கடன்பத்திரங்கள் மக்களை ஈர்க்கின்றன என்ற காரணத்திற்காக அவைகளைக் வெளியிடக் கூடாது. பொதுவாக, எக் கம்பெனியும் பணம் திரட்டும்பொழுது மக்களிடையே மிகவும் செல்வாக்குள்ள பத்திரங்களையே வெளியிட வேண்டும். சந்தை நிலவ்ரம் துணையாக இல்லாமல் இருக்கும்பொழுது மக்களுக்கு நம்பிக்கையூட்டும் பத்திரங்களான கடன்பத்திரங்களை வெளியிட வேண்டும். ஆக, பத்திரங்கள் சந்தையின் நிலவரத்தையும் மனத்திற் கொண்டு கடன்பத்திரங்களையோ, பங்குகளையோ வெளியிட வேண்டும்.

6. பத்திரங்களை வெளியிடுவதுபற்றிய முடிவு கம்பெனியின் மதிப்புள்ள சொத்துகளைப் பொறுத்தது. அதாவது, மதிப்புள்ள சொத்துகள் இருந்தாலன்றிக் கம்பெனி கடன்பத்திரங்களை வெளி

யிடுதல் இயலாத செயல், இதன் காரணம் வெற்றுக்கடன் பத்திரங் களை (Naked Debentures) மக்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை.

7. கடன்பத்திரங்கள் அல்லது பங்குகள் வெளியிடுவது கம்பெனியின் வருமானத் திறனையும் பொறுத்துள்ளது.

பின்வரும் விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:

(அ) நிலையான செலவுகள், வட்டி முதலியனவற்றின் மொத்தத் தொகை எதிர்பார்க்கப்படும் இலாபத்தைவிட மிகவும் குறைவாக இருக்க வேண்டும். அதாவது, இலாபம் அவற்றைப்போல் குறைந்தது இரு மடங்கு இருக்க வேண்டும்.

(ஆ) நிலையான செலவுகளைக் கழித்த பிறகு உள்ள மிகுதியில் முக்கால் பங்கு சலுகைப் பங்குகளின் இலாப ஈவிற்காக ஒதுக்கப்பட வேண்டும்.

(இ) வருமானம் ஒரு சீராக இல்லாத கம்பெனிகள் சாதாரணப் பங்குகளைத்தாம் வெளியிடவேண்டும்.

8. கம்பெனி தோற்றுவிப்பாளர்கள் முதன்மையாகக் கருதுவது யாதெனில் எப்படியாகிலும் கம்பெனியின் மேலாண்மையைத் தங்களுடைய கைக்குள் அடக்கவேண்டும் என்பதாகும். அதிகாரத்தை விட்டுக்கொடுக்க விரும்பாத தோற்றுவிப்பாளர்கள் சாதாரணப் பங்குகளை மக்களுக்கு அதிகம் அளிக்க விரும்புவதில்லை.

இப்படிக் கூறப்பட்ட பல கருத்துகளையும் நன்ருக ஆய்வு செய்து ஒரு சரியான திட்டம் வகுப்பது நிதியியல் மேலாளரின் திறமை மிக்கதொரு பணியாகும்.

முதலாக்கல் (Capitalisation)

முன் காலங்களில் முதல் என்பது முதன்மையாக நிலைமுதலைத் தான் குறித்து வந்தது. ஆனால், இந் நாள்களில் முதல் என்னும் சொல் நடைமுறை முதலையும் குறிப்பிடுகிறது. சில தொழில்களில் மொத்த முதலீட்டில் பெரும்பகுதிகூட நடைமுறை முதலுக்குத் தேவைப்படுகிறது. கம்பெனி நிதியியல் வல்லுநர்கள் முதலாக்கல் என்ற சொல்லிற்கு ஒரு பொதுவான இலக்கணத்தை ஒப்புக் கொள் கின்றனர். திரு. டீவிங் (Dewing) கூறுவதுபோல் 'முதலாக்கல் என்ற சொல் பங்குத்தொகுப்பையும் கடன்களையும் குறிப்பிடுகிறது'. முதலாக்கல் என்ற சொல் மொத்தத் தொகை, முதலின் வடிவம், முதல்நிருவாகம் இம் மூன்றையும் உள்ளடக்கியுள்ளது என்று கூறலாம்.

முதலாக்கல்-கொள்கை

ஒரு கம்பெனி வெளியிட வேண்டிய பங்குகள் கடன் பத்திரங்களின் மொத்தத் தொகையைக் கணக்கிடுவதில் பின்வரும் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன:

1. சொத்துகளின் அடக்கவிலைத் தொகைக்குச் சமமான அளவுக்குக் கம்பெனிப் பங்குகள், கடன்பத்திரங்கள் வெளியிட வேண்டும். சொத்துகளைக் கணக்கிடும்பொழுது அமைப்புச் செலவுகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

2. ஒவ்வொரு தொழிலிலும் முதலீட்டிற்கு மீள்வரவு (Return) எவ்வளவு விழுக்காடு என்று ஒரு பொதுக்கருத்து இருக்கக் கூடும். ஒரு கம்பெனி அத் தொழிலைத் தொடங்கும் முன்னர்த் தானடைய வேண்டிய இலாப இலக்கிற்குத் தேவையான முதலீட்டைப் பற்றி முடிவு செய்கிறது. இவ்வாறு கம்பெனியின் எதிர்பார்க்கப்படும் மீள்வரவைக் குறிக்கோளாகக் கொண்டு கம்பெனியின் முதலீட்டை நிருணயம் செய்யலாம்.

மிகைமுதலாக்கல் (Over Capitalisation)

கம்பெனி ஒரு தேதியில் வெளியிட்ட பங்குகள், கடன்பத்திரங்களின் மொத்தத் தொகை அக் கம்பெனியின் நிலையான சொத்துகளின் உண்மையான மதிப்பைவிட அதிகமாக இருப்பின் அந் நிலைக்கு மிகைமுதலாக்கல் நிலை என்று பெயர். பொதுவாக இச் சொல்லுக்குப் பெரும்பாலோர் தவறான கருத்தைக் கொண்டுள்ளனர். மிகை முதலாக்கல் என்பது அதிகப்படியான முதலை (Excessive capital) மட்டும் குறிப்பிடாது. இலாபகரமான முறையில் உபயோகப் படுத்த முடியாதிருக்கும் கூடுதலான முதலையே குறிக்கும்.

எ.கா. ஒரு கம்பெனி ஆண்டொன்றுக்கு ரூ. 50,000 இலாபம் அடைகிறது. அக் கம்பெனியின் தொழிலில் பொதுவாக 20% இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது. அக் கம்பெனியின் சரியான முதல் $\frac{50,000}{20} \times 100 =$ ரூ 2,50,000 ஆகும். அக் கம்பெனி இத் தொகைக்கு மேலாகப் பங்கு, கடன்பத்திரங்கள் வெளியிட்டு இருந்தால் அந் நிலைக்கு மிகைமுதலாக்கல் என்று பெயர்.

மிகைமுதலாக்கலின் காரணங்கள்: மிகைமுதலாக்கல் நிலை என்பது திடீரென்று ஏற்பட்டுவிடக்கூடியதன்று. பின்வரும் பல காரணங்களின் மொத்த விளைவாகவே மிகைமுதலாக்கல் நிலை உருவாக்கப்படுகிறது.

சில நேரங்களில் கம்பெனிகள் கூட்டுவணிகத்திலிருந்து மாற்றப் பட்டவைகளாக இருக்கும். கூட்டுவணிகத்தில் கூட்டாளியாக இருந்தவர்கள் கம்பெனியிலும் பெரும் பங்கைப் பெற்றவர்களாக இருப்பார்கள். அக் காலத்தில் சொத்துகள் மாற்றப்படும்போது வேண்டுமென்றே விலையைக் கூட்டி இருக்கக்கூடும்.

2. பணவீக்கச் சூழ்நிலைகளில் புதிதாகத் துவங்கப்படும் கம்பெனிகள் புதிதாக வாங்கப்படும் சொத்துகளுக்கும் இயந்திரச் சாதனங்களைப் பொருத்துவதற்கும் மிகவும் அதிகமான விலை கொடுக்க நேரிடும்.

3. கம்பெனியின் துவக்கத்திற்காக ஆன செலவுகளைத் தோற்று விப்பாளருக்குக் கம்பெனி ஈடு செய்ய வேண்டும். சில பேராசை பிடித்த தோற்றுவிப்பாளர்கள் தங்களுடைய செலவினங்களை மிகைப் படுத்தி அதிகமானதொரு தொகையைக் கம்பெனியிடம் பெற்றிருக்க லாம். அக் கூடுதலான தொகை கம்பெனிக்கு நட்டமாகும். ஏனெனில், அந்தச் சொத்து ஒரு பெயரளவுச் சொத்தேயாகும்.

4. செவ்வனே நடக்கும் தொழிலை ஒரு கம்பெனி வாங்கும் பொழுது தொழில் நன்மதிப்புக்காக (Good Will) ஒரு தொகை கொடுக்க நேரிடுகிறது. அவ்வாறு கொடுக்கப்பட்ட தொகை சொத் தாகக் கருதப்படுகிறது. சில நேரங்களில் நன்மதிப்புக்காக அதிக மான தொகை கொடுக்க நேரிடுகிறது.

5. ஒரே சீரான, நிலையான சொத்துகளின்மீது தேய்மானம் எழுதப்பட வேண்டியது மிகத் தேவையாகும். அவ்வாறு தேய்மானத் திற்காகச் சரியான தொகை ஒதுக்கப்படாத காரணத்தால் சொத்து களின் மதிப்பு ஏட்டுமதிப்பைவிட மிகக் குறைவாக இருக்கலாம்.

6. அதிக வரி விகிதங்களும் கம்பெனிக்கு முடிவாகக் கிடைக்கக் கூடிய இலாப மிகுதி நிலையைப் பெருவாரியாகப் பாதிக்கிறது. அதிக வரி விகிதங்களின் காரணமாக, கம்பெனியின் இலாபமிகுதி குறைந்து கம்பெனியின் நடைமுறைத் திறமையைப் பாதித்துக் கம்பெனியின் பங்குகளின் உண்மை மதிப்பையும் குறையச்செய்கிறது.

7. கடன்பத்திரங்களை வெளியிடுவதற்குச் சாதகமான சூழ்நிலை சந்தையில் இருப்பதால் பல கம்பெனிகள் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் வெளியிடுகின்றன. ஆனால், அக் கம்பெனிகளுக்கு அவ்வாறு பெற்ற நிதி உடனே தேவைப்படுவதில்லை. இவ்வாறாகக் கம்பெனியிடம் தேவைப்படாத நிதி சேர்ந்து விடுகிறது.

2

மிகை முதலாக்கலின் விளைவுகள்

1 கம்பெனியின் இலாப ஈட்டுத்திறன் (Profit Earning Capacity) குறைந்து விடுகிறது. இதன் விளைவாகப் பங்குச் சந்தையில் இக் கம்பெனியின் பங்கின் விலை சரிந்துவிடுகின்றது. மேலும் இக் கம்பெனியில் புதிதாக வெளியிடும் பங்குகளுக்கு மதிப்பிருப்பதில்லை. அந் நேரங்களில் சொத்துகளின் தேய்மானம் எழுதாமலிருத்தல், பராமரிப்புச் செலவுகளைக் குறைத்தல் போன்ற செயற்கை வழிகளில் ஈடுபடலாம். ஆனால், அக் கம்பெனிக்குத்தான் மேலும் தீங்குகள் விளையுமேயொழிய மிகைமுதலாக்கலின் தவறுகளைச் சரிக்கட்ட முடியாது.

2. கம்பெனியின் பங்குதாரர்களும் ஓரளவு பாதிக்கப்படுகிறார்கள். மிகை முதலாக்கப்பட்டுள்ள கம்பெனிகள், பங்குதாரர்களை ஏமாற்றுகிறது என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில், பங்குகளை வெளியிடும்போது கம்பெனி இலாபஈட்டுத் திறனைப் பற்றித் தவறான அபிப்பிராயம் ஏற்படுத்துகின்றது. இதனால், பங்குதாரர்கள் தங்கள் பங்குகளை விற்பதைத் தவிர வேறு வழியின்றித் தவிக்க நேரிடுகிறது.

3. மிகைமுதலாக்கப்பட்டுள்ள கம்பெனிகளால் நுகர்வோர்களும் பாதிக்கப்படுகின்றனர். அக் கம்பெனிகள் வேறு வழியின்றிப் பொருள்களின் விலையைக் கூட்டி விற்கின்றனர். அல்லது பொருளின் தரத்தைக் குறைக்கின்றனர். ஆகையால், மிகைமுதலாக்கப்பட்டுள்ள கம்பெனிகள் நுகர்வோருக்குப் பெரும் தீங்கிழைக்கின்றன.

மிகை முதலாக்கல் சூழ்நிலையிலிருந்து விடுபடும் வழிகள்:

1. கடன் பத்திரங்கள் மற்றுமுள்ள வெளிக்கடன்களை முடிந்த அளவு அடைக்க வேண்டும்.

2. கடன்பத்திரங்களின்மீது கடன் அளித்தவர்களை வட்டியைக் குறைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளலாம்.

3. அதிக இலாப ஈவு அளிக்க வேண்டிய சலுகைப் பங்குகள் இருந்தால் அச் சலுகைப் பங்குகளை மீட்பதற்கு முயற்சிக்கலாம்.

4. பங்குகளின் முகமதிப்பைக் குறைத்தல்.

குறை முதலாக்கல் (Under Capitalisation): மிகை முதலாக்கலுக்கு எதிரான ஒரு சூழ்நிலையைக் குறை முதலாக்கல் எனலாம். இந் நிலையில்

கம்பெனியின் சொத்துகளின் உண்மை மதிப்பு ஏட்டுமதிப்பைவிட கூடுதலாக இருக்கும். கம்பெனியின் உண்மையான இலாப ஈட்டுத் திறன் அதிகமாக இருக்கும். கம்பெனியின் இலாப ஈட்டுத் திறனைக் குறைத்து மதிப்பீடு செய்வதால் ஏற்படும் நிலையே குறைமுதலாக்க மாகும்.

காரணங்கள்:

1. கம்பெனியின் இலாபஈட்டுத்திறனைக் குறைத்து மதிப்பீடு செய்து முதலீட்டை நிருணயிக்கிறோம். பிறகு உண்மையில் கம்பெனியின் மீள்வரவு விகிதம் (Rate of Return) எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும்பொழுது, பழைய மதிப்பீடு தவறாகி விடுகிறது.

2. கம்பெனியின் திறமை சீரமைப்பு (Rationalisation) மூலம் கூடுகிறது. திறமை கூடுவதால் கம்பெனியின் இலாபஈட்டுத் திறனும் கூடுகிறது.

3. இலாபஈவுக் கொள்கையைப் பொறுத்தும் குறை முதலாக்கல் நிலை ஏற்படலாம். சில கம்பெனிகள் இலாப ஈவு அளிப்பதில் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் குறைவான இலாப ஈவையே அறிவிக்கின்றன. இக் கொள்கையால் வருடந்தோறும் கம்பெனியின் இலாப மிகுதி அதிகரித்துக் கொண்டே போகின்றது. இதன் மொத்த விளைவாகக் கம்பெனியின் சொத்துகளின் மதிப்பு ஏட்டுமதிப்பைவிடக் கூடுதலாக இருக்கிறது.

4. கம்பெனியின் இலாபம் எதிர்பாராமல் கூடுவதாலும் குறை முதலாக்கல் நிலையைக் கம்பெனி அடைந்து விடுகின்றது. மந்த நிலையிலிருந்து மிகைஇலாபநிலைக்குத் தள்ளப்படுவதாலும் கம்பெனி யின் இலாபம் திடீரென்று உயருகின்றது.

விளைவுகள்:

1. மீள்வரவு விகிதம் தற்செயலாக அதிகமாக இருப்பதால் இத் தொழிலின் இலாபஈட்டுத்திறன் அதிகமாக உள்ளது என்ற தவறான எண்ணத்தால், போட்டியிடுபவர்களின் கண்களுக்கு இரை யாகிறது. பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிக்கின்ற வீண் போட்டிகள் இதனால் வளர்க்கப்படுகின்றன.

2. கம்பெனிக்குக் கூடுதலான இலாபநிலையில் வருமானவரிப் பொறுப்பும் கூடுகின்றது.

3. கம்பெனி அதிக இலாபமடைகிறது என்ற தவறான எண்ணத் தால் தொழிலாளர்கள் கூடுதலான ஊக்க ஊதியம் வேண்டுமென்று

கோருகின்றனர்; மேலும், பல கோரிக்கைகளை நிறைவேற்றும்படி மேலாண்மையைக் கட்டாயப்படுத்துகின்றனர்.

4. நுகர்வோர்களும் தங்களுடைய மனக்குறையை வெளிப் படுத்துகின்றனர்; தாங்கள் வாங்கும் பொருளைத் தயாரிக்கும் கம்பெனி அதிக இலாப மடைகிறது என்ற எண்ணத்தால், பொருளின் விலையைக் குறைக்கும்படி நுகர்வோரின் எதிர்ப்பு (Consumer resistance) வலுவடைகிறது.

5. அதிக இலாபமுடைய தொழிலோ, நிறுவனமோ எளிதில் அரசுடைமையாக்கப்படும் வாய்ப்புடையதாக இருக்கிறது. அல்லது அக் கம்பெனிமீது அரசு சில கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டு வரலாம்.

குறைமுதலாக்கல் சூழ்நிலையிலிருந்து விடுபடும் வழிகள்

1. பங்குகளின் எண்ணிக்கையைக் கூட்டுதல். அதாவது பங்கு களைப் பிரித்து ஒரு பங்கின் மீதான இலாப விகிதத்தை இந் நட வடிக்கைமூலம் குறைக்கலாம்.

2. மேலூதியப் பங்குகள் (Bonus Shares) வெளியிடுவதன்மூலம் குறைமுதலாக்கல் நிலையிலிருந்து விடுபடலாம்.

3. எல்லாச் சொத்துகளையும், பொறுப்புகளையும் மறுமதிப்புச் செய்து, பழைய பங்குகளுக்குப் பதிலாகப் புதுப்பங்குகளை வெளியிடுதல்.

மிகைவணிகமும் குறைவணிகமும் (Over Trading and Under Trading): மிகை வணிகம் என்ற சொல் ஒரு நிறுவனத்தின் நிகர நடை முறை முதலைத் தொடர்பு கொண்டுள்ளது. சரியாகக் கூறப்போனால் இது கம்பெனியின் ரொக்கத்திற்குத் தொடர்பான ஒரு விளைவாகும். வியாபாரத்தில் போட்ட முதல் மீட்புக் காலத்தைக் கணக்கிடாமல் மேன்மேலும் முதலைக் கூட்டிக்கொண்டே போனால் கம்பெனியைத் திடீரென்று கலக்கக்கூடிய நிலை ஏற்படும். ஏனெனில், இயந்திரம் (கம்பெனி) இயங்குவதற்குத் தேவையான எரிபொருள் போன்ற மைந்த ரொக்கம் தீர்ந்து விடுகிறது. அதாவது நடைமுறை முதல் பற்றுக்குறையுள்ள நிறுவனங்கள், மற்றும் புதிய இயந்திரச் சாதனங்களை வாங்கமுடியாமல் திணறும் நிறுவனங்கள், மிகை வணிகம் செய்கின்றன என்று கூறலாம்.

செயல் அளவை போதுமான ரொக்கமில்லாமல் கூட்டுவதை மிகை வணிகம் எனலாம். இதன் விளைவு மிகவும் ஆபத்தானதாகும்.

மிகைவணிகம் செய்யும் நிறுவனத்தை இரத்தம் குறைவான மனிதனுக்கு ஒப்பிடலாம். தன்னுடைய திறனுக்கு அதிகமாக வேலை செய்ய முற்பட்டு விரைவிலேயே களைப்படைவதுபோல மிகை வணிகம் செய்யும் நிறுவனமும் விரைவிலேயே சுறுசுறுப்பை இழந்து விடுகிறது. விளையாட்டு ஊதற்பையின் (Balloon) கொள்ளவுக்கு அதிகமாகக் காற்று அடைப்பதற்கு மிகைவணிகத்தை ஒப்பிடு கின்றனர். பழமொழி கூறுவதுபோல் அதிகமான இரும்புத் துண்டுகளை நெருப்பிலிட்டால் ஒன்றுகூட உருப்படியாகத் தேறுவ தில்லை. இன்னும் கூறப்போனால் கடைசியில் நெருப்பு அணைகிறதே தவிர இரும்புத் துண்டுகள் ஒன்றுகூடத் தீயில் காய்வதில்லை.

காரணங்கள்: மிகைவணிகத்தின் காரணங்களைப் புறச் சார்பானது, அகச்சார்பானது என்று பிரித்துக் கூறலாம். எல்லாவித நிறுவனங்களையும் பாதிக்கும் காரணங்களைப் புறச்சார்பானது என்றும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைமட்டும் பாதிக்கும் காரணங்களை அகச்சார்பானது என்றும் கூறலாம்.

புறச்சார்பான காரணங்கள்

(அ) பண வீக்கமும் அதன் விளைவுகளான விலையேற்றமும், ஊதிய மேற்றமும் மிகை வணிகத்திற்கு முதற்காரணம் என்று கூறலாம். பணவீக்கத்தால் நடைமுறைச் செலவுகள் அதிகரிக்கின்றன; புதுப்பிக்கும் செலவுகள் கூடுகின்றன. அளவு மீறிய சரக்கு இருப்பு வைப்பதற்கு அதிக அளவுப் பணம் தேவைப்படுகின்றது.

(ஆ) கச்சாப்பொருள்கள் பற்றுக்குறை ஏற்படும்பொழுது அதிக அளவு இருப்பு வைத்திருப்பது இன்றியமையாததாகும். சில வகைக் கச்சாப்பொருள்கள் கிடைக்காமையால் சில பொருள்களைத் தயாரிப்பதோ, விற்பதோ கடினமான செயலாகிறது.

(இ) மிகக் கூடுதலான வரிவிகிதங்களால் கம்பெனியின் இறுதி இலாப மிகுதி மிகவும் பாதிக்கப்படுகிறது. மேலும் இலாபம் முழுவதும் ரொக்கமாகக் கிடைப்பதில்லை. ஆனால், இலாபத்தில் சரி பகுதியை வருமான வரியாக ரொக்கமாகக் கட்டவேண்டியுள்ளது. இது கம்பெனியின் ரொக்க நிலையைப் பெருமளவில் பாதிக்கின்றது.

அகச்சார்பான காரணங்கள்:

1. நடைமுறைமுதல் குறைவதால் ரொக்கம் குறைகிறது. ஒரு நிறுவனத்தின் ரொக்க நிலை பின்வரும் நடவடிக்கைகளால் குறையக் கூடும்:-

(அ) நீண்டகாலக் கடன்களைக் காலவரையறை முடிவதற்கு முன்பே மீட்புச் செய்தல்

(ஆ) அதிகப்படியான இலாப ஈவு அளித்தல்.

(இ) முதலீடுகள் வாங்குதல்.

(ஈ) நிலையான சொத்துகள் வாங்குதல்.

(உ) ஆண்டுதோறும் ஏற்படும் வியாபார நட்டம்.

2. அதிக வளர்ச்சி, சண்டைக் காலங்களிலும் நெருக்கடி நேரங்களிலும் உயர்ந்த அளவு உற்பத்திமீது கவனம் செலுத்தப்படுகின்றது. வியாபாரம் விரிவடையும் சமயம் தேவைப்படும் நடைமுறை முதலைப்பற்றிக் கவனம் செலுத்தாமையால் மிகைவணிகத்தில் முடிகிறது.

மிகை வணிகத்தின் அறிகுறிகள்

1. கடனாளிகள், கடனீந்தோர் விகிதம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. அதாவது கடனீந்தோர் இருப்பு, கடனாளிகள் இருப்புக் கூடுவதைவிட அதிக விகிதத்தில் கூடுகிறது. கடனீந்தோரின் கடனைத் திருப்பிக் கொடுப்பதை உரிய காலத்தில் செய்ய முடிவதில்லை, அதேநேரத்தில் கடனாளிகளை விரைவாகக் கொடுக்கும்படி நெருக்க வேண்டியிருக்கிறது.

2. வங்கியில் வாங்கப்படும் கடன்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. கச்சாப்பொருள்கள் இருப்பு, முடிவடைந்த சரக்குகள் இருப்பு முதலியவை அதிகரிக்கின்றன.

3. செலுத்த வேண்டிய உண்டியல்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகின்றது.

4. வரவுடைய உண்டியல்கள் அநேகமாக வங்கியில் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

5. குறுகிய கால நிதியிலிருந்து நிலையான சொத்துகள் வாங்குதல்.

6. நடைமுறை முதல் விகிதம் மிகவும் குறைவாகவும், இருப்பு விற்பனைப் பொருள் அடக்கவிலை விகிதம் கூடுதலாகவும் இருக்கின்றன

7 தொடக்க நாள்களில் நிகர இலாபம் குறைந்து, பின்னாள்களில் மொத்த இலாபமே குறைகிறது.

8. ரொக்கமாகக் கூடிய சொத்துகள் படிப்படியாகக் குறைகின்றன. ஒவ்வொரு சொத்தாக அடைமானம் வைக்கப் படுவதால் கம்பெனியின் கடன் வாங்கும் திறனும் குறைகின்றது.

குறை வணிகம் (Under Trading)

குறை வணிகம் என்பது மிகை வணிகத்தின் எதிர்ச்சொல் ஆகும். ஒரு நிறுவனத்தின் நிதி சரியான முறையில் பயன்படுத்தாத தால் ஏற்படும் நிலையைக் குறை வணிகம் என்று கூறலாம். குறை வணிகத்தின் அறிகுறிகள் பின்வருவனவாம்:

1. கடனீந்தோர் அளிக்கும் முழு அளவு சலுகையைப் பயன் படுத்தாமல் விட்டுவிடல்.

2. நிறுவனத்தின் பொருளுக்குச் சந்தையில் நல்ல வரவேற்பு இருந்தும் உற்பத்தியைப் பெருக்காமல் இருத்தல்.

3. வங்கியில் அதிக அளவில் பணம் இருந்தும் சரியானபடி முதலீடு செய்யாமலிருத்தல்.

4. இருப்பு விற்பனைப் பொருள் அடக்கவிலை விகிதம் குறைவாக இருத்தல்.

பங்குமுதல், பிறமுதல் விகிதம் (Capital Gearing)

ஒரு நிறுவனத்தின் மொத்த முதலினங்களில் சாதாரணப் பங்குகள்மூலம் பெறப்படும் தொகைக்கும்,சலுகைப்பங்குகள், மற்றக் கடன் பத்திரங்கள்மூலம் பெறப்படும் தொகைக்குமுள்ள விகிதத் தைப் பங்கு முதல், பிற முதல் விகிதம் என்கிறோம். ஒரு கம்பெனி தன்னுடைய வருமானத்தில் ஒரு கணிசமான பகுதியை நிலையான வட்டி அல்லது இலாபஈவுக்காக ஒதுக்கும் நிலை ஏற்படின் அக் கம்பெனி உயர்விகித முதல் (High geared capital) கொண் டுள்ளது என்றும் அவ்வாறு அளிக்கப்படும் நிலையான வட்டி அல்லது இலாபஈவு கம்பெனியின் மொத்த வருமானத்தில் ஒரு சிறு பகுதியாக மட்டும் இருந்தால் அக் கம்பெனி குறைவிகித முதல் (low geared capi- tal) கொண்டுள்ளது என்றும் கூறுகிறோம். உயர்விகித முதலை வேறு விதமாகக் கூறுவதானால் ஒரு கம்பெனி மொத்த முதலினங்களில் பெரும்பகுதியைக் கடன்பத்திரங்களாகவும் சலுகைப் பங்குகளாகவும் திரட்டுகிறது என்றும் சொல்லலாம். ஒரு கம்பெனி ரூ 2,50,000 நிதி திரட்ட வேண்டும் என்று கொள்வோம். பின்வரும் இரு முறைகளில் எது சிறந்தது என்று ஆராய்வோம். அந்த ஈராண்டுகளில்

கம்பெனிக்குக் கிடைத்த இலாபம் முறையே ரூ 18,000 ரூ 12,000 ஆகும்.

	I முறை	II முறை
	ரூ	ரூ
5% கடன் பத்திரங்கள்	20,000	1,00,000
7% சலுகைப் பங்குகள்	40,000	1,00,000
சாதாரணப் பங்குகள்	1,90,000	50,000
ரூ.	2,50,000	2,50,000

முறை	சாதாரணப் பங்குகள்	சலுகைப் பங்குகளும் கடன் பத்திரங்களும்	விகிதம்	விளைவு
	ரூ	ரூ		
1.	1,90,000	60,000	$\frac{1,90,000}{60,000}$	குறை விகித முதல்.
2.	50,000	2,00,000	$\frac{50,000}{2,00,000}$	உயர் விகிதமுதல்

இவ்விகிதங்கள் எவ்வாறு இலாபத்தைப் பாதிக்கின்றன எனக் காண்போம்.

முதல் ஆண்டு இலாபம். ரூ. 18,000

	I முறை	II முறை
கடன் பத்திரங்கள் மீது வட்டி 5%	1,000	5,000
சலுகைப் பங்குகள் மீது இலாப ஈவு 7%	2,800	7,000
சாதாரணப் பங்குதாரர்களுக்கு எஞ்சிய பகிர்வு இலாபம்.	14,200	6,000
	ரூ 18,000	ரூ 18,000

முதல் முறையில் 7·5% இலாபஈவும் இரண்டாவது முறையில் 12% இலாப ஈவும் $\left(\frac{6,000}{50,000} \times 100\right)$ சாதாரணப் பங்குதாரர்களுக்கும் கிடைக்கும்.

இரண்டாம் ஆண்டு இலாபம் ரூ. 12,000

	I முறை	II முறை
கடன்பத்திரங்கள் மீது வட்டி 5%	1,000	5,000
சலுகைப் பங்குகள்மீது இலாப ஈவு 7%	2,800	7,000
சாதாரணப் பங்குதாரர்களுக்கு எஞ்சிய பகிர்வு இலாபம்	8,200	—
	12,000	12,000

முதல் முறையில் சாதாரணப் பங்குதாரர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாப ஈவு 4·4% ஆகக்குறைந்துவிட்டது. ஆனால், இரண்டாம் முறையில் சாதாரணப் பங்குதாரர்களுக்கு எஞ்சிய இலாபம் O. உயர்விகித முதல் உள்ள (Highly Geared Capital) கம்பெனியில் சாதாரணப் பங்குகள்மீதான வருமானம் அதிக ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டதாயிருக்கிறது என்ற உண்மை தெரியவருகிறது. எ. கா. ஒரு கம்பெனி ரூ. 2 இலட்சம் முதல் திரட்ட வேண்டியுள்ளது. இத் தொகையை மூன்று விதங்களில் பெறலாம். இம் மூன்று வழிகளிலும் சாதாரணப் பங்குகளுக்குக் கிடைக்கக் கூடிய இலாபஈவு விழுக் காட்டைக் கணக்கிடவும். சராசரி இலாபம் ரூ. 20,000 என்றும் ரூ. 4,000 இலாபத்தில் கூடுவதனாலோ குறைவதனாலோ சாதாரணப் பங்கு இலாப ஈவு எவ்வகையில் பாதிக்கப்படுகின்றது என்பதை ஆராய்க:

	I முறை	II முறை	III முறை
	ரூ	ரூ	ரூ
5% கடன் பத்திரங்கள்.	80,000	40,000	—
6% சலுகைப் பங்குகள்.	80,000	20,000	—
சாதாரணப் பங்குகள்.	40,000	1,40,000	2,00,000
	2,00,000	2,00,000	2,00,000

விடை:

உயர் - குறை விகித முதலும், சாதாரணப் பங்குதாரர்களுக்குக் கிடைக்கும் இலாப ஈவு விழுக்காட்டின் மாற்றங்களும்

விவரம்	முதல் முறை				இரண்டாம் முறை				மூன்றும் முறை			
	தொகை ரூ.	நிலை. 1. ரூ.	நிலை. 2. ரூ.	நிலை. 3. ரூ.	தொகை ரூ.	நிலை. 1. ரூ.	நிலை: 2. ரூ.	நிலை. 3. ரூ.	தொகை ரூ.	நிலை. 1, ரூ.	நிலை. 2. ரூ.	நிலை. 3. ரூ.
மொத்த இலாபம்		20,000	16,000	24,000		20,000	16,000	24,000		20,000	16,000	24,000
1. கடன் பத்திரங்கள் நிலையான வட்டி 5%	80,000	4,000	4,000	4,000	40,000	2,000	2,000	2,000	—	—	—	—
2. சலுகைப் பங்குகள் நிலையான இலாப ஈவு 6%	80,000	4,800	4,800	4,800	20,000	1,200	1,200	1,200	—	—	—	—
3. சாதாரணப் பங்குகள்	40,000				1,40,000				2,00,000			
	2,00,000				2,00,000				2,00,000			
சாதாரணப் பங்குதாரர்களுக்கு எஞ்சிய பகிர்வு இலாபம்.........		11,200	7,200	15,000		16,800	12,800	20,800		20,000	16,000	24,000
சாதாரணப் பங்குதாரர்களுக்குக் கிடைக்கும் இலாப ஈவு விழுக்காடு......		28%	18%	38%		12%	9%	15%		10%	8%	12%

நடைமுறை முதல் (Working Capital)

(1) ஒவ்வொரு தொழில் துவக்கத்திலும் நிலைமுதல், நடைமுறை முதல்களின் அளவை வரையறுப்பது தோற்றுவிப்பாளரின் முக்கிய பொறுப்புகளில் ஒன்று. நடைமுறைமுதல்பற்றிய சிக்கல் தொழில் துவக்கத்திலும், தொழிலை விரிவுப்படுத்தும்பொழுதும் ஏற்படக்கூடியதாகும். நடைமுறை முதலுக்குத் தேவைப்படக் கூடிய பணமும், ஒருவிதத்தில் நிலையான சொத்துகள் வாங்க உபயோகப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, துவக்கத்தில் ஏற்பட்ட செலவுகளை எடுத்துக் கொள்வோம். அது நடைமுறை முதலில் ஒரு பகுதியாயினும் அதை நிலை முதலாகத்தான் கருதவேண்டும். நடை முறை முதலுக்கும், நிலைமுதலுக்கும் உள்ள வேற்றுமையைச் சரியாக உணர வேண்டும். ஏனெனில், நடைமுறை முதலுக்குத் தேவைப் படக்கூடிய தொகை குறுகிய கால நிதியிலிருந்து செலவு செய்யப் படுகிறது. ஆனல், துவக்கச் செலவுகள் போன்ற செலவுகளுக்குத் தேவையான தொகையை நீண்டகால நிதியிலிருந்து (Long term-funds) தான் செலவு செய்யப்படுகிறது. நடைமுறைமுதலில் முதலீடு செய்யப்பட்ட பணம் விரைவில் தொழிலுக்கே திரும்பவும் ரொக்கமாகக் கிடைத்துவிடுகிறது. ஆனல், நடைமுறை முதலில் பற்றுக்குறை ஏற்பட்டால் கச்சாப்பொருள்களின் மதிப்பு அதிகமா யிருப்பின் அந் நிறுவனங்களில் நடைமுறை முதல் அதிகமாகத் தேவைப்படுகிறது. பருத்தி நெசவு, அல்லது சர்க்கரை ஆலை போன்ற நிறுவனங்களில் கச்சாப்பொருளின் மதிப்பு, பொருளின் அடக்க விலையில் பெரும்பகுதியைக் கொண்டிருத்தலால், நடைமுறை முதல் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனல், பிராணவாயு (Oxygen) தயாரிக்கும் நிறுவனம், நடைமுறை முதலுக்காக அதிகத் தொகையை ஒதுக்க வேண்டியதில்லை.

(2) **கூலிக்காகச் செலவிடும் தொகை:** நிறுவனத்தில் தொழிலாளி யின் நேரடிப் பங்கைப் பொறுத்தும் நடைமுறை முதல் கூடுதலா கவோ குறைவாகவோ தேவைப்படுகிறது. ஒரு நிறுவனத்தில் பெரும் பகுதியான பணிகளை இயந்திரங்களே செய்ய நேரிட்டால், அந் நிறுவனத்தில் தேவைப்படும் நடைமுறை முதலின் அளவு குறை வாகவே இருக்கும். ஆகவே, தானகவே இயங்கும் இயந்திரங்கள் (automatic Machine) உடைய ஒரு நிறுவனத்தில் தொழிலாளர் களுக்குக் கூலியாகக் கொடுக்கப்படும் தொகை மிகக் குறைவாகவே இருக்கும். ஆகவே, அந் நிறுவனத்தில் தேவைப்படும் நடைமுறை முதலின் அளவும் குறைவாகவே இருக்கும்.

(3) **பொருளின் உற்பத்திக் காலம் (Period of Manufacture)** கச்சாப் பொருள்களை இயந்திரத்தில் இடப்படும் காலத்திற்கும் அப் பொருள்

கள் முடிவுற்றநிலைச் சரக்குகளாக மாற்றப்படும் காலத்திற்கும் உள்ள இடைவெளி நேரத்தில் நடைமுறைத் தொழில் மிக மந்தநிலையை அடைகிறது. அதாவது, அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான பணம் கிடைக்காமல் சில நேரங்களில் நெடுங்கால நிதியிலிருந்து எடுக்கப்பட்டுச் செலவு செய்யப்படுகிறது. இதனால், நிலையான சொத்துகள் வாங்கப்படுவது தடைப்பட்டுவிடலாம். ஆகவே, நடைமுறை முதல் தொகையைத் தீர்மானிப்பதில் ஏற்படக்கூடிய எந்த ஒரு சிறு தவறும் தொழிலின் நிலைத்தன்மையைப் பெரிதும் பாதிக்கக்கூடும். எனவே, நடைமுறை முதலைத் துல்லியமாக நிருணயம் செய்வது என்பது மேலாண்மைக்குத் தெரிந்திருக்க வேண்டிய ஒரு நுண்கலையாகும். நடைமுறை முதலைக் கணக்கிடுவதில் கீழ்க் காணும் காரணிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்:—

1. **தொழிலின் தன்மை:** சிறு தொழில்களில் நடைமுறை முதல் அதிகமாகத் தேவைப்படும். எனினும், சில தொழில்களில் நிலையான முதல் அதிக விகிதத்தில் தேவைப்படலாம். அதாவது தொழிலின் தன்மையைப் பொறுத்து நடைமுறை முதல் அதிகமாகவோ குறைவாகவோ தேவைப்படுகிறது. பொதுவசதிக் கம்பெனிகள் யாவும் அதிக நிலை முதலுடன் துவக்கப்படுகின்றன. அந் நிறுவனங்களில் தேவைப்படும் நிலைமுதலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, நடைமுறை முதலின் விகிதம் குறைவாகவேயுள்ளது. பொருளை உற்பத்தி செய்யாத நிறுவனங்களில், அதாவது, ஏதாவது ஒரு பணியை மேற்கொள்ளும் நோக்கத்தையுடைய தொழில்களில் பெரும்பகுதி நடைமுறை முதலாகவே தேவைப்படுகிறது.

2. **மொத்த அடக்க விலையில் கச்சாப் பொருளின் விகிதம்:** முதலைத் தீர்மானிக்க உதவுகிறது. உதாரணமாக, ஒரு ரொட்டிக் கடைக் காரருக்குக் கோதுமைமாவை ரொட்டியாக மாற்றுவதற்கு ஒரு சில மணி நேரங்களே தேவைப்படுகின்றன. ஆனால், கப்பல்கட்டும் தொழிற்சாலையில் ஒரு கப்பல் கட்டுவதற்குச் சுமார் ஐந்து வருடங்க ளாகின்றன. உற்பத்திக்காலம் அதிகமாகஅதிகமாக நடைமுறை முதலும் அதிகமாகத் தேவைப்படும்.

3. **கச்சாப் பொருள் இருப்பு:** எந்த ஒரு தொழிலிலும், கச்சாப் பொருள்களையும் ஒரு குறிப்பிட்ட அளவு, முடிவுற்ற பொருள்களையும் இருப்புவைக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், சில தொழில் களில் ஒரு குறிப்பிட்ட தேவைக்குமட்டும் பொருள்களைத் தயாரிக் கின்றனர். அந் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நடைமுறை முதல் குறைவாகவே இருக்கும். ஆனால், கச்சாப்பொருளோ, முடிவுற்ற சரக்கோ அதிக அளவில் இருப்பு வைக்க வேண்டிய நிறுவனங்களில் தேவையான நடைமுறை முதலின் அளவு கூடுதலாக இருக்கும்.

4. சரக்குச் சுழற்சிக் காலம்: சில தொழில்களில் முடிவுற்ற சரக்குகள் வெகு விரைவிலேயே விற்கப்பட்டுப் பணமாக்கப் படுகின்றன. ஆனால், வேறு சில நிறுவனங்களில் அவ்வாறு எளிதாகப் பொருள்கள் விற்கப்படுவதில்லை. பொருள்கள் எளிதாக விற்கப் படும் நிறுவனங்களில், எளிதாக விற்கப்படாத நிறுவனங் களைவிட குறைந்த அளவே நடைமுறை முதல் தேவைப்படுகின்றது. உதாரணமாக, நகை வியாபாரத்தில் அதிக மதிப்புள்ள பல நகைகள் புறக் காட்சியில் (Window Display) வைக்கப்படுகின்றன. அவைகள் விரைவாக விற்கப்படுவதில்லை. ஆனால், ஒரு ரொட்டிக் கடையிலோ உணவு விடுதியிலோ அன்றன்றே பொருள்கள் விற்கப்பட்டு ரொக் மாக்கப்படுகின்றன. இவ்வாறு எளிதில் பொருள்கள் விற்கப்படும் நிறுவனங்களில், நடைமுறை முதல் குறைவாவே தேவைப்படு கின்றது.

5. கடன் திருப்ப அளிக்கப்படும்/பெறப்படும் காலம்: கடனீந்தோர் நமக்கு அளிக்கும் காலம் அதிகமாக இருந்தால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தை ஒத்திப்போடலாம். அதனால், நமக்குத்தேவைப்படும் நடைமுறை முதலும் குறைவாகவே இருக்கும். ஆனால், கடனாளிக்கு நாம் கடனுக்குச் சரக்கு விற்கநேரிட்டால் நடைமுறைமுதல் அதிகமாகத் தேவைப்படும். உதாரணமாக, ஒரு சில்லறை வியாபாரி 2 மாதக் காலம் கடன் பெறுவதாக வைத்துக் கொள்வோம் (மொத்த வியாபாரியிடமிருந்து). அதேநேரத்தில் அவ் வியாபாரி தம்முடைய வாடிக்கையாளருக்கு 1 மாதக் கடன் காலம் அளிப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த எடுத்துக் காட்டில் கூறப்பட்டுள்ள சில்லறை வணிகர் கடனைத் திருப்ப அளிக்கும் காலம், பெறப்படும் காலத்தைவிட குறைவாகயிருப்ப தால், குறைவான நடைமுறை முதலே போதுமானதாகும்.

6: பருவகால மாற்றங்கள்: ஒரு முழு ஆண்டில் சில பருவங்களில் மட்டும் இயங்கும் நிறுவனங்கள் உண்டு. அம் மாதிரி இயங்கும் நிறுவனங்களில் பருவத்திற்குப் பருவம் நடைமுறை முதலின் தேவை மாறுபடுகிறது. உதாரணமாக, சர்க்கரை ஆலைகள் அநேகமாக டிசம்பர் முதல் ஏப்ரல்வரைதான் இயங்குகின்றன. கம்பளித் தொழில் ஆலைகளிலும் குளிர் பருவங்களில் மட்டும் உற்பத்திச் சுறுசுறுப்பாயுள்ளது. இந்த இரு தொழில்களிலும் நடைமுறை முதல் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஏனெனில், தயாரிக்கப்பட்ட பொருள்களை மெதுவாகவே விற்க நேரிடும்.

இவ்வாறு மேலும் பல காரணங்களைக் கருத்திற் கொண்டு நடை முறை முதல் நிருணயிக்கப்படுகிறது.

நடைமுறை முதலை நிருணயித்தல் (Determination of Working Capital)

ஒரு புதிய தொழிலைத் துவங்கும் முன்னர், அல்லது ஒரு குறிப்பிட்ட அளவு வணிக அளவை விரிவுபடுத்தத் தேவைப்படும் நடைமுறை முதலை நிருணயம் செய்வதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. எனினும், பின்வரும் உண்மைகளை மனத்திற்கொண்டு நடைமுறை முதலை நிருணயம் செய்ய வேண்டும்.

1. கச்சாப்பொருள்கள், கூலி, நடைமுறைச் செலவு இவைகளுக்கான தொகை.

2. பொருள்கள் உற்பத்திக்காக வேண்டிக் கிடங்கில் கச்சாப் பொருள்கள் முடங்கியிருக்கும் காலம்.

3. உற்பத்திக் காலம்.

4. முடிவடைந்த சரக்குகள் விற்கப்படும் முன்னர், கிடங்கில் முடங்கியிருக்கும் காலம்.

5. கச்சாப் பொருள்களை நமக்குக் கடனுக்காக அளித்தவர்கள் கடனைத் திருப்ப அளிக்கும் காலம்.

6. கடனளிக்கு நாம் கடனைத் திருப்ப அளிக்கும் காலம்.

7. அலுவலகத்தில் பணிபுரிவோருக்கு ஊதியம் அளிக்க எடுத்துக்கொள்ளும் காலம்.

8. வருநிகழ்வுகளுக்காக ஒதுக்க வேண்டிய தொகை.

மேற்கூறிய பல காரணங்களையும் கணக்கில் எடுப்பினும் நடைமுறை முதலை நிருணயம் செய்வதில் சில தவறுகள் ஏற்படுவதுண்டு. ஆகவே, வருநிகழ்வுகளுக்காகப் பொதுவாக மேற்கூறியவாறு நிருணயிக்கப்பட்ட தொகை மீது 10% கூட்டுவது வழக்கத்தில் உள்ளது.

எ.கா. 1. நீலமலைக் கம்பெனி லிமிடெட் பின்வரும் செய்திகளை அளிக்கிறது. பின்வரும் செய்திகள் அக் கம்பெனியின் வருமாண்டுத் திட்டத்தைப் பற்றியது. கீழ்க்காணும் செய்திகளிலிருந்து அக் கம்பெனியின் நடைமுறை முதல் தொகையையும், அதை வைத்து அக் கம்பெனியின் ஆண்டு இறுதியில் உள்ள இலாப நட்டக் கணக்கையும் இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

செலுத்திய முதல் (paid up capital)	ரு	2,00,000
5% கடன் பத்திரங்கள்	ரு	50,000
நிலையான சொத்துகள்	ரு	1,25,000

1. சென்ற ஆண்டு 60,000 பொருள்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாண்டும் அதே அளவு தயாரிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. விற்பனை விலையில் அடக்க விலை விகிதமாவது:

கச்சாப் பொருள்	60%
கூலி	10%
நடைமுறைச் செலவுகள்	20%

2. உற்பத்திக்குச் செல்லும்முன், கச்சாப்பொருள்கள் இரண்டு மாதங்கள் காத்திருக்கின்றன.

3. உற்பத்திக்காலம் ஒரு மாதம்.

4. முடிவுற்ற சரக்குகள் விற்பனையாவதற்குமுன், கிடங்கில் மூன்று மாதங்களுக்கு முடங்கியிருக்கின்றன.

5. கடனீந்தோர் கடனைத்திருப்ப அளிக்கும் காலம் 2 மாதங்கள்.

6. கடனாளிகளுக்குக் கடனைத் திருப்ப அளிக்கும் காலம் 3 மாதங்கள்.

7. ஒரு பொருளின் விற்பனை விலை ரூ. 5

விடை: நடைமுறை முதல் ஒரு முறை சுழன்று ரொக்கமாவதற்கு 9 மாதங்கள் ஆகின்றன. அவையாவன:

	மாதங்கள்
கச்சாப் பொருள்கள் கிடங்கில் இருக்கும் காலம்	2
உற்பத்திக் காலம்	1
முடிவுற்ற சரக்குகள் கிடங்கில் இருக்கும் காலம்	3
கடனாளிகளுக்குக் கடனைத் திருப்ப அளிக்கும் காலம்	3
	9

தேவையான நடைமுறை முதல் முன்மதிப்பீடு

விவரங்கள்	காலம் (மாதம்)	மொத்தம்	கச்சாப் பொருள்	வேலை முற்றுப் பொருள்	முடிவுற்ற சரக்கு	கடனாளி கள்	கடனீந் தோர்
		ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. கச்சாப் பொருள்:							
(அ) இருப்பு-கிடங்கில்	2	....	30,000	....	....	....	....
(ஆ) வேலை முற்றுப் பொருள் (Work-in-Progress)	1	....	....	15,000	....	....	....
(இ) முடிவுற்ற சரக்கு	3	....	....	....	45,000	....	....
(ஈ) கடனாளிகள்	3	....	....	....	....	45,000	....
	9						
(உ) கடனீந்தோர்	2	....	....	....	....	....	30,000
	7	1,05,000	....	....	....	....	....
2. கூலி							
(அ) வேலை முற்றுப் பொருள்	1	....	....	2,500	....	....	....
(ஆ) முடிவுற்றநிலைச் சரக்கு	3	....	....	....	7,500	....	....
(இ) கடனாளிகள்	3	....	....	....	....	7,500	....

தேவையான நடைமுறை முதல் முன்மதிப்பீடு (தொடர்ச்சி)

விவரங்கள்	காலம் (மாதம்)	மொத்தம்	கச்சாப் பொருள்	வேலை முற்றுப் பொருள்	முடிவுற்ற சரக்கு	கடனாளிகள்	கடனீந்தோர்
		ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
3. பொதுச் செலவு	8	17,500	....	....	....	....	....
(அ) வேலை முற்றுப்பொருள்	1	....	....	5,000	....	....	....
(ஆ) முடிவுற்ற நிலைச் சரக்கு	3	....	....	....	15,000	....	....
(இ) கடனாளிகள்	3	....	....	....	....	15,000	....
	7	35,000	....	....	....	....	....
4. இலாபம்							
கடனாளிகள்	3	75,000	....	....	....	7,500	....
ஆக மொத்தம் ரூ.		1,65,000	30,000	22,500	67,500	75,000	30,000

முன்மதிப்பீட்டு இலாப, நட்டக் கணக்கு

ப	ரூ		ரூ வ
கச்சாப் பொருள்	1,80,000	விற்பனை	3,00.000
கூலி	30,000		
நடைமுறைச் செலவுகள்	60,000		
மொத்த இலாபம் கீ/இ.	30,000		
	3,00,000		3,00,000
கடன்பத்திரங்கள் வட்டி.	2,500	மொத்த இலாபம்கீ/கொ	30,000
நிகர இலாபம் கீ/இ	27,500		
	30,000		30,000

முன்மதிப்பீட்டு இருப்புநிலைக் குறிப்பு

	ரூ		ரூ	ரூ
பங்கு முதல்	2,00,000	நிலையான சொத்து.		1,25,000
இலாபநட்டக் கணக்கு	27,500	இருப்பு:		
5% கடன் பத்திரங்கள்	50,000	கச்சாப்பொருள்	30,000	
கடனீந்தோர்	30,000	வேலை முற்றுப் பெறுப்பொருள்	22,500	
வங்கி அதிகப்பற்று	12,500	முடிவுற்ற பொருள் சரக்கு	67,500	1,20,000
		கடனாளிகள்		75,000
	3,20,000			3,20,000

எடுத்துக்காட்டு 2: 1970-ல் 5,200, பொருள்கள் தயாரிப்பதற்குத் தேவையான நடைமுறை முதல் முன்மதிப்பீடு தயாரிக்கவும்:

	ரூ
கச்சாப் பொருள்	8
கூலி	2
பொதுச் செலவுகள்	6
(Overheads)	16

விற்பனை விலை ரூ 20. மேற்கூறிய செய்திகள் அனைத்தும் ஒரு பொருளைச் சார்ந்தது.

1. ஆலைக்குச் செல்லும்முன் கச்சாப்பொருள்கள் கிடங்கில் முடங்கியிருக்கும் காலம் ஒரு மாதம்.
2. உற்பத்திக் காலம் மழை மாதம்.
3. கடனீந்தோர் கடனைத் திருப்ப அளிக்கும் காலம் ஒரு மாதம்.
4. கடனாளிகளுக்குக் கடன் திருப்ப அளிக்கப்படும் காலம் இரண்டு மாதங்கள்.
5. கூலி கொடுப்பதில் ஏற்படும் கால இடைவெளி 1½ வாரங்கள்
6. ரொக்க இருப்பு ரூ 7,300 என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடை:

நடைமுறை முதல் முன்மதிப்பீட்டுப் பட்டி

கச்சாப் பொருள்:	காலம் (வாரங்கள்)	ரூ	ரூ
(அ) இருப்பு	4	3,200	....
(ஆ) உற்பத்திக்காலம்	2	1,600	....
(இ) முடிவுற்ற சரக்கு	6	4,800	....
(ஈ) கடனாளிகள்	8	6,400	....
	20		
கழி		16,000	
கடனீந்தோர்	4	3,200	
மொத்தம்.	16		12,800

கூலி:

(அ) உற்பத்திக் காலம்	1	200	
(ஆ) முடிவுற்ற சரக்கு	6	1,200	
(இ) கடனாளிகள்	8	1,600	
	15	3,000	
கழி			
தள்ளிப் போடக்கூடிய காலம்	1½	300	
மொத்தம்	13½		2,700

3. பொதுச் செலவுகள்	காலம் (வாரங்கள்)	ரூ	ரூ
(அ) உற்பத்தி காலம்	1	600	—
(ஆ) முடிவுற்ற நிலைச் சரக்கு	6	3,600	—
(இ) கடனாளிகள்	8	4,800	—
	15	9,000	9,000
4. இலாபம்:			
கடனாளிகள்	8	3,200	3,200
		ரூ	27,700

குறிப்பு: மொத்த உற்பத்திக் காலம் இரண்டு வாரங்கள். இதில் கச்சாப் பொருள்கள் ஒரு வார காலத்திற்கும் பொதுச் செலவுகள் ஒரு வார காலத்திற்கும் உற்பத்தியில் ஈடுபடுவதாகக் கொள்ளப் பட்டன.

பட்டியல்படி	ரூ	27,700
ரொக்க இருப்பு	ரூ	7,300
நடைமுறை முதல் நிகரத்தேவை	ரூ	35,000

எ.கா. 3: நஞ்சப்பா அண்டு கம்பெனி ஒரு வியாபாரத்தை வாங்கத் தீர்மானித்துள்ள முதலாண்டில் தேவைப்படும் நடைமுறை முதலைப்பற்றி அவர்களுக்கு அறிவுரை வழங்கவும்.

1. சரக்கிற்காகத் தேவைப்படுவது		ஆண்டிற்கு
(அ) முடிவுற்ற சரக்கு	ரூ.	5,000
(ஆ) கச்சாப் பொருள் முதலியன.	ரூ.	8,000
2. கடனாளிகளுக்குக் கடன் திருப்ப அளிக்கப்படும் காலம்		
(அ) உள் நாட்டு விற்பனை 6 வாரங்கள்.	ரூ.	3,12,000
(ஆ) அயல் நாட்டு விற்பனை $1\frac{1}{2}$ வாரங்கள்		78,000
3. செலவுகளுக்காகப் பணங்கொடுப்பதில் உள்ள கால இடைவெளி (Time lag)		
கூலி $1\frac{1}{2}$ வாரங்கள்	ரூ.	2,60,000
கச்சாப் பொருள்கள் $1\frac{1}{2}$ மாதங்கள்		48,000
வாடகை 6 மாதங்கள்		10,000
அலுவலகப் பணியாள்கள் சம்பளம் $\frac{1}{2}$ மாதம்		62,400
மேலாளர் சம்பளம் $\frac{1}{2}$ மாதம்		4,800
இதர செலவுகள் $1\frac{1}{2}$ மாதம்		48,000
4. முன்செலுத்திய செலவினங்கள்:		
காப்புறுதிக் கட்டணம்		8,000
($\frac{1}{2}$ ஆண்டிற்கு முன் செலுத்தியது)		
5. ஆண்டு இலாபம்		11,000

விடை: ரூ

அ. **இருப்பு**

முடிவுற்ற சரக்கு	5000	
கச்சாப் பொருள்	8000	13,000

ஆ. **கடனாளிகள்**

உள்நாட்டு விற்பனை (6 வாரங்கள்) $\left.\right\} \frac{3,12,000}{52} \times 6$

$= 36,000$

அயல் நாட்டு விற்பனை
(1½ வாரங்கள்)

$\frac{78,000 \times 3}{52 \times 2}$ =	2,250	38,250
இ. முன் செலுத்திய செலவு 8000 × ½ =		2,000
		53,250

கழி:

செலவுகள் கால இடைவெளி:

	ரூ	
கூலி	7,500	
கச்சாப் பொருள்	6,000	
வாடகை	5,000	
அலுவலகப் பணியாள்கள் சம்பளம்	2,600	
மேலாளர் சம்பளம்	200	
இதர செலவுகள்	6,000	27,300
		25,950

கூட்டு:

10% வரு நிகழ்வுகளுக்காக	2,595
தேவையான நடைமுறை முதல்	28,545

எடுத்துக் காட்டு: 4:

31-12-1970-ல் ஒரு கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பொறுப்புகள்	ரூ	சொத்துகள்	ரூ
பங்குமுதல்	10,00,000	நிலையான சொத்துகள்	4,00,000
கடனீந்தோர்	1,40,000	சரக்கு இருப்பு	3,00,000
இலாப, நட்டக்,க/கு	60,000	கடனாளிகள்	1,50,000
		வங்கி இருப்பு	3,50,000
	12,00,000		12,00,000

1971ஆம் ஆண்டிற்கான விற்பனை, கொள்முதல் பின்வருமாறு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது:

	31-12-71 முடிய	டிசம்பர் 1971
கொள்முதல்	ரூ. 14,10,000	1,10,000
விற்பனை	,, 19,20,000	2,00,000

1971-ல் ரூ 1,00,000 நிலையான சொத்துகள் வாங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. எழுத வேண்டிய தேய்மானம் 10%. கடனாளிகள், கடனீந்தோரின் கடன்காலம் ஒரு மாதம் எனக் கொள்ளவும். இக் கம்பெனி விற்பனைமீது 30% மொத்தலாபம் அடைகிறது. மொத்தச் செலவுகள் விற்பனையில் 10% எனக் கொள்க. 31-12-1971-ல் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

விடை:

இலாப, நட்டக் கணக்கு 1971 டிசம்பர் 31-ல் முடிவுற்ற ஆண்டுக்கு

ப

	ரூ		ரூ.வ.
துவக்க சரக்கிருப்பு	3,00,000	விற்பனை	21,20,000
கொள்முதல்	15,20,000	இறுதிச் சரக்கு இருப்பு	3,36,000
மொத்த இலாபம் கீ/இ	6,36,000		
	24,56,000		24,56,000
பல செலவுகள் (10%)	2,12,000	மொத்த இலாபம் கீ/கொ	6,36,000
தேய்மானம் (10%)	50,000		
நிகரலாபம்	3,74,000		
	6,36,000		6,36,000

பாங்குக் கணக்கு

ப

	ரூ		ரூ.வ.
இருப்பு கீ/கொ	3,50,000	கடனீந்தோர்	15,50,000
கடனாளிகள்	20,70,000	செலவுகள்	2,12,000
		நிலையான சொத்துகள்	1,00,000
		இருப்பு கீ/இ	5,58,000
	24,20,000		24,20,000

இருப்புநிலைக் குறிப்பு 1971 டிசம்பர் 31-ல் உள்ளபடி

பொறுப்புகள்	ரூ	சொத்துகள்	ரூ
பங்கு முதல்	10,00,000	நிலையான சொத்துகள்	4,00,000
இலாப, நட்டக் க/கு	60,000	(கூட்டு) இவ்வாண்டு	
இவ்வாண்டு இலாபம்	3,74,000	வாங்கியது	1,00,000
கடனீந்தோர்	1,10,000		5,00,000
		(கழி) தேய்மானம்	50,000
			4,50,000
		சரக்கிருப்பு	3,36,000
		கடனாளிகள்	2,00,000
		ரொக்க இருப்பு	5,58,000
	15,44,000		15,44,000

எ. கா. 5: ஏ. ஆர். ஆர். அண்டு கம்பெனியின் சுருக்கி வரையப் பட்ட க/கு பின்வருமாறு.

	ரூ.		ரூ.
கச்சாப்பொருள்	14,00,000	விற்பனை	24,00,000
கூலி	2,10,000		
உற்பத்திச் செலவுகள்	1,98,000		
நிர்வாகச் செலவுகள்	1,80,000		
விற்பனைச் செலவுகள்	1,20,000		
வியாபாரச் செலவுகள்	90,000		
வருமானவரிக் காப்பு	72,000		
நிகரலாபம்	1,30,000		
	24,00,000		24,00,000

1. கடனாளிகளுக்குக் கடனைத்திருப்ப இரண்டு மாதகாலம் அளிக் கப்படுகிறது.

2. கீழ்க்கண்ட சரக்கிருப்பு வைப்பது கம்பெனியின் வழக்கம்.

முடிவுற்ற சரக்கு	1 மாத விற்பனை.
கச்சாப் பொருள்கள்	1½ மாத உபயோகம்.

3. வேலை முற்றுப் பொருளின் மதிப்பு.

கச்சாப் பொருள்	1½ மாதம்.
கூலி	½ மாதம்.
உற்பத்திச் செலவு	½ மாதம்.

4. கடனீந்தோர் கடனைத் திருப்ப 3 மாத காலம் அளிக்கின்றனர்.

5. எல்லாச் செலவுகளும் ஒரு மாதம் கழித்துக் கொடுக்கப் படுகின்றன.

6. வியாபாரச் செலவுகள் மட்டும் இரண்டு மாதங்கள் முன்னரே செலுத்தப்படுகின்றன.

7. வருமானவரி 3 தவணைகளில் செலுத்தப்படுகின்றது.

8. ரூ. 90,000 எப்பொழுதும் ரொக்கமாக வைத்திருக்கத் தீர்மானித்துள்ளது. எதிர்பாராச் செலவுக்காக மொத்த நடைமுறைச் சொத்தில் 10% ஒதுக்கத் தீர்மானித்துள்ளனர்.

கம்பெனியின் நடைமுறை முதலை மதிப்பிடுக.

நடைமுறை முதல் மதிப்பீடு

விடை:

	ரூ	ரூ
முடிவுற்ற சரக்கு	1,50,500	
கச்சாப் பொருள்	1,75,000	
வேலை முற்றுப்பெற்ற பொருள்	1,92,000	5,17,500
கடனாளிகள்		3,01,500
முன் செலுத்த வேண்டிய செலவுகள்		15,000
தேவையான ரொக்கம்		90,000
கூட்டு:		9,24,000
எதிர்பாராத செலவுகளுக்காக (10%)		92,400
		ரூ 10,16,400
கழி		
கடனீந்தோர்	3,50,000	
செலவினங்கள் கொடுக்க வேண்டியவை	59,000	4,09,000
தேவையான நடைமுறை முதல்		ரூ 6,07,400

விளக்கங்கள் :

(அ) விற்பனை செய்த பொருளின் அடக்க விலை

	ரூ
கச்சாப் பொருள்	14,00,000
கூலி	2,10,000
உற்பத்திச் செலவுகள்	1,98,000
	18,08,000

(ஆ) கடனாளிகள் $= \frac{18,08,000 \times 2}{12} = 3,01,333$

அதாவது ரூ 3,01,500

(இ) கச்சாப் பொருள் இருப்பு $=$ ரூ $14,00,000 \times \frac{1\frac{1}{2}}{12}$

அதாவது ரூ 1,75,000

(ஈ) வேலை முற்றுப்பெறுச் சரக்கு

கச்சாப் பொருள் 1,75,000

கூலி மற்றும் உற்பத்திச் செலவுகள் $\frac{2,10,000+1,98,000}{12 \times 2}$

ரூ 17,000

ரூ 1,75,000 + ரூ 17,000 = ரூ 1,92,000

(உ) மொத்தச் செலவுகள் = ரூ 7,08,000
(வியாபாரச் செலவுகள் தவிர)

கொடுபடவேண்டிய செலவுகள் $= \frac{7,08,000}{12} =$ ரூ 59,000

பயிற்சி

1. 1971ஆம் ஆண்டு புதிதாகத் துவங்கிய ஒரு கம்பெனியின் மதிப்பீடு செய்யப்பட்ட இலாப, நட்டக் கணக்கு பின்வருமாறு:

	ரூ
விற்பனை	21,00,000
விற்பனைப் பொருளின் அடக்கவிலை	15,30,000
மொத்த இலாபம்	5,70,000

கழி		
நிருவாகச் செலவுகள்	1,40,000	
விற்பனைச் செலவுகள்	1,30,000	2,70,000
நிகரலாபம்		3,00,000
(கழி) வருமானவரி		1,00,000
		2,00,000

விற்றபொருளின் அடக்கவிலை பின்வருமாறு கணக்கிடப் பட்டது:

கச்சாப் பொருள்	8,40,000
கூலி, உற்பத்திச் செலவுகள்	6,25,000
தேய்மானம்	2,35,000
	17,00,000
(கழி) முடிவுற்ற இறுதிச் சரக்கு 10%	1,70,000
	15,30,000

ஓர் ஆண்டின் உற்பத்தியில் 15% வேலை முற்றுச்சரக்காக நின்று விடுகிறது. வேலை முற்றுச்சரக்கில் முழு அளவு கச்சாப் பொருள்களும் 40% மற்றச் செலவுகளும் அடங்கியுள்ளது. கச்சாப்பொருளின் இரண்டு மாதத் தொகை, இருப்பாக வைக்கத் தீர்மானித்துள்ளது. எல்லாச் செலவுகளும் ஒரு மாதம் கழித்துக் கொடுக்கப்படுகின்றன. கடனீந்தோர் அளிக்கும் காலம் 1½ மாதம். மொத்த விற்பனையில் 20% ரொக்க விற்பனை.

மற்றவை இரண்டு மாதக்கடன் காலத்தில் விற்கப்படுகின்றன. வருமான வரியில் 70% மூன்று காலாண்டுகளில் செலுத்தப்படு கின்றது. இக் கம்பெனியின் 1971ஆம் ஆண்டிற்குத் தேவையான நடைமுறை முதலை மதிப்பிடுக.

2. பீட்டா லிமிடெட்டின் நடவடிக்கைகளைப்பற்றிப் பின்வரும் செய்திகள் அளிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டுச் சந்தையில் இக் கம்பெனி, விற்பனைக்கு 25% இலாபம் வைத்து விற்கின்றது.

	ரூ
விற்பனை — உள்நாட்டு வியாபாரம் (1 மாதக்கடன்)	12,00,000
ஏற்றுமதி வியாபாரம் — உள் நாட்டு விற்பனை விலையைவிட 10% குறைவாக 3 மாதக் கடன்	5,40,000
மூலப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டவை (கடனீந்தோர் கடன் திருப்ப அளித்த காலம் 2 மாதம்)	4,50,000
கூலி (இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கொடுக்கப்படுகின்றது).	5,40,000
உற்பத்திச் செலவுகள் — 1 மாதம் கழித்துக் கொடுக்கப்படுகிறது	1,20,000
நிருவாகச் செலவுகள் (1 மாதம் கழித்துக் கொடுக்கப்படுகின்றது)	60,000
விற்பனைச் செலவுகள்.	1,50,000

ஒரு மாத மூலப்பொருளையும், முடிவுற்ற சரக்கையும் இருப்பாக வைக்க, இக் கம்பெனி விரும்புகின்றது. கம்பெனியின் நடைமுறை முதலைக் கணக்கிடுக.

4. பட்ஜெட் கட்டுப்பாடு
(Budgetary Control)

பட்ஜெட் என்பது ஒரு நிறுவனத்தின் திட்டத்தைக் குறிப்பிடு கிறது. அதாவது ஒரு நிறுவனத்தின் திட்டத்திற்கு நிதிவடிவம் கொடுப்பதே பட்ஜெட் ஆகும். பட்ஜெட் என்ற சொல்லிற்கு வரவு, செலவுத் திட்டம் என்ற சொற்றொடர் கையாளப்பட்டாலும், மேலாண்மையினர் பயன்படுத்தும் பட்ஜெட் என்ற சொல் சாதாரண வரவுத் - செலவுத் திட்டத்தைக் குறிப்பிடுவதில்லை. பட்ஜெட் என்ற சொல் பல இடங்களில் மதிப்பீடு என்ற பொருளைக் கொண்டுள்ளது. ஆகவே, பட்ஜெட் என்பது, ஒரு நிறுவனத்தின் எதிர்காலத் தேவை களைப்பற்றிக் குறிப்பிடக்கூடிய ஒரு பட்டி என்று கூறலாம். பட்ஜெட் என்பது ஒரு நிறுவனத்தின் கொள்கையை அல்லது இலக்கைக் குறிப் பிடுகிறது. பட்ஜெட் கட்டுப்பாடு என்பது நிறுவனத்தின் நடை முறையைத் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதைக் குறிக்கிறது. இதுவே பட்ஜெட் என்ற சொல்லிற்கும் பட்ஜெட் கட்டுப்பாடு என்பதற்கும் உள்ள வேறுபாடாகும்.

பட்ஜெட் கட்டுப்பாட்டின் நன்மைகள்:

1. உற்பத்தியில் ஏற்படும் பருவமாற்றங்களைப் (**Seasonal Changes**) பற்றி முன்யோசனைச் செய்து திட்டம் தயரிப்பதால் உற்பத்திச் செலவு குறைக்கப்படுகிறது.

2. கடனளிக்கும் நிறுவனங்கள், பட்ஜெட் கட்டுப்பாடுக்குட் பட்ட நிறுவனங்கள் உறுதியான மேலாண்மையைக் குறிக்கும் என்று கருதுகின்றனர்.

3. ஒரு நிறுவனத்தின், பல பகுதிகளையும் ஒன்றுசேர்க்கும் ஒருங்கிணைப்பு முயற்சியில் ஈடுபடுகிறது. பல துறைகளின் நடவடிக்கைகளின் ஏற்றத்தாழ்வுகளைத் தடுத்துத் திட்டமிட்ட இலக்கிற்கு நிறுவனத்தை அழைத்துச் செல்கிறது.

4. ஒரு நிறுவனத்தின், திறமையான நடைமுறை என்பது அந் நிறுவனத்தின் அனைத்துப் பணியாள்களும் திட்டமிட்ட ஒரே இலக்கை நோக்கி முன்னேற வேண்டும். இதை பட்ஜெட் கட்டுப்பாடு செயல்முறைப்படுத்துகின்றது.

5. பட்ஜெட் திட்டம் நிறைவேறுவிட்டால் குறை ஏற்பட்ட பகுதியில் வேலை செய்யும் பணியாள்களைத் தட்டிக்கேட்க முடிகிறது. மேலும், தட்டிக்கழிக்கும் மனப்பான்மையை வளரவிடாமல் தடுக்கிறது.

6. திட்ட அடக்கவிலைக் (Standard Costing) கொள்கையைக் கையாளும் உற்பத்தித் துறையைத் தவிர பிற துறைகளில் கையாள பட்ஜெட் கட்டுப்பாடு முறை உதவியாயிருக்கிறது.

7. கச்சாப்பொருள்கள் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பு வைக்கப்படாமல் தேவையான அளவிற்கு வாங்கப்படுகிறது. வேலை முற்றுச்சரக்குகளும் இயன்ற அளவு குறைவாகவே வைக்கப் படுகின்றன. முடிவுற்ற சரக்குகளும் விற்பனை மதிப்பீட்டிற்குத் தகுந்தாற்போல் அளவாக இருப்பு வைக்கப்படுகின்றன.

குறைபாடுகள்:

1. பட்ஜெட் என்பது ஒரு மதிப்பீடேயாகும் என்ற உண்மையை அதனுடைய முடிவுகளை ஆய்வுசெய்தே உணரமுடியும். பொதுவாக மதிப்பீட்டின் எதிர்பார்க்கத்தக்கவை இயன்றவரை மிகவும் நுட்பம் வாய்ந்ததாக இருப்பது திண்ணம். உண்மைக்குப் புறம்பாக மதிப்பீடுகள் இருப்பின் திட்டத்தினால் யாது பயன்?

2. எல்லாச் செய்திகளுக்கும் நிதிவடிவம் கொடுக்கப்படுவதே பட்ஜெட் தயாரித்தல் என்பது முன்பே கூறப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட பட்ஜெட்கள் ஒரு முடிவான நிலையை அடைந்து விடுகின்றன. ஆனால், பட்ஜெட் தொகைகள் மாறு நிலையைப் பெற்றுள்ளன. எந்தத் தொழிலும் உறுதியான நிலையைப் பெற்ற தன்று. ஆகவே, மதிப்பீடுகள் மாறும் வியாபாரத்திற்கேற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஆனால், செயல்முறையில் மதிப்பீடுகளைச் சடங்குகள் போல் கையாளுவதே வழக்கமாகிவிட்டது.

3. மதிப்பீடுகளைத் தயாரித்தல் மட்டும் நிறுவனத்தின் எதிர் கால இலாபத்திற்கு உத்தரவாதம் அளிக்காது. பட்ஜெட் தயாரித்த பிறகு அமைப்பான்மையிலுள்ள எல்லோருடைய நடவடிக்கைகளையும் திட்டமிட்ட இலக்கையடையும் முயற்சியில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

4. பட்ஜெட் கட்டுப்பாடுத்திட்டம் ஒரு செலவுடைய திட்டமாகும். எந்த ஒரு திட்டத்துக்கும் செலவு பயன் ஆய்வு (Cost benefit analysis) நடத்த வேண்டும். செயல் முறையில் அத் திட்டம் சிறிய நிறுவனங்களுக்கு ஒத்துவரக் கூடியதன்று.

பல குறைபாடுகள் இருந்தும், இக் காலங்களில் வியாபார வருநிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு எந்த ஒரு நடுத்தர அளவு நிறுவனமும் திட்டத்தைச் செயற்படுத்தத்தான் செய்கின்றன.

மதிப்பீடு வகைகள்

மதிப்பீடுகளைப் பல வகைகளாகப் பிரிக்கலாம்.

1. காலத்தையொட்டிய பிரிவு (According to time)
2. பயனையொட்டிய பிரிவு (According to functions)
3. நெகிழ்ச்சித்தன்மையைச் சார்ந்த பிரிவு (According to flexibility)

1. காலத்தையொட்டிய பிரிவு

(அ) நீண்டகால மதிப்பீடு: எதிர்காலத் திட்டங்களில் நிறுவனத்திற்குச் சுமார் 10 ஆண்டுகளுக்குத் தேவைப்படுவனவற்றைக் கருத்திற் கொண்டு இந்த மதிப்பீடு தயார் செய்யப்படுகின்றது.

(ஆ) குறுகிய கால மதிப்பீடு: இரண்டாண்டுகளுக்குட்பட்ட நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தை உருவாக்குவதற்குத் தேவையானவற்றைக் கருத்திற்கொண்டு இந்த மதிப்பீடு தயார் செய்யப்படுகின்றது.

(இ) நடைமுறை மதிப்பீடு: இந்த மதிப்பீடு நடப்பு ஆண்டில் சில மாதங்களுக்கான தேவைகளைக் கருத்திற்கொண்டு தயார் செய்யப்படுகின்றது,

(2) பயனையொட்டிய பிரிவு

(அ) விற்பனை மதிப்பீடு.

(ஆ) விற்பனைச் செலவு மதிப்பீடு.

(இ) உற்பத்தி மதிப்பீடு.

(ஈ) உற்பத்திச் செலவு மதிப்பீடு.

(உ) கொள்முதல் மதிப்பீடு.

(ஊ) ரொக்க மதிப்பீடு.

(எ) தொகுப்பு மதிப்பீடு (Master Budget).

நெகிழ்ச்சித் தன்மையையொட்டியது:

(அ) **மாறா மதிப்பீடு:** இந்த மதிப்பீட்டில் இலக்குகள் முன்பே நிர்ணயிக்கப்படுகின்றன. இலக்குகள் பொதுவாக மாற்றத்தக்க தல்ல. மதிப்பீடு, தீர்மானம் செய்யப்பட்டபின் குறைந்தது 12 மாதங்களாவது கழியவேண்டும். இக் கால இடைவெளியில் நிறுவனத்தில் பல இடைவெளிகள் ஏற்படலாம். அம் மாறுதல் களுக்கு ஏற்ப மதிப்பீட்டை மாற்றியமைப்பது கடினமாகும்.

(ஆ) **நெகிழ்ச்சியுள்ள மதிப்பீடு:** நிறுவனத்தின் பல உற்பத்தி அளவுகளுக்கேற்ப மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. அதாவது 50% 60% 70% எனப் பல நிலைகளுக்கும் உண்டான மதிப்பீடு தயாரிக்கப் படுகிறது. நிறுவனத்தின் வியாபாரச் சூழ்நிலைகளுக்கேற்பச் சரியான மதிப்பீட்டை நிறுவனம் பின்பற்றுகின்றது. இப்போது பல மதிப்பீடு களைப்பற்றி விரிவாக அறிவோம்.

(3) விற்பனை மதிப்பீடு (Sales Budget)

விற்பனை மதிப்பீடு என்பது நிறுவனத்தின் பொது மதிப்பீட்டிற்கு உயிர்நாடியானதாகும். எனினும், இந்த மதிப்பீட்டைத் தயாரிப்ப தென்பது அவ்வளவு எளிதன்று. இந்த மதிப்பீட்டில் விற்பனை அளவு களிலும் தொகையிலும் மதிப்பிடப்படுகிறது. சரக்குகளைத் தயாரித்தவுடன் நிறுவனத்திற்கு இலாபம் கிட்டுவதில்லை. அச் சரக்கு கள் விற்பனை செய்யப்பட்ட பிறகே நிறுவனம் இலாபம் அடைகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். சாதாரண காலங்களில் விற்பனையைத் தீர்மானிப்பது என்பது மிகவும் தேவை யானதாகும். விற்பனை மதிப்பீடு என்பது இயன்றளவு துல்லியமாக இருத்தல் அவசியமாகும். அவ்வாறில்லாவிடில் நிறுவனத்தின் மற்ற எல்லாத் திட்டங்களும் பயனற்றனவாகி விடுகின்றன.

பழைய செய்திகளை மேலாண்மைக்கு அளிக்கும்பொழுது அச் செய்திகளால் தவறான முடிவுகள் ஏற்படாத வகையில் செய்திகளைத் தொகுத்துஅளிக்க வேண்டும். உதாரணமாக, ஒரு நிறுவனத்தின் விற்பனை கடந்த மூன்று ஆண்டுகளாக நிலையாக ரூ. 50,000 மாக இருக்கின்றது என்று கூறும்பொழுது, இந்த ஆண்டும் ரூ. 50,000 ஆக இருக்கலாம் என்ற முடிவுக்கு வரக்கூடும். ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணவீக்கத்தால் விற்பனைத் தொகை உறுதியாக ரூ. 50,000 மாக இருந்தாலும் வரும் ஆண்டிலும் விற்பனை அதே

தொகையாக இருக்கும் என்று கூறுவது தவறான முடிவாகும். மேலாண்மைக்கு அளிக்கும் செய்தியில் விற்ற பொருள்களின் எண்ணிக்கையையும், தொகையையும், குறிப்பிட்டு இருந்தால் இவ்வாறு தவறான முடிவுகள் எடுக்காவண்ணம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டு: ஒரு கம்பெனி தன் நடவடிக்கைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டிருக்கிறது. இக் கம்பெனி A, B, C என்ற மூன்று பொருள்களை விற்பனை செய்கிறது. இக் கம்பெனியின் மதிப்பீட்டுடன் அடுத்த ஆண்டின் விற்பனை மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டி, பின்வரும் செய்திகள், அளிக்கப்பட்டுள்ளன.

பொருள்	1ஆம் பிரிவு	2ஆம் பிரிவு	3ஆம் பிரிவு
A	8,000× ரூ. 5	12,000× ரூ. 5	12,000× ரூ. 5
B	6,000× ரூ. 10	16,000× ரூ. 10	8,000× ரூ. 10
C	4,000× ரூ. 20	24,000× ரூ. 20	10,000× ரூ. 20

மேற்கொடுக்கப்பட்ட அட்டவணை நடப்பு ஆண்டின் மதிப்பீட்டுப்படியான விற்பனையைக் குறிக்கிறது. நடப்பு ஆண்டின் கணக்கு ஏடுகளின்படி உண்மையான விற்பனை பின்வருவனவாம்:

பொருள்	1ஆம் பிரிவு	2ஆம் பிரிவு	3ஆம் பிரிவு
A	10,000× ரூ. 5	16,000× ரூ. 5	14,000× ரூ. 5
B	4,000× ரூ. 10	20,000× ரூ. 10	10,000× ரூ. 10
C	2,000× ரூ. 20	20,000× ரூ. 20	10,000× ரூ. 20

பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

1. 'A' என்ற பொருள் மக்கள் மத்தியில் அமோக வரவேற்புடையதாக இருக்கிறது. ஆகவே, அதன் விலையை ரூ. 5·50-க்கு உயர்த்த வேண்டும்.

2. 'B' என்ற பொருளின் விலையை ரூ. 19-க்குக் குறைத்தால் அதிகமாக விற்கமுடியும். விற்பனைத் துறையைச் சார்ந்த பலரிடமும் மூன்று அறிக்கைகளை வாங்கியதில் பின்வரும் உண்மைகள் தெளிவாகின்றன. மேற்கூறிய இரண்டு தீர்மானங்களையும் செயற்படுத்தும் போது மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள விற்பனை அளவுகள் பின்வருமாறு மாறுகின்றன:

பொருள்	1ஆம் பிரிவு	2ஆம் பிரிவு	3ஆம் பிரிவு
A	+ 30%	+ 40%	+ 20%
B	− 10%	+ 30%	− 10%
C	+ 10%	+ 20%	+ 10%

விலைமாற்றத்தால் B என்ற பொருளின் விற்பனை அளவு குறைவதால் அதிகமாக விளம்பரம் செய்ய முடிவுசெய்யப்பட்டது. இதன் விளைவாக B பொருளின் விற்பனை முதல் பிரிவில் 10% இரண்டாம் பிரிவில் 5% மூன்றும் பிரிவில் 20% முறையே கூடுதலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனை மதிப்பீட்டைத் தயாரிக்கவும்.

(விடை அடுத்த பக்கம்)

விற்பனைச் செலவு மதிப்பீடு

வரும் ஆண்டில் மதிப்பீட்டில் தீர்மானிக்கப்பட்ட விற்பனைக் கேற்ப விற்பனைச் செலவுகளையும் மதிப்பிட வேண்டியது தேவையானதாகும். இந்த மதிப்பீட்டைத் தயாரிக்கும்பொழுது பின்வரும் செலவுகளைக் கவனிக்க வேண்டும்.

(அ) நேரடி விற்பனைச் செலவு.

(ஆ) விளம்பரச் செலவு

(இ) விற்பனை அலுவலகச் செலவு முதலியனவாகும்.

எடுத்துக் காட்டு: ஒரு கம்பெனியின் விற்பனைத் துறை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் மேலும் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரிவு இரண்டில் B என்ற பொருள் மட்டும் ரூ. 50 வீதம் விற்கப்படுகின்றது. 31-3-1968-ல் முடிவடைந்த மதிப்பீட்டுக் காலத்திற்கு எதிர்பார்க்கப்படும் விற்பனை அளவுகள் பின்வருவனவாம்:

வடக்கு	—	இல்லை.
தெற்கு	—	5,000
கிழக்கு	—	3,000
மேற்கு	—	2,000

பிறகு, வடக்குப் பிரிவில் 'B' என்ற பொருள் 3,000 அளவில் விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 31-3-67-ல் முடிவடைந்த சென்ற ஆண்டு மதிப்பீட்டுக் காலத்தில் ஏற்பட்ட செலவுகள் பற்றிய விவரம் 52 ஆம் பக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரிவு / பொருள்	அடுத்த ஆண்டின் விற்பனை மதிப்பீடு அளவு	விலை	தொகை	நடப்பு ஆண்டின் விற்பனை மதிப்பீடு அளவு	விலை	தொகை
1ஆம் பிரிவு		ரூ.	ரூ.		ரூ.	ரூ.
A	10,400	5·50	57,200	8,000	5·00	40,000
B	5,940	10·00	59,400	6,000	10·00	60,000
C	4,400	17·00	83,500	4,000	20·00	80,000
மொத்தம்	20,740		2,00,200	18,000		1,80,000
2ஆம் பிரிவு						
A	16,800	5·50	92,400	12,000	5·00	60,000
B	21,840	10·00	2,18,400	16,000	10·00	1,60,000
C	28,800	19·00	5,47,200	24,000	20·00	4,80,000
மொத்தம்	67,440		8,58,000	52,000		7,00,000
3ஆம் பிரிவு						
A	14,400	5·50	79,200	12,000	5·00	60,000
B	8,640	10·00	86,400	8,000	10·00	80,000
C	11,000	19·00	2,09,000	10,000	20·00	2,00,000
மொத்தம்	34,040		3,74,600	30,000		3,40,000
மொத்தம்						
A	41,600	5·50	2,28,800	32,000	5·00	1,60,000
B	36,420	10·00	3,64,200	30,000	10·00	3,00,000
C	44,200	19·00	8,39,800	38,000	20·00	7,60,000
மொத்தம்	1,22,220		14,32,800	1,00,000		12,20,000

செலவு விவரம்	கிழக்கு	மேற்கு	தெற்கு	மொத்தம்
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
பிரதிநிதிகளின் சம்பளம், ஊக்க ஊதியம்	8,000	8,000	14,000	30,000
பிரதிநிதிகளின் செலவுகள்	5,000	4,000	8,000	17,000
வண்டிச் சத்தம்	2,500	3,500	2,000	8,000
இடங்குக் கூலி	8,000	6,000	16,000	30,000
கிடங்கில் மற்றச் செலவுகள்	3,000	1,000	5,000	9,000
விற்பனை அலுவலகச் செலவுகள்:				
சம்பளம்	4,000	4,000	10,000	18,000
வாடகை	1,500	1,000	4,500	7,000
இதர செலவுகள்	300	200	1,000	1,500
விளம்பரச் செலவுகள்	7,000	13,000	10,000	30,000
மொத்தம்	39,300	40,700	70,500	1,50,500

31-3-68-ல் முடிவடைய இருக்கும் மதிப்பீட்டு ஆண்டில் விற்பனைச் செலவுகளை ஒட்டி, பின்வரும் மாறுதல்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. பிரதிநிதிகளின் ஊக்க ஊதியம் ஒவ்வொரு பிரிவிலும் ரூ. 1000 கூடும்.

2. வடக்குப் பிரிவில் புதிதாக விற்பனைத் தொடங்குவதால் தெற்குப் பிரிவிலிருந்து ஒரு விற்பனையாளரை (Salesman) வடக்குப் பிரிவுக்கு மாற்ற வேண்டியுள்ளது. மாற்றப்பட்ட விற்பனையாளரின் சம்பளம் ரூ. 3,600. வடக்குப் பிரிவில் மேலும் பல பிரதிநிதிகளை பணிக்கு அமர்த்துவதால் ரூ. 14,400 செலவாகிறது.

3 வடக்குப் பிரிவில் பிரதிநிதிகளின் செலவுகள் ரூ. 10,000.

4. வண்டிச் சத்தம் கிழக்கு, மேற்குப் பிரிவுகளில் ரூ. 200 வீதமும் தெற்குப் பிரிவில் ரூ. 400 வீதமும் கூடுகின்றது. வடக்குப் பிரிவில் இச் செலவு ரூ. 8,000 என எதிர்பார்க்கப்படுகிறது.

5, விற்பனை அலுவலகச் சம்பளச் செலவுகள் கிழக்கு, மேற்கு, தெற்குப் பிரிவுகளில் 10% கூடுகின்றது. வடக்குப் பிரிவில் இச் செலவு ரூ. 3,000 என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. வாடகைச் செலவில் ரூ. 500 தெற்குப் பிரிவிலிருந்து வடக்குப் பிரிவிற்கு மாற்றவும்.

7. கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய மூன்று பிரிவுகளிலும் இதர செலவுகளில் ரூ. 100 வீதம் கூடுகின்றது.

8. தெற்குப் பிரிவில் விளம்பரச் செலவுகள் ரூ. 4,000 கூடுகின்றது.

9. மேற்கூறியவற்றைத் தவிர பின்வரும் செலவுகள் வடக்குப் பிரிவில் எதிர்பார்க்கப்படுகின்றன. கிடங்கில் கூலி ரூ. 10,000; விளம்பரச் செலவுகள் ரூ. 15,000; கிடங்கில் இதர செலவுகள் ரூ. 5,000; இதர செலவுகள் ரூ. 500.

31-3-1968ல்-முடிவடைந்த மதிப்பீட்டுக் காலத்தின் விற்பனைச் செலவு மதிப்பீடு தயாரிக்கவும்.

31-3-1968-ல் முடிவடையும் ஆண்டிற்கான விற்பனைச் செலவு மதிப்பீடு.

செலவு விவரம்	கிழக்கு ரூ.	தெற்கு ரூ.	மேற்கு ரூ.	வடக்கு ரூ.	மொத்தம் ரூ.
பிரதிநிதி சம்பளம்	9,000	11,400	9,000	18,000	47,400
பிரதிநிதியின் செலவுகள்	5,000	8,000	4,000	10,000	27,000
வண்டிச்சத்தம்	2,700	2,400	3,700	5,000	13,800
கிடங்கில் கூலி	8,000	16,000	6,000	10,000	40,000
கிடங்கில் இதர செலவுகள்	3,000	5,000	1,000	5,000	14,000
விற்பனை அலுவலகச் செலவுகள்					
சம்பளம்	4,400	11,000	4,400	3,000	22,800
வாடகை	1,500	4,000	1,000	500	7,000
இதரசெலவுகள்	400	1,100	300	500	2,300
விளம்பரச் செலவுகள்	7,000	14,000	13,000	15,000	49,000
மொத்தம்	41,000	72,900	42,400	67,000	2,23,300

ரொக்க மதிப்பீடு (Cash Budget)

மதிப்பீட்டுக் காலத்தில் நிறுவனத்தின் ரொக்கத் தேவைகளைச் சரியாக அளவிட்டு அதை அறிக்கை வடிவத்திலோ அட்டவணையாகவோ தயாரிக்கின்றனர். இதுவே ரொக்க மதிப்பீடு ஆகும். எந்தத் தொழிலிலும் தேவையான காலத்தில் செலவு செய்வதற்காக ரொக்கம் வைத்திருப்பது அவசியமாகும். விற்பனைமதிப்பீடு போன்ற பல மதிப்பீடுகளைத் தயாரித்தாலும் மிகவும் இன்றியமையாததாக இருப்பது ரொக்க மதிப்பீடு ஆகும். மற்ற மதிப்பீடுகளைக் காட்டிலும் இதற்குள்ள சிறப்புத் தன்மையாதெனில் இந்த மதிப்பீட்டைப்

பொதுவாக ஒவ்வொரு மாதத்திலும் அல்லது வாரத்திலும் ஏற்படும் ரொக்கத் தேவைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் அமைகின்றது. ரொக்க மதிப்பீட்டின் நன்மைகள் பின்வருவனவாம்:

1. உரிய காலத்தில் நிறுவனத்திற்குத் தேவையான ரொக்கம் கிடைக்க உறுதி செய்கிறது.

2. முதலினச் செலவுகளைக் (Capital Expenditure) கடன் வாங்காமலேயே சமாளிக்க இயலுமா என்று காட்டுகிறது.

3. ரொக்கத் தள்ளுபடிச் (Cash Discount) சலுகையை நிறுவனம் அடைய முடியும் என்பதைக் காட்டுகிறது.

4. நிறுவனத்திற்கு ஓர் ஆண்டின் எந்நேரத்தில் எவ்வளவு ரொக்கம் தேவைப்படுகிறது என்று கூறுவதால் அத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உண்டான வழிமுறைகளைக் கையாள முடிகிறது.

5. அதே நேரத்தில் நிறுவனத்தில் ரொக்கம் அதிகமாக இருப்பின் எவ்வாறு குறுகிய கால முதலீடுகளைப் பயனுள்ள வகையில் அந்த ரொக்கத்தை ஈடுபடுத்த முடியும் என்று கூறுகிறது.

ரொக்க மதிப்பீட்டை மூன்று வழிகளில் தயாரிக்கின்றனர்.

1. வரவு-செலவு முறை,

2. சரி செய்யப்பட்ட இலாப, நட்ட க/கு முறை.

3. இருப்புநிலைக் குறிப்பு முறை.

குறுகியகால அடிப்படையில் தயாரிக்கப்படும் மதிப்பீடுகள் முதல்முறையிலும், நீண்டகால அடிப்படையில் தயாரிப்பதற்கு மற்ற முறைகளையும் கையாளுகின்றனர்.

1. சரி செய்யப்பட்ட இலாப, நட்டக் கணக்கு முறை.

இந்த முறை பின்வருவதாம்:

மாதம்	விற்பனை	கொள்முதல்	கூலி	உற்பத்திச் செலவு	அலுவலகச் செலவு	விற்பனைச் செலவு
	ரூ	ரூ	ரூ	ரூ	ரூ	ரூ
மார்ச்	60,000	36,000	9,000	4,000	2,000	4,000
ஏப்ரல்	62,000	38,000	8,000	3,000	1,500	5,000
மே	64,000	33,000	10,000	4,500	2,500	4,500
ஜூன்	58,000	35,000	8,500	3,500	2,000	3,500
ஜூலை	56,000	37,000	9,000	4,000	1,000	4,500
ஆகஸ்டு	60,000	34,000	8,000	3,000	1,500	4,500

பின்வரும் கூடுதல் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

1. ரூ. 16,000 அடக்கவிலை உள்ள ஓர் இயந்திரம் ஜூலை மாதத்தில் வாங்கப்படும். அடக்க விலையில் 10% உடனடியாகக் கொடுக்க வேண்டும். மீதித் தொகையை மூன்று மாதங்களில் கொடுக்க வேண்டும்.

2. முன்செலுத்த வேண்டிய வருமானவரி மார்ச்சு மாதத்திலும், ஜூன் மாதத்திலும் முறையே ரூ. 4,000 ரூ. 8,000 ஆகும்.

3. கடனாளிகளுக்கு ஒரு மாத காலமும், கடனீந்தோர் இரண்டு மாதங்களும், கடன் வசதி அளிக்கின்றனர்.

4. உற்பத்திச் செலவுகள் அரைமாத கால இடை வெளியில் (Lag in payment) செலுத்தப்படுகின்றன.

5. மற்ற எல்லாச் செலவுகளும் ஒரு மாத கால இடைவெளியில் செலுத்தப்படுகின்றன.

மே 1, 1969-ல் துவங்கி 31 ஜூலையில் முடிவடையும், மூன்று மாத ரொக்க மதிப்பீட்டைத் தயாரிக்கவும். மே 1, 1969-ல் ரொக்க இருப்பு ரூ. 8,000 அறிக்கைக்கு ஒப்பிடலாம். வரவு, செலவு முறையைவிட இதைப் புரிந்துப் கொள்ளுவது மிகக் கடினம். வரவு, செலவு முறையில் அளிக்கப்படும் முழுவிவரங்கள் இம் முறையில் அளிக்கப்படுவதில்லை. ஆனால், நீண்டகால அடிப்படையில் தயாரிக்கப் படும் மதிப்பீடுகளுக்கு அதிக விவரங்கள் தேவையில்லை. ரொக்க மில்லா நடவடிக்கைகளையும், இலாபம் கணக்கிடுவதில் எடுத்துக் கொள்வதுதான் இம் முறையின் சிறப்பு இயல்பாகும்.

இருப்புநிலைக் குறிப்பு முறை:

மதிப்பீட்டுக்கால முடிவில் ஓர் இருப்புநிலைக் குறிப்புத் தயாரிக்கப் படுகிறது. எல்லாச் சொத்துகளிலும், பொறுப்புகளிலும் ஏற்படும் மாறுதல்கள் கணக்கிலெடுக்கப்படுகின்றன. அவ்வாறு இறுதியாகத் தயாரிக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள், சொத்துகளிடையே உள்ள வேறுபாடு மதிப்பீட்டுக் கால முடிவில் எதிர்பார்க்கப்படும் ரொக்கத்தை அல்லது பாங்கு அதிகப்பற்றைக் குறிக்கும்.

வரவு செலவு முறை:

எல்லா ரொக்க வரவுகளும், செலவுகளும் இதில் இடம் பெறுகின்றன. கொடுக்கப்படாத செலவுகள், முன் செலுத்திய செலவுகள் இவைகளைச் சரிசெய்த பின் ரொக்கம் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைச் சரியாகக் கணக்கிட வேண்டும். இது ரொக்கக் கணக்கை ஒத்து இருக்கின்றது.

எடுத்துக் காட்டுகள்:

எ. கா: ஒரு கம்பெனியின் மார்ச்சு முதல் ஆகஸ்டு முடிய 6 மாதங்களுக்கு ஆன வரவு, செலவு பின் வருவனவாம்:

31-7-1969-ல் முடிவடையும் மூன்று மாதகால ரொக்க மதிப்பீடு.

1	2	3	4
வரவுகள்:	மே	சூன்	சூலை
	ரூ.	ரூ.	ரூ.
துவக்க ரொக்க இருப்பு	8,000	15,750	12,750
விற்பனை	62,000	64,000	58,000
மொத்தம்	70,000	79,750	70,750
செலவுகள்:			
கொள்முதல்	36,000	38,000	33,000
கூலி	8,000	10,000	8,500
உற்பத்திச் செலவுகள்	3,750	4,000	3,750
அலுவலகச் செலவுகள்	1,500	2,500	2,000
விற்பனைச் செலவுகள்	5,000	4,500	3,500
முன் செலுத்திய வருமான வரி	—	8,000	—
இயந்திரம் வாங்கியது	—	—	1,600
மொத்தம்	54,250	67,000	52,350
இறுதி ரொக்க இருப்பு	15,750	12,750	18,400

விளக்கங்கள்:

1. வாடிக்கையாளர்களுக்கு ஒரு மாத கால கடன் வசதி அளிக்கப்படுவதால் சென்ற மாத விற்பனை இந்த மாதம் ரொக்கமாக பெற்றுக் கொண்டதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

2. கடனீந்தோர் நமக்கு இரண்டு மாத கால கடன் வசதி அளிப்பதால் இம் மாதம் கடனீந்தோருக்கு அளிக்கப்படும் தொகை இரண்டு மாதங்களுக்கு முன் வாங்கிய சரக்குக்காகும்.

3. கூலி, அலுவலகச் செலவுகள், விற்பனைச் செலவுகள் முதலியன ஒரு மாத கால இடை வெளியில் கொடுக்கப்படுவதால்

சென்ற மாதத்தின் செலவுகள் இந்த மாதத்தில் கொடுக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.

4. உற்பத்திச் செலவுகள் அரைமாத கால இடைவெளியில் கொடுக்கப்படுவதால் ஒவ்வொருமாதமும் அந்தக் குறிப்பிட்டமாதம், அதற்கு முன் மாதம் ஆகிய இரண்டு மாதங்களின் சராசரித் தொகையைக் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது.

எடுத்துக் காட்டு 2:

அடியிற்கண்ட செய்திகளிலிருந்து ஏப்ரல்-ஜூன் 1970-ல் முடிவடையும் மூன்று மாத காலத்தின் ரொக்க மதிப்பீட்டைத் தயாரிக்கவும்.

விற்பனை:

ஏடுகளின்படி சரியான தொகை		மதிப்பீட்டில் நிருணயிக்கப் பட்டத் தொகை	
சனவரி	80,000	ஏப்ரல்	90,000
பிப்ரவரி	80,000	மே	85,000
மார்ச்	75,000	ஜூன்	80,000

கொள்முதல்:

சனவரி	45,000	ஏப்ரல்	50,000
பிப்ரவரி	40,000	மே	45,000
மார்ச்	42,000	ஜூன்	35,000

கூலி

சனவரி	20,000	ஏப்ரல்	24,000
பிப்ரவரி	18,000	மே	20,000
மார்ச்	22,000	ஜூன்	18,000

செலவுகள்:

சனவரி	5,000	ஏப்ரல்	7,000
பிப்ரவரி	6,000	மே	6,000
மார்ச்	6,000	ஜூன்	5,000

கூடுதல் விவரங்கள்:

1. மே மாதத்தில் முன் செலுத்த வேண்டிய வருமான வரி ரூ. 4,000

2. ஏப்ரல் மாதத்தில் இயந்திரம் வாங்கியதற்குக் கொடுக்க வேண்டியது ரூ. 10,000

3. மேற்கூறிய செலவுகளைத் தவிர ஒவ்வொரு மாதமும் ரூ. 300 வீதம் வாடகை செலுத்த வேண்டும்.

4. விற்பனைக் கொள்முதலில் 10% ரொக்க முறையில் நடைபெறுகின்றன.

5. கடனீந்தோர் நமக்கு அளிக்கும் கடன்வசதிக் காலம் ஒரு மாதம். கடனாளிகளுக்கு நாம் அளிக்கும் கடன்வசதிக் காலம் இரண்டு மாதங்கள்.

6. கூலி, செலவுகள் முதலியவற்றைச் செலுத்துதலில் உள்ள கால இடைவெளி (Time lag) அரை மாதம்.

7. ஏப்ரல் 1-ல் ரொக்க இருப்பு ரூ. 13,000.

விடை :

ஏப்ரல்-சூன் 1970 ரொக்க மதிப்பீடு

வரவுகள்	**ஏப்ரல்**	**மே**	**சூன்**
	ரூ.	ரூ.	ரூ.
துவக்க ரொக்க இருப்பு	13,000	11,400	5,100
ரொக்க விற்பனை	9,000	8,500	8,000
கடனாளிகளிடம் வசூலிக்கப்பட்டது	72,000	67,500	81,000
	94,000	87,400	94,100
செலவுகள் :			
ரொக்கக் கொள்முதல்	5,000	4,500	3,500
கடனீந்தோருக்குக் செலுத்தியது	37,800	45,000	40,500
கூலி	23,000	22,000	19,000
செலவுகள்	6,500	6,500	5,500
வருமானவரி முன் செலுத்தியது	—	4,000	—
இயந்திரம்	10,000	—	—
வாடகை	300	300	300
	82,600	82,300	68,800
இறுதி ரொக்க இருப்பு	11,400	5,100	25,300

5. இறுதி நிலைச் செலவு

(Marginal Costing)

அடக்கவிலைக் கணக்கியலில் இறுதிநிலைச்செலவு என்ற கொள்கை தற்காலத்தில் அனைவராலும் கையாளப்படும் உத்திகளில் ஒன்றாகும். இதற்கு நேரடி அடக்க விலை (Direct Cost) என்று மற்றொரு பெயரும் உண்டு. உற்பத்தியைக் கூட்டுவதால் ஏற்படும் கூடுதல் செலவுகளை இறுதிநிலைச் செலவு எனலாம். அதாவது உற்பத்திக் கூடாவிடில் இச் செலவுகள் கூடா. இறுதிநிலைச் செலவு என்பது அடக்க விலைக் கணக்கியலில் ஒரு தனி முறை என்று கூறமுடியாது. ஏனெனில், இறுதிநிலைச் செலவு முறைப்படி எந்த ஒரு பொருளின் விலையையும் நிருணயிப்பது தவறான ஒன்றாகும். ஆகவே, இறுதிநிலைச் செலவு என்பது ஒரு தனி முறையன்று. மேலாண்மைக்குத் தீர்மானங்கள் எடுக்க உதவும் வகையில் அடக்கவிலைச் செய்திகளை (Cost Data) தொகுத்தளிக்கும் ஒரு சீரியமுறை எனக் கூறலாம்.

அடக்க விலைச் செலவு கணக்கியல் துறை உள்ள நிறுவனங்களில் ஏற்படும் மாறாச்செலவுகளைப் பொருளின் அடக்கவிலையிலேயே கூட்டி, பொருளின் விலையைத் தீர்மானிக்கின்றனர். இவ்வாறு பொருளின் விலையிலேயே மாறாச் செலவை சேர்க்கும் முறைக்கு, சேர்ப்பு அடக்க விலைக் கணக்கியல் (Absorption Costing) என்று பெயர். இவ்வாறு பொருளின் அடக்கவிலையிலேயே நிறுவனத்தின் மொத்த மாறாச் செலவுகளைச் சேர்ப்பதில் பல இன்னல்கள் உள்ளன. உதாரணமாக, ஒரு நிறுவனத்தின் மாறாச் செலவு ரூ. 50,000 எனக் கொள்வோம். அந் நிறுவனத்தில் 5,000 பொருள்கள் (Units) தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டு ஒவ்வொரு பொருளின் விலையிலும் மாறாச் செலவுக்காக ரூ. 10% கூட்டியுள்ளனர் எனக் கொள்வோம். ஆனால் அந் நிறுவனத்தில் அவ்வாண்டில் 4,000 பொருள்களே தயாரிக்கப் பட்டன என்று கொள்வோம். இந் நிலையில் மொத்த மாறாச் செலவில் ரூ. 40,000 மட்டும் அந் நிறுவனத்திற்குத் திரும்பக் கிடைத்து விடுகின்றது. மாறாச் செலவில் ஒரு பகுதி (ரூ. 10,000) மீட்கப்

படுவதில்லை. மேலும் மாறாச் செலவுகள் அடக்கவிலையில் சேர்க்கப் பட்டு முற்றுப்பெறாச் சரக்காக இருந்ததால், அவ்வாறு சேர்க்கப் படுவதைத் தவறான கணக்கியல் கொள்கை எனக் கருதுவோரும் உண்டு. மாறாச் செலவுகளைப் பொருளின் அடக்கவிலையின் ஒரு பகுதியாகச் சேர்ப்பதற்கு வேறொரு எதிர்ப்பும் தெரிவிக்கின்றனர். அதாவது வாடகை, ஈட்டுறுதி முதலிய மாறாச்செலவுகள் ஒரு காலத்திற்கான செலவுகளே அல்லாமல் உற்பத்தியின் அளவுக்கு யாதொரு தொடர்பும் கிடையாது. எனவே, இறுதிநிலைச் செலவுக் கொள்கை என்பது ஓர் உயர்ந்த கொள்கையாகும்.

இவ்வகையில் இறுதிநிலைச் செலவுக் கொள்கையில் செலவுகளை இரு வகைகளாக, அதாவது-மாறும் செலவு, மாறாச்செலவு (Variable Expenses, Fixed Expenses) எனப் பிரிக்க வேண்டியதாயிற்று.

பங்களிப்பு (Contri bution)

பல பொருள்களைத் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தில் இறுதிநிலைச் செலவுக்கொள்கைப்படி ஒவ்வொரு பொருளின் நிகரலாபத்தைக் கணக்கிடுவது இயலாத செயல். ஏனெனில், நிறுவனத்தின் மாறாச் செலவுகள் பொருளின் அடக்கவிலையில் சேர்க்கப்படுவதில்லை. ஒரு மொத்தமாக இலாப, நட்டக்கணக்கில் பற்றெழுதப்படுகிறது. இம் முறையில் ஒவ்வொரு பொருளின் பங்களிப்பைத்தான் கணக்கிட முடியும். அவ்வாறு பல பொருள்களின் பங்களிப்பிலிருந்து (மொத்தத் தொகையிலிருந்து) அந் நிறுவனத்தின் மாறாச்செலவு களைக் கழித்த பிறகு எஞ்சி நிற்கும் தொகையை இலாபம் எனலாம். அதாவது பங்களிப்பு—மாறாச் செலவு = இலாபம்.

(Contribution —Fixed Expenses = Profit)

எ. கா: ஒரு நிறுவனத்தில் அ, ஆ, இ என்ற மூன்று பொருள்கள் தயாரிப்பதாகக் கொள்வோம். அம் மூன்று பொருள் களின் விற்பனை விலைகள் முறையே ரூ. 50, ரூ. 60, ரூ. 70 எனக் கொள்வோம். அப்பொருள்களைத் தயாரிப்பதில் மாறும் செலவுகள் பின் வருமாறு।

அ — ரூ. 40, ஆ— ரூ. 50, இ— ரூ. 58

ஒவ்வொரு பொருளின் பங்களிப்பும் பின்வருமாறு:

(அ) = ரூ. 50—40 = ரூ. 10
(ஆ) = ரூ. 60—50 = ரூ. 10
(இ) = ரூ. 70—58 = ரூ. 12

இ, என்ற பொருளின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. எனவே அப் பொருளைத் தயாரிப்பது நிறுவனத்திற்கு அதிக இலாபம் கொடுக்கும் எனக் கூறலாம்.

இவ்வாறாக, பங்களிப்பு அதிகமாக உள்ள பொருளை அதிக அளவில் தயாரிக்க எந்நிறுவனமும் முற்படுவது இலாபகரமானதாகும்.

இறுதிநிலைச் செலவுக் கொள்கையின் நன்மைகள்.

மேலாண்மையினருக்குச் சில முக்கியத் தீர்மானங்கள் எடுப்பதில் மிகவும் உதவியாக இருக்கும் அளவில் இக் கொள்கையைப் பலரும் மதிக்கின்றனர். இறுதிநிலைச் செலவுக் கொள்கையின் பயன்களாவன:

1. விலை நிருணயம் செய்வதில் பங்கு: பொதுவாக, விற்கப்படும் பொருள்களின் விலையில் எல்லாச் செலவுகளையும் சேர்ப்பது வழக்கம். இந் நிலை சாதாரண காலங்களில் சரியான முறையாகும். ஆனால் தொழில் மந்தமடைந்த நிலையில் விற்பனைவிலை மொத்த அடக்க விலைக்குக் குறைவாகக்கூட இருக்கக்கூடும். குறைந்தது மொத்தச் செலவான தொகையாவது விற்பனையில் கிட்டவேண்டும் என்று நினைப்பது கூடத் தவறாகும். செலவுகளுக்குக்கூட கட்டாத நிலையில் தொழில் செய்து பயனில்லை என்று நினைப்பது தவறாகும் என்பதை நிரூபிக்கலாம்.

(அ) தொழில் மந்தமடைந்த நிலையில் ஒரு பொருளின் விலையைக் குறைப்பது என்பது பெரும் பிரச்சினையாகும். பின்வரும் எடுத்துக்காட்டை நோக்குவோமாக:

ஒரு பொருளின் உற்பத்திச் செலவுகள் பின் வருவனவாம்:

கச்சாப் பொருள்	ரூ.	7
கூலி	,,	3-50
ஆலைச் செலவு (மாறும் செலவு)	,,	3
விற்பனைச் செலவு (மாறும் செலவு)	,,	2
மாறாச் செலவு	ரூ.	2,00,000

மேற்கூறிய செலவமைப்பில் 30,000 பொருள்களை விற்பதாகக் கொள்ளவும். ஒரு பொருள் ரூ. 19-க்கு விற்பதாகக் கொள்ளவும். இந் நிலையை விளக்கும் வியாபார இலாப, நட்டக் கணக்கு பின்வருமாறு இருக்கும்:

	ரூ	விற்பனை	ரூ
கச்சாப் பொருள்	2,10,000	(30,000×19)	5,70,000
கூலி	1,05,000	நட்டம்	95,000
ஆலைச்செலவு	90,000		
விற்பனைச் செலவு	60,000		
மாறாச்செலவு	2,00,000		
	6,65,000		6,65,000

தொழில் மந்தமடைந்த நிலையில் 30,000 பொருள்களை ரூ 19 வீதம் விற்றதில் ரூ. 95,000 நட்டம் அடைந்துள்ளோம். ஆனால் இவ்வாறு விலையைக் குறைத்து விற்காமல் உற்பத்தி செய்யாமல் இருந்திருந்தால் ரூ 2,00,000 நட்டம் அடைய நேர்ந்திருக்கும். அதாவது மாறாச் செலவுகள் எப்படியும் எந்நிலையிலும் நிறுவனத்தின் மறுக்க முடியாத பொறுப்பாகும். இதிலிருந்து புரிந்துகொள்வது யாதெனில் ''சில நேரங்களில் மொத்த அடக்கவிலைக்குச் சற்றுக் குறைவாக விற்பது, ஏதும் விற்காமலிருப்பதைவிட மேலாகும்'' என்பதேயாகும். மற்றோர் உண்மையை விளக்க வேறு ஓர் உதாரணத்தைக் காண்போம். 40,000 பொருள்கள் ரூ. 15 வீதம் விற்கப்படுவதாகக் கொள்வோம். இந் நிலையை விளக்கும் வியாபார இலாப, நட்ட க/கு பின்வருமாறு:

	ரூ.	விற்பனை	ரூ
கச்சாப்பொருள்	2,80,000	(40,000×15)	6,00,000
கூலி	1,40,000	நட்டம்	2,20,000
ஆலைச்செலவுகள்	1,20,000		
விற்பனைச் செலவுகள்	80,000		
மாறாச் செலவுகள்	2,00,000		
	8,20,000		8,20,000

40,000 பொருள்கள் விற்கப்படும்போது நட்டம் ரூ 2,20,000-க்கு உயர்ந்துள்ளது. அதிக பொருள்கள் விற்கப்பட்டும் நட்டம் உயர்ந்துள்ளது. ஏன்? முதலில் கூறப்பட்ட உதாரணத்தில் ரூ. 19 வீதம் விற்கப்பட்ட பொருள் இரண்டாவது நிலையில் ரூ. 15 வீதம்தான்

விற்கப்பட்டது. அப் பொருளின் அடக்கவிலை அமைப்பைக் கவனிக்கவும்.

மாறும் செலவுகள் ரூ. 15-50 ஆகிறது. இரண்டாவது உதாரணத்தில் அதன் விற்பனைவிலை ரூ. 15 ஆகிறது. அதாவது, அப் பொருளின் இறுதிநிலைச் செலவைக் காட்டிலும் (Marginal Cost) குறைவாக விற்கப்படுகிறது. இதிலிருந்து ஓர் உண்மையை எடுத்துக் கூறலாம். அதாவது மொத்த அடக்கவிலையைவிடக் குறைத்து விற்றால் நட்டத்தைக் குறைக்கலாம். ஆனால், இறுதிநிலைச் செலவுக்கும் குறைவாக விற்பின் நட்டம் கூடுகிறது. இவ்வாறு விலை நிருணயம் செய்வதில் இறுதிநிலைச் செலவுக் கொள்கை மிகவும் பயன்படுகிறது.

2. சிறப்புச் சந்தையில் விற்பனை: ஒரு நிறுவனம் தேவையான இலாபத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் மேலும் கூடுதல் பொருள்களை மொத்த விலைக்குச் சற்றுக் குறைத்து விற்பதாலும் அதிக இலாபம் அடைய முடிகிறது. எ. கா. ஒரு பற்பசை தயாரிக்கும் நிறுவனம் ஒரு குழாயை ரூ. 5-க்கு விற்பதாகக் கொள்வோம். இராணுவத்தில் ரூ. 4-50 வீதம் 5000 குழாய்கள் அளிக்கும்படி ஓர் அழைப்பு உள்ளதாக வைத்துக் கொள்வோம். ஒரு குழாயைத் தயாரிப்பதற்கு ஏற்படும் மாறும் செலவுகள் ரூ 4-00 எனக் கொள்வோம். இந் நிலையில் இந்த அழைப்பை ஏற்றால் அந் நிறுவனத்திற்கு ரூ 2,500 கூடுதல் பங்களிப்புக் கிடைக்கும்.

3. தயாரிக்கும் அல்லது வாங்கும் முடிவு:(Make or Buy Decisions) ஒரு நிறுவனத்தில் ஓர் இயந்திரச் சாதனம் தயாரிப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த இயந்திரத்தின் ஒரு பகுதியை (A part of a machine) வாங்குவதா அல்லது தயாரிப்பதா என்ற பிரச்சினை எழுவதாக வைப்போம். இக் கேள்விக்குப் பதிலளிப்பதில் இறுதிநிலைச் செலவுக் கொள்கை பயனுள்ள வகையில் உதவுகிறது. இந்த இயந்திரப் பகுதியைத் தயாரிக்கும் செலவு பின்வருமாறு:

	ரூ
மாறுஞ் செலவு	11
மாறாச் செலவு	4
மொத்த அடக்கவிலை	15

அதே இயந்திரப் பகுதியை மற்றொரு நிறுவனம் ரூ. 13-க்கு அளிக்கத் தயாராக உள்ளது என்று கொள்வோம். இந்த அழைப்பை

ஏற்பது கூடாது. ஏனெனில், மாறாச் செலவுகள் இந்த இயந்திரப் பகுதியை வெளியில் வாங்குவதால் நின்றுவிடப் போவதில்லை. மாறாச் செலவுகளை எந்நிலையிலும் தவிர்க்க முடியாது. ஆகவே, உண்மையில் இந்த இயந்திரப் பகுதியின் அடக்கவிலை ரூ 13+4 ரூ = ரூ 17 ஆகும். இந் நிலையில் வாங்குவதைவிட தயாரிப்பதே மேல் என முடிவெடுக்க வேண்டும்.

4. **பொருள்களைக் கைவிடும் முடிவு:** (Abandonment Decision) சில நேரங்களில் பற்றாக்குறை காரணமாக ஒரு நிறுவனம் தான் தயாரிக்கும் பல பொருள்களில் ஒன்றைக் கைவிட வேண்டிய நிலையில் இக் கொள்கை பெரிதும் உதவுகிறது. பின்வரும் எடுத்துக் காட்டை நோக்குவோம்:

	'அ' பொருள் ரூ	'ஆ' பொருள் ரூ
கச்சாப் பொருள்	5·00	8·50
கூலி	4·00	3·00
மாறும் செலவுகள்	3·00	4·00
மாறாச் செலவுகள்	3·50	2·00
மொத்த விலை	15·50	17·50
இலாபம்	1·50	2·00
விற்பனை விலை	17·00	19·50

'ஆ' பொருள் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் இலாபம் கிடைத்தாலும் 'அ' பொருளைத் தயாரிப்பதே மேலாகும். இதை விளக்கும் வகையில் மற்றோர் அட்டவணையைத் தயாரிப்போம்:

வருமான உற்பத்திப் பங்கு (Contribution)

		'அ'		'ஆ'
விற்பனை விலை	ரூ	17·00	ரூ	19·50
இறுதி நிலைச் செலவு	,,	12·00	,,	15·50
		5·00	,,	4·00

இந் நிலைகளில் முடிவெடுப்பதற்குப் பெரிதும் உதவுவது பொருளின் பங்களிப்பை (contribution) ஒப்பிட்டுப் பார்ப்பதே ஆகும். 'அ' பொருளின் பங்களிப்பு ரூ. 5 ஆனால் 'ஆ' பொருளின் பங்களிப்பு ரூ. 4 ஆகும். ஆகவே அதிகமான பங்களிப்பு உடைய பொருளைக் அதாவது 'அ' பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். 'ஆ' பொருளை கைவிட்டு விடவேண்டும்.

இறுதிநிலைச் செலவுக் கொள்கையின் தீமைகள்:

1. சாதாரண நிலைகளில் இக் கொள்கைப்படி விலையை நிருணயித்தால் நிறுவனத்திற்கு வீண் நட்டமே ஏற்படும். இக் கொள்கையைத் தகுந்த காலங்களில்தான் கையாள வேண்டும்.

2. இருபொருள்களின் இலாபத் தன்மையை ஒப்பிடுவதில் மாறாச்செலவுகளையும் சேர்த்துக் கொள்வதே சரியான கொள்கையாகும்.

3. புதிய வாடிக்கையாளர்களுக்கு ஆரம்ப காலத்தில் சற்றுக் குறைவான விலைக்கு விற்பது வியாபாரத் தந்திரமாகும். பிறகு விலையைக் கூட்டுவது இயலாத செயலாகிடும்.

எடுத்துக் காட்டு: 'அ', 'ஆ', 'இ' பொருள்களின் அடக்கவிலை அமைப்புப் பின்வருவதாம்:

	அ	ஆ	இ
	ரூ.	ரூ.	ரூ.
கச்சாப் பொருள்	10	8	9
கூலி	6	7	6
மாறுஞ்செலவுகள்	4	5	3
மாறாச்செலவுகள்	3	3	2
விற்பனை விலை	32	30	26
விற்பனையான பொருள்கள்	10,000	5,000	8,000

ஒரு பொருளின் உற்பத்தி கைவிடப்பட்டால் மற்றப் பொருள்களின் உற்பத்தியில் 50% கூடுகிறது. கம்பெனியின் இயக்குநர்கள் 'இ' பொருளைக் கைவிடும்படி முடிவெடுக்கின்றனர். இது சரியான முடிவா?

விடை: பங்களிப்பு அட்டவணை.

		அ	ஆ	இ
இறுதிநிலைச் செலவு	ரூ.	20	20	18
விற்பனை விலை		32	30	26
பங்களிப்பு	ரூ.	12	10	8

1. 'அ' பொருள் கைவிடப்பட்டால்:

		பங்களிப்பு
		ரூ.
'ஆ' பொருள்	7,500 × 10	75,000
'இ' பொருள்	12,000 × 8	96,000
மொத்தம்	ரூ.	1,71,000

2. 'ஆ' பொருள் கைவிடப்பட்டால்:

		ரூ.
'அ' பொருள்	15,000 × 12	1,80,000
'இ' பொருள்	12,000 × 8	96,000
மொத்தம்	ரூ.	2,76,000

3. 'இ' பொருள் கைவிடப்படடால்:

'அ' பொருள்	15,000 × 12	1,80,000
'ஆ' பொருள்	75,000 × 10	75,000
மொத்தம்	ரூ.	2,55,000

மேற்கூறப்பட்ட மூன்று நிலைகளில் இரண்டாவது முடிவுப்படி 'ஆ' பொருளைத் தயாரிப்பதைக் கைவிட்டால் மொத்தப் பங்களிப்பு மிகவும் அதிகமாக உள்ளது. ஆகவே 'இ' பொருளைக் கைவிடும் முடிவு இலாபகரமானதாக இல்லை.

எடுத்துக்காட்டு: ஓர் ஆலையில் இரண்டு பொருள்கள் தயாரிக்கப் படுகின்றன. தேவையான தொழிலாளிகளுக்குப் பற்றுக்குறை யுள்ளது. இந் நிலையில் எந்தப் பொருளைத் தயாரிப்பது இலாபகர மானது என்று ஆராய்வோம்.

	பொருள் 'அ'	பொருள் 'ஆ'
கச்சாப் பொருள்	5-00	5-00
கூலி		
○ மணி 0-50 வீதம்	3-00	
3 மணி 0-50 வீதம்		1-50
மாறுச் செலவுகள்-கூலியில் 50%	1-50	0-75
மாறுஞ்செலவுகள்	1-50	1-50
மொத்த விலை	11-00	8-75
இலாபம்	3-00	2·25
உற்பத்தியான பொருள்கள்.	500	600

4,800 மணி நேரத்திற்கு வேலை செய்யக்கூடிய அளவிற்குத்தான் தொழிலாளிகள் உள்ளனர்.

இக் கணக்கில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது 4,80 மணிக்குத்தான் தொழிலாளிகள் வேலை செய்ய உள்ளனர் என்பதே ஆகும். மொத்த உழைப்பாற்றல் காலத்தை 'அ' அல்லது 'ஆ' பொருளைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தினால் என்னவாகும் என்பதைக் காண்போம்.

4,800 மணி உழைப்பாற்றலை 'அ' பொருள் தயாரிப்பதில் ஈடுபடுத்துதல்:

'அ' பொருள் ஒன்றைத் தயாரிக்க 6 மணி உழைப்பாற்றல் தேவைப்படுவதால் $\frac{4,800}{6} = 800$ பொருள்களே தயாரிக்க முடியும்.

'அ' பொருளின் பங்களிப்பு:

கச்சாப் பொருள்	ரூ. 5-00
கூலி	ரூ. 3-00
மாறுஞ்செலவு	ரூ. 1-00
	9-50

விற்பனை விலை	ரூ. 14-00
பங்களிப்பு	ரூ. 4-50

மொத்தப் பங்களிப்பு ரூ. 800 × ரூ 4-50 = ரூ. 3,600

4,800 மணி உழைப்பாற்றலை "ஆ" பொருளைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தினால்:

'ஆ' பொருள் ஒன்றைத் தயாரிக்க 3 மணி நேர உழைப்பாற்றல் தேவை. ஆகவே $\frac{4,800}{3} = 1,600$ பொருள்கள் தயாரிக்கமுடியும்.

'ஆ' பொருளின் பங்களிப்பு: ரூ.

கச்சாப் பொருள்	ரூ. 5-00
கூலி	ரூ. 1-50
மாறுஞ்செலவு	ரூ. 1-50
	ரூ. 8-00

விற்பனை	ரூ. 11-00
பங்களிப்பு	ரூ. 3
மொத்த பங்களிப்பு	ரூ. 1,600×3 = ரூ. 4,800

விளக்கம்: 'ஆ' பொருளைத் தயாரிப்பதில் அதிகப் பங்களிப்புக் கிடைப்பதால் 'ஆ' பொருளே அதிக இலாபம் தரக்கூடியதாகும்.

எடுத்துக்காட்டு: ஒரு கம்பெனி, தான் தயாரிக்கும் பொருளின் ஒரு பகுதியை வெளியில் ரூ. 1-80 வீதம் வாங்க முடிவு செய்துள்ளது மேலாண்மைக் கணக்கரிடம் அறிவுரை கோரப்படுகிறது. உங்களுடைய அறிவுரை யாது? பின்வரும் விபரங்கள் அளிக்கப்பட்டுள்ளன:

1. கச்சாப் பொருளின் விலையில் 50 பைசா வீதம் குறைகிறது.
2. கூலி 25 பைசா வீதம் குறைகிறது.
3. மாறுஞ் செலவு ரூ. 1-00 வீதம் குறைகிறது.
4. கண்காணிப்புச் செலவு ரூ. 2,000, சிறப்புக் கருவிகளுக்கு உண்டான செலவு ரூ. 500, குறைகிறது: மற்ற விவரங்கள் பின்வருவனவாம்:

விற்பனையான பொருள்கள் 14,000

இலாப, நட்டக் கணக்கு

	ரூ		
கச்சாப்பொருள்	70,000	விற்பனை	3,50,000
கூலி	28,000	(14,000×25)	
ஆலைச் செலவுகள்	1,76,000	நிகர நட்டம்	24,000
விற்பனைச் செலவுகள்	1,00,000		
	3,74,000		3,74,000

ஆலைச்செலவுகள் பற்றிய விளக்கம் பின்வருவனவாம்:

20,000 பொருள்கள் தயாரிக்க ஆலைச் செலவுகள்:		ரூ.
மாறுஞ்செலவு	(20,000×4)	80,000
மாறாச்செலவு	(20,000×6)	1,20,000
		2,00,000

இயந்திரப் பகுதியை வாங்குவதா அல்லது தயாரிப்பதாவென முடிவெடுத்தல்:

	தயாரிப்பது ரூ.			வாங்குவது ரூ.
கச்சாப் பொருள்கள்	70,000	(14,000×50 பை)	— 7,000	63,000
கூலி	28,000	(14,000×25 பை)	— 3,500	24,500
மாறுஞ்செலவு	56,000	(14,000× 1 ரூ.)	—14,000	42,000
இயந்திரப் பகுதி	...	(14,000×1.80பை)	+25,200	25,200
மாறாச்செலவு	1,20,000	{1,20,000— (2,000	+ 500)}	1,17,500
மொத்த அடக்கவிலை	2,74,000			2,72,200

இயந்திரப் பகுதியை வாங்குவதால் ரூ. 2,72,200 செலவாகிறது. ஆனால், இதே பகுதியைத் தயாரிப்பதால் ரூ. 2,74,000 ஆகிறது. வாங்குவதால் ரூ. 1,800 செலவு குறைகிறது. ஆகவே, செலவுத் தொகையை ஒப்பிடும்பொழுது ரூ. 1,800 குறைவது நன்கு எனவே நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், இவ்வியந்திரப் பகுதியைத் தயாரிப்பதை நிறுத்திவிட்டதால் ஏற்படும் எல்லா விளைவுகளையும் பார்க்கும் பொழுது ரூ. 1,800 இலாபம் பெரிதன்று. ஆகவே, இந்த இயந்திரப் பகுதியைத் தயாரிப்பதே மேலான செயலாகும்.

எடுத்துக்காட்டு: அடுத்த ஆண்டின் விற்பனை மதிப்பீடு தயாரிப்பதில் பின்வரும் நிலைகளில் எது சிறந்தது என்று கேட்கின்றனர்.

(1) 450 'ஏ' பொருள்களும் 300 'பி' பொருள்களும்
(2) 900 'ஏ' பொருள்கள்
(3) 600 'பி' பொருள்கள்
(4) 600 'ஏ' பொருள்களும் 200 'பி' பொருள்களும்

பின்வரும் மேல்விவரங்கள் அளிக்கப்படுகின்றன:

	பொருள் ஏ	பொருள் பி
நிலையான செலவுகள் ரூ. 10,000	20 மணி	30 மணி
கூலி, மணிக்கு 50 பை வீதம்	ரூ	ரூ
மாறுஞ் செலவுகள் கூலியைப்போல் 100%	20	25
கச்சாப்பொருள் விற்பனை விலை	60	100

விடை: பங்களிப்பு அட்டவணை

	ஏ	பி
	ரூ	ரூ
கச்சாப்பொருள்	20	25
கூலி	10	15
மாறுஞ் செலவு	10	15
	40	55
பங்களிப்பு	20	45
விற்பனை விலை	60	100

முதல் நிலை:

				ரூ
450	'ஏ'	பொருள்கள்	ரூ. 20 × 450 =	9,000
300	'பி'	பொருள்கள்	ரூ. 45 × 300 =	13,500
				22,500

இரண்டாம் நிலை:

900 'ஏ' பொருள்கள் ரூ. 20 × 900 = ரூ. 18,000

மூன்றாம் நிலை:

600 'பி' பொருள்கள் ரூ. 45 × 600 = ரூ. 27,000

நான்காம் நிலை:

600	'ஏ'	பொருள்கள்	20 × 600	ரூ. 12,000
200	'பி'	பொருள்கள்	45 × 200	ரூ. 9,000
				21,000

மூன்றாம் நிலையில் மொத்தப் பங்களிப்பு அதிகமாக இருப்பதால் அந் நிலையே சிறந்தது எனலாம்.

எடுத்துக்காட்டு:

விளையாட்டுப் பொருள்கள் தயாரிக்கும் ஒரு வியாபாரி ஒரு பொருளின்மீது ரூ. 3 இலாபமடைகிறார். 60,000 பொருள்களை ரூ. 15 வீதம் விற்கிறார். ஆலையின் 60% சக்திதான் பயன்படுத்தப் படுகிறது. விலை அமைப்புப் பின்வருமாறு:

கச்சாப் பொருள்	ரூ. 4-00	
கூலி	ரூ. 1-00	
ஆலைச் செலவுகள்	ரூ. 6-00	(50% மாறுஞ் செலவுகள்)
விற்பனைச் செலவு	ரூ. 1-00	(25% மாறுஞ் செலவு)

நடப்பு ஆண்டில் பின்வரும் நிகழ்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றன:

(1) மாறுச் செலவுகள் 10% கூடுகிறது.

(2) கூலி 20% கூடுகிறது.

(3) கச்சாப் பொருளின் விலை 5% கூடுகிறது.

(4) விற்பனை விலையைக் கூட்டுவதற்கில்லை.

இச் சூழ்நிலையில் மேலும் 20,000 பொருள்களுக்கு அனுப்பாணை (Order) கிடைத்துள்ளது. ரூ. 1,80,500 மொத்த இலாபமடைய என்ன விலைக்கு 20,000 பொருள்களை விற்கவேண்டும்.

விடை: பங்களிப்பு அட்டவணை

மாறுஞ்செலவுகள்:	பழைய நிலை		கூடுதல்	புதிய நிலை
	ரூ. பை		ரூ. பை	ரூ. பை
கச்சாப்பொருள்	4 - 00	(+ 52)	0 - 20	4 - 20
கூலி	1 - 00	(+202)	0 - 20	1 - 20
ஆலைச் செலவு	3 - 00			3 - 00
விற்பனைச் செலவு	0 - 25			0 - 25
	8 - 25		0 - 40	8 - 65

விற்பனை விலை	ரூ. 15.00
இறுதிநிலைச் செலவு	ரூ. 8.65
பங்களிப்பு	ரூ. 6·35

மொத்த பங்களிப்பு = 6·35 × 60,000

= ரூ. 3,81,000

கழி: மாறுச்செலவுகள்:

ஆலைச் செலவு	1,80,000		
கூட்டு 10%	18,000		
		1,98,000	
விற்பனைச் செலவு	45,000		
கூட்டு 10%	4,500		
		49,500	2,47,500
இலாபம்		ரூ.	1,33,500

60,000 பொருள்களை விற்பதில் நாம் அடையவிருக்கும் இலாபம் ரூ. 1,33,500. நாம் எதிர்பார்க்கும் மொத்த இலாபம் ரூ. 1,80,500. கூடுதலாக எதிர்பார்க்கப்படும் இலாபம் ரூ. 47,000. அதாவது கூடுதலாக விற்கும் பொருள்களுக்கு ரூ. 47,000 பங்களிப்பு இருக்க வேண்டும்.

		ரூ.
இறுதிநிலைச் செலவு	20,000 × 8·65	1,73,000
கூட்டு: பங்களிப்பு		47,000
20,000 பொருள்களின் குறைந்த அளவாக நிர்ணயிக்கப்பட்ட விலை		ரூ. 2,20,000

பயிற்சி

1. ஓர் உற்பத்தி செய்யும் நிறுவனம் மூன்று தனித்தனிப் பொருள்களைத் தயாரிக்கின்றது. அப் பொருள்களின் அடக்கவிலை அமைப்புக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	அ	ஆ	இ
	ரூ.	ரூ.	ரூ.
கச்சாப்பொருள்	10	8	6
கூலி	7	5	3
நடைமுறைச் செலவுகள்	16	12	13
விற்பனை விலை	45	30	55

'இ' என்ற பொருளைத் தயாரிப்பதைக் கைவிடலாம் என்ற எண்ணத்தின் பேரில் பின்வரும் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன:

பொருள்	மொத்த அடக்க விலை	மாருச்செலவு	மாறுஞ்செலவு
	ரூ.	ரூ.	ரூ.
அ	16	8	8
ஆ	12	6	6
இ	13	8	5

தற்பொழுது 1,000 'அ' பொருள்களும், 1,500 'ஆ' பொருள்களும், 2,000 'இ' பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏதேனும் ஒரு பொருள் தயாரிப்பது நிறுத்தப்பட்டால் மற்ற இரு பொருள்களின் உற்பத்தி இருமடங்காகும், என்று உற்பத்தி நிர்வாகம் கூறுகின்றது. 'இ' பொருளை உற்பத்தி செய்யாமல் இருப்பதைப் பற்றி அறிவுரை கூறவும்.

2. ஒரு கம்பெனியில் ஏ, பி, சி என்ற மூன்று பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. அவை விற்பனையில் முறையே 20%, 10%, 60% பங்களிப்பும் உடையவை. அவற்றின் விற்பனை விலையாவன பொருள் 'ஏ' ரூ. 8, பொருள் 'பி' ரூ. 2, பொருள் 'சி' ரூ. 3. இக் கம்பெனி சென்ற ஆண்டில் 50,000 'ஏ' பொருள்களும், 1,50,000 'பி' பொருள்களும், 60,000 'சி' பொருள்களும் விற்கப்பட்டு ரூ. 50,000 நிகர இலாபம் அடைந்தது. விற்பனை மேலாளர், 'பி' பொருள் தயாரிப்பதைக் கைவிடும்படி தம்முடைய எண்ணத்தைத் தெரிவிக்கின்றார். அவ்வாறு செய்வதால் 70,000 'ஏ' பொருள்கள் விற்கமுடியும் என்றும் உறுதியாகக் கூறுகின்றார். இந்த அறிவுரையை ஏற்கலாமா?

3. ஓர் ஆலையில் மாதத்திற்கு 10,000 பொருள் என்று தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒரு பொருளின் விலையமைப்புப் பின்வருமாறு:

கச்சாப் பொருள்	ரூ. 100.
கூலி	ரூ. 60.
மாறும் நடைமுறைச் செலவுகள்	ரூ. 40.
மாரு நடைமுறைச் செலவுகள்	ரூ. 20.
மாறும் விற்பனைச் செலவுகள்	ரூ. 55.
மாரு விற்பனைச் செலவுகள்	ரூ. 40.
மொத்தம்	ரூ. 315.

தற்பொழுது ரூ. 350 ஒரு பொருளின் விற்பனை விலையாக உள்ளது. விற்பனை விலையில் 10% கூட்டினால் விற்பனை அளவு 5% குறையுமெனவும் எனினும் அதிகப்படியாக விளம்பரச் செலவுகள் ஏற்க நேரிடும் என்றும் விற்பனைத்துறை எண்ணங்கொண்டுள்ளது. இப்பொழுது இருக்கும் இலாபம் குறையாதவாறு ஆண்டிற்கு எவ்வளவு அதிகத்தொகை விளம்பரத்திற்காகச் செலவு செய்யக் கூடும் என்பதைக் கணக்கிடுக.

4. மிதிவண்டிகள் தயாரிக்கும் ஒரு நிறுவனம் வண்டியில் பொருத்த வேண்டிய மணிகளை (bells) வெளியிலிருந்து வாங்கி வருகின்றது. அந்தப் பகுதியைக் கம்பெனியே தயாரிக்கலாமா என்று எண்ணங்கொண்டுள்ளது. பின்வரும் விபரங்கள் அளிக்கப் பட்டுள்ளன.

இதற்காக வாங்க வேண்டிய இயந்திரங்களின் அடக்கவிலை ரூ. 6,00,000 ஆகும். இந்த இயந்திரம் 10 ஆண்டுக் காலம் பயன் படும். 1,50,000 பொருள்கள் தயாரிக்க முடியும். கச்சாப் பொருள்கள் 60 பைசா, கூலி 80 பைசா, எரிபொருள் ஆண்டிற்கு ரூ. 6,000, நிலையான செலவுகளுக்காக கூலியில் 75% கணக்கிடப்படு கிறது. இன்றைய நிலையில் மணிகளை ரூ 2.50 வீதம் வாங்குகிறது. மேலாண்மைக்கு உங்களுடைய அறிவுரை என்ன?

5. ஏ, பி, சி, என்ற மூன்று பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனம், அதிக இலாபம் அளிக்கக் கூடிய பொருள் கலவையை (Product Mix) உணர்த்துமாறு கூறுகின்றனர். உங்களுடைய பதில் என்ன? கூடுதலாக 15,000 மணி வேலை செய்ய (இரட்டிப்புக் கூலியில்) ஆள்கள் தயாராக இருக்கின்றனர் எனில் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

	'ஏ'	'பி'	'சி'
கச்சாப்பொருள் (ஒரு பொருளுக்கு)	10 கிலோ	6 கிலோ	15 கிலோ
வேலை நேரம் (மணியில்) மணிக்கு ரூ. 1 வீதம்	15	25	20
விற்பனை விலை	ரூ. 125	ரூ. 100	ரூ. 200
உயர் அளவு உற்பத்தித் திறன்	6,000	4,000	3,000

குறிப்பு:

(1) 1,00,000 கிலோ கச்சாப்பொருள்கள் கிலோ ரூ. 10 வீதம் கிடைக்கின்றது.

(2) வேலை நேரம் 1,84,000 மணி. இரட்டிப்புக் கூலியில் 15,000 கூடுதல் மணிகள் வேலை செய்ய வாய்ப்பு உள்ளது.

இலாப நட்டமற்ற நிலை (Break - Even Point)

மேலாண்மைக் கணக்குப் பதிவியியலில் அடக்க விலை - அளவு - இலாபத் தொடர்பிற்குத்(Cost-Volume-Profit)தற்காலங்களில் அதிக வரவேற்பு உள்ளது. இதில் மூன்று காரணிகளைக் கணக்கிடுகின்றனர். அவையாவன, அடக்க விலை, அளவு, இலாபமாகும். அடக்க விலை-அளவு-இலாபத் தொடர்பு ஆராய்ச்சியில் வேறுபட்ட உற்பத்தி அளவுகளில் அடக்கவிலை எவ்வாறு மாறுகின்றது என்பதை அறிய முயல்கிறோம். எத்தொழிலிலும் இலாபம் விற்பனை விலையைப் பொறுத்துள்ளது. உற்பத்திக் கூடினால் இலாபமும் அதிகமாகும் என்ற எண்ணம் மிகத் தவறானது என்ற உண்மை அடக்கவிலை-அளவு-இலாபத் தொடர்பு ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது. இந்த மூன்று காரணிகளில் ஏற்படும் விளைவுகள் கொள்கைத் தீர்மானங்கள் எடுப்பதில் மிக உதவியாக இருக்கின்றன. அடக்க விலை-அளவு- இலாபத் தொடர்பு மதிப்பீடு தயாரிப்பதிலும், இலாபத்தைத் திட்டமிடுவதிலும் துணை நிற்கின்றது.

அடக்கவிலை - அளவு - இலாபத் தொடர்பு பற்றிய ஆராய்ச்சியை ''இலாப நட்டமற்றநிலைப் புள்ளி'' பற்றியது என்றும் சிலர் கூறுவதுண்டு. இலாப நட்டமற்றநிலைப் பற்றிய ஆராய்ச்சி என்பது அடக்கவிலை - அளவு - இலாபத் தொடர்பு ஆராய்ச்சியின் விளைவேயன்றி, இரண்டும் ஒன்றுதான் என்று கூறுவது தவறாகும்.

இலாப, நட்டமற்ற நிலையறிய படம்: (Break - Even Chart)

பொதுவாக இலாப நட்டமற்றநிலைக்குறிப்பை வரைகட்டப் படம் மூலம் விளக்குவது வழக்கம். படங்கள்மூலம் விளக்குவதன் நன்மைகளைப் பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. படங்கள்மூலம் விளக்குவதால் அறிக்கைகளைப் பார்ப்பவர்கள் சோர்வடையாமல் இருக்கின்றனர். ஆனால், அறிக்கைகளைப் படித்து உணர வேண்டியதைப் படங்கள்மூலம் விளக்குவதால் பார்ப்பவர்கள் மனத்திலும் எளிதில் கருத்து உருவாகிறது. ஆகவே, இலாப நட்டமற்ற நிலைக் குறிப்பை வரைகட்டப்படங்கள்மூலம் விளக்குவது வழக்கமாகி விட்டது.

இலாப நட்டமற்ற நிலை - வரைகட்டப்பட விளக்கம் - (Break Even Analysis - Graphical Explanation)

இலாப,நட்டமற்ற நிலையில் மொத்தப் பங்களிப்பு(Contribution) அந் நிறுவனத்தின் நிலையான செலவுகளுக்குச் சமமாகிறது. அதாவது மொத்தப் பங்களிப்பு = மாறாச் செலவுகள் (Contribution = Fixed Expenses). இலாப நட்டமற்றநிலைக்குறிப்புப் பற்றிய ஆராய்ச்சி புதிதாகத் துவங்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்குப்பெரிதும் உதவியாக உள்ளது. ஆனால், அதிக இலாபம் அடைந்து வரும் நிறுவனங்களுக்கு இப் படம் அதிக நன்மை பயக்கக் கூடியதன்று.

எடுத்துக்காட்டு:

பின்வரும் செய்திகளிலிருந்து இலாப நட்டமற்ற X புள்ளியைக் காட்டும் வரைகட்டப்படம் வரைக.

உற்பத்தி	மாறுஞ்செலவு	மாறாச் செலவு	மொத்தச் செலவு	விற்பனை
ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
0	...	60,000	60,000	...
5,000	60,000	60,000	1,20,000	1,00,000
10,000	1,20,000	60,000	1,80,000	2,00,000



படம் 1

மேலே வரையப்பட்டுள்ள வரைகட்டப் படத்தில் எடுத்துக் காட்டில் உள்ளசெலவு,விற்பனைத் தொகைகள் குறிக்கப்பட்டுள்ளன

மாறாச்செலவுகள் O உற்பத்தியிலும் இருக்குமாதலால் Y அச்சில் 'அ' என்ற புள்ளியில் குறிக்கப்பட்டுள்ளது. இச் செலவு மாறாது என்று கொண்டுள்ளதால் 'அ' புள்ளியில் நேர்க்கோடாக இறுதிவரைச் செல்கிறது. மேலும் 'X' அச்சிற்கு இக் கோடு இணை கோடாக உள்ளது (ஒரு குறிப்பிட்ட உற்பத்தி அளவுக்குமேல் மாறாச்செலவுகளும் மாறும் என்ற உண்மையை மறுக்கலாகாது என்பதை உணர வேண்டும்). உற்பத்தி 5,000 இருக்கும்பொழுது மொத்தச் செலவுகள் 'ஆ' என்ற புள்ளியிலும், 10,000 ஆக இருக்கும்பொழுது 'இ' என்ற புள்ளியிலும் குறிக்கப்பட்டுள்ளன. அ, ஆ, இ, புள்ளிகளை இணைத்து வரையப்படும் கோடு அடக்க விலையைக் குறிக்கும். 'O' உற்பத்தியில் விற்பனையும் 'O' ஆகத் தான் இருக்க முடியும். ஆகவே 'க' என்ற புள்ளி 'O' என்ற இடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி 5000. 10,000 பொருள் களாக இருக்கும்பொழுது விற்பனை 'கா', கி, என்ற புள்ளிகளில் குறிக்கப்பட்டுள்ளன. 'க', 'கா', 'கி' என்ற புள்ளிகளை இணைத்து வரையப்படும் கோட்டை விற்பனைக்கோடு எனலாம். அடக்கவிலைக் கோடும் விற்பனைக்கோடும் ஒரு புள்ளியில், அதாவது 'பி' என்ற புள்ளியில் ஒன்றையொன்று வெட்டிக் கொள்கின்றன. அப் புள்ளியில் அடக்க விலையும், விற்பனை வருவாயும் சமமாக இருக்கின்றன. அந் நிலையில் நிறுவனத்திற்கு இலாபமோ நட்டமோ கிடையாது. அப் புள்ளியை இலாப, நட்டமற்ற நிலைப் புள்ளி(Break-Even Point)என்று கூறுவர்.இப் படத்தில் 'பி' புள்ளியைக் குறிக்கின்றது. 'பி' புள்ளிக்கு வலப் புறத்திலுள்ள இருகோடுகளின் இடைப்பட்ட அளவு இலாபப் பகுதியையும் இடப்புறத்தில் நட்டப் பகுதியையும் குறிக்கும். எந்தக் குறிப்பிட்ட அளவு உற்பத்தியிலும் இலாபம் எவ்வளவு இருக்கும் என்பதை இப் படத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

படுகோணம்: (Angle of Incidence)

அடக்கவிலைக்கோடு, விற்பனைக்கோட்டை எந்தக் கோணத்தில் (angle) வெட்டுகின்றது என்பதைப் படுகோணம் என்கிறோம்.குறுகிய கோணத்தில் வெட்டினால் அந் நிறுவனத்தில் விற்பனை இலாப விகிதம் குறைவாக உள்ளது என்றும், விரிகோணத்தில் வெட்டினால் இலாப விகிதம் அதிகமாக உள்ளது என்றும் கூறலாம்.

பாதுகாப்புப் பகுதி (Margin of Safety)

வரையப்பட்டுள்ள படத்தில் 'பி' புள்ளி இலாப நட்டமற்ற நிலைப்புள்ளி என்று கூறப்பட்டுள்ளது.அப் புள்ளியிலுள்ள விற்பனையில் நிறுவனத்தின் மாறாச்செலவுகளை மட்டும் விற்பனை வருமானத்தில் ஈடுசெய்ய முடிகிறது. இலாபம் எதுவும் அடைய முடிவதில்லை

என்பது நாம் அறிந்ததே. எதிர்பாராத காரணத்தால் மொத்த விற்பனை சற்றுக் குறைந்துவிட்டாலும் நிறுவனம் நட்டத்தை ஏற்க நேரிடுகிறது. இந்த இக்கட்டான நிலை வாராமலிருக்க விற்பனை அளவு, இலாபநட்டமற்ற நிலைப்புள்ளி விற்பனையைவிட அதிகமாக இருந்தால் நட்ட நிலையைத் தவிர்க்க முடியும். இலாபநட்டமற்ற நிலைப் புள்ளி, விற்பனையைவிட எவ்வளவு அதிகமாக இருந்தாலும் நன்மை பயக்கும். இலாபநட்டமற்றநிலைப்புள்ளி, விற்பனையைவிட எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அத் தொகைக்குப்பாதுகாப்புப் பகுதி என்று பெயர் (Margin of Safety). எனவே, ஒரே தொழில் செய்யும் இரு நிறுவனங்களில் அதிக பாதுகாப்புப் பகுதியுள்ள நிறுவனம், தொழில் மந்தத்தால் விற்பனையில் ஏற்படும் திடீர்ச் சரிவை எளிதில் சமாளிக்க முடியும். எனவே, பாதுகாப்புப் பகுதி என்பது இன்னல்களின் பாதிப்பைக் குறைக்கும் பஞ்சுமெத்தை எனலாம்.

இலாபநட்ட மற்ற நிலைப்புள்ளியைக் கணக்கிடுதல்:

இந் நிலையில் பங்களிப்பு மாறுச்செலவுகளுக்குச் சமமாகிறது என்பதை முன்பே அறிந்தோம். மொத்த விற்பனையிலிருந்து மாறுஞ் செலவுகளைக் கழித்த பிறகு வருந்தொகையைப் பங்களிப்பு என்கிறோம். ஒரு நிறுவனத்தின் மாறுச்செலவுகள் ரூ. 3,000 எனக் கொள்வோம். ஒரு பொருளின் (Unit) அடக்கவிலை அமைப்புப் பின்வருவதாம்:

	ரூ
கச்சாப் பொருள்	50
கூலி	20
இறுதிநிலைச் செலவு	70
பங்களிப்பு	30
விற்பனை விலை	100

ஒரு பொருள் விற்பனை செய்யப்பட்டால் ரூ. 30, பங்களிப்பு இருக்கிறது. இலாபநட்டமற்ற நிலைப்புள்ளி, விற்பனையில் மொத்த பங்களிப்பு மாறுச்செலவுகளுக்குச் சமமாகிறது. அதாவது இலாப நட்டமற்ற நிலை விற்பனை (Break-Even Sales)

$= \frac{\text{மாறுச் செலவுகள்}}{\text{ஒரு பொருளின் வருமான உற்பத்திப் பங்கு}}$. இந்த எடுத்துக் காட்டில் உள்ள தொகைகளுக்கு இலாபநட்டமற்றநிலை விற்பனை $\frac{30,000}{30} = 1,000$. இலாபநட்டமற்ற நிலை விற்பனையை, ரூபாயிலும் கூறலாம். அதாவது 1,000 × ரூ 100 = 1,00,000

பங்களிப்பு விகிதம் (Profit Volume Ratio)

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் தயாரிக்கும்பொழுது விற்பனையில் எவ்வளவு விழுக்காடு பங்களிப்பு என்று காண்பது அவசியமாகும். ஏனெனில், மாறுச் செலவுகள் என்பது நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள மொத்தச் செலவாகும். ஒவ்வொரு பொருள் விற்பனையிலிருந்தும் இலாபத்தைக் கணக்கிட முடியாது. விற்பனையில் பங்களிப்பு எவ்வளவு விழுக்காடு என்பதை ஆங்கிலத்தில் Profit Volume Ratio என்கிறோம். ஆனால், இலாப அளவு விகிதம் என்று கூறுவது தவறாகும். ஏனெனில், இவ்விகிதத்தைக் கணக்கிட நாம் பயன்படுத்துவது பங்களிப்பேயன்றி இலாபமன்று. ஆகவே Profit Volume Ratio-வைச் சரியாகக் கூறுவோமேயானால் பங்களிப்பு அளவு விகிதம் (Contribution Volume Ratio) என்றுகூட கூறலாம்.

$$\text{பங்களிப்பு விகிதம்} = \frac{\text{மாறுச் செலவுகள் + இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

எ.கா. ஒரு கம்பெனியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் செய்திகளைக் கொண்டு இலாப நட்டமற்றநிலைப் புள்ளியில் விற்பனையைக் காணலாம்.

மொத்த விற்பனை	ரூ. 20,00,000
மாறுஞ் செலவுகள்	ரூ. 11,00,000
நிகர லாபம்	ரூ. 2,25,000

முதலில் மாறுச்செலவுகளைக் கணக்கிட வேண்டும்.

மாறுச் செலவுகள் = பங்களிப்பு—நிகர லாபம்

மொத்த விற்பனை	ரூ. 20,00,000
கழி: மாறுஞ் செலவுகள்	ரூ. 11,00,000
பங்களிப்பு	9,00,000
கழி: நிகரலாபம்	2,25,000
மாறுச்செலவுகள்	6,75,000

பங்களிப்பு விகிதம்

$$= \frac{\text{பங்களிப்பு}}{\text{விற்பனை}} \times 100$$

$$= \frac{9,00,000}{20,00,000} \times 100 = 45\%$$

இலாப நட்டமற்ற நிலைப்புள்ளி,

$$= \frac{\text{மாறுச் செலவுகள்}}{\text{பங்களிப்பு விகிதம்}}$$

$$= \frac{6,75,000}{45} \times 100 = \text{ரூ. } 15,00,000$$

பங்களிப்பு விகிதத்தை ஒட்டிய சூத்திரங்கள்:

1. **இலாப நட்ட மற்ற நிலைப்புள்ளி:—**

$$\frac{\text{மாறுச் செலவுகள்}}{\text{பங்களிப்பு விகிதம்}}$$

2. பாதுகாப்புப் பகுதி $= \frac{\text{இலாபம்}}{\text{பங்களிப்பு விகிதம்}}$

3. ஒரு குறிப்பிட்ட அளவு இலாபமடையத் தேவையான விற்பனை $= \frac{\text{மாறுச் செலவுகள் + இலாபம்}}{\text{பங்களிப்பு விகிதம்}}$

எ. கா. பின்வரும் செய்திகளிலிருந்து கணக்கிடவும்

1. பங்களிப்பு விகிதம்
2. இலாபநட்டமற்ற நிலைப்புள்ளி
3. ரூ. 70,000 நிகர இலாபமடையத் தேவையான விற்பனை
4. ரூ. 3,00,000 விற்பனையில் ஏற்படும் நிகரலாபம்.

விவரங்கள்:	ரூ.
விற்பனை	2,00,000
மாறுஞ் செலவுகள்	1,50,000
பங்களிப்பு	50,000

மாறாச் செலவுகள் ரூ. 15,000

விடை: பங்களிப்பு விகிதம்

$$= \frac{\text{பங்களிப்பு}}{\text{விற்பனை}} \times 100$$

$$= \frac{50,000 \times 100}{2,00,000} = 25\%$$

$$\text{இலாப, நட்டமற்ற நிலைப்புள்ளி} = \frac{\text{மாறாச் செலவுகள்}}{\text{பங்களிப்பு விகிதம்}}$$

$$= \frac{15,000}{25\%} = \frac{15,000 \times 100}{25}$$

= ரூ. 60,000

ரூ. 70,000 நிகர இலாபம் அடையத் தேவையான விற்பனை

$$= \frac{\text{மாறாச் செலவுகள்} + 70,000}{\text{பங்களிப்பு விகிதம்}}$$

$$= \frac{15,000 + 70,000}{25\%}$$

$$= \frac{(15,000 + 70,000)}{25} \times 100$$

$$= \frac{85,000 \times 100}{25} = \text{ரூ } 3,40,000$$

ரூ. 3,00,000 விற்பனையில் ஏற்படும் நிகரலாபம்

$$= \frac{3,00,000 \times 25}{100} = \text{ரூ. } 75,000$$

	ரூ.
பங்களிப்பு	75,000
கழி: மாறாச் செலவுகள்	15,000
நிகர லாபம்	60,000

எ. கா. அடக்கவிலை அமைப்பும், விற்பனை விலையும் ஈராண்டுகளிலும் மாறாமல் இருக்கின்றன என்று வைத்துக்கொண்டு பின்வருவனவற்றைக் கணக்கிடவும்.

1. பங்களிப்பு விகிதம்
2. இலாப, நட்டமற்ற நிலைப்புள்ளி விகிதம்
3. விற்பனை ரூ. 1,00,000 ஆக இருக்கும்பொழுது ஏற்படும் இலாபம்.
4. ரூ. 20,000 நிகர இலாபமடையத் தேவைப்படும் விற்பனை
5. பாதுகாப்புப் பகுதி

	விற்பனை	இலாபம்
	ரூ	ரூ
1970	1,20,000	9,000
1971	1,40,000	13,000

விடை: பங்களிப்பு விகிதம்:

ஈராண்டுகளின் விற்பனைகளை ஒப்பிடும்பொழுது ரூ. 20,000 விற்பனை கூடியுள்ளது என்றும், ரூ. 4,000 இலாபம் கூடியுள்ளது என்றும் அறிகிறோம். விற்பனை விலையும், அடக்கவிலை அமைப்பும் மாறாமல் இருப்பதால்

$$\text{பங்களிப்பு விகிதம்} = \frac{4{,}000 \times 100}{20{,}000} = 20\%$$

இலாப, நட்டமற்ற நிலைப்புள்ளி விற்பனை:

1970 விற்பனை = 1,20,000

$$\text{பங்களிப்பு} = \frac{1{,}20{,}000 \times 20}{100}$$

= ரூ. 24,000

மாறுச் செலவுகள் = ரூ. 24,000 — ரூ. 9,000

= ரூ. 15,000

இலாப, நட்டமற்ற நிலைப்புள்ளி விற்பனை

$$\frac{\text{மாறுச் செலவுகள்}}{\text{பங்களிப்பு விகிதம்}}$$

$$= \frac{15{,}000}{20\%} = \frac{15{,}000 \times 100}{20} = \text{ரூ. } 75{,}000$$

ரூ. 1,00,000 விற்பனையில் ஏற்படும் இலாபம் =

$$1,00,000 \times \frac{20}{100} = ரூ. 20,000$$

பங்களிப்பு	=	20,000
கழி: மாறாச் செலவுகள்	=	15,000
நிகரலாபம்	=	5,000

ரூ. 20,000 இலாபம் அடையத் தேவையான விற்பனை

$$= \frac{\text{மாறாச் செலவுகள்} + 20,000}{\text{பங்களிப்பு விகிதம்}}$$

$$= \frac{15,000 + 20,000}{20\%} = \frac{35,000 \times 100}{20}$$

$$= ரூ. 1,75,000$$

$$\text{பாதுகாப்புப் பகுதி} = \frac{\text{இலாபம்}}{\text{பங்களிப்பு விகிதம்}}$$

$$1970 = \frac{9,000}{20\%} = \frac{9,000 \times 100}{20} = ரூ. 45,000$$

$$1971 = \frac{13,000}{20\%} = \frac{13,000 \times 1000}{20} = ரூ. 65,000$$

பயிற்சிகள்:

1. ஏ, பி என்ற இரு கம்பெனிகளைப் பற்றிய செய்திகள் பின்வருமாறு:

	'ஏ' கம்பெனி	'பி' கம்பெனி
விற்பனை	1,50,000	1,50,000
மாறுஞ் செலவுகள்	1,20,000	1,00,000
மாறாச் செலவுகள்	15,000	35,000

இரு கம்பெனிகளின் இலாப, நட்டமற்றநிலைப் புள்ளிகளுக்கு விற்பனையைக் கணக்கிடவும். அக் கம்பெனிகள் தயாரிக்கும் பொருள் அதிகத் தேவை இருக்கும்போதும், குறைவான தேவை இருக்கும் போதும், இரு கம்பெனிகளில் எது சிறந்தது என்றும் கூறவும்.

பயிற்சி: 2. மிதிவண்டி தயாரிக்கும் ஒரு கம்பெனியின் அடக்கவிலை அமைப்புக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	ரூ.
கச்சாப் பொருள்	60
கூலி	20
மாறுஞ் செலவுகள்	20
மாறாச் செலவுகள்	50
விற்பனை விலை	200

இவ்வாண்டில் 1,00,000 மிதிவண்டிகள் தயாரிக்கப்பட்டன. அடுத்த ஆண்டில் இதே அளவு மொத்த இலாபம் அடைய வேண்டும் என்று விரும்புகின்றனர். பின்வரும் நிலைகளில் எவ்வளவு விற்பனை வேண்டும் என்று கணக்கிடவும்:-

1. விற்பனை விலையில் 10% குறைக்கப்படுகிறது.
2. விற்பனை விலையில் 20% குறைக்கப்படுகிறது.

பயிற்சி: 3. பின்வரும் நிலைகளில் நிகர இலாபத்தைக் கணக்கிடவும்.

1. பங்களிப்பு விகிதம் 30%

   பாதுகாப்புப் பகுதி ரூ. 3,30,000

2. பங்களிப்பு விகிதம் 30%, பாதுகாப்புப் பகுதி விற்பனையில் $33\frac{1}{3}$%, விற்பனை ரூ. 9,90,000.

பயிற்சி: 4. ஒரு கம்பெனி ஏ, பி, சி, டி என்ற நான்கு பொருள்களைத் தயாரிக்கின்றது. விற்பனைக்கலவை. $33\frac{1}{3}$%, $41\frac{2}{3}$%, $16\frac{2}{3}$%, $8\frac{1}{3}$%.

மொத்தவிற்பனை	=	ரூ. 60,000 (ஒவ்வொரு மாதமும்)
மாறுஞ் செலவுகள்	=	'ஏ' விற்பனை விலையில் 60%
		'பி' விற்பனை விலையில் 68%
		'சி' விற்பனை விலையில் 80%
		'டி' விற்பனை விலையில் 40%

ஒவ்வொரு மாதமும், மாறாச் செலவுகள் ரூ. 14,700 ஆகின்றது. நான்கு பொருள்களுக்கும் சேர்ந்த இலாப, நட்டமற்ற நிலைப்புள்ளி விற்பனையைக் கணக்கிடவும்.

மாத மொத்த விற்பனை ரூ. 60,000 ஆக இருக்கும்பொழுது விற்பனைக் கலவையைப் பின்வருமாறு மாற்றியமைக்க நினைத்துள்ளனர். 'ஏ'- 25%, 'பி'- 40%, 'சி'- 30%, 'டி'- 5%.

இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட விற்பனை விலையிலும், இலாப நட்டமற்ற நிலைப்புள்ளிவிற்பனையைக் கணக்கிடவும் பின்வரும் பொருள்களில் எப்பொருளைத் தயாரிக்கும்படி அறிவுரை கொடுப்பீர்கள்? திறமையான வேலையாள்கள் கிடைப்பது, அரிதாக உள்ளது என்று கொள்ளலாம்.

	ஏ	பி
	ரூ.	ரூ.
கச்சாப் பொருள்கள்	24	14
கூலி (மணிக்கு ரூ 1 வீதம்)	2	3
மாறுஞ்செலவுகள்	4	6
விற்பனை விலை	100	100

பயிற்சி 5:

ஒரு கம்பெனி, மோட்டார் பகுதியைத் தயாரிக்கின்றது. அடக்க விலை அமைப்புப் பின்வருவாறு உள்ளது. 90,000 பொருள்களைத் தயாரிக்கிறது.

	ரூ.
கச்சாப் பொருள்	540
கூலி (25% நிலையானது)	360
மாறுஞ் செலவுகள்	180
நிலையான செலவுகள்	270
	1,350

மற்றொரு கம்பெனி அம் மோட்டார் பகுதியை ரூ. 1,080-க்கு அளிக்கத் தயாராக உள்ளது. இப் பகுதியை வாங்குவதா அல்லது தயாரிப்பதா என்று அறிவுரை கூறவும்.

6. முதலீட்டுத் தீர்மானம்-இலாபத் தன்மையை அறிதல்

(Investment Decisions-Profitability)

புவியன், கவியன், செழியன் என்ற மூன்று மாணவர்களில் எவர் சிறந்தவர் என்பது வினா. எவர் சிறந்தவர் என்று கூறுவது முடியாத காரியமன்று. அவர்களைப்பற்றி பல செய்திகளை நமக்கு அளித்தால் எவர் சிறந்தவர் என்ற வினாவுக்கு விடை எளிதில் கிடைத்துவிடும். உதாரணமாக, அம் மூவர் பெற்ற மதிப்பெண்கள் பின்வருமாறு உள்ளன என்று கொள்வோம். புவியன் 500, கவியன் 370, செழியன் 450. இச் செய்தியிலிருந்து புவியனே சிறந்த மாணவன் எனக் கூறலாம். ஆனால், இவ்வாறு கூறுவது சரியன்று. ஏனெனில், அவர்கள் வாங்கிய மதிப்பெண் மொத்த மதிப்பெண்ணில் எவ்வளவு விழுக்காடு என்று கணக்கிட்டால் அதை வைத்து இவ்வினாவுக்கு விடையளித்துவிடலாம். இதைப்போலவே வியாபாரத்திலும் இலாபத்தன்மையை அறியும் அட்டவணையைத் தயாரித்துத்தான் எத்தொழில் அல்லது எந்நிறுவனம் சிறந்தது என்று கூற முடியும்.

இலாபத் தன்மையைப் பொதுவாகக் கீழ்க்கண்டவாறு கணக்கிடுவர்:

$$\frac{\text{இலாபம்}}{\text{மொத்த முதலீடு}} \times 100$$

எ. கா: ஏ, பி, சி, என்ற மூன்று நிறுவனங்கள் ஒரே தொழிலைச் செய்கின்றன. அவைகளைப்பற்றி பின்வரும் செய்திகள் கொடுக்கப் பட்டுள்ளன. எது சிறந்தது என்று கணக்கிடவும்.

நிறுவனம்	விற்பனை ரூ.	அடக்கவிலை ரூ.	மொத்த முதலீடு ரூ.
ஏ	10,000	9,000	5,000
பி	5,000	4,500	50,000
சி	1,00,000	99,000	50,000

இலாபத்தன்மை அட்டவணை

	ஏ	பி	சி
	ரூ.	ரூ.	ரூ.
விற்பனை	10,000	- 5,000	1,00,000
அடக்கவிலை	9,000	4,500	99,000
	1,000	500	1,000
மொத்த முதலீடு	5,000	50,000	1,00,000
இலாபத் தன்மை	20%	1%	1%
விற்பனை இலாப விகிதம்	10%	10%	1%

' விற்பனை முதலீடு விகிதம் 2 மடங்கு 0·1 மடங்கு சமம்.

ஆய்வு:

1. இலாபத்தன்மையை ஆராயும்பொழுது ஏ, கம்பெனி சிறந்தது எனக் கூறலாம்?

2. விற்பனை இலாப விகிதத்தை ஒப்பிடும் பொழுது ஏ, பி, ஆகிய இரு கம்பெனிகள் சமமாக இருக்கின்றன.

3. ஆனால், விற்பனை முதலீடு விகிதத்தைக் கவனிக்கும்பொழுது ஏ, கம்பெனிதான் சிறந்தது எனக் கூறவேண்டும்.

பல அளவுகளைக் கொண்டு காணும்பொழுது 'ஏ' கம்பெனி மிகச் சிறந்தது எனத் தீர்மானிக்கலாம்.

முக்கியக் காரணி(Key Factor)யும் இலாபத் தன்மையும்:

எந்த நிறுவனத்திலும் கச்சாப்பொருள், வேலைத்திறன், மேலாண்மை என மூன்று காரணிகள் உள்ளன. இவற்றில் எதற்குப் பற்றுக்குறை உள்ளதோ அதை முக்கியக்காரணி என்று கூறுவர். இலாபத்தன்மையை அறியும்பொழுது முக்கியக் காரணியையும் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகும். உதாரணமாக 'அ' என்ற பொருள் ரூ. 5-ம்,'ஆ' என்ற பொருள் ரூ.8-ம், பங்களிப்பு உடையன என்று கொள்வோம். மேலும் 'அ' என்ற பொருளுக்கு இரண்டு மணி நேர வேலைத்திறனும், 'ஆ' என்ற பொருளுக்கு நான்கு மணி நேர வேலைத்திறனும் தேவைப்படுவதாகக் கொள்வோம். இதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது 'ஆ' என்ற பொருள் அதிக இலாபத் தன்மையுடையதாகத் தோன்றினும் வேலைத்திறன் பற்றுக்குறையாக உள்ளது என்ற முக்கியக் காரணியைக் கவனிக்கும் பொழுது 'அ' என்ற பொருளே அதிக இலாபத்தன்மையுடையது என்று கூறலாம். ஏனெனில், இரண்டு பொருள்களிலும் ஒரு மணி நேர வேலைத்திறன் எவ்வளவு பங்களிப்புக் கொடுக்கின்றது என்று

பார்க்க வேண்டும். எதில் பங்களிப்பு அதிகமாக உள்ளதோ அதுவே சிறந்தது எனக் கூறலாம். அதாவது,

$$\text{இலாபத் தன்மை} = \frac{\text{பங்களிப்பு}}{\text{முக்கியக் காரணி}}$$

'அ' = ரூ. $\frac{5}{2}$ = ரூ. 2·50.

'ஆ' = ரூ. $\frac{8}{4}$ = ரூ. 2·00

எனவே 'அ' பொருளைச் சிறந்தது எனச் சொல்லலாம்.

பழைய சொத்தை மாற்றிப் புதிய சொத்தை வாங்குதல் (Replacing an existing old asset with the new asset):

இத் தீர்மானத்தை எடுக்கப் பின்வரும் வழிமுறையை வகுத்துள்ளனர்:

$$\text{இலாபத் தன்மை} = \frac{\text{சராசரி கூடுதல் இலாபம்}}{\text{சராசரி முதலீடு}} \times 100$$

$$\text{சராசரி முதலீடு} = \frac{\text{புதிய சொத்தின் விலை} - \text{பழைய சொத்தின் விற்பனை விலை}}{2}$$

எடுத்துக்காட்டு : கீழ்க்காணும் செய்திகளிலிருந்து பழைய இயந்திரத்தைவிட்டுப் புதிய இயந்திரம் வாங்குவது இலாபத்தன்மையுடையதா என்ற வினவுக்கு விடை காணவும்.

விவரங்கள்	**பழைய இயந்திரம்**	**புதிய இயந்திரம்**
அடக்க விலை	ரூ. 60,000	ரூ. 1,20,000
ஆண்டுச் செலவுகள்:		
எரிபொருள்	7,000	8,000
மற்றப் பொருள்கள்	4,000	5,000
பழுது பார்த்தல்	5,000	4,000
கூலி (1 மணிக்கு)	2	2·25
ஒரு மணியில் உற்பத்தி ஆகும் செலவு	40	60
ஓர் ஆண்டில் இயங்கும் காலம் (மணியில்)	2,000	2,000
ஒரு பொருளுக்கான மூலப் பொருள்	0·40	0·40
ஒரு பொருளின் விற்பனை விலை	ரூ. 1	ரூ. 1
இயந்திரத்தின் இயங்கும் காலம்	10 ஆண்டுகள் (6 ஆண்டுகள் கழிந்து விட்டன)	10 ஆண்டுகள்

இலாபத்தன்மையை அறியும் அட்டவணை:

	பழைய இயந்திரம்	புதிய இயந்திரம்
ஓர் ஆண்டு விற்பனை	ரூ. 80,000	ரூ. 1,20,000
ஒரு மணி கால உற்பத்தி	40	60
இயந்திரத்தின் அடக்க விலை	ரூ. 60,000	ரூ. 1,20,000
ஓராண்டில் இயங்கும் நேரம்	2,000 மணி	2,000 மணி
மொத்த இயங்கும் காலம்	10 ஆண்டுகள்	10 ஆண்டுகள்

இலாபம் காணுதல்	ரூ.	ரூ.
கச்சாப் பொருள்	32,000	48,000
கூலி	4,000	4,500
எரிபொருள்	7,000	8,000
மற்றப் பொருள்கள்	4,000	5,000
பழுதுபார்த்தல்	5,000	4,000
இறுதிநிலைச் செலவு	52,000	69,500
தேய்மானம்	6,000	12,000
மொத்த அடக்கவிலை	58,000	81,500
விற்பனை விலை	80,000	1,20,000
இலாபம்	22,000	38,500

புதிய இயந்திரத்தின் இலாபத் தன்மை 27·5% கூடுதல் இலாபம்.

அட்டவணையின் விளக்கம்:

$$\text{இலாபத் தன்மை} = \frac{\text{சராசரி கூடுதல் இலாபம்}}{\text{சராசரி முதலீடு}} \times 100$$

$$= \frac{16,500\ (38,500 - 22,000)}{60,000\ (1,20,000 \div 2)} \times 100$$

$$= 27 \cdot 5\%$$

எடுத்துக்காட்டு : ஒரு கம்பெனி மூன்று விதமான பொருள்களைத் தயாரிக்கின்றது.

	அ	ஆ	இ
உற்பத்தி அளவு	5,560	2,000	4,000

ஒரு பொருள் தயாரிக்க இயந்திரம் இயங்கும் காலம்	2 மணி	2 மணி	2 மணி
	ரூ.	ரூ.	ரூ.
கச்சாப் பொருள்கள்	20	30	15
கூலி	15	17	12
செலவுகள்	3	3	1
மற்றச் செலவுகள்	7	9	3
விற்பனை விலை	60	80	40

ஆண்டின் மாறுச்செலவுகள் = ரூ. 1,05,600

மாறுச்செலவுகள் இயந்திரம் இயங்கும் கால விகிதத்தில் பிரிக்கப்படுகின்றன. முக்கியக் காரணி—கச்சாப்பொருள் பற்றாக் குறையாக உள்ளது.

இலாபத் தன்மையை அறிவிக்கும் அட்டவணையைத் தயாரிக்கவும்.

விடை: மாறுச்செலவுகள் இயந்திரம் இயங்கும் கால விகிதத்தில் பிரிக்கப்பட வேண்டும். முதலில், இயந்திரம் இயங்கும் காலத்தைக் கணக்கிடுவோம். அதாவது,

		மணி
'அ' பொருள்	5,560 × 2 =	11,120
'ஆ' பொருள்	2,000 × 3 =	6,000
'இ' பொருள்	4,000 × 1 =	4,000
		21,120

ஒரு மணிக்காகும் இயந்திர இலக்குச் செலவு

$$= \frac{\text{மாறுச் செலவுகள்}}{\text{மொத்த இயங்கும் காலம்}} = \frac{1,05,600}{21,120} = \text{ரூ. } 5$$

மொத்த மாறுச்செலவுகள் பிரிக்கப்படுதல்

அ = 11,120 × ரூ. 5 = ரூ. 55,600

ஆ = 6,000 × ரூ. 5 = ரூ. 30,000

இ = 4,000 × ரூ. 5 = ரூ. 20,000

இலாபத் தன்மையைக் காட்டும் அட்டவணை

விவரம்	அ	ஆ	இ
கச்சாப் பொருள்கள்	1,11,200	60,000	60,000
கூலி	83,400	34,000	48,000
செலவுகள்	16,680	6,000	4,000
மாறுஞ்செலவுகள்	38,920	18,000	12,000
இறுதிநிலைச் செலவுகள்	2,50,200	1,18,000	1,24,000
மாறாச் செலவுகள்	55,600	30,000	20,000
மொத்த அடக்கவிலை ரூ.	3,05,800	1,48,000	1,44,000
இலாபம்	27,800	12,000	16,000
	3,33,600	1,60,000	1,60,000
விற்பனை இலாப விகிதம்	8·3%	7·5%	10%
இலாபத் தன்மை	75%	70%	60%

குறிப்பு : 'அ' பொருள் அதிக இலாபத்தன்மை உடையதாகும்.

முதலீடு மீட்புக் காலம் (Pay back period)

இது ஒரு புதிய முதலினச் செலவு (capital expenditure) இலாபமானதா என்று ஆராயப் பயன்படும் முறையாகும். ஒரு முதலினச் செலவு எத்தனை ஆண்டுகளில் மீட்கப்படுகிறது என்பதை முதலீடு மீட்புக் காலம் என்கிறோம். பிரௌன் அண்டு ஆவார்டு (Brown and Howard) கூறுவது போல் ''ஒரு திட்டத்தின் முழுச் செலவும் அதனுடைய வருமானத்தின்மூலம் திரும்பக் கிடைக்கச் செய்யும் காலத்தை அளவிடும் முயற்சியாகும்''. ஆனால், திரு. வெல்டன் கூறுவதுபோல் ஒரு திட்டத்தின் உண்மை இலாபத்தன்மை, முதலீடு மீட்புக் காலத்திற்குப் பிறகு எத்தனை ஆண்டுகள் வருமானமளிக்கின்றது என்பதைப் பொறுத்தே உள்ளது. ஆகவே, இரு திட்டங்களுக்கும் ஒரே சமமான முதலீடு திருப்பக்காலம் இருந்தாலும் இதில் எத்திட்டம் அக் காலத்திற்குப் பிறகு அதிக ஆண்டுகள் வருமானம் அளிக்குமோ அதுவே தலைசிறந்ததாகும்.

$$\text{முதலீடு மீட்புக் காலம்} = \frac{\text{திட்டத்தின் செலவு}}{\text{ஆண்டு வருமானம்}}$$

எ. கா:	இயந்திரத்தின் விலை	ரூ. 20,000
	இயங்கும் காலம்	10 ஆண்டுகள்
	ஏற்படும் கூடுதல் செலவு	ரூ. 15,000(ஆண்டிற்கு)
	ஏற்படும் செலவுக் குறைப்பு	ரூ. 20,000

இலாபத் தன்மையைக் காட்டும் அட்டவணை

இயந்திரத்தின் விலை	ரூ. 20,000
இயங்கும்காலம்	10 ஆண்டுகள்
செலவுக் குறைப்பு	ரூ. 20,000
கூடுதல் செலவு	ரூ. 15,000
மொத்த நிகர வருமானம்	ரூ. 5,000
50% வருமானவரி	ரூ. 2,500
வரிக்குப் பிறகு இலாபம்	ரூ. 2,500

வரி கொடுக்கும் முன்னர் முதலீடு மீட்புக் காலம் $\left.\right\}$ $\frac{20,000}{5,000} = 4$ ஆண்டுகள்

வரிக்குப் பிறகு முதலீடு மீட்புக் காலம் $\left.\right\} = \frac{20,000}{2,500} = 8$ ஆண்டுகள்

இத் திட்டம் இலாபத்தன்மையுடையதாகும். ஏனெனில் முதலீடு திருப்பக் காலத்திற்குப் பிறகும் ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 வீதம் 6 ஆண்டுகள் வருமானம் அளிக்கிறது.

குறிப்பு: இலாபத்தன்மையை அறிய முதலீடு மீட்புக் காலத்திற்குப் பிறகு எத்தனை ஆண்டுகளுக்கு வருமானம் கிடைக்கிறது, அவ்வருமானத்தின் மொத்தத் தொகை என்ன என்பதையும் கணக்கிட வேண்டும்.

எ.கா: ஒரு கம்பெனி ஆண்டுக் கூட்டத்தில் உற்பத்தி அளவைக் கூட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே ஒரு புதிய இயந்திரம் வாங்கவும் தீர்மானித்துள்ளனர். இக் கம்பெனியின் விற்பனையை ரூ. 15,000 தான் கூட்ட முடியும் என்று கொள்ளவும்.

விவரம்	'அ' இயந்திரம்	'ஆ' இயந்திரம்
	ரூ.	ரூ.
இயந்திரத்தின் அடக்கவிலை	21,000	7,500
இயங்கும் காலம்	6 ஆண்டுகள்	7 ஆண்டுகள்
ஆண்டுச் செலவு:	ரூ.	ரூ.
கூலி	1,000	5,000
மூலப் பொருள்	6,000	6,000
மாறுஞ் செலவுகள்	2,000	1,500
	9,000	12,500

எந்த இயந்திரத்தை வாங்குவது இலாபகரமானது என்று அறிவுரை கூறவும்.

விடை:

இலாபத் தன்மையைக் காட்டும் அட்டவணை 1.

	'அ'	'ஆ'
இயந்திரத்தின் விலை	21,000	7,500
இயங்கும் காலம்	6 ஆண்டுகள்	7 ஆண்டுகள்
மொத்த விற்பனை	15,000	15,000
இறுதிநிலைச் செலவு	9,000	12,500
	6,000	2,500
முதலீடு மீட்புக் காலம்	$3\frac{1}{2}$ ஆண்டுகள்	3 ஆண்டுகள்
இலாபத் தன்மை	ரூ. 15,000	ரூ. 10,000

முதலீடு மீட்புக் காலம் :

$$அ = \frac{21,000}{6,000} = 3\frac{1}{2} \text{ ஆண்டுகள்}$$

$$ஆ = \frac{7,500}{2,500} = 3 \text{ ஆண்டுகள்}$$

இலாபத் தன்மையைக் காட்டும் அட்டவணை 2.

இயந்திரம்	இயங்கும் காலம்	முதலீடு மீட்புக் காலம்	மீதமுள்ள காலம்	இலாபத் தன்மை
'அ'	6 ஆண்டுகள்	$3\frac{1}{2}$ ஆண்டுகள்	$2\frac{1}{2}$	$6{,}000 \times 2\frac{1}{2}$
			(ஆண்டுகள்)	ரூ. 15,000
'ஆ'	7 ஆண்டுகள்	3 ஆண்டுகள்	4	$2{,}500 \times 4$
			(ஆண்டுகள்)	ரூ. 10,000

குறிப்பு: இலாபத் தன்மையைப் பார்க்கும் பொழுது 'ஆ' என்ற இயந்திரத்தை வாங்கும்படியாக ஆலோசனை கூறலாம்.

முதலீடு மீட்புக் காலம்: இம் முறையின் நன்மை, தீமைகள்.

1. இஃது ஓர் எளிதான முறையாகும்.

2. பொதுவாக மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நாம் பெறக்கூடிய வருமானம் உறுதியானதன்று என்ற கொள்கையின்படி விரைவில் முதலீட்டை மீட்கக் கூடிய திட்டத்திற்குச் சலுகை அளிக்கிறோம்.

3. ரொக்கத்திற்குத் தட்டுப்பாடுகள் உள்ள ஒரு நிறுவனத்தில் முதலீடுகளின் மீது, விரைவில் பெறக்கூடிய வருமானத்தையே நம்பியுள்ளனர்.

தீமைகள்:

1. முதலீடு மீட்புக் காலத்திற்குப் பிறகு கிடைக்கும் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. சில நேரங்களில் முதலீடு திருப்பக் காலம் அதிகமாக இருந்தாலும் அக் காலத்திற்குப் பிறகு பல ஆண்டுகளுக்கு வருமானம் கிடைக்கக்கூடும். அவ்வாறு கிடைக்கப்பெறும் வருமானத்தைக் கணக்கிடாமல் தயாரிக்கப்படும் இலாபத்தன்மை அட்டவணை தவறானதாகும்.

2. சில நேரங்களில், இருதிட்டங்களுக்கும், சமமான முதலீடு மீட்புக் காலம் இருக்கலாம். அந் நேரங்களில் எத்திட்டத்தை மேற்கொள்வது என்ற வினவிற்கு இம் முறையில் விளக்கம் கிடையாது. பின்வரும் எடுத்துக்காட்டை நோக்குவோம். ரூ. 20,000 முதலீடு தேவைப்படும் இரண்டு இயந்திரங்களின் ஆண்டு வருமானம் அளிக்கப்பட்டுள்ளது.

	'அ' இயந்திரம்	'ஆ' இயந்திரம்
	ரூ.	ரூ.
முதல் ஆண்டு	10,000	2,000
இரண்டாம் ஆண்டு	7,000	3,000
மூன்றாம் ஆண்டு	3,000	15,000
	20,000	20,000

இந்த எடுத்துக்காட்டில் இரண்டு இயந்திரங்களுக்கும் முதலீடு மீட்புக்காலம் சமமாக இருக்கின்றது. அதாவது மூன்று ஆண்டுகள். அதாவது, இன்னும் சிறிது விளக்குவோமேயானால் இந்த இரண்டு இயந்திரங்களில் எந்த இயந்திரத்தில் முதலீடு செய்தாலும் அம் முதலீட்டை மீட்பதற்கு மூன்று ஆண்டுகள் தேவைப்படுகின்றன. இவ்வாறுள்ள நிலைகளில் இம் முறையைப் பயன்படுத்தி இலாபத் தன்மையைக் கண்டுகொள்ள முடியாது.

3. இம் முறையில் வட்டியைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.

தள்ளுபடிக்குட்பட்ட ரொக்க நடமாட்ட முறை. (டி. சி. எப்) (Discounted-Cash Flow Method)

தள்ளுபடிக்குட்பட்ட ரொக்க நடமாட்ட முறையில் முதலீடு செய்யப்படும் தொகை ஒரு நியாயமான வட்டியுடன் எவ்வாறு நிறுவனத்தில் மீட்கப்படுகிறது என்று கணக்கிடுகின்றனர். இம் முறையை ஆங்கிலத்தில் பரவலாக ''டி.சி. எப்'' என்று கூறுவார்கள். ஒரு குறிப்பிட்ட முதலீட்டில் வரும் மொத்த வருமானத்தை மட்டும் கணக்கிடாமல் அவ்வருமானம் வரும் காலத்தையும் கணக்கிலெடுக்கின்றனர். ''டி. சி. எப்'' முறையை இரு விதமாக அணுகுகின்றனர்.

1. **காலத்திற்கேற்பச் சரிசெய்யப்பட்ட மீள்வரவு:** (Time Adjusted Rate of Returns).

2. **கூடுதலான தற்போதைய மதிப்பு:** (Excess present value).

முதலீடு செய்யத் தயாராக இருக்கும் தொகையும் ஒவ்வோர் ஆண்டும் எதிர்பார்க்கப்படும் வருமானமும் தெரிந்திருந்தால் இம் முறையைக் கடைப்பிடிக்கலாம். இவ்வாறு இலாபத் தன்மையை அறிய ஆண்டுப்படி அட்டவணை (Annuity Table)யைப் பயன்படுத்த முடியும். ஒவ்வோர் ஆண்டும் பெறக்கூடிய வருமானம் ஒரே சீராக இல்லாமல் இருக்கும்பொழுது இம் முறையைப் பயன்படுத்தி இலாபத் தன்மையை அறிய முடியும். பின்வரும் எடுத்துக்காட்டை நோக்குவோம்:

எ.கா: முதலீடு செய்யப்படும் தொகை ரூ. 50,000. எதிர் பார்க்கப்படும் வருமானம்.

		ரூ	ரூபாயின் இன்றைய மதிப்பு 10% தள்ளுபடி வீதம்	12% தள்ளுபடி வீதம்
முதல்	ஆண்டு	12,000	0·909	0-893
இரண்டாம்	,,	12,000	0.820	0·797
மூன்றும்	,,	12,000	0·751	0·712
நான்காம்	,,	8,000	0 683	0·636
ஐந்தாம்	,,	8,000	0·621	0·567
ஆறும்	,,	8,000	0·564	0·507
ஏழாம்	,,	4,000	0·513	0·452
எட்டாம்	,,	4,000	0·467	0·404
ஒன்பதாம்	,,	2,000	0·427	0·361
பத்தாம்	,,	2,000	0·386	0·322

விடை: ஆண்டுப்படி அட்டவணையைப் பார்த்து 12% தள்ளுபடியில் ரூபாயின் இன்றைய மதிப்பும் 10% தள்ளுபடியில் ரூபாயின் இன்றைய மதிப்பும் காணவும். இத் தொகைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஆண்டின் வருமானமும் அதற்கான தள்ளுபடி வீதத்தில் ரூபாயின் இன்றைய மதிப்பால் பெருக்கப்படவேண்டும். அவைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தவும்:-

12% தள்ளுபடியில் இன்றைய மதிப்பு	10% தள்ளுபடியில் இன்றைய மதிப்பு
ரூ.	ரூ.
10,716	10,908
9,564	9,912
8,544	9,012
5,088	5,464
4,536	4,938
4,056	4,512
1,808	2,052
1,616	1,868
722	848
644	772
47,294	50,316

12% தள்ளுபடியில் ரூ 47,294 ஆக இன்றைய மதிப்பு இருக்கிறது. ஆனால், 10% தள்ளுபடியில் ரூ. 50,316 ஆக இருக்கின்றது. ஆகவே, வருமான வீதம் 10%-க்குச் சற்று அதிகமாக உள்ளது.

கூடுதலான தற்போதைய மதிப்பு:

இம் முறையில் ஒரு குறிப்பிட்ட இலாபவீதம் எதிர்பார்க்கப் படுகின்றது. அவ் வீதத்திற்குக் குறைவாக வருமானம் இருந்தால் அத் திட்டம் கைவிடப்படுகிறது. அதாவது, இம் முறையில் ஒரு குறிப்பிட்ட இலாபவீதத்தில் கூடுதலான தற்போதைய மதிப்புக் கணக்கிடப்படுகின்றது. அவ்வாறு கணக்கிடப்படும், மொத்த வருமானங்களின் இன்றைய மதிப்புத் திட்ட முதலீட்டைவிட அதிகமாக இருப்பின், அத் திட்டம் நிறைவேற்றப்படும்.

எ. கா. ஓர் இயந்திரத்தின் அடக்கவிலை ரூ. 6,000 ஆகிறது. ஒவ்வோர் ஆண்டும் ரூ. 2,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந் நிறுவனத்தார் 15% இலாபம் எதிர்பார்க்கின்றனர். ஆண்டுப்படி அட்டவணையில் 15% வட்டியில் இன்றைய மதிப்பு ரூ. 3·352 என்று காணலாம். சராசரி ஆண்டு வருமானமாகிய ரூ. 2,000-ஐ 3·352 ஆல் பெருக்கவும். அதாவது 2,000 × 3·352 = ரூ. 6,704. இத் தொகை முதலீட்டுத் தொகையை விட ரூ. 704 அதிகமாக உள்ளது. இவ்வாறே மற்றொரு முதலீட்டுத் திட்டத்திலும் ரூ. 12,000 முதலீட்டிற்கு உண்டான, கூடுதலான தற்போதைய மதிப்பு ரூ. 15,000 எனக் கொள்வோம். இத் திட்டத்தின் இன்றைய மதிப்பு, திட்டச் செலவைவிட ரூ. 2,000 உள்ளது. இவ்வாறாக இரு திட்டங்களை ஒப்பிடும்பொழுது மொத்த வருமானங்களின் இன்றைய மதிப்பு முதலீட்டுத் தொகையைவிட எவ்வளவு அதிகமாக உள்ளது என்று கணக்கிட்டு, எத்திட்டத்தில் அதிகமான வேறுபாடு உள்ளதோ, அத் திட்டத்தைச் சிறந்தது எனலாம். இவ்வாறு செய்வதற்குப் பதில் சதவீதத்தில் எடுத்துக் கூறினால், ஒப்பிட்டுப் பார்ப்பது எளிது என்றும் சிலர் கருத்துக் கூறுவது உண்டு. அவ்வாறு செய்வதும் சரியேயாகும்.

டி. சி. எப். முறையின் நன்மைகள்:

1. முதலீடு மீட்புக் கால முறையில் அக் காலத்திற்குப் பிறகு ஏற்படும் வருமானங்களைக் கருதுவதில்லை என்ற குறை இருக்கின்றது என்று முன்பு கூறப்பட்டது. இம் முறையில் அக் குறை நீக்கப் பட்டுள்ளது.

2. பணவியலில் முக்கிய கோட்பாடான ''விரைவில் கிடைக்கக் கூடிய பணம் வெகு தொலைவில் கிடைக்கக்கூடிய வருமானத்தை விடச் சிறந்தது'' என்பதைப் பின்பற்றியுள்ளது.

3. வட்டிவீதம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

குறைகள்:

1. இம் முறை எளிதில் புரிவதில்லை.

2. சரியான வட்டிவீதத்தைத் தேர்ந்தெடுப்பது மிகக் கடினமானச் செயலாகும்.

எடுத்துக்காட்டு. 1: தானியங்கும் கருவி ஒன்றை வாங்கத் தீர்மானித்துள்ளனர். அக் கருவியில் எவ்வளவு முதலீடு செய்யலாம் என்று உங்களிடம் கேட்கப்படுகின்றது. விடையளிக்கவும்:

கருவி இயங்கும் காலம் 5 ஆண்டுகள். நிகர வருமானம் (வருமானவரி கொடுக்கப்பட்டபின்) ரூ. 5,000. இக் கம்பெனி 20% வருமானம் எதிர்பார்க்கின்றது.

விடை:

ஆண்டு	ரொக்க வருமானம் ரூ.	20% தள்ளுபடிக்குட்பட்ட ரூபாயின் இன்றைய மதிப்பு ரூ.	வருமானத்தின் இன்றைய மதிப்பு ரூ.
1	5,000	0·833	4,165
2	5,000	0·694	3,470
3	5,000	0·579	2,895
4	5,000	0·482	2,410
5	5,000	0·402	2,010
	25,000		14,950

வருமானத்தின் இன்றைய மதிப்பான ரூ. 14,950 அதாவது ரூ. 15,000 முதலீடு செய்யலாம்.

எடுத்துக் காட்டு. 2:

விவரம்	இயந்திரம் 'அ' ரூ.	இயந்திரம் 'ஆ' ரூ.
முதலீடு வருமானம் (வரிக்கு முன்)	3,000	3,000
ஆண்டு		
1	500	1,000
2	1,000	1,500
3	1,500	1,000
4	1,000	500
5	1,000	500

இந்த இரண்டு இயந்திரங்களில் எதை வாங்குவது சிறந்தது?

வட்டி வீதம் 5%, 15%, என்று இரு நிலைகளிலும் எது சிறந்தது எனக் கூறலாம்.

ஆண்டு	5% வட்டி வீதம்	15% வட்டி வீதம்
1	0·952	0·869
2	0·907	0·756
3	0·864	0·657
4	0·863	0·571
5	0·784	0·497

விடை:

ஆண்டு	5% வட்டி		15% வட்டி	
	'அ'	'ஆ'	'அ'	'ஆ'
1	476·0	952·0	434·5	869·0
2	907·0	1,360·5	756·0	1,134·0
3	1,296·0	864·0	985·5	657·0
4	823·0	411·5	571·0	285·5
5	784·0	392·0	497·0	248·5
மொத்த வருமானத்தின் மதிப்பு	4,286·0	3,980·0	3,244·0	3,194·0
முதலீடு	3,000.0	3,000.0	3,000.0	3,000.0
தற்கால நிகரமதிப்பு	1,286.	980.0	244	194

'அ' இயந்திரத்தின் நிகரமதிப்பு அதிகமாக இருப்பதால் 'அ' இயந்திரம் சிறந்தது எனக் கூறலாம்.

எ. கா. 3: உற்பத்தியைக் கூட்டுவதற்காக ஒரு புதிய இயந்திரத்தை வாங்கத் தீர்மானித்துள்ளனர். ஏ, பி, சி, டி என்ற 4 இயந்திரங்களில் எது சிறந்தது எனக் கூறவும்.

இயந்திரத்தின் அடக்கவிலை ரூ. 1,00,000

ஆண்டு	வருமானம்				10% வட்டியில் ரூபாயின் தற்கால மதிப்பு
	ஏ ரூ.	பி ரூ.	சி ரூ.	டி ரூ.	
1	30,000	10,000	20,000	20,000	0·909
2	40,000	30,000	40,000	30,000	0·826
3	50,000	40,000	50,000	35,000	0·751
4	30,000	60,000	35,000	40,000	0·683
5	20,000	40,000	30,000	40,000	0·621
	1,70,000	1,80,000	1,75,000	1,65,000	—

விடை: **10% வட்டியில் வருமானத்தின் தற்கால மதிப்பு**

ஆண்டு	ஏ	பி	சி	டி
1	27,270	9,090	18,180	18,180
2	33,040	24,780	33,040	24,780
3	37,550	30,040	37,550	26,285
4	20,490	40,980	23,905	27,320
5	12,420	24,840	18,680	24,840
	1,30,770	1,29,730	1,31,305	1,21,405

குறிப்பு: எல்லா இயந்திரங்களுக்கும் முதலீடு ஒரே தொகையாக இருப்பதால் அதிகமான தற்கால மதிப்புள்ள 'சி' என்ற இயந்திரத்தைச் சிறந்தது எனக் கூறலாம்.

7. நிதி அறிக்கைகளைப் பகுத்தாராய்தல்

(Analysis of Financial Statements)

நிதியியல் அறிக்கைகளான இலாப, நட்டக் கணக்கு, இருப்பு நிலைக்குறிப்புகளிலிருந்து ஒரு கம்பெனியின் நிதி நிலைமையை அறிந்துக் கொள்வது மிகவும் கடினம். இவ்வறிக்கைகளிலுள்ள தொகைகளைத் தனித்தனியாகப் பார்க்கும் பொழுது தவறான முடிவு களை எடுக்க நேரிடும். நிதியியல் அறிக்கைகளைப் பகுத்தாராய்வது தேவையாயிற்று. இவ்வாறு விகிதங்கள்மூலம் பகுத்தாராய்தல் ஒரு சிறப்பான கருவி ஆகும். விகிதங்கள்மூலம் பகுத்தாராய்தல் பற்றிய ஓர் அறிக்கையை 1919-ல் அலெக்சாந்தர் வால் (Alexander Val) என்பவர் வெளியிட்டார். அவ்வறிக்கையில் அவர் பாங்குகள் நடைமுறை விகிதத்தின் மீது (Current Ratio) தேவையில்லாத அளவிற்கு நம்பிக்கை கொண்டிருத்தலைக் கண்டறிந்தார். அக் கூற்றை அவர் மிகவும் கடிந்துரைத்தார். நடைமுறை விகிதத்தைத் தவிர மற்றெல்லா விகிதங்களையும் பயன்படுத்திப் பகுத்தாராய்தலே முறையானது என்ற கருத்தை வெளியிட்டார்.

விகிதத்தின் இலக்கணம்:

ஓர் எண் மற்றோர் எண்ணால் வகுக்கப்பட்டு வரும் தொகைக்கு ஈவு என்று பெயர். அவ்வாறு கிடைக்கும் ஈவை 100-ஆல் பெருக்க வேண்டும். இவ்வாறு கிடைப்பது விழுக்காடு விகிதம் (Percentage Ratio) எனப்படுகிறது.

விகிதங்களின் பொருள் ஆய்வு (Interpretation of Ratios)

விகிதங்களின் பொருள் ஆய்வு செய்யும் பொழுது கீழே குறிப்பிட்டுள்ள உண்மைகளை உணர்ந்து செயற்படவேண்டும்.

1. தனியாக ஒரு விகிதம் எப்பொருளையும் உணர்த்தாது. அப்படிக் கிடைக்கும் முடிவுகள் உண்மையாகவும் இருக்க முடியாது.

2. ஆகவே விகிதங்கள்மூலம் பகுத்தாராயும்போது ஒரு விகிதத்தை மட்டும் மனத்திற்கொண்டு பொருள் கூறுவது தவறாகை யால் அதற்குத் தொடர்புடைய வேறு சில விகிதங்களையும் கணக்கிட்டுப் பொருள் ஆய்வு செய்யவேண்டும்.

3. சில நேரங்களில் அதே விகிதத்தைப் பல ஆண்டுகளுக்குக் கணக்கிட்டு விகிதத்தினுடைய போக்கைப் புரிந்து கொள்ளலாம். ஆகவே, அவ்விகிதங்களினுடைய சராசரியை அளவுகோலாக வைத்துக் கொள்ளலாம்

4. ஒரு கம்பெனியின் விகித்தை அதே தொழில் செய்யும் மற்றொரு கம்பெனியின் விகித்தோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பொருள் ஆய்வு செய்யவேண்டும்.

விகிதங்களின் பிரிவுகள்:

பண்டைக்கால முறைப்படி விகிதங்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்:-

1. **இருப்புநிலைக் குறிப்பு விகிதங்கள்:** அதாவது இருப்புநிலைக் குறிப்பிலுள்ள தொகைகளை வைத்துக் கொண்டு விகிதங்களைக் கணக்கிடல்.

இலாப, நட்டக் கணக்கு விகிதங்கள்: இக் கணக்கிலுள்ள ஏதேனும் இரு தொகைகளைக் கொண்டு கணக்கிடப்படும் விகிதமாகும்.

3. **கலப்பு விகிதங்கள்:** இருப்புநிலைக் குறிப்பு, இலாப, நட்டக் க/கு ஆகிய இரண்டு அறிக்கைகளிலிருந்து எடுக்கப்படும் தொகை களிலிருந்து கணக்கிடப்படும் விகிதமாகும்.

ராபர்ட். என். அந்தோணி (Robert. N. Anthony) கூறுவது போல விகிதங்களைக் கீழ்க்கண்ட மூன்று வகைகளாகவும் பிரிக்கலாம்:

1. ரொக்கநிலை பற்றிய சோதனை.
2. இலாபத்தன்மை பற்றிய சோதனை.
3. விற்கும் திறன் பற்றிய சோதனை.

இப்படிப் பலவிதமாக விகிதங்களைத் தேவைக்குத் தகுந்தாற் போல் பாகுபாடு செய்யலாம்.

குறுகிய கால அடிப்படையில் நிதிநிலைமையைப் பகுத்தாராய்தல் அல்லது ரொக்க நிலைமைச் சோதனை.

வங்கிகளும், குறுகிய காலத்திற்குக் கடனளிப்பவர்களும் வியாபாரத்தின் ரொக்க நிலையை ஆராய்வதில் பெரிதும் அக்கறை

கொண்டுள்ளனர். அதேசமயம் மேலாண்மைக்கும் நடைமுறை முதலை வியாபாரத்தில் பயன்படுத்துவதற்கும் உதவி செய்யும் வகையில் இந்த விகிதம் அமைந்துள்ளது.

நடைமுறை விகிதம் (Current Ratio)

நடைமுறை விகிதம் நடைமுறைச்சொத்துகளுக்கும் நடைமுறைப் பொறுப்புகளுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. இதை, நடைமுறை முதல் விகிதம் என்றும் கூறுவர்.

$$\text{நடைமுறை முதல் விகிதம்} = \frac{\text{நடைமுறைச் சொத்துகள்}}{\text{நடைமுறைப் பொறுப்புகள்}}$$

பின்வரும் சொத்துக்களை நடைமுறைச் சொத்துகள் என்று கூறலாம்: ரொக்க இருப்பு, பாங்கு இருப்பு, குறுகியகால அடிப் படையில் செய்யும் முதலீடுகள், வரவுக்குரிய உண்டியல்கள், முன் செலுத்திய செலவுகள், வேலைமுற்றுப் பொருள், சரக்கிருப்பு, கடனாளிகள் முதலியனவாகும். நடைமுறைப் பொறுப்புகளாவன! கடனீந்தோர், செலுத்தவேண்டிய உண்டியல்கள், கொடுக்க வேண்டிய செலவினங்கள், தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு முதலியன வாகும்.

இவ்விகித்தைக் கணக்கிடும்போது பாங்கு அதிகப்பற்றுக் கணக்கை நடைமுறைப் பொறுப்பாகக் கொள்ளலாகாது என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். பல நேரங்களில் பாங்கில் அதிகப் பற்று என்பது தொடர்பாக உள்ளது. ஒரு பொறுப்பாகி விடுகிறது. ஆகையால், பாங்கு அதிகப்பற்றுக் கணக்கை நடைமுறைப் பொறுப்பாக கொள்ளக்கூடாது என்று வாதாடுகின்றனர். ஆனால் பாங்கு எந்த நேரத்திலும் இந்த உதவியை நிறுத்திவிடக்கூடும் என்பதைக் கருதும்பொழுது இதை நடைமுறைப் பொறுப்பாக எடுத்துக் கொள்ளுதலே நன்றாகும்:

முன்னெச்சரிக்கைகள்

இவ்விகிதத்தைக் கணக்கிடும்பொழுது முன்னெச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். ஏனெனில், இருப்புநிலைக் குறிப்புகளில் இருக்கும் நடைமுறைப் பொறுப்புகள் ஆகியவைகளின் மதிப்புகள் சரியாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் இவ்விகிதம் குறைத்தோ மிகைப்படுத்தியோ காட்டப்பட்டுவிடும். இவ்விகி தத்தைக் கணக்கிடும்பொழுது நடைமுறை சொத்துகளுக்குத் தொடர்பாக உள்ள காப்பிருப்புகளைக் கவனமாகக் கழிக்க

வேண்டும். பின்வரும் குறிப்புகளிலிருந்து நடைமுறை முதல் விகிதத்தைக் கணக்கிடுவோம்.

நடைமுறைப் பொறுப்புகள்	ரூ.	நடைமுறைச் சொத்துகள்	ரூ.
கடனீந்தோர்	6,000	ரொக்கம்	5,000
செலுத்தவேண்டிய உண்டியல்	5,000	முதலீடுகள்	15,000
பாங்கு அதிகப்பற்று	5,000	வரவுடைய உண்டியல்கள்	5,000
கொடுக்கவேண்டிய செலவுகள்	1,000	கடனாளிகள்	22,000
		இறுதி இருப்புச் சரக்கு	33,000
வருமானவரிப் பொறுப்பு	13,000	வேலை முற்றுப் பொருள்	15,000
	30,000		95,000

குறிப்பு: ஐயக்கடன் காப்பு ரூ. 2,000

சரக்கு நட்டக்காப்பு ரூ. 3,000

இவ்விகிதத்தைக் கணக்கிடும் முன் நடைமுறைச் சொத்துகளைச் சரியாக மதிப்பிட வேண்டும். ஐயக் கடன் காப்பையும், சரக்கு நட்டக் காப்பிருப்பையும் முறையே கடனாளிகள், சரக்கு ஆகிய தொகைகளிலிருந்து கழித்துவிடவேண்டும். ஆக, நிகர நடைமுறைச் சொத்து ரூ. 95,000—5,000=ரூ. 90,000. நடைமுறை முதல் விகிதம்

$$= \frac{\text{நடைமுறைச் சொத்துகள்}}{\text{நடைமுறைப் பொறுப்புகள்}} = \frac{90,000}{30,000} = 3 : 1$$

இந்த எடுத்துக்காட்டில் நடைமுறை முதல் விகிதம் 3:1 என்று உள்ளது. இதன் பொருளாவது ஒவ்வொரு ரூபாய் நடைமுறைப் பொறுப்புக்கும் ரூ. 3 மதிப்புள்ள நடைமுறைச் சொத்துகள் உள்ளன. அதாவது நடைமுறைச் சொத்துகளெல்லாம் 33·3% தான் விலை போனாலும் நடைமுறைப் பொறுப்புகளை மட்டும் முழுமையாகக் கொடுத்துவிடமுடியும். நடைமுறை முதல் விகிதம் நடைமுறைப் பொறுப்புகளை மீட்கும் திறனைக் காட்டுகிறது. இந்த விகிதம் எல்லோராலும் கவரப்படுகிறது. இதன் காரணம் இந்த விகிதம் தான் ஒரு தொழிலினுடைய குறுகியகாலக் கடன்களை அடைக்கும் திறனை உணர்த்துகிறது. நெடுங்காலக்கடன் அளிப்பவராய்

இருந்தாலும் அத் தொழில் எவ்வாறு குறுகிய காலக் கடன்களை அடைக்கவல்லது என்பது பற்றியும் சிந்தனை செய்கின்றனர். ஆகையால், மக்களிடையே இந்த விகிதம் பற்றிய உணர்வு அதிக மாகவே உள்ளது.

2:1 என்ற விகிதம் பொருத்தமானதென்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுப் பழக்கத்திலிருக்கிறது. எந்த பாங்கும் நடைமுறை முதல் விகிதம் குறைந்தது 2:1 இருக்கிறதா என்று பார்க்கத் தவறுவ தில்லை. சில நேரங்களில் நடைமுறை முதல் விகிதம் அதிகமாய் இருந்தும் அத் தொழில்கள் நடைமுறைப் பொறுப்புகளைச் சரியான நேரத்தில் மீட்கமுடியாமல் போகக்கூடும். உதாரணமாக ஒரு தொழிலினுடைய தேவைக்கு மீறிய சரக்குகளின் இருப்பு வைப்ப தால் அந்த நிறுவனத்தின் ரொக்க நிலை உயர்ந்து விடுவதில்லை. அந் நிறுவனங்களில் விற்பனைக்கும் சரக்கிருப்பிற்கும் எந்தவிதத் தொடர்பும் இராது. அந் நிலையில் நடைமுறை விகிதம் உயர்ந் திருப்பதால் ஒரு பயனுமில்லை. ஆகவே, நடைமுறை முதல் விகிதத் தைக் கொண்டு முடிவு காணும்பொழுது நடைமுறைச் சொத்து களினுடைய ரொக்கநிலைத் தன்மையை மனதிற் கொள்ள வேண்டும்.

கடுஞ்சோதனை விகிதம் அல்லது ரொக்க நிலை விகிதம்: (Acid Test Ratio)

இந்த விகிதத்தில் ஒரு தொழிலின் ரொக்க நிலைச் சொத்துகளை யும் ரொக்கநிலைப் பொறுப்புகளையும் ஒப்பிடுகிறோம். இந்த விகிதம் நடைமுறை முதல் விகிதத்திற்குத் துணையாக நிற்கிறது. பல நிறுவனங்களில் நடைமுறை முதல் விகிதம் மிகவும் உகந்ததாக இருந்தும் குறுகிய காலத்தில் தொழிலிலிருந்து விலகிச் செல்ல நேரிடுகிறது.

நடைமுறைச் சொத்துகளிலிருந்து இறுதிச் சரக்கிருப்பைக் கழித்து விட்டால் வரும் தொகைக்கு ரொக்க நிலைச் சொத்துகள் அல்லது எளிதில் பணமாக்கக் கூடிய சொத்துகள் என்று பெயர். அதேபோன்று நடைமுறைப் பொறுப்புகளிலிருந்து பாங்கு அதிகப் பற்றைக் கழித்ததுபோக உள்ள தொகைக்கு ரொக்க நிலைப் பொறுப்புகள் அல்லது விரைவில் கொடுக்க வேண்டிய பொறுப்புகள் என்று பெயர்.

சரக்கிருப்பு விகிதத்தில் சேராதது ஒரு சிறப்பான வேறு பாடாகும். குறுகிய காலக் கடன்களை மீட்கச் சரக்கிருப்பை நம்பி இருத்தல் உகந்த காரியமன்று. ஏனெனில், கையிலுள்ள சரக்கை விற்பதில் எதிர்பாராத பல இன்னல்கள் வரக்கூடும். இதே

காரணத்திற்காக முன் செலுத்திய செலவுகளையும் ரொக்க நிலைச் சொத்துகளையும் கணக்கிடும் பொழுது சேர்த்துக் கொள்வதில்லை.

$$\left.\begin{array}{c}\text{கடுஞ்சோதனை விகிதம் அல்லது}\\ \text{ரொக்க நிலை விகிதம்}\end{array}\right\} = \frac{\text{ரொக்க நிலைச் சொத்துகள்}}{\text{ரொக்க நிலைப் பொறுப்புகள்}}$$

நடைமுறை முதல் விகிதத்தை விளக்குவதற்காக எடுத்துக் கொண்ட அதே உதாரணத்தை மறுபடியும் கவனிப்போம். அதில் மொத்த ரொக்க நிலைச் சொத்துகள் ரூ. 45,000 ஆகிறது. மொத்த ரொக்க நிலைப் பொறுப்புகள் ரூ. 25,000 ஆகிறது.

$$\text{ரொக்க நிலை விகிதம்} = \frac{\text{ரூ. } 45{,}000}{\text{ரூ. } 25{,}000} = 1{\cdot}8:1$$

சரக்கிருப்பை விகிதத்திலிருந்து விலக்கிவிடுவதால் தொழிலின் உண்மையான ரொக்க நிலையைக் கண்டு கொள்ள முடிகிறது. இவ்வாறு ஒரு தொழிலின் ரொக்க நிலையை மிகக் கடுமையான சோதனைக்குட்படுத்துவதால் இதற்குக் கடுஞ்சோதனை விகிதம் என்று பெயரிட்டனர்.

பொதுவாக இவ்விகிதம் 1:1 என்று இருப்பது பொருத்தமென்று கருதுகின்றனர். இருப்பினும் இந்த விகிதத்தைப் பகுத்தாராயும் பொழுது மிகுந்த முன்னெச்சரிக்கை அவசியமாகிறது. ஏனெனில், சில சூழ்நிலைகளில் ரொக்க நிலை விகிதம் மிகவும் கூடுதலாக இருக்கலாம். எ. கா. சில பருவகாலங்களில் நடைபெறும் தொழில்களில் விற்பனை மந்தமாக இருக்கும். இதனால் ரொக்க நிலை விகிதம் மிகவும் பாதிக்கப் படும். ஆனால், அதே தொழில் சில பருவங்களில் விற்பனை சுறுசுறுப் பாக இருக்கும்பொழுது ரொக்க நிலை விகிதம் வியக்கத்தக்க அளவு காணப்படும்.

சரக்கிருப்பு விற்பனை விகிதம்: (Inventory Turnover Ratio) இவ் விகிதம் விற்ற பொருளின் அடக்க விலைக்கும் சராசரி சரக்கிற்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. அதாவது எவ்வளவு விரைவில் சரக்குகள் விற்கப்பட்டு ரொக்கமாகத் தொழிலுக்கே திரும்புகிறது என்பதைக் குறிப்பிடுகிறது. இந்த விகிதம் சரக்கிருப்புக் கொள் கையை (Inventory Policy) உருவாக்குவதில் நிதிநிலை மேலாளர்க்குப் பேருதவியாக இருக்கிறது. தேவையற்ற அளவு சரக்குகளைச் சேமித்து வைத்து நடைமுறை முதலைப் பாழாக்குவதைத் தவிர்க்க இந்த விகிதம் தொழிலுக்கு எச்சரிக்கை செய்கிறது.

சராசரி சரக்கிருப்பைக் கணக்கிட ஒவ்வொரு மாத முடிவிலும் உள்ள சரக்கைக் கணக்கெடுத்து ஆண்டுத் துவக்கத்தில் உள்ள சரக் கையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மொத்தத் தொகையைப் 13ஆல் வகுக்க வேண்டும்,

சரக்கிருப்பு விற்பனை விகிதத்தை மூன்று விதமாகக் கணக்கிடலாம்.

1. விற்ற பொருளின் அடக்க விலை: சராசரி சரக்கிருப்பு (அடக்க விலையில்)

2. நிகர விற்பனை : சராசரி சரக்கிருப்பு (அடக்க விலையில்)

3. நிகர விற்பனை : சராசரி சரக்கிருப்பு (விற்பனை விலையில்)

இரண்டாவது முறையைத் தகுந்ததாகப் பலர் ஒப்புக் கொள்ளுவதில்லை. ஏனெனில், இரண்டாவது முறையில் பின்னத்தின் தொகுதி எண் (numerator) விற்பனை விலையிலும், பின்னத்தின் பகுதி எண் (Denominator) அடக்க விலையிலும் உள்ளன. இப்படிப் பின்னத்தின் எண்கள் வேறுபட்டு இருந்தும் ஒப்பிடுவது முறையானதன்று.

எ.கா: ஒரு கம்பெனியின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் விற்ற பொருளின் அடக்க விலை ரூ. 3,00,000. சராசரி சரக்கு இருப்பு ரூ. 30,000. சரக்கிருப்பு விற்பனை விகிதம் $= \frac{3,00,000}{30,000} = 10$ மடங்கு. சரக்கிருப்பு விற்பனை விகிதம் வியாபாரத்தில் எவ்வளவு விரைவில் பணமாக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. சரக்கிருப்பு விற்பனை விகிதத்தை மட்டும் கொண்டு எந்தவிதமான முடிவுக்கும் வருவது தவறான செயலாகும். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கென்று வரையறுக்கப்பட்ட சரக்கிருப்பு விற்பனை விகிதம் கிடையாது. எனவே, ஒரு வியாபாரத்தின் சரக்கிருப்பு விற்பனை விகிதம் 5 மடங்கு என்று கூறுவது மேலாண்மைக் கொள்கையைப் புகழ்ந்து கூறுவதாக இருக்க முடியாது.

இவ்விகிதத்தின் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதே வியாபாரத்தின் சென்ற ஆண்டு விகிதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அல்லது அதே தொழிலில் உள்ள மற்ற நிறுவனங்களின் சரக்கிருப்பு விற்பனை விகிதத்துடன் ஒப்பிட வேண்டும். ஒரு நிறுவனத்தின் சரக்கிருப்பு விற்பனை விகிதம் இந்த ஆண்டு 5 மடங்காகவும் சென்ற ஆண்டு 5½ மடங்காகவும், அதற்கும் முந்திய ஆண்டு 6½ மடங்காகவும் இருந்தால் நிறுவனத்தில் மேலாண்மை பின்பற்றும் சரக்குகள் கொள்கை தவறானது என்று உணரலாம். அதுபோலவே ஒரு நிறுவனத்தின் சரக்கிருப்பு விற்பனை விகிதம் 6 மடங்காகவும் அதே தொழிலில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களில் அவ்விகிதம் 7½ மடங்காகவும் இருந்தால் அந்த நிறுவனத்தில் ஒரு தவறான கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாகச் சரக்கிருப்பு விற்பனை விகிதம் குறைவாக இருப்பின் வியாபாரத்தின் மந்த நிலைமையும் சரக்குகளில் தேவையற்ற அளவு அதிகமாக முதலீடு செய்திருப்பதையும் குறிக்கிறது. சரக்கிருப்பு விற்பனை விகிதம் அதிகமாக இருப்பின் பொதுவாக அதிக இலாபம் கொடுக்கும். சரக்கிருப்பு விற்பனை விகிதத்தைப்பற்றி கூறப்பட்ட மேற்கூறிய கருத்துகள் பொதுப்படையானவையே. சூழ்நிலைக் கேற்றவாறு பொருள் விளக்கம் கொடுப்பது இன்றியமையாத தாகும்.

கடனாளிகள் விற்பனை விகிதம். (Debtors Turn over Ratio)

இவ்விகிதம் விற்பனைக்கும் பல கடனாளிகள் கணக்கில் உள்ள இருப்பிற்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது. கடனாளிகள் விற்பனை விகிதத்தைக் கணக்கிடும் முறை பின்வருமாறு:

1. ஒரு நாள் சராசரி விற்பனை (Average daily Sales) ஓர் ஆண்டில் கடனுக்கு விற்ற தொகையை அவ்வாண்டின் மொத்த உழைப்பு நாள்களால் (working days) வகுத்தால் கிடைக்கும் தொகை ஒரு நாள் சராசரி விற்பனை ஆகும்.

2. சராசரி வசூல் காலம் (Average collection period): ஒரு நாளில் சாரசரி விற்பனைத் தொகையை ஆண்டிறுதியில் கடனாளிகள் கணக்கில் உள்ள தொகையால் வகுத்து வரும் ஈவு சராசரி வசூல் காலமாகும்.

இவ்விகிதத்தில் கடனாளிகள் என்ற சொல் வரவுடைய உண்டியல் களையும் குறிக்கும். விற்பனை என்பது சரக்கு விற்பனை என்பதைத்தான் குறிக்கும். நிலையான சொத்துகள் ஏதேனும் விற்றிருந்தால் அந்த விற்பனையை சேர்த்துக் கொள்ளக்கூடாது. மேலும் அந்த விற்பனை யால் ஏற்படும் கடனாளிகளையும் இவ்விகிதத்தைக் கணக்கிடும்போது நீக்கிவிட வேண்டும். மேலும், ஐயக்கடன் காப்பு ஏதேனும் இருந்தால் அதைக் கடனாளிகள் தொகையிலிருந்து கழிக்கக்கூடாது. வெளியிடப் படும் கணக்குகளில் ரொக்க, கடன் விற்பனைகளைப் பற்றிய முழு விவரம் இருக்காது. அப்பொழுது வேறு வழியின்றி ரொக்க விற்பனையையும் சேர்த்துக் கொண்டுதான் இவ்விகிதத்தைக் கணக்கிடு கிறோம். இவ்வகையில் இவ்விகிதத்தில் நுட்பம் குறைவு. ஆகையால், ஒரு கம்பெனியின் கடனாளிகள் விற்பனை விகிதத்துடன் மற்றொரு கம்பெனியின் அதே விகிதத்தை ஒப்பிடும்பொழுது அக் கம்பெனி யிலும் ரொக்க விற்பனை பெரும் பகுதியாக இல்லாமல் இருத்தல் தேவையாகும். ஒருநாள் சராசரி விற்பனையை அளவிட மூன்று முறைகள் இருக்கின்றன.

(அ) ஆண்டின் மொத்த விற்பனையை 360 ஆல் வகுத்தல். இவ்வாறு கூறுபவர்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் சராசரி 30 நாள்கள் இருக்கும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர். பொதுவாக எல்லா வட்டி க/கு களிலும் 30 நாள்கள் என்றுதான் கணக்கிடு கின்றனர்.

(ஆ) மற்றொரு சாரார் ஆண்டிற்கு 300 நாள்கள் என்ற கொள்கையை உடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டிலும் வார விடுமுறையையும் மற்ற விடுமுறை நாள்களையும் கழித்து 300 நாள்களில்தான் தொழிற்சாலை அல்லது அலுவலகம் இயங்கும் என்றும் மேற்கோள் கொடுக்கின்றனர்.

எ. கா: 1973 ஆம் ஆண்டில் நிகரவிற்பனை (கடன் விற்பனை மட்டும்) ரூ. 3,60,000. அவ்வாண்டு இறுதியில் கடனாளிகள் கணக்கில் ரூ. 60,000 இருப்பும் நிற்கிறது.

கடனாளிகள் விற்பனை விகிதம்

$$= \frac{\text{கடனாளிகள்}}{\text{நாள் சராசரி விற்பனை}}$$

$$\text{நாள் சராசரி விற்பனை} = \text{ரூ.} \frac{3,60,000}{360}$$

$$= \text{ரூ. } 1,000$$

$$\text{சராசரி வசூல் காலம்} = \text{ரூ.} \frac{60,000}{1,000} = 60 \text{ நாள்கள்}$$

மேற்கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் அக்கம்பெனியின் 60 நாள்களின் சராசரி விற்பனைத் தொகை எப்பொழுதும் வசூலிக்கப் படாமல் இருக்கிறது.

புற, அகப் பொறுப்புகள் விகிதம் (Debt Equity Ratio.)

இவ்விகிதம் பங்குதாரர்களுடைய நிதிக்கும் பிறர் தொழிலுக்குக் கடனாக அளித்துள்ள நிதிக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றது. பிறர் அளித்துள்ள நிதியைப் புறப் பொறுப்புகள் என்று கூறலாம். புறப் பொறுப்புகள் குறுகிய காலப் பொறுப்புகளையும் நெடுங் காலப் பொறுப்புகளையும் உண்டாக்கியிருக்கின்றன. சலுகைப் பங்குகள், சாதாரணப் பங்குகள் முதலினக்காப்பு (Capital Reserve) இலாப மிகுதி, மற்றக் காப்புக்கள் முதலியன அகப் பொறுப்பு களாகும். சில நிதியியல் வல்லுநர்கள் சலுகைப் பங்குகள் புறப்

பொறுப்பாகக் கருத வேண்டும் என்று கூறுகின்றனர். எனினும் இந்தக் கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

$$\text{புற, அகப் பொறுப்புகள் விகிதம்} = \frac{\text{புறப் பொறுப்புகள்}}{\text{அகப் பொறுப்புகள்}}$$

எ. கா: ஒரு கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பகுதி பின்வருமாறு:

கடனீந்தோர்	ரூ. 2,000	ரூ.
செலுத்த வேண்டிய உண்டியல்கள்	6,000	
வருமானவரிப் பொறுப்பு	4,000	
கொடுக்க வேண்டிய செலவினங்கள்	8,000	20,000
நிலையான பொறுப்புகள்		
6% கடன் பத்திரம்		25,000
பொதுக்காப்பிருப்பு	25,000	
வருநிகழ்வு ஒதுக்கீடு	10,000	
6% சலுகைப் பங்கு முதல்	15,000	
சாதாரணப் பங்கு முதல்	55,000	1,05,000
		1,50,000

இந்த எடுத்துக்காட்டில் புற, அகப் பொறுப்புகளின் விகிதம் $= \frac{45,000}{1,05,000}$. அதாவது 3:7. இந்த விகிதத்தின்படி ஒவ்வொரு ரூ. 3 புறப் பொறுப்புகளுக்கும் ரூ. 7 அகப் பொறுப்புகள் ஈடாக உள்ளன. அதாவது சொத்துகளைப் பணமாக்கும் பொழுது 70% தள்ளுபடி செய்துவிட்டாலும் புறப் பொறுப்புகளை முழுமையாகத் திருப்பி யளிக்க முடியும்.

உரிமையாளர் விகிதம்: (Proprietory Ratio).

மேற்கூறிய எடுத்துக்காட்டில் இவ்விகிதத்தைக் கணக்கிடலாம்.

$$\frac{\text{பங்குதாரர்கள் நிதி}}{\text{மொத்த சொத்துகள்}} = \frac{1,05,000}{1,50,000} \times 100 = 70\%$$

இந்த விகிதத்திற்கும் 100%-க்கும் உள்ள வேறுபாடு மொத்தப் பொறுப்புகளுக்கும் மொத்தச் சொத்துகளுக்கும் உள்ள விகிதத்தை குறிக்கும்.

நிலையான சொத்துப் பங்குதாரர் நிதி விகிதம்.

$$\frac{\text{நிலையான சொத்துகள்}}{\text{பங்குதாரர்களின் நிதி}}$$

நிலையான சொத்துகளை வாங்குவதற்குப் பங்குதாரர்களின் நிதி எவ்வளவு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இவ்விகிதம் கூறுகின்றது. பொதுவாக நிலையான சொத்துகளை வாங்குவதற்குப் பங்குதாரர்களின் நிதியைப் பயன்படுத்துவதுதான் முறையான செயலாகும். ஏனெனில், புறப் பொறுப்புகள் பொதுவாக குறுகிய காலப் பொறுப்புகளேயாகும். குறுகிய காலப் பொறுப்புகளின் நிதியை வைத்துக் கொண்டு நிலையான சொத்துகளை வாங்குவது, நிதியியல் கோட்பாட்டிற்கு முரண்பட்டதாகும். நிலையான சொத்துகள் எல்லாவற்றையும் பங்குதாரர்களின் நிதியிலிருந்தே வாங்குவது என்பது இயலாத காரியமாகும். பொதுவாக இவ்விகிதம் 65% இருக்க வேண்டும்.

மொத்த இலாப விகிதம்: (Gross Profit Ratio)

இவ்விகிதம் மொத்த இலாபத்திற்கும் நிகர விற்பனைக்குமுள்ள தொடர்பைப் புலப்படுத்துகின்றது. இவ்விகிதம் பொதுவாக விழுக்காடாகவே சொல்லப்படும். எந்தத் தொழிலிலும் மொத்த இலாப விழுக்காடு ஒரே சீராக இருக்கவேண்டும். அதிக வேறுபாடு இருக்கக் கூடாது. இருக்கவும் முடியாது.

$$\frac{\text{மொத்தலாபம்}}{\text{நிகரவிற்பனை}} \times 100$$

நடைமுறைச் செலவு விகிதம் (Opearting Ratio)

இவ்விகிதம் விற்றபொருளின் அடக்கவிலையுடன் மற்ற நடைமுறைச் செலவுகளைக் கூட்டியபின் கிடைக்கும் தொகைக்கும் நிகர விற்பனைக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. நடைமுறைச் செலவுகளாவன பின்வருமாறு:

(அ) விற்பனைச் செலவுகள்—விளம்பரச் செலவுகள், விற்பனை ஊக்குவிப்போரின் சம்பளம் முதலியன.

(ஆ) வட்டி, தள்ளுபடி போன்ற நிதிச்செலவுகள்,

(இ) வாடகை, அலுவலகச் செலவுகள் முதலியன.

நடைமுறைச் செலவு விகிதம்.

$$= \frac{\text{விற்ற பொருளின் அடக்கவிலை} + \text{நடைமுறைச் செலவு}}{\text{நிகர விற்பனை}}$$

எ. கா: விற்ற பொருளின் அடக்கவிலை ரூ. 7,11,000; நடைமுறைச் செலவுகள் ரூ. 4,52,000; நிகர விற்பனை ரூ. 12,69,000; நடைமுறைச் செலவு விகிதத்தைக் கணக்கிடுக.

$$\frac{7,11,000 + 4,52,000}{12,69,000} \times 100 = \frac{11,63,000}{12,69,000} \times 100 = 91 \cdot 6\%$$

அதாவது ஒவ்வொரு 1 ரூபாய் விற்பனைக்கும் ரூ. 0·916 நடைமுறைச் செலவாகிறது. அதாவது இலாபம் ரூ. 0·084 ஆகும். இவ்விகிதம் அதிகமாக இருப்பின் இலாபம் குறைவாக உள்ளது என்று பொருள். ஒரு நிறுவனத்தின் இலாபத்தன்மையை அறிவிக்கக் கூடிய கருவி என்று இதைச் சொல்லலாம். பொதுவாக 75% முதல் 85% வரை இவ்விகிதம் இருக்கலாம் என்று வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பங்குமுதல் பிறமுதல் விகிதம்: (Capital Gearing Ratio)

இவ்விகிதம் சாதாரணப் பங்குகளுக்கும் பிற குறிப்பிட்ட வட்டி பெறக்கூடிய பத்திரங்களுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிடுகின்றது.

$$\text{பங்குமுதல் பிறமுதல் விகிதம்} = \frac{\text{சாதாரணப் பங்குமுதல்}}{\text{நிலையான வட்டி ஈட்டும் பத்திரங்கள்}}$$

குறிப்பு: சலுகைப் பங்குகளையும் நிலையான வட்டி ஈட்டும் பத்திரங்களுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

எ.கா:	6% சலுகைப் பங்குகள்	ரூ.	20,000
	5% கடன் பத்திரங்கள்	ரூ.	20,000
	சாதாரணப் பங்குகள்	ரூ.	60,000

$$\text{பங்கு முதல் பிற முதல் விகிதம்} = \text{ரூ.} \frac{60,000}{40,000} = 3:2$$

நிலையான சொத்துகள் விற்பனை விகிதம்(Fixed Asset Turn over-Ratio) :

இவ்விகிதம் விற்ற பொருளின் அடக்க விலைக்கும் நிலையான சொத்துகளுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிடுகிறது.

$$\left.\begin{array}{l}\text{நிலையான சொத்துகள்}\\ \text{விற்பனை விகிதம்}\end{array}\right\} = \frac{\text{விற்ற பொருளின் அடக்க விலை}}{\text{நிலையான சொத்துகள்}}$$

மேற்கூறிய விகிதங்கள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன என்பதை அறியப் பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

எ. கா: 31—12—1968-ல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் க/கு, இருப்புநிலைக் குறிப்பு ஆகியவை கொடுக்கப் பட்டுள்ளன.

இலாப, நட்டக் க/கு

	ரூ.		ரூ.
தொடக்க இருப்புச் சரக்கு	90,500	விற்பனை	8,50,000
கொள்முதல்	5,45,250	இறுதி இருப்புச் சரக்கு	1,49,000
கூலி	14,250		
மொத்த இலாபம்	3,40,000		
	9,90,000		9,90,000
விற்பனைச் செலவுகள்	30,000	மொத்த இலாபம்	3,40,000
நிருவாகச் செலவுகள்	1,50,000	வட்டி	3,000
இதரச் செலவுகள்	15,000	முதலீடுகள் விற்றதில் இலாபம்	6,000
நிலையான சொத்து விற்பனையில் நட்டம்	4,000		
நிகரலாபம்	1,50,000		
	3,49,000		3,49,000

இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
சாதாரணப் பங்கு முதல்	2,00,000	கட்டடங்கள்	1,50,000
பொதுக் காப்பிருப்பு	90,000	இயந்திரச் சாதனங்கள்	80,000
நடைமுறைப் பொறுப்புகள்	1,30,000	சரக்கு இருப்பு	1,49,000
		கடனாளிகள்	71,000
இலாப, நட்டக் க/கு	60,000	ரொக்க இருப்பு	30,000
	4,80,000		4,80,000

பின்வரும் விகிதங்களைக் கணக்கிட்டு அவற்றிற்குரிய பொருள் விளக்கங்களையும் அளிக்கவும்:

(அ) நடைமுறை விகிதம் (Current Ratio)

(ஆ) நடைமுறைச் செலவு விகிதம் (Operating Ratio)

(இ) சரக்கிருப்பு விற்பனை விகிதம் (Inventory Turnover Ratio)

(ஈ) மொத்த முதலினங்கள் ஈட்டிய மீள்வரவு விகிதம் (Return Total Resources).

(உ) நிலையான சொத்துகளின் விற்பனை விகிதம் (Fixed -Assets Turn Over Ratio)

விடை: (அ) **நடைமுறை முதல் விகிதம்**

$$= \frac{\text{நடைமுறைச் சொத்துகள்}}{\text{நடைமுறைப் பொறுப்புகள்}}$$

நடைமுறைச் சொத்துகள்

	ரு.	ரு.
ரொக்கம்	30,000	
இறுதி இருப்புச் சரக்கு	1,49,000	
கடனாளிகள்	71,000	2,50,000
நடைமுறைப் பொறுப்புகள்		1,30,000

$$\text{நடைமுறை விகிதம்} = \frac{2,50,000}{1,30,000} = 1{\cdot}92:1$$

பொருள் விளக்கம்: இந்த நிறுவனத்தின் நடைமுறை முதல் விகிதம் அநேகமாக வல்லுநர்களால் சிறந்தது என்று கூறப்படும் 2:1 என்ற நிலைமைக்கு இருந்தாலும் இந்த நிறுவனத்தின் இவ்விகிதம் அவ்வளவு உகந்தது இல்லை. ஏனெனில், நடைமுறைச் சொத்துகளில் பெரும்பகுதித் தொகை சரக்காக இருக்கிறது. மேலும், சரக்கு என்ற சொத்து எளிதில் ரொக்கமாக்கப்படக்கூடிய சொத்து என்று கருதுதல் தவறாகும்.

ஆ. நடைமுறைச் செலவு விகிதம்.

$$\frac{\text{விற்ற பொருளின் அடக்கவிலை} + \text{நடைமுறைச் செலவுகள்}}{\text{நிகர விற்பனை}}$$

விற்ற பொருளின் அடக்கவிலை:

	ரூ.	ரூ.
தொடக்க இருப்புச் சரக்கு	99,500	
கொள்முதல்	5,45,250	
கூலி	14,250	6,59,000
கழி: இறுதி இருப்புச் சரக்கு		1,49,000
		5,10,000

நடைமுறைச் செலவு விகிதம்

$$= \frac{5,10,000 + 1,95,000}{8,50,000} = \frac{7,05,000}{8,50,000} = 0{\cdot}83:1$$

பொருள் விளக்கம்: ஒவ்வொரு 1 ரூபாய் விற்பனையிலும் 83 பைசா நடைமுறைச் செலவாகிவிடுகிறது. எஞ்சிய 17 பைசா இலாபத்தைக் குறிக்கின்றது.

இ. சரக்கிருப்பு விற்பனை விகிதம்

$$= \frac{\text{விற்ற பொருளின் அடக்கவிலை}}{\text{சராசரி சரக்கிருப்பு}}$$

$$\text{சராசரி சரக்கிருப்பு} = \frac{\text{தொடக்க இருப்பு + இறுதி இருப்பு}}{2}$$

$$= \frac{99,500 + 1,49,000}{2} = \frac{2,48,500}{2}$$

$$= \text{ரூ. } 1,24,250$$

$$\text{சரக்கிருப்பு விற்பனை விகிதம்} = \frac{5,10,000}{1,24,250} = 4{\cdot}1:1$$

பொருள் விளக்கம்: 1962 ஆம் ஆண்டில் சரக்கு நான்கு தடவை சுழன்றுள்ளது.

ஈ. மொத்த முதலினங்கள் ஈட்டிய மீள்வரவு விகிதம்

$$= \frac{\text{நிகர இலாபம்}}{\text{மொத்த சொத்துகள்}} = \frac{1,50,000}{4,80,000} = 0{\cdot}31:1$$

குறிப்பு: இவ்விகிதத்தைக் கணக்கிடும்பொழுது நிகர இலாபத்தைக் கொள்ளாமல் நிகர வியாபார இலாபத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

நிகர வியாபார இலாபம்.	ரூ.
நிகர இலாபம்	1,50,000
கூட்டு: வியாபாரத் தொடர்பு அல்லாச் செலவுகள்	4,000
	1,54,000
கழி: வியாபாரத் தொடர் பல்லாத வருமானம்	9,000
	1,45,000

$$\frac{\text{நிகர வியாபார இலாபம்}}{\text{மொத்தச் சொத்துகள்}} = \frac{\text{ரூ. } 1{,}45{,}000}{\text{ரூ. } 4{,}80{,}000} = 0{\cdot}302:1$$

உ. நிலையான சொத்துகள் விற்பனை விகிதம்

$$= \frac{\text{நிகர விற்பனை}}{\text{நிலையான சொத்துகள்}} = \frac{\text{ரூ. } 8{,}50{,}000}{\text{ரூ. } 2{,}30{,}000} = 3{\cdot}7 \text{ மடங்கு}$$

அல்லது

$$\frac{\text{விற்ற பொருளின் அடக்க விலை}}{\text{நிலையான சொத்துகள்}} = \frac{5{,}10{,}000}{2{,}30{,}000} = 2{\cdot}22 \text{ மடங்கு}$$

குறிப்பு: நிலையான சொத்துகள்

கட்டடம்	1,50,000	
இயந்திரங்கள்	80,000	2,30,000

எ. கா. 2: தமிழ்நாடு டிரேடிங் கம்பெனி லிமிடெட்டின் ஏடுகளில் பின்வரும் விவரங்கள் கிடைக்கின்றன:

	ரூ.	
விற்பனை	5,20,000	
கொள்முதல்	3,22,250	
துவக்க இருப்புச் சரக்கு	76,250	
இறுதி இருப்புச் சரக்கு	98,500	
விற்பனைத் திருப்பம்	20,000	
விற்பனைச் செலவுகள்:		
சம்பளம்	15,300	
விளம்பரம்	4,700	
பயணப்படிச் செலவுகள்	2,000	
நிருவாகச் செலவுகள்:		
சம்பளம்	27,000	
வாடகை	2,700	
தபால் செலவு	2,500	
தேய்மானம்	9,300	
இதர செலவுகள்	16,500	
வருமான வரி ஒதுக்கீடு	40,000	
வியாபாரத் தொடர்பில்லா வரவுகள்		
இலாப ஈவு		9,000
முதலீடுகள் விற்பனையில் இலாபம்		3,000
வியாபாரத் தொடர்பில்லாச் செலவுகள்:		
நிலையான சொத்து விற்பனையில் நட்டம்		4,000

1. மேற்கூறிய தொகைகளைப் பகுத்தாராய்வதற்கு ஏற்றவாறு ஓர் அறிக்கையைத் தயாரிக்கவும்.

2. பின்வரும் விகிதங்களைக் கணக்கிடுக.

(அ) மொத்த இலாப விகிதம்.

(ஆ) நடைமுறைச் செலவுகள் விகிதம்.

(இ) சரக்கிருப்பு விற்பனை விகிதம்.

அறிக்கை

	ரூ.	ரூ.	ரூ.
விற்பனை			5,00,000
கழி: விற்றபொருளின் அடக்கவிலை			
துவக்க இருப்புச் சரக்கு	76,250		
(+) கொள் முதல்	3,22,250	3,98,500	
(−) இறுதிச் சரக்கு		98,500	3,00,000
மொத்த இலாபம்			2,00,000
வியாபாரச் செலவுகள்:			
விற்பனைச் செலவுகள்	15,300		
விளம்பரம்	4,700		
பயணப்படிச் செலவு	2,000	22,000	
நிருவாகச் செலவுகள்:			
சம்பளம்	27,000		
வாடகை	2,700		
தபால் செலவு	2,500		
தேய்மானம்	9,300		
இதர செலவுகள்	16,500		
வருமானவரி ஒதுக்கீடு	40,000	98,000	1,20,000
வியாபார இலாபம்			80,000
கூட்டு: வியாபாரத் தொடர்பில்லா வருமானம்			
இலாப ஈவு	9,000		
முதலீடுகள் விற்பனையில் லாபம்	3,000		
		12,000	

கழி:

வியாபாரத் தொடர்பில்லாச் செலவுகள்	4,000	
		8,000
நிகர இலாபம்		ரூ. 88,000

(அ) மொத்த இலாப விகிதம் $= \dfrac{\text{மொத்தஇலாபம்} \times 100}{\text{நிகர விற்பனை}}$

$$= \frac{2,00,000}{5,00,000} \times 100 = 40\%$$

(ஆ) நடைமுறைச் செலவு விகிதம் $= \dfrac{\text{விற்ற பொருளின் அடக்கவிலை} + \text{நடைமுறைச் செலவுகள்}}{\text{நிகரவிற்பனை}}$

$$= \frac{3,00,000 + 1,20,000}{5,00,000} \times 100$$

$$= \frac{4,\ 0,000}{5,00,000} \times 100 = 84\%$$

(இ) சரக்கிருப்பு விற்பனை விகிதம்:

$$\frac{\text{விற்ற பொருளின் அடக்க விலை}}{\text{சராசரி சரக்கு}}$$

சராசரி சரக்கு $= \dfrac{76,250 + 98,500}{2} = \dfrac{1,74,750}{2}$

$$= \text{ரூ. } 87,375$$

சரக்கிருப்பு விற்பனை விகிதம் $= \dfrac{3,00,000}{87,375} = 3{\cdot}45$ மடங்கு

எ.கா. 3: பின்வரும் அறிக்கைகளைப் பகுத்தாராய்வதற்கேற்ப மாற்றியமைத்து, கம்பெனியின் நிதிநிலைமையைப் புரிந்து கொள்வதற்காக ஏதேனும் ஐந்து விகிதங்களைக் கணக்கிடுக:

சொத்துகள்	1964	1965
	ரூ.	ரூ.
ரொக்க இருப்பு	15,380	26,020
கடனாளிகள்	11,260	11,710
சரக்கிருப்பு	56,160	49,460
நிலையான சொத்துகள்	2,17,200	2,19,810
	3,00,000	3,07,000

பொறுப்புகள்.	ரூ.	ரூ.
கடனீந்தோர்	20,000	16,000
செலுத்த வேண்டிய உண்டியல்	12,750	6,500
கடன் பத்திரங்கள்	1,00,000	1,00,000
இலாப, நட்டக் க/கு	67,250	84,500
பங்கு முதல்	1,00,000	1,00,000
	3,40,000	3,07,000

பி.கு. விற்பனை 1964 ரூ. 1,80,000

1965 ரூ. 1,95,000

விடை:

அறிக்கை

	1964	1965
	ரூ.	ரூ.
பங்கு முதல்	1,00,000	1,00,000
இலாப, நட்டக் க/கு	67,250	84,500
பங்குதாரர்களின் நிதி	1,67,250	1,84,500
கூட்டு: கடன் பத்திரங்கள்	1,00,000	1,00,000
	2,67,250	2,84,500

நிலையான சொத்துகள்		2,17,200		2,19,810
கூட்டு: நடைமுறைச் சொத்துகள்	82,800		87,190	
			22,500	64,690
கழி: நடைமுறைப் பொறுப்புகள்	32,750	50,050		
		ரூ. 2,67,250		2,84,500

கம்பெனியின் நிதிநிலையைப் புரிந்துகொள்ள பின்வரும் ஐந்து விகிதங்களைக் கணக்கிடலாம்:

1. நடைமுறை விகிதம்:

	1964	1965
நடைமுறைச் சொத்துகள் / நடைமுறைப் பொறுப்புகள்	82,800 / 37,250	87,190 / 22,500
	= 2.53	= 3·87

2. உரிமையாளர் விகிதம் :

பங்குதாரர்கள் நிதி / மொத்தச் சொத்துகள்	1,67,250 / 3,00,000	1,84,500 / 3,07,000
	= 0·55	= 0·60

3. கடனாளிகள் விற்பனை விகிதம்:

கடனாளிகள் / ஒரு நாள் சராசரி விற்பனை	11,260 / 1,80,000 × 366	11,710×365 / 1,95,000
	= 23 நாள்கள்	= 22 நாள்கள்

4. விற்பனை மொத்த சொத்துகள் விகிதம்

விற்பனை / மொத்த சொத்துகள்	1,80,000 / 2,67,250	1,95,000 / 2,84,500
	= 0·67	= 0·69

5. நிலையான சொத்து, பங்குதாரர்நிதி விகிதம் :

நிலையான சொத்துகள் / பங்குதாரர்களின் நிதி	2,17,250 / 1,67,250	2,19,810 / 1,84,500
	= 1·30	= 1·19

எ.கா. 4. ஆல்பா டிரேடிங் கம்பெனியின் 31-12-67-ல் முடிந்த ஆண்டு இறுதிக்கணக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட விகிதங்களைக் கணக்கிடவும்:

(அ) நடைமுறை முதல் விகிதம்.

(ஆ) கடுஞ்சோதனை விகிதம்.

(இ) உரிமையாளர் விகிதம்.

(ஈ) கடனாளிகள் விற்பனை விகிதம்

இலாப, நட்டக் க/கு

	ரூ.		ரூ.
தொடக்க இருப்புச் சரக்கு	5,000	விற்பனை	2,00,000
கொள்முதல்	1,20,000	இறுதி இருப்பு சரக்கு	7,000
கூலி	50,000		
மொத்த இலாபம்	32,000		
	2,07,000		2,07,000
சம்பளம்	8,000	மொத்த இலாபம்	32,000
தேய்மானம்	1,500		
வாடகை	4,000		
விளம்பரம்	1,200		
கடன்மீதான வட்டி	800		
பொதுச் செலவுகள்	1,400		
நிகர இலாபம்	15,100		
	32,000		32,000

இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்		ரூ.	சொத்துகள்	ரூ.
பங்கு முதல்		50,000	நன்மதிப்பு	5,000
பொதுக்காப்பிருப்பு		10,000	நிலம், கட்டடம்	55,000
இலாப, நட்டக் க/கு			இயந்திரச் சாதனங்கள்	18,500
இருப்பு	5,000		சரக்கிருப்பு	7,000
கூட்டு:			கடனாளிகள்	8,000
இவ்வாண்டு இலாபம்	15,100		வரவுக்குரிய உண்டியல்	2,000
	20,100		ரொக்க இருப்பு	100
கழி:	10,000			
இலாப ஈவு		10,100		
கடன்		16,000		
கடனீந்தோர்		4,000		
செலுத்தவேண்டிய உண்டியல்		2,000		
பாங்கு அதிகப்பற்று		4,000		
		96,100		96,100

1. நடை முறை விகிதம்: $\frac{\text{நடைமுறைச் சொத்துகள்}}{\text{நடைமுறைப் பொறுப்புகள்}}$

நடைமுறைச் சொத்துகள் = சரக்கிருப்பு + கடனாளிகள் + வரவுக்குரிய உண்டியல்கள் + ரொக்க இருப்பு = ரூ. 7,000 + ரூ. 8,000 + ரூ. 2,000 + ரூ. 100 = ரூ. 17,100

நடைமுறைப் பொறுப்புகள் = கடன் + கடனீந்தோர் + செலுத்தவேண்டிய உண்டியல்கள் + பாங்கு அதிகப்பற்று = ரூ. 16,000 + ரூ. 4,000 + ரூ. 2,000 + ரூ. 4,000 = ரூ. 26,000

நடைமுறை விகிதம் $= \frac{17,100}{26,000} = 0 \cdot 65$

2. கடுஞ்சோதனை விகிதம் $= \frac{\text{ரொக்க நிலைச் சொத்துகள்}}{\text{ரொக்கநிலைப் பொறுப்புகள்}}$

ரொக்கச் சொத்துகள் = நடைமுறைச் சொத்துகள் — சரக்கிருப்பு
= ரூ. 17,100 — ரூ. 7,000 = ரூ. 10,100

ரொக்கப் பொறுப்புகள் = நடைமுறைப் பொறுப்புகள் – பாங்க் அதிகப்பற்று = ரூ. 26,000 – ரூ 4,000 = ரூ. 22,000.

$$\text{கடுஞ்சோதனை விகிதம்} = \frac{10,100}{22,000} = 0{\cdot}45$$

3. உரிமையாளர் விகிதம் = $\dfrac{\text{பங்குதாரர்கள் நிதி}}{\text{மொத்த சொத்துகள்}}$

பங்குதாரர்களின் நிதி	ரூ.	
சாதாரணப் பங்கு	50,000	
பொதுக் காப்பிருப்பு	10,000	
இலாப, நட்டக் க/கு	10,000	ரூ. 70,000

குறிப்பு: மொத்த சொத்துகளின் மதிப்பைக் கணக்கிடும் பொழுது நன்மதிப்பை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சிலர் கருதுகின்றனர்.

$$\text{உரிமையாளர் விகிதம்} = \frac{70,100}{91,100} = 0{\cdot}77$$

4. கடனாளிகள் விற்பனை விகிதம் = $\dfrac{\text{கடனாளிகள்}}{\text{நிகர விற்பனை}} \times 365$

$$= \frac{8,000}{2,00,000} \times 365 = 15 \text{ நாள்கள்}$$

எ. கா. 5: பின்வரும் இருப்புநிலைக் குறிப்பு, இலாப, நட்டக் க/கு-விலிருந்து கீழே கேட்கப்பட்டுள்ள விகிதங்களைக் கணக்கிடுக.

1. நடைமுறை முதல் விகிதம்.
2. கடுஞ்சோதனை விகிதம்
3. நடைமுறைச் செலவு விகிதம்.
4. சரக்கிருப்பு விற்பனை விகிதம்.
5. நிலையான சொத்துகள் விற்பனை விகிதம்.
6. பங்குதாரர்கள் நிதி முதலான வருமான விகிதம்.
7. கடனாளிகள் விற்பனை விகிதம்

இருப்புநிலைக் குறிப்பு 1967 மார்ச் 31-ல் உள்ளபடி

	ரூ.		ரூ.
பங்கு முதல்	5,00,000	நிலம், கட்டடம்	5,00,000
பொதுக் காப்பிருப்பு	4,00,000	இயந்திரச் சாதனங்கள்	2,00,000
இலாப, நட்ட க/கு	1,50,000	சரக்கிருப்பு	1,50,000
கடனீந்தோர்	2,00,000	கடனாளிகள்	2,50,000
		பங்கிருப்பு	1,50,000
	12,50,000		12,50,000

இலாப, நட்டக் கணக்கு 1967 மார்ச் 31-ல் முடிவுற்ற ஆண்டுக்கு

	ரூ.		ரூ.
தொடக்கச் சரக்கிருப்பு	2,50,000	விற்பனை	18,00,000
கொள்முதல்	10,50,000	இறுதிச் சரக்கிருப்பு	1,50,000
மொத்த இலாபம்	6,50,000		
	19,50,000		19,50,000
விற்பனைச் செலவு	1,00,000	மொத்த இலாபம்	6,50,000
நிருவாகச் செலவு	2,30,000		
வாடகை	20,000		
நிகர இலாபம்	3,50,000	நிலையான சொத்துகள் விற்பனையில் இலாபம்	50,000
	7,00,000		7,00,000

விடை:

நிதிநிலை அறிக்கை

	ரூ.	ரூ.
நிலையான சொத்துகள்		
நிலம், கட்டடம்	5,00,000	
இயந்திரச் சாதனங்கள்	2,00,000	
		7,00,000

நடைமுறைச் சொத்துகள்			
சரக்கிருப்பு	1,50,000		
கடனாளிகள்	2,50,000		
பாங்கிருப்பு	1,50,000		
	5,55,000		
கழி: நடைமுறைப் பொறுப்புகள்		2,00,000	3,50,000
			10,50,000
பொறுப்புகள்			
பங்கு முதல்		5,00,000	
பொதுக் காப்பிருப்பு		4,00,000	
இலாப, நட்டக் க/கு		1,50,000	10,50,000
∴ பங்குதார்ரர்களின் நிதி			10,50,000

இலாப, நட்டக் க/கு 31—1—1967

	ரூ.	ரூ.
விற்பனை	18,00,000	
கழி: விற்ற பொருளின் அடக்கவிலை	11,50,000	6,50,000
கழி: நடைமுறைச் செலவுகள் விற்பனைச் செலவுகள்	1,00,000	
நிருவாகச் செலவு	2,30,000	
வாடகை	20,000	3,50,000
வியாபார இலாபம்		3,00,000
கூட்டு: நிலையான சொத்து விற்பனையில் இலாபம்		50,000
நிகர இலாபம்		3,50,000

1. **நடைமுறை முதல் விகிதம் :** $\frac{\text{நடைமுறைச் சொத்துகள்}}{\text{நடைமுறைப் பொறுப்புகள்}}$

$$= \frac{\text{ரூ. } 5,50,000}{\text{ரூ. } 2,00,000} = 2{\cdot}75 : 1$$

2. **கடுஞ்சோதனை விகிதம் :** $\frac{\text{ரொக்கச் சொத்துகள்}}{\text{ரொக்கப் பொறுப்புகள்}}$

$$\frac{\text{ரூ. } 4,00,000}{\text{ரூ. } 2,00,000} = 2 : 1$$

3. நடைமுறைச் செலவு விகிதம்

$$\frac{\text{விற்ற பொருள்களின் அடக்கவிலை + நடைமுறைச் செலவுகள்}}{\text{நிகர விற்பனை}}$$

$$= \frac{\text{ரூ. } 11,50,000 + \text{ரூ. } 3,50,000}{\text{ரூ. } 18,00,000} = 0\cdot83 : 1$$

4. சரக்கிருப்பு விற்பனை விகிதம் : $\frac{\text{விற்ற பொருளின் அடக்கவிலை}}{\text{சராசரி சரக்கிருப்பு}}$

$$= \frac{\text{ரூ. } 11,50,000}{\text{ரூ. } 2,00,000} = 5\cdot75 \text{ மடங்கு}$$

5. நிலையான சொத்துகள் விற்பனை விகிதம்

$$= \frac{\text{விற்ற பொருளின் அடக்கவிலை}}{\text{நிலையான சொத்துகள்}}$$

$$= \frac{\text{ரூ. } 11,50,000}{\text{ரூ. } 7,00,000} = 1\cdot65 : 1$$

6. பங்குதாரர்கள் நிதிமீதான வருமான விகிதம்

$$= \frac{\text{நிகர இலாபம்}}{\text{பங்குதாரர்களின் நிதி}} = \frac{\text{ரூ. } 3,00,000}{\text{ரூ. } 10,50,000} \times 100 = 28\cdot5\%$$

7. கடனாளிகள் விற்பனை விகிதம் : $\frac{\text{கடனாளிகள்}}{\text{ஒரு நாள் சராசரி விற்பனை}}$

$$= \frac{\text{ரூ. } 2,50,000}{\text{ரூ. } 18,00,000} \times 365 = 51 \text{ நாள்கள்}$$

எ. கா. 6: கீழ்க்கண்ட செய்திகளின் அடிப்படையில் முடிந்த அளவு விவரமாக ஓர் இருப்புநிலைக் குறிப்புத் தயாரிக்கவும்.

(அ)	நடைமுறை முதல் விகிதம்	2·5
(ஆ)	கடுஞ்சோதனை விகிதம்	1·5
(இ)	நிலையான சொத்து, பங்குதாரர் விகிதம்	0·75
(ஈ)	நடைமுறை முதல்	ரூ. 60,000
(உ)	இலாப மிகுதி, பொதுக்காப்பிருப்பு	40,000
(ஊ)	பாங்கு அதிகப்பற்று	20,000

விடை: 1. நடைமுறைச் சொத்துகளையும், நடைமுறைப் பொறுப்பு களையும் கணக்கிடல்

நடைமுறைச் சொத்துகள் – நடைமுறைப் பொறுப்புக்கள் = நடைமுறை முதல்

2·5 – 1 = ரூ. 60,000

1·5 = ரூ. 60,000

∴ 1 = ரூ. 40,000

ஆக, நடைமுறைப் பொறுப்புகள் ரூ. 40,000

நடைமுறைச் சொத்துகள் = நடைமுறை முதல் + நடைமுறைப் பொறுப்பு

= 60,000 + 40,000

= ரூ. 1,00,000

பாங்கு அதிகப்பற்று ரூ. 10,000 என்று கொடுத்திருப்பதால் மொத்த நடைமுறைப் பொறுப்புகளிலிருந்து ரூ. 10,000-ஐக் கழித்து விட்டால் எஞ்சிய தொகைக்கு ரூ. 30,000 கடனீந்தோர் மற்றும் இதர பொறுப்புகளைக் குறிக்கும்.

2. சரக்கிருப்பைக் கணக்கிடல்:

$$\text{கடுஞ்சோதனை விகிதம்} = \frac{\text{ரொக்கநிலைச் சொத்துகள்}}{\text{ரொக்கநிலைப் பொறுப்புகள்}}$$

ரொக்கநிலைப் பொறுப்புகள்

= நடைமுறைப் பொறுப்புகள் – பாங்கு அதிகப்பற்று

= 40,000 – 10,000 = 30,000

கடுஞ்சோதனை விகிதம்:

$$1 \cdot 5 = \frac{\text{ரொக்கநிலைச் சொத்துகள்}}{\text{ரூ. } 30,000 \text{ (ரொக்கநிலைப் பொறுப்புகள்)}}$$

அதாவது 1·5 × 30,000 = ரொக்கநிலைச் சொத்துகள்

= 1·5 × 30,000 = ரூ. 45,000

சரக்கிருப்பு = நடைமுறைச் சொத்துகள் – ரொக்கநிலைச் சொத்துகள்

= 1,00,000 – 45,000

= ரூ. 55,000

3. பங்குதாரர்கள் நிதியைக் கணக்கிடல்:

பங்குதாரர்களின் நிதி ரூ. 1 என்று கொள்

நிலையான சொத்துகள் = ரூ. 0·75

பங்குதாரர்கள் நிதி — நிலையான சொத்துகள்

= நடைமுறை முதல்

= $1 - \frac{3}{4}$ = ரூ. 60,000

= $\frac{1}{4}$ = ரூ. 60,000

∴ பங்குதாரர்கள் நிதி = ரூ. 60,000 × 4 = ரூ. 2,40,000

பங்குதாரர்களின் மொத்த நிதி = ரூ. 2,40,000

இந்தக் கணக்கில் பங்குதாரர்களின் நிதி

= பங்கு முதல் + காப்பிருப்பு

∴ பங்குதாரர் நிதி — காப்பிருப்பு = பங்கு முதல்

பங்கு முதல் = ரூ. 2,40,000 — ரூ. 40,000 = ரூ. 2,00,000

4. நிலையான சொத்தைக் கணக்கிடல்:

நிலையான சொத்து = 0·75 × பங்குதாரர் நிதி

= ரூ. 2,40,000 × 0·75

= ரூ. 1,80,000

ஆக, நிலையான சொத்துகள் = ரூ. 1,80,000

இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
பங்குமுதல்	2,00,000	நிலையான சொத்துகள்	1,80,000
பொதுக்காப்பிருப்பு	40,000	சரக்கிருப்பு	55,000
பங்கு அதிகப்பற்று	10,000	ரொக்க நிலைச் சொத்துகள்	45,000
கடனீந்தோர்	30,000		
	2,80,000		2,80,000

எடுத்துக்காட்டு: 7:

பின்வரும் செய்திகளிலிருந்து முடிந்த அளவு விவரங்களுடன் ஓர் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

1. நடைமுறை முதல் விகிதம் 1·75
2. கடுஞ்சோதனை விகிதம் 1·25
3. சரக்கிருப்பு விற்பனை விகிதம் 9

4.	சராசரி வசூல் காலம்	$1\frac{1}{2}$ மாதம்
5.	மொத்த இலாப விகிதம்	25%
6.	பொதுக்காப்பிருப்பு, பங்குமுதல் விகிதம்	0·2
7.	நிலையான சொத்து, விற்பனை விகிதம்	1·2
8.	பங்குமுதல், பிறமுதல் விகிதம்	0·6
9.	நிலையான சொத்து, பங்குதாரர் நிதி விகிதம்	1·25
10.	விற்பனை	ரூ. 12,00,000

இருப்பு நிலைக் குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
பங்கு முதல்	5,00,000	நிலையான சொத்துகள்	7,50,000
காப்பிருப்பு	1,00,000	சரக்கிருப்பு	1,00,000
நெடுங்காலக் கடன்	3,00,000	கடனாளிகள்	1,50,000
நடைமுறைப் பொறுப்புகள்	2,00,000	பாங்கிருப்பு	1,00,000
	11,00,000		11,00,000

விளக்கம்:

1. விற்ற பொருளின் அடக்கவிலை:

விற்பனை	ரூ.	12,00,000
கழி: மொத்த இலாபம்	ரூ.	3,00,000
விற்பனையில் 25%	ரூ.	9,00,000

2. சரக்கிருப்பு:

சரக்கிருப்பு விற்பனை விகிதம் = 9

விற்ற பொருளின் அடக்கவிலை $= \frac{9,00,000}{9}$

= ரூ. 1,00,000

3. நிலையான சொத்துகள்:

நிலையான சொத்து விற்பனை விகிதம் 1·2

விற்ற பொருளின் அடக்கவிலை = ரூ. 9,00,000

$$\text{நிலையான சொத்துகள்} = \frac{9,00,000 \times 10}{12} = \text{ரூ. } 7,50,000$$

4. கடனாளிகள்:

கடனாளிகள் சராசரி வசூல் காலம் $1\frac{1}{2}$ மாதம்

$$\text{விற்பனை} = \frac{3/2}{2} = \frac{12,00,000 \times 3}{2 \times 12} = \text{ரூ. } 1,50,000$$

5. நடைமுறைச் சொத்துகள்

ரொக்கநிலைச் சொத்துகள்	1·25
நடைமுறைச் சொத்துகள்	1·75
சரக்கிருப்பு	0·50

நடைமுறைச் சொத்துகள் =

$$\text{சரக்கிருப்பு} \times \frac{175}{50} = 1,00,000 \times \frac{175}{50}$$

$$= \text{ரூ. } 3,50,000$$

6. ரொக்கநிலைச் சொத்துகள்: (கடனாளிகள் + ரொக்கம்)

ரொக்கநிலைச் சொத்துகள் = நடைமுறைச் சொத்துகள் − சரக்கிருப்பு

= ரூ. 3,50,000 − 1,00,000

= ரூ. 2,50,000

7. ரொக்கம்: = ரொக்க நிலைச் சொத்துகள் − கடனாளிகள்

= ரூ. 2,50,000 − ரூ. 1,50,000 = ரூ. 1,00,000

8. நடைமுறைப் பொறுப்புகள்.

நடைமுறைச் சொத்துகள். ரூ. 1·75

நடைமுறைப் பொறுப்புகள் =

$$\text{நடைமுறைச் சொத்துகள்} \times \frac{100}{175} = \text{ரூ. } 3,50,000 \times \frac{100}{175}$$

$$= \text{ரூ. } 2,00,000$$

9. பங்குதாரர்கள் நிதி:

நிலையான சொத்துக்கள், பங்குதாரர் நிதி விகிதம் 1·25

பங்குதாரர் நிதி =

$$\text{நிலையான சொத்துகள்} \times \frac{100}{125} = 7,50,000 \times \frac{100}{125}$$

= ரூ. 6,00,000

10. பொதுக்காப்பிருப்பு:

பொதுக்காப்பிருப்பு, பங்குமுதல் விகிதம் 0·2

பங்குதாரர்கள் நிதி = பங்குமுதல் + பொதுக்காப்பிருப்பு

பொதுக்காப்பு 2 ஆனால் பங்குதாரர்கள் நிதி = 12

$$\text{பங்குதாரர்கள் நிதி} \times \frac{2}{12} = \frac{6,00,000 \times 2}{12}$$

= ரூ. 1,00,000

11. பங்குமுதல்:

பங்குதாரர்களின் நிதி – பொதுக் காப்பிருப்பு

= ரூ. 6,00,000 – ரூ. 1,00,000 = ரூ. 5,00,000

2. நீண்ட காலக் கடன்:

பங்குமுதல், பிறமுதல் விகிதம் = 0·6

$$\text{பங்குமுதல்} \ \frac{6}{10} = 5,00,000 \times \frac{6}{10} = \text{ரூ.} \ 3,00,000$$

பயிற்சி

பயிற்சி. 1. ஒரு கம்பெனியின் க/குப் புத்தகங்களிலிருந்து பின்வரும் செய்திகள் அளிக்கப்படுகின்றன:

	1970	1971
	ரூ.	ரூ.
சரக்கிருப்பு	10,000	20,000
கடனாளிகள்	30,000	30,000
முன் செலுத்திய செலவுகள்	2,000	—
ரொக்க இருப்பு	20,000	15,000
	62,000	65,000

கடனீந்தோர்	25,000	30,000
செலுத்த வேண்டிய உண்டியல்கள்	15,000	12,000
பாங்கு அதிகப் பற்று	—	5,000
	40,000	47,000
விற்பனை	3,50,000	3,00,000

கம்பெனியின் நிதி நிலையைப்பற்றி ஒரு குறிப்பு வரைக. விகிதங்களைப் பயன்படுத்தவும்.

பயிற்சி. 2. கடனாளிகள் சுழற்சி 3 மாதங்கள்

கடனீந்தோர் சுழற்சி	2 மாதங்கள்
சரக்கிருப்பு விற்பனை விகிதம்	8 மடங்கு
பங்குமுதல், நிகர விற்பனை விகிதம்	2·5 மடங்கு
நிலையான சொத்து, நிகர விற்பனை	8 மடங்கு
மொத்த இலாப விகிதம்	25% (விற்பனைமீது)

ஓர் ஆண்டின் மொத்த இலாபம் ரூ. 80,000 ஆக இருக்கிறது. வேறு எந்த நெடுங்காலக் கடன்களோ, பாங்கு அதிகப்பற்றோ கிடையாது. பொதுக் காப்பிருப்பு ரூ. 28,000 ரொக்கநிலைச் சொத்துகள் ரூ. 97,333. ஆண்டின் இறுதிச்சரக்குத் தொடக்கச் சரக்கைவிட ரூ. 2,000 அதிகமாக இருந்தது. செலுத்த வேண்டிய உண்டியல்கள் ரூ. 2,000. வரவுடைய உண்டியல்கள் ரூ. 5,000.

கண்டு பிடிக்கவும். (அ) விற்பனை (ஆ) கடனாளிகள் (இ) கடனீந்தோர் (ஈ) இறுதிச்சரக்கு (உ) நிலையான சொத்துகள் (ஊ) பங்குதாரர்கள் நிதி.

முடிந்த அளவு விவரத்துடன் ஓர் இருப்புநிலைக் குறிப்புத் தயாரிக்கவும்.

பயிற்சி 3: பின் அளிக்கப்பட்ட செய்திகளிலிருந்து பங்குதாரர்கள் நிதிபற்றி அறிக்கையைப் போதிய அளவு விவரங்களுடன் தயாரிக்கவும்.

1.	சரக்கிருப்பு விற்பனை விகிதம்	= 6
2.	பங்குமுதல், விற்பனை விகிதம்	= 2
3.	நிலையான சொத்து விற்பனை விகிதம்	= 4
4.	மொத்த இலாபம் விகிதம்	= 20%
5.	கடனாளிகள் சுழற்சி	= 2 மாதங்கள்
6.	கடனீந்தோர் ,,	= 73 நாள்கள்

மொத்த இலாபம் ரூ. 60,000

காப்பிருப்பு ரூ. 20,000

ஆண்டு இறுதிச் சரக்கு, தொடக்கச் சரக்கைவிட ரூ. 5,000 அதிகமாயுள்ளது.

பயிற்சி 4: பின்வரும் விவரங்கள் ஒரு கம்பெனியின் கணக்குக் குறிப்புப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன:

	ரூ.
ரொக்கம்	48,600
நிலம், கட்டடம்	8,00,000
முன் செலுத்திய செலவுகள்	62,000
சரக்கிருப்பு	3,72,800
கடனீந்தோர்	4,05,750
பொதுக்காப்பிருப்பு	1,00,000
கடனாளிகள்	5,23,000
வரவுடைய உண்டியல்கள்	22,600
இயந்திரச் சாதனங்கள்	5,44,000
கடன் பத்திரங்கள்	2,50,000
பாங்கு அதிகப் பற்று	52,000
சாதாரணப் பங்குமுதல்	10,00,000
இலாப நட்டக் க/கு	2,17,000
1968 ஆம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட இலாப ஈவு	86,250
முதலீடுகள்	20,000
வருமானவரி ஒதுக்கீடு	1,24,000

இலாப ஈவு சமன்பாட்டு நிதி	1,40,000
செலுத்த வேண்டிய உண்டியல்கள்	18,000
விற்பனை	21,82,400
இவ்வாண்டு இலாபம்	3,27,830

மேற்கூறிய செய்திகளை நிதிநிலையைப் பகுத்தாராய்வதற்கு ஏற்ற வண்ணம் மாற்றியமைத்துப் பின்வரும் விகிதங்களைக் கணக்கிடுக:

1. சரக்கிருப்பு; நிலையான சொத்து.
2. நடைமுறைச் சொத்துகள்: நடைமுறைப் பொறுப்புகள்.
3. விற்பனை: கடனாளிகள் + வரவுடைய உண்டியல்.

பயிற்சி 5: சுந்தரம் அண்டு கம்பெனி கடனுக்கும் ரொக்கத்திற்கும் சரக்குகளை விற்கிறது. பின்வரும் செய்திகளிலிருந்து சராசரி, வசூல் காலத்தைக் கணக்கிடுக:

	ரூ.
மொத்த வியாபாரம்	1,00,000
ரொக்க விற்பனை (மொத்த விற்பனையில் சேர்ந்தது)	20,000
விற்பனைத் திருப்பம்	7,000
கடனாளிகள் 31—12—1968	9,000
வரவுடைய உண்டியல் 31—12—1968	2,000
ஐயக்கடன் காப்பு 31—12—1968	1,000
கடனீந்தோர் 31—12—1968	10,000

பயிற்சி 6: ஏ, பி, சி, லிமிடெட்டின் 31—12—73-ல் எடுக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பு:

பொறுப்புகள்

	ரூ.
10,000 சாதாரணப் பங்குகள்	10,00,000
2,000, 7% சலுகைப் பங்குகள்	2,00,000
பொதுக் காப்பிருப்பு	2,00,000
இலாப, நட்டக் க/கு	1,20,000
6% கடன் பத்திரங்கள்	8,00,000
கடனீந்தோர்	2,00,000
	25,20,000

சொத்துகள்

நிலம், கட்டடம்	6,00,000
இயந்திரச் சாதனங்கள்	8,00,000
மனைத்துணைப் பொருள்கள்	2,00,000
முதலீடுகள்	2,00,000
சரக்கிருப்பு	3,00,000
ஏட்டுக் கடன்கள்	2,00,000
பாங்கிருப்பு	1,00,000
வரவுடைய உண்டியல்கள்	1,00,000
தொடக்கச் செலவுகள்	20,000
	25,20,000

இக் கம்பெனியின் நெடுங்கால உறுதிநிலைத் தன்மையை ஆராய்க.

8. நிதி நடமாட்ட அறிக்கை

(Fund Flow Statement)

நிதி நடமாட்ட அறிக்கையின் தேவையை உணர்வதற்கு இருப்பு நிலைக் குறிப்பு, இலாப நட்டக் கணக்கு இவைகளின் குறைபாடுகளைக் காண்போம். 1956, கம்பெனிச் சட்டம் இருப்புநிலைக் குறிப்பில் ஒவ்வொரு உருப்படிக்கும் சென்ற ஆண்டின் தொகை பற்றிய விவரமும் அளிக்க வேண்டும் என்று கூறுகிறது அவ்வாறு இரண்டு தொகைகளையும் ஆராய்ந்து கருத்துக் கொள்ள உதவும் வகையில் இருப்புநிலைக் குறிப்பில் விவரங்கள் அடங்கியுள்ளன. இருப்புநிலைக் குறிப்பு ஒரு குறிப்பிட்ட நாளன்று உள்ள நிதி நிலையைப்பற்றி குறிப்பிடுகிறது. ஓர் ஆண்டின் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட பெரிய நிதி நடவடிக்கைகளைப்பற்றி எந்தவிதத் தகவலும் அளிப்ப தில்லை. எ. கா. ஓர் ஆண்டில் ரூ. 5,00,000 கடன் வாங்கி அக் கடனை அந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே அடைத்து விட்டால், அக் கடனைப் பற்றி இருப்புநிலைக் குறிப்பில் எவ்விதத் தகவலும் இருக்காது. ஆனால் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு இச் செய்தியை அறிவிப்பது மிகவும் தேவையானதாகும். இதுபோன்ற பல குறைபாடுகளை இருப்பு நிலைக் குறிப்பைப்பற்றிக் கூறலாம். நிதிநடமாட்ட அறிக்கை என்பது இக் குறைபாடுகளை நீக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

நிதிநிலை அறிக்கையென்பது யாதெனில் ''இரு காலங்களின் இடைப்பட்ட நேரத்தில் வியாபாரத்தில் ஏற்படும் அனைத்து நிதி நடமாட்டத்தைப்பற்றிக் கம்பெனியின் பங்குதாரர்களுக்கும், மேலாண்மைக்கும் உதவும் வகையில் தயாரிக்கப்படும் ஓர் அட்டவணை யாகும்.'' இந்தியாவில் கம்பெனி சட்டப்படி இந்த அறிக்கையைத் தயாரித்தளிக்க வேண்டிய கட்டாயம் இல்லாவிடினும், இக் காலங் களில் பொதுவாக இவ்வறிக்கையை இறுதிக் கணக்குகளுடன் சேர்த்து வெளியிடுகிறார்கள்.

நிதி நடமாட்ட அறிக்கையைப்பற்றிப் பலவாறு கூறுகின்றனர். அவையாவன:-

1. 'எங்குக் கிடைத்தது? எங்குச் சென்றது'? (where got where gone statement)

2. நிதி மூலப்பயன்பாட்டு அறிக்கை (Sources and Application of Funds Statement)

இப்பொழுது நிதி நடமாட்ட அறிக்கை எவ்வாறு பண்டைக்கால நிதிநிலை அறிக்கைகளுக்கு இணை நிறைவாக விளங்குகிறது என்பது பற்றிக் காண்போம்:-

1. நிதிநிலை அறிக்கைகளில் செய்திகள் முழுமையாகத் தரப் படுவதில்லை. ஆனால், நிதி நடமாட்ட அறிக்கையில் அளிக்கப்படும் கூடுதல் செய்திகள் மேலாண்மைக்குப் பயனளிக்கின்றன.

2. இலாப,நட்டக் கணக்கு, வியாபாரத்தின் நிகர இலாபத்தைக் காட்டுகிறது. ஆனால், நிதி நடமாட்ட அறிக்கை வியாபாரத்தில் எவ்வாறு நிதி (Fund) உருவாக்கப்பட்டுப் பல வழிகளிலும் செல வழிக்கப்படுகிறது என்று எடுத்துரைக்கின்றது.

3. இருப்புநிலைக்குறிப்பு ஒரு காலத்தின் முடிவிலுள்ள நிதி நிலையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆனால், நிதி நடமாட்ட அறிக்கை இரண்டு இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் நிதிநடமாட்ட நிலையைப் பற்றிச் செய்தியளிக்கிறது. இவ்வகையில் இருப்புநிலைக் குறிப்பிற்கு ஒரு தொடர்புச் சங்கிலி போன்று அமைந்துள்ளது.

4. இவ்வறிக்கை மேலாண்மைக் கொள்கைகள் எவ்வாறு செயற் படுத்தப்பட்டன என்று கூறுகிறது. இவ்வகைகளில் இவ்வறிக்கை நிதிநிலை அறிக்கைகளுடன் (Financial Statements) ஒருங்கிணைந்து செயற்படுகிறது. எக்காரணங் கொண்டும் நிதிநிலை அறிக்கைகள் தேவையற்றன என்று எண்ணுவது மிகத் தவறாகும்.

நிதியும் அதன் பொருளும்: (Fund-its meaning)

நிதி என்ற சொல்லிற்கு இன்னும் ஒருமித்தக் கருத்துக் கொடுக்கப் படவில்லை. எனினும், இதைப் பற்றி நிலவும் சிறப்பான இரண்டு வகையான கருத்துகள் பின்வருவனவாம்:

1. **கற்பனை ரொக்கக் கொள்கை : (National Cash Concept)** நிதி என்பது ரொக்கத்தையே குறிக்கும். இவ்வாறு கூறுவதில் நிதி நடமாட்ட அறிக்கைக்கும், ரொக்க-வரவு செலவு பட்டியலுக்கும் எந்த வேறுபாடும் இல்லையென்று தோன்றுகிறது. இதற்குக் கற்பனை ரொக்கக் கொள்கை (National Cash Concept) என்று பெயர்.

(அ) இக் கருத்துப்படி வியாபாரத்தில் எந்தப் பொறுப்பு (Liability) ஏற்பட்டாலும் நிதி உருவாக்கப்படுகிறது. நெடுங்காலப் பொறுப்புகளும், குறுகிய காலப் பொறுப்புகளும் நிதிக்கு மூலமாக அமைந்துள்ளன. பொதுவாக ஒரு பொறுப்பு மேற்கொண்டால்

ரொக்கம் வருகிறது. இவ்வாறு ரொக்கம் வருவது உண்மையான தாகவோ கற்பனையாகவோ இருக்கலாம். நெடுங்காலப் பொறுப்பு களால் ரொக்கம் உண்மையாகக் கிடைக்கிறது. எ. கா. கம்பெனி கடன் பத்திரங்களை (debentures) வெளியிடுதல். இதில் கம்பெனிக்கு உண்மையாகவே ரொக்கம் கிடைக்கின்றது. ஆனால், குறுகிய கால, பொறுப்புகளால் கம்பெனிக்குக் கிடைக்கும் ரொக்கம் கற்பனை யானதாகும். எ. கா. ரூ. 5,000 கச்சாப்பொருள்கள் கடனாக வாங்கப்பட்டன. இதில் கம்பெனிக்கு உண்மையாக ரொக்கம் வாராவிடினும், கம்பெனியால் ரொக்கமில்லாமலேயே சரக்குகள் வாங்க முடிகின்றது. நமக்குக் கடனாகப் பொருள்கள் அளிக்கும் நபர் நமக்கு ரூ. 5,000 கடனாகத் தந்திருந்தால் நமக்கு ரூ. 5,000 ரொக்கம் கிடைக்கின்றது. அவ்வாறு கற்பனை செய்து பார்த்தால்தான் ரொக்கம் கிடைப்பது புலனாகிறது. சொத்துகளை விற்றாலும் கம்பெனிக்கு நிதி கிடைக்கிறது. ரொக்கம் கிடைப்பது உண்மை யாகவோ கற்பனையாகவோ இருக்கலாம். ஆக, இந்தக் கொள்கைப்படி சொத்துகள் விற்றாலும், பொறுப்புகள் கூடினாலும் நிதி உருவாக்கப் படுகிறது.

(ஆ) இக் கொள்கைப்படி எல்லாச் சொத்துகள் வாங்குவதும், எல்லாப் பொறுப்புகள் நிறைவு செய்தலும் தெளிவாக எழுதப் படுகிறது.

(இ) இக்கற்பனை ரொக்கக் கொள்கையின் நடைமுறைச் சொத்து களைக் (Current Assets) கடனாக வாங்கும்பொழுது ஒரே காலத்தில் நடைமுறைச் சொத்தும், நடைமுறைப் பொறுப்பும் கூடுகிறது. இதனால் நிதி ஒரே காலத்தில் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப் படுகிறது. நடைமுறைச் சொத்தைக் கடனுக்கு விற்கும் பொழுதும் ஒரே காலத்தில் நிதி உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது.

(ஈ) ஒரு காலத்தில் ஏற்படும் இலாபம் நிதிக்கு மூலமாக இருக்கிறது.

2. நடைமுறைமுதல் கொள்கை: (Working Capital Concept) இக் கொள்கை பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தத்துவமாகும். நடைமுறை முதல் என்பது யாது? நடைமுறைச் சொத்திற்கும், நடைமுறைப் பொறுப்பிற்கும் உள்ள வேறுபாடு. அதாவது, நடைமுறை சொத்து — நடைமுறைப் பொறுப்பு = நடை முறை முதல். இக் கொள்கைப்படி நடைமுறைமுதல் கூடினால் மட்டும் நிதி உண்டாகிறது என்று கொள்கிறோம். ஆகவே, நடை முறைச் சொத்தும், நடைமுறைப் பொறுப்பும் ஒரே அளவு கூடினால் நிதி நிலைமையில் ஒருவித மாற்றமும் ஏற்படாது. நடைமுறை முதலை நிகர நடைமுறைச் சொத்துகள் (Current Assets) என்றும் கூறலாம். ஆக, வியாபாரத்தில் நிதி கூடுகிறது என்றால் நிகர நடைமுறைச்

சொத்துகள் கூடுகின்றன என்று பொருள். எந்த நடவடிக்கைகளிலும் நிகர நடைமுறைச் சொத்தில் மாறுதல் ஏற்பட்டாலன்றி நிதிநிலையில் (Fund position) எந்த மாறுதலும் ஏற்படுவதில்லையென்பது உண்மையாகும்.

எ.கா:

செலுத்த வேண்டிய உண்டியலுக்காக (Bills payable) ரூ. 5,000 ரொக்கம் செலுத்தப்பட்டது.

	பற்று ரூ.	வரவு ரூ.
செலுத்த வேண்டிய உண்டியல் க/கு 'ப'	5,000	
ரொக்க க/கு		5,000

மேற்குறிப்பிட்ட குறிப்பேட்டுப் பதிவில் செலுத்த வேண்டிய உண்டியல் கணக்கில் ரூ. 5,000 பற்றெழுதப்படுகிறது. இஃது ஒரு நடைமுறைப் பொறுப்பு. ரொக்கக் கணக்கு ரூ. 5,000 வரவெழுதப் படுகிறது. இரு ஒரு நடைமுறைச் சொத்து. இந்த நடவடிக்கையால் ஏற்பட்ட குறிப்புப் பதிவில் நிகர நடைமுறைச் சொத்து, கூடவோ குறையவோ இல்லை. ஏனெனில், நடைமுறைப் பொறுப்பு, நடைமுறைச் சொத்து இரண்டும் ரூ. 5,000 குறைகிறது. இதனால், ஏற்படும் மாற்றம் ஒன்றுமில்லை. எனவே, நிதிநிலையிலும் மாறுதலில்லை. ஆக நிதி நடமாட்டத்தைச் சில நடவடிக்கைகளே பாதிக்கின்றன. அவைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்:

நிதியைப் பாதிக்கா நடவடிக்கைகள்	நிதியைப் பாதிக்கும் நடவடிக்கைகள்
1. நடைமுறைச் சொத்தும், நடைமுறைப் பொறுப்புகளும்	1. நடைமுறைச் சொத்தும், நிலையான சொத்தும்
2. நிலையான சொத்துகளும் நிலையான பொறுப்புகளும்	2. நடைமுறைச் சொத்தும், மூலதனமும்.
3. நிலையான சொத்துகளும், மூலதனமும்	3. நடைமுறைச் சொத்தும், நிலையான பொறுப்புகளும்.
	4. நடைமுறைப் பொறுப்புகளும், நிலையான பொறுப்புகளும்.
	5. நடைமுறைப் பொறுப்புகளும், மூலதனமும்.
	6. நடைமுறைப் பொறுப்புகளும் நிலையான சொத்துகளும்.

எந்த ஒரு நடவடிக்கையாலும் நிதி பாதிக்கப்படுவதையறிய குறிப்பேட்டுப் பதிவை நோக்கவேண்டும். அப் பதிவில் நிகர நடைமுறைச் சொத்து கூடுதல் ஏற்பட்டாலோ குறைந்தாலோ அந்த நடவடிக்கை நிதியைப் பாதிக்கிறது என்று கொள்ளலாம். பின்வரும் அட்டவணை நிதி நடமாட்டத்தைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் வண்ணம் வரையப்பட்டுள்ளது:

நடவடிக்கை	குறிப்பேட்டுப் பதிவு			நிதி கூடுதல் அல்லது குறைதல்
1. வரவுடைய உண்டியலில் பணம் பெறப்பட்டது.	ரொக்கக் வரவு உண்டியல்	க/கு ,,	ப.	நிதி பாதிப்பதில்லை—பற்று, வரவு நிகர நடைமுறைச் சொத்தில் மாறுதலில்லை.
2. கடனாளிகளிடமிருந்து ரொக்கம் வந்தது.	ரொக்கக் கடனாளிகள்	க/கு ,,	ப.	நிதி பாதிப்பதில்லை—நிகர நடைமுறைச் சொத்தில் மாறுதலில்லை.
3. கடனீந்தோருக்கு ரொக்கம் கொடுக்கப்படுகிறது.	கடனீந்தோர் ரொக்கக்	க/கு ,,	ப.	நிதி பாதிப்பதில்லை — நடைமுறைச் சொத்தும், பொறுப்பும் ஒரே அளவு கூடி குறைகிறது.
4. செலுத்தவேண்டிய உண்டியல் மீட்கப்பட்டது.	செலுத்துக் உண்டியல் ரொக்கக்	க/கு ,,	ப.	நிதி பாதிப்பதில்லை—நிகர நடைமுறைச் சொத்தில் மாறுதலில்லை.
5. கட்டடம் வாங்கப்பட்டது	கட்டடக் ரொக்கக்	க/கு ,,	ப.	நிதி குறைகிறது—நிகர நடைமுறைச் சொத்து குறைகிறது.
6. பங்குகள் அளித்துக் கட்டடம் வாங்கப்பட்டது.	கட்டடக் பங்குக்	க/கு ,,	ப.	நிதி பாதிக்கப்படுவதில்லை—நடைமுறைச் சொத்தோ, பொறுப்போ பாதிக்கப்படுவதில்லை.
7. ரியல் எஸ்டேட் அன் கோ-விடமிருந்து கட்டடம் வாங்கப்பட்டது.	கட்டடக் ரியல் எஸ்டேட் அன் கோ	க/கு ,,	ப.	நிதி குறைகிறது—நடைமுறைச் சொத்துக் கூடுகிறது-ஆக நிகர நடைமுறைச் சொத்து குறைகிறது.
8. பங்குகள் வெளியிடப் படுகின்றன.	ரொக்கக் பங்குக்	க/கு ,,	ப.	நிதி கூடுகிறது—நடைமுறைச் சொத்து கூடுகிறது.

[அடுத்த பக்கம் பார்க்க

நடவடிக்கை	குறிப்பேட்டுப் பதிவு			நிதி கூடுதல் அல்லது குறைதல்
9. நிலையான சொத்துகள் வாங்குவதற்காகப் பங்குகள் அளிக்கப்படுகின்றன	நிலையான சொத்துக் பங்குக்	க/கு ,,	ப.	நிதி கூடுகிறது—நடைமுறைச் சொத்து கூடுகிறது.
10. நடைமுறைச் சொத்துகள் வாங்குவதற்காகப் பங்குகள் அளிக்கப்படுகின்றன	நடைமுறைச் சொத்துக் பங்குக்	க/கு ,,	ப.	நிதி கூடுகிறது—நடைமுறைப் பொறுப்பில் மாறுதலேதுமின்றி நடைமுறைச் சொத்து கூடுகிறது.
11. மனைத்துணைப் பொருள்கள் கடனில் வாங்கப்பட்டன	மனைத்துணைப் பொருள் கடனீந்தோர்	க/கு ,,	ப.	நிதி குறைகிறது—நடைமுறைச் சொத்தில் மாறுதலின்றி நடைமுறைப் பொறுப்பு மட்டும் கூடுகிறது.
12. கடன்பத்திரங்கள் மீட்கப்படுகின்றன.	கடன்பத்திரங்கள் ரொக்கக்	க/கு ,,	ப.	நிதி குறைகிறது—நடைமுறைச் சொத்து மட்டும் குறைகிறது.
13. மேனூதியப் பங்குகள் (Bonus shares) அளிக்கப்படுகின்றன	மேனூதியக் பங்குக்	க/கு ,,	ப.	நிதி மாறுவதில்லை—நிகர நடைமுறைச் சொத்து பாதிக்கப்படுவதில்லை.
14. சொத்துக் கணக்கில் தேய்மானம் எழுதப்பட்டது.	தேய்மானக் சொத்துக்	க/கு ,,	ப.	நிதி மாறுவதில்லை — நடைமுறைச் சொத்தோ பொறுப்போ பாதிக்கப்படுவதில்லை.
15. ஐயக்கடன் காப்பு ஒதுக்கல்	இலாப, நட்டக் ஐயக்கடன் காப்புக்	க/கு ,,	ப.	நிதி குறைகிறது—நடைமுறைப் பொறுப்புக் கூடுகிறது—நடைமுறை மூலதனம் குறைகிறது.
16. கடன் பத்திரங்கள் பங்குகளாக மாற்றப் படுகின்றன.	கடன் பத்திரங்கள் பங்குக்	க/கு ,,	ப.	நிதி மாறுவதில்லை—நடைமுறைச் சொத்துப் பொறுப்பு எதிலும் மாறுவதில்லை.

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிப்பதற்கு மேலே அளிக்கப்பட்டுள்ள பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும்:

நிதி நடமாட்ட அறிக்கையின் பயன்கள்:

1. வியாபாரத்தினுல் ஏற்பட்ட நிதி விளைவுகளைப்பற்றி எடுத்துரைக்கிறது. வியாபாரத்தில் நல்ல இலாபம் இருந்தும் இலாபத்தை வியாபாரத்திலிருந்து எடுப்பதற்குப் போதிய அளவு ரொக்கம் இல்லாமல் போய்விடுகிறது. இவ்வறிக்கை அம் மாதிரிப் புதிர்களுக்கும், முரண்பாடுகளுக்கும் பதிலளிக்கிறது.

2. கடனளிக்கும் வங்கிகள் நிதிநிலைத் தொடர்பாகக் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்க இவ்வறிக்கை ஏதுவாயிருக்கிறது. எப்படிக் கடனை வியாபாரம் திருப்பியளிக்க இயலும் என்ற வினவுக்கு எளிதாகப் பதிலளிக்க முடிகிறது.

3. ஒரு கம்பெனியின் வள ஆதாரங்களைச் சீரிய முறையில் பல காரணங்களுக்காகவும் பகிர்ந்தளிப்பதில் இவ்வறிக்கை மிகவும் உதவியாக அமைந்துள்ளது. இவ்வறிக்கை ஆண்டின் எப்பகுதியில் நிதி கிடைக்கின்றது என்ற செய்தியை அளிக்கின்றது. நடைமுறை முதல் பற்றிக் கொடுக்கப்படும் செய்திகள் மேலாண்மைக்குப் பேருதவியாகயிருக்கின்றன.

தற்காலங்களில் இவ்வறிக்கை மீது மிகவும் அதிகமான ஈடுபாடு தோன்றியுள்ளது. பெரிமேசன் கூறுவதுபோல் கம்பெனியின் ஆண்டறிக்கையுடன் நிதிநடமாட்ட அறிக்கையையும் இணைத்து வெளியிடுகிருர்கள்.

நிதி என்ற சொல்லிற்கு இன்றுவரை ஒரு சீரான பொருள் விளக்கம் எவராலும் தொகுக்கப்படவில்லை. இவ்வறிக்கையைத் தயாரிப்பவர்கள் தங்களுடைய தேவைக்கேற்ப அதன் பொருளை மாறுபடச் செய்து இவ்வறிக்கையைத் தயார் செய்கிருர்கள். தற்காலத்தில் நிதி என்ற சொல்லிற்கு "ரொக்க நடமாட்டம்" (Cash Flow) என்ற சொல்லைப் பயன்படுத்துகிருர்கள். ரொக்க நடமாட்டம் என்ற கொள்கை வியாபார இலாபத்தைக் குறிக்கிறது. மொத்த ரொக்க நடமாட்டத்தைக் கம்பெனியின் மொத்தப் பங்குகளால் வகுத்து, ஒரு பங்கின் ரொக்க நடமாட்டத்தைக் கணக்கிடுகிருர்கள். இவ்வாறு பங்கின் மதிப்பை அளவிடுவது மற்ற அளவீடுகளைவிட உயர்ந்தது என்ற எண்ணம் மிகத் தீவிரமடைந்துள்ளது. இதனுல், மொத்த 'ரொக்க நிதி' (Cash Fund) பங்குதாரர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாபத்தைக் குறிக்கிறது என்ற தவருன எண்ணம் மிகப் பரவலாக இருக்கிறது. ஆகையால், நிதி நடமாட்ட அறிக்கையின் உண்மைப் பயனை உணர்ந்து செயற்படவேண்டும்.

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கும் முறை:

நிதி நடமாட்ட அறிக்கையை இரண்டு பகுதிகளாகப் பிரித்துத் தயார் செய்கிறார்கள். அவையாவன:-

1. நடைமுறை முதலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய அறிக்கை (Schedule of Working Capital Changes)

2. நிதி மூலப் பயன்பாட்டு அறிக்கை (Statement of Sources and Application of Funds)

நடைமுறை முதல் மாற்ற அறிக்கை:

இவ்வறிக்கையைப் பின்வரும் குறிப்புகளைக் கொண்டு தயாரித்தல் வேண்டும்:

1. நடைமுறைச் சொத்துகள் கூடினால் நடைமுறைமுதல் கூடுகிறது.

2. நடைமுறைச் சொத்துகள் குறைந்தால் நடைமுறைமுதல் குறைகிறது.

3. நடைமுறைப் பொறுப்புகள் கூடினால் நடைமுறைமுதல் குறைகிறது.

4. நடைமுறைப் பொறுப்புகள் குறைந்தால் நடைமுறை முதல் கூடுகிறது.

நடைமுறை முதல் மாற்ற அறிக்கையில் நடைமுறைச் சொத்துகளும், நடைமுறைப் பொறுப்புகளும் எவ்வாறு மாறி நடைமுறை முதலைப் பாதிக்கின்றன என்று கூறுகிறது. இவ்வாறு ஒவ்வொரு நடைமுறைச் சொத்தும், பொறுப்பும் நடைமுறை முதலை எவ்வாறு பாதிக்கிறது என்பதையறிய (+) குறி அல்லது (−) குறியிட்டு, கடைசியில் (−) குறிகளையுடைய தொகைகளின் மொத்தத்தை (+) குறிகளையுடைய தொகைகளின் மொத்தத்திலிருந்து கழிக்க வேண்டும். அவ்வாறு கழித்துவரும் தொகை நடைமுறைமுதல் சென்ற ஆண்டைவிட எவ்வளவு கூடியுள்ளது என்பதையும், (+) குறிகளையுடைய தொகைகளின் மொத்தத்தைவிட (−) குறிகளையுடைய தொகைகளின் மொத்தம் அதிகமாயிருந்தால் நடைமுறை முதல் எவ்வளவு குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கின்றது. அதாவது,

இவ்வாண்டின் நடைமுறை முதல்	>	சென்ற ஆண்டின் நடைமுறை முதல்	நடைமுறை முதல் கூடியுள்ளது
இவ்வாண்டின் நடைமுறை முதல்	<	சென்ற ஆண்டின் நடைமுறை முதல்	நடைமுறை முதல் குறைந்துள்ளது

நடைமுறை முதல் மாற்ற அறிக்கை:
நடைமுறைச் சொத்துகள்

1. சரக்கிருப்பு (Stock)
2. கடனாளிகள்
3. முன் செலுத்திய செலவுகள்
4. வரவுடைய உண்டியல்கள்
5. ரொக்க இருப்பு
6. பாங்கிருப்பு

நடைமுறைப் பொறுப்புகள்

1. கடனீந்தோர்
2. கொடுக்க வேண்டிய செலவினங்கள்
3. செலுத்த வேண்டிய உண்டியல்கள்
4. செலுத்த வேண்டிய வருமானவரி
5. இலாப ஈவு (Dividend)
6. பாங்கு அதிகப்பற்று (Bank Overdraft)

மாதிரி நடைமுறை முதல் மாற்ற அறிக்கை

விவரம்	சென்ற ஆண்டு	நடப்பு ஆண்டு	நடைமுதலில் ஏற்படும் மாற்றம் (+)	(−)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
நடைமுறைச் சொத்துகள்				
சரக்கிருப்பு				
கடனாளிகள்				
ரொக்கம்				
முன் செலுத்திய செலவு				
மொத்தம்				
நடைமுறைப் பொறுப்புகள்				
பாங்கு அதிகப் பற்று				
கடனீந்தோர்				
செலுத்த வேண்டிய உண்டியல்கள்				
மொத்தம்				
நடைமுறை முதல் கூடுதல்/குறைவு				

நிதிமூலப் பயன்பாட்டு அறிக்கை

நடைமுறைப் பொறுப்புகள், சொத்துகளிடையே ஏற்படும் நிகர மாறுதலை முன்கண்ட கூற்றுத் தெரிவிக்கிறது. நிலையான சொத்துகள் பொறுப்புகளிடையே ஏற்படும் மாறுதல்கள் இவ்வறிக்கையில் கூறப்படுகின்றன.

நிதிமூலப் பயன்பாட்டு அறிக்கை

மூலங்கள் (Sources)	பயன்பாடுகள் (Applications)
1. பங்கு வெளியீடு	1. சலுகைப் பங்குகள் மீட்கப்படுதல்
2. கடன் பத்திரங்கள் வெளியீடு	2. கடன் பத்திரங்கள் மீட்பு
3. கடன் பெற்றது	3. கடன்களைத் திருப்பியளித்தல்
4. நிலையான சொத்துகள், முதலீடுகள் விற்பனை	4. முதலீடுகள், நிலையான சொத்துகள் கொள் முதல் செய்தல்
5. வியாபார இலாபம் (Trading Profit)	5. சென்ற ஆண்டின் இலாப ஈவு கொடுத்தல்
6. வியாபாரத் தொடர்பில்லாத வருமானங்கள் (Non-Trading Income)	6. வியாபாரத் தொடர்பில்லாச் செலவினங்கள் (Non-Trading expenses)

மேற்கூறப்பட்டுள்ள அறிக்கையில் நடைமுறை முதலின் மாற்றம் எவ்வாறு நிதிமூலப் பயன்பாட்டு அறிக்கையில் எழுதப்படவேண்டும் என்று கூறப்படவில்லை. நடைமுறைமுதலில் ஏற்படும் நிகர மாற்றத்தை மூலமாக அல்லது பயன்பாடாகப் புரிந்துகொள்வதில் மாணவர்களிடம் ஓர் ஐயப்பாடு எழலாம். நடைமுறைமுதல் கூடினால், மூலத்தினாலா பயன்பாட்டினாலா என்று கூறுவது கடினம். இவ் வினாவுக்கு விடையளிக்க ஓர் எடுத்துக்காட்டை மேற்கொள்வோம்.

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
பங்குகள்	50,000	இலாப ஈவு கொடுத்தது	15,000
		கடன் பத்திரங்கள் மீட்பு	35,000
நிலையான சொத்துகள் விற்பனை	20,000	தட்டுப் பொறி வாங்கியது	5,000
	70,000		55,000

இவ்வறிக்கையில் மூலம் ரூ 70,000 ஆனால் பயன்பாடு ரூ. 55,000. இரு பக்கங்களினிடையேயுள்ள வேறுபாடு ரூ. 15,000. அறிக்கையை உற்றுநோக்குங்கால் இவ்வாண்டில் பயன்பாட்டைவிட நிதியின் மூலம் அதிகமாயுள்ளது என்பதை அறிகிறோம். அதாவது நடைமுறைமுதல் கூடியிருக்கிறது.

நிதிநடமாட்ட அறிக்கை தயாரித்தல்

இவ்வறிக்கையைத் தயாரிக்கும் உத்திகளில் T முறை என்பது மிகப் பரவலாகக் கையாளப்பட்டு வருகின்றது. இவ்வறிக்கை T வடிவத்தில் இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுவதால் T முறை (Techniques) என்கிறோம். இவ் வறிக்கையைத் தயாரிப்பதைப் படிப்படியாகப் பின்வருமாறு அணுக வேண்டும்:

1. முதலில் நடைமுறைச் சொத்துகளையும், நடைமுறைப் பொறுப்புகளையும் வைத்துக்கொண்டு நடைமுறைமுதல் மாறுதல் அறிக்கை தயாரிக்க வேண்டும்.

2. பிறகு மற்றச் சொத்துகளையும் பொறுப்புகளையும் ஒப்பிட வேண்டும். அதாவது கொடுக்கப்பட்டுள்ள இரண்டு இருப்புநிலைக் குறிப்புகளின் தொகைகளை ஒவ்வொரு சொத்திற்கும் ஒப்பிட வேண்டும். சொத்துகள் கூடியிருந்தால் நிதிப் பயன்பாடு (Fund Application) என்றும், குறைந்திருந்தால் நிதிமூலம் (Source) என்றும் புரிந்து கொள்ளவேண்டும்.

3. பிறகு பொறுப்புகளையும் மேற்கூறியவாறே ஒப்பிட வேண்டும். அவ்வாறு ஒப்பிடும்பொழுது பொறுப்புகள் குறைந்திருந்தால் நிதிப் பயன்பாடு என்றும், கூடியிருந்தால் நிதி மூலம் என்றும் அறிய வேண்டும்.

சில பயனுள்ள குறிப்புகள்

1. **நடைமுறைச் சொத்துகளிலல்லாது பிற சொத்துகளில் ஏற்படும் மாற்றம்** (Changes in Non - Current Assets) : இதை இரு விதமாக நிதிநிலை அறிக்கையில் காட்டலாம்.

(அ) எ-கா: ரூ. 1,00,000 பெறுமான பங்குகளை அளித்து, அதற்குப் பதிலாக இயந்திரங்கள் ரூ. 60,000-க்கும் சரக்கு ரூ. 40,000-க்கும் வாங்கப்பட்டன. இந்த நடவடிக்கைபில் பங்குமுதல் கணக்கில் ரூ. 1,00,000 வரவு எழுதப்பட்டுள்ளது. இஃது ஒரு நிலையான பொறுப்பு ஆகும். இயந்திரங்கள் கணக்கு ரூ. 60,000 பற்று எழுதப்பட்டுள்ளது. இஃது ஒரு நிலையான சொத்தாகும். ஆகவே, இந்த நடவடிக்கையில் ரூ. 60,000-க்கு நிலையான சொத்தும் நிலையான பொறுப்பும் பாதிக்கப்படுகிறது. இதனுல் நிகர நடைமுறைச் சொத்து கூடவோ குறையவோ செய்யவில்லை. இந்த நடவடிக்கையில் மற்ருெரு பகுதியில் ரூ. 40,000 சரக்கு வாங்குவதும் உள்ளது. இப் பகுதியில் ஒரு நிலையான பொறுப்பும் (பங்குமுதல் க/கு) ஒரு நடைமுறைச் சொத்தும் பாதிக்கப்படுகிறது. இப் பகுதி நடவடிக்கையில் ரூ. 40,000 நிகர நடைமுறைச் சொத்துக் கூடுகிறது. ஆக நிதி நடமாட்ட அறிக்கையில் ரூ. 40,000 பங்குமுதல் க/கு 'மூலம்' என்றறிய வேண்டும். ஆகவே ரூ. 40,000 மட்டும் 'மூலம்' ஆகக் காட்டவேண்டும்.

[ஆனுல், சில ஆசிரியர்கள் இம் மாதிரிக் கூட்டு நடவடிக்கைகளை முழுமையாகவே நிதிநடமாட்ட அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ளனர்.]

(ஆ) எ-கா. ரூ. 50,000 பெறுமானமுள்ள இயந்திரங்கள் வாங்கியதற்கு ரூ. 20,000 ரொக்கமும், ரூ. 30,000 கடன்பத்திரங்களும் வழங்கப்பட்டன. இந் நடவடிக்கையை ரூ. 30,000 கடன் பத்திரங்கள் வழங்கியதைக் கற்பனை ரொக்கக் கொள்கைப்படி அறிக்கையில் நிதிமூலம் என்றும், ரூ. 50,000 நிதிப் பயன்பாடு என்றும் குறிப்பிட வேண்டும் என்றும் கருதுகின்றனர்.

2. **நடைமுறைக் கணக்குகளில் மாறுதல்கள் :** நடைமுறைச் சொத்துகள், பொறுப்புகள் ஆகியவைகளில் ஏற்படும் மாறுதல்கள் நிதி நடமாட்ட அறிக்கையில் தனித்தனியாக எழுதப்படுவதில்லை. ஏனெனில், நடைமுறைக் கணக்குகள் அனைத்தும் அதற்காக ஏற்பட்டுள்ள அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

3. **முதலீடுகள் (Investments):** ஒரு வியாபாரத்தில் முதலீடுகள் நடைமுறைச் சொத்தாகவோ, நிலையான சொத்தாகவோ

அமையலாம். இது சூழ்நிலையைப் பொறுத்தது. வியாபாரத்தில் உள்ள உபரிப் பணத்தை (Surplus Finance) முதலீடு செய்தால் அதை நடைமுறைச் சொத்தாகக் கருதவேண்டும். ஆனால், சில நேரங்களில் முதலீடுகள் நிறுவனத்தின் நிரந்தர உபரி நிதியிலிருந்து வாங்க நேரிடும். அப்பொழுது முதலீடுகளை நிலையான சொத்தாகக் கருத வேண்டும். முதலீடுகளை நடைமுறைச் சொத்தாகக் கருதினால் இக் கணக்கில் ஏற்படும் எவ்வித மாற்றமும் 'நடை முறை முதல் மாற்ற அறிக்கையில்' (Changes in Working Capital Statement) இடம் பெறுகின்றது. ஆனால், நிலையான சொத்தாகக் கருதினால் நிதி நடமாட்ட அறிக்கையில் நேரடியாக நிதிமூலமாகவோ, பயன் பாடாகவோ எழுதப்படுகிறது. சில நேரங்களில் முதலீடுகள் இலாப ஈவு உட்பட (Cum Dividend) வாங்கப்படுகின்றன. பிறகு இலாப ஈவைப் பெறும்பொழுது முதலீட்டுக் கணக்கை முதலீடு வாங்கும் தேதிக்குமுன் ஏற்பட்டுள்ள இலாப ஈவுத் தொகைக்கு வரவு எழுதப்படுவது முறையானதாகும். இவ்வாறு செய்வதால் முதலீடுகள் கணக்கில் இருப்புக் குறைகிறது. ஆனால், நிதிநடமாட்ட அறிக்கையில் முதலீடுகள் வாங்கிய தொகையை எழுதுவதற்கு, முதலீடுகள் கணக்கிலுள்ள இறுதி இருப்புடன் இலாப ஈவுத் தொகையைக் கூட்டித் தொடக்க இருப்பைக் கழித்துவிடவேண்டும். எஞ்சிய தொகை முதலீடுகள் வாங்கிய தொகையைக் குறிக்கும்.

எ-கா: 1973ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முதலீடுகள் கணக்கில் ரூ. 50,000 உள்ளது. ஆண்டு இறுதியில் ரூ. 72,000 உள்ளது. முதலீடுகள் வாங்கும் தேதிக்கு முன்னர்க் கூடிய வட்டிக்காக ரூ. 3,000 பெற்றதாக வைத்துக்கொள்வோம். இவ் வாண்டில் முதலீடுகள் பின்வருமாறு கணக்கிடப்பட வேண்டும்:

	முதலீடுகள் க/கு இறுதி இருப்பு	ரூ. 72,000
கூட்டு:	வாங்கும் தேதிக்குமுன் கூடிய வட்டித்தொகை	3,000
		ரூ. 75,000
கழி:	முதலீடுகள் க/கு தொடக்க இருப்பு	ரூ. 50,000
	முதலீடுகள் வாங்கியது	ரூ. 25,000

இதைப் பேரேட்டுக் கணக்கு ஒன்று போட்டும் காட்டலாம்.

முதலீடுகள் க/கு

	ரூ.		ரூ.
இருப்பு மே/கொ	50,000	வட்டிக் கணக்கு	3,000
ரொக்கக் க/கு	25,000	இருப்பு கீ/இ	72,000
	75,000		75,000

நடைமுறைச் சொத்துகள்மீது ஒதுக்கப்பட்ட தொகைகள் (Pvovision for Current Assets)

எ-கா: கடனாளிகள் க/கு மீதுள்ள ஐயக்கடன் காப்பு, சரக்கு நட்டக் காப்பு முதலியனவாகும். மிகவும் எளிதான முறையைக் கையாளுதல் நன்மை பயக்கும். அதாவது ஒவ்வொரு நடைமுறைச் சொத்தின்மீதும் ஏற்படுத்தியுள்ள காப்பிருப்பை (Provision) அந்தச் சொத்திலிருந்து கழித்துவிட்டு எஞ்சியுள்ள தொகையைத்தான் சொத்தாகக் கருதவேண்டும்.

வருமான வரிக்காப்பு

இக் கணக்கை நிதிநடமாட்ட அறிக்கையில் இரு விதமாகக் குறிப்பிடலாம் என்ற கருத்து நிலவுகிறது.

1. இக் காப்பை நடைமுறைப் பொறுப்பாகக் கருதலாம். இப்படிச் செய்கையில் நிதிநடமாட்ட அறிக்கையில் நேரடியாக வருவதில்லை.

2. இக் காப்பை இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையாகக் கருதி இலாபத்துடன் கூட்டிக் கொள்ளலாம். ஆண்டுத் தொடக்கத்திலுள்ள காப்பு எப்படியும் வருமானவரி கட்டுவதற்குச் செலவிடப்பட்டிருக்கும் என்று கொள்வது சரியான கருத்தாகும். ஆக, ஆண்டுத் தொடக்கத்திலுள்ள காப்பிருப்பை அறிக்கையில் பயன்பாடாகக் காட்டவேண்டும்.

தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு (Dividend Proposed)

கம்பெனியின் இலாபத்தில் பங்குதாரர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு எவ்வளவு என்ற தொகையை இயக்குநர்கள் நிருணயம் செய்து இலாப ஈவுபற்றி அறிவிக்கிறார்கள். ஆனால், கம்பெனியின் பங்குதாரர்களின் ஆண்டுக் கூட்டத்தில் பங்குதாரர்கள் இசைவு கொடுத்த பிறகுதான் இலாப ஈவு கம்பெனியின் பொறுப்பாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கும் சூழ்நிலையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்பட்ட இலாப

ஈவுத்தொகையை நடைமுறைப் பொறுப்பாகவோ இலாபத்தின் ஒரு பகுதியாகவோ கையாளலாம்.

இலாப ஈவு வருமானம்

இலாப ஈவு வருமானத் தொகையைக் கணக்கிட வேண்டிய சில நேரங்களில் முதலீடுகள் இலாப ஈவுடன் (cum dividend) வாங்கும் பொழுது, நமக்குக் கிடைக்கும் இலாப ஈவுத் தொகையைப் பாகு பாடின்றி வியர்பாரத்தின் இலாபநட்டக் கணக்கில் சேர்க்க வேண்டும். மேற்கூறியபடி முதலீடுகள் கணக்கில் சேர்க்கப்பட்ட இலாப ஈவுப் பகுதித் தொகையை அக் கணக்கிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

நிலையான சொத்துகள் விற்றதில் ஏற்படும் இலாபம்/நட்டம்

கணக்கில் நிலையான சொத்துகள் விற்பனை செய்தது பற்றிய குறிப்பு இருக்கும்பொழுது, அவ் விற்பனையில் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம், இலாப நட்டக் கணக்கில் சேர்ந்துள்ளது என்றே வைத்துக்கொள்ள வேண்டும்.

வியாபார இலாபம்—தலைமையான நிதிமூலம் (Trading Profit—Chief source of fund)

வியாபார இலாபம் எவ்வாறு தலைமையான நிதிமூலம் என்பதை அறிய பின்வரும் எடுத்துக்காட்டைக் கவனிப்போம்:

ஒரு கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு 1—1—1972

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
பங்கு முதல்	1,00,000	மனைத்துணைப் பொருள்கள்	5,000
		ரொக்கம்	80,000
		சரக்கிருப்பு	15,000
	1,00,000		1,00,000

மேற்கூறிய கம்பெனியின் 31-12-1972-ல் இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
பங்கு முதல்	1,00,000	மனைத்துணைப் பொருள்கள்	5,000
இலாப நட்டக் க/கு	20,000	கடனாளிகள்	30,000
		ரொக்கம்	60,000
		சரக்கிருப்பு	25,000
	1,20,000		1,20,000

மேலே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு இருப்புநிலைக் குறிப்புகளையும் ஒப்பிடும்பொழுது கம்பெனியின் இவ்வாண்டு (1972) இலாபம் ரூ. 20,000 என்று அறிகிறோம். கம்பெனிக்கு ஏற்பட்ட இலாபத்தை நிதிமூலம் என்று அறிய வேண்டும். மேலும், இந்த எடுத்துக்காட்டை விளக்குவோம். கம்பெனியின் தொடக்க நடைமுறைமுதல் ரூ. 1,00,000. ஆண்டு இறுதியில் இத் தொகை ரூ. 20,000 கூடியிருக்கிறது. நடைமுறை முதல் கூடுவதைப் பயன்பாடாக அறிக்கையில் எழுத வேண்டும் என்று முன்பே அறிந்தோம். கம்பெனியின் வியாபார இலாபம்= ரூ 20,000 (நிதிமூலம்) = நடைமுறைமுதலில் கூடுதல்= ரூ. 20,000(நிதிப் பயன்பாடு).

இலாப, நட்டக் கணக்கில் உள்ள இலாபத்தை முடிவு இலாபமாக, நிதிநிலை அறிக்கையில் காண்பிப்பதற்காக, எடுத்துக்கொள்ள முடியாது. சில உருப்படிகளைக் கூட்டி, சிலவற்றைக் கழிக்க வேண்டும்.

இலாபத்துடன் கூட்ட வேண்டியன

இலாப நட்டக் கணக்கில் உள்ள ஒரு தொகையைக் கூட்ட வேண்டுமா என்றறியப் பின்வரும் வினாக்களுக்குப் பதிலறிய வேண்டும்.

1. அந்தக் க/கு நடைமுறைச் சொத்து,நடைமுறைப் பொறுப்பு இவற்றில் ஏதாவது ஒன்றையாவது மாற்றமுறச் செய்கிறதா அல்லது ரொக்கத்தை வியாபாரத்தில் உட்செலுத்தும் அல்லது வெளிச் செலுத்தும் தன்மை வாய்ந்ததா?

2. அந்தக் க/கு வியாபாரத்தில் கட்டாயமாகப் பற்றெழுதப் படவேண்டியதா (charge)? அல்லது அந்தக் கணக்கை வியாபார நட்டமாகக் கருதலாமா?

மேற்கூறிய இரு வினாக்களில் ஒரு வினாவிற்காவது 'இல்லை' என்ற பதில் கிடைத்துவிட்டால் அந்தக் கணக்கை இலாபத்துடன் கூட்டிக் கொள்ளவேண்டும்.

எடுத்துக்காட்டு:

1. சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது

(அ) இதில் ரொக்கம் வெளிச்செலுத்தப்படுகிறது.

(ஆ) இலாப, நட்டக் கணக்கில் சம்பளக் க/கு பற்றெழுதப் படுகிறது.

இரு வினாக்களுக்கும் 'ஆம்' என்ற பதில் கிடைத்தால் இலாபத்துடன் இந்தக் கணக்கைக் கூட்டக்கூடாது.

2. **கொடுக்கப்பட வேண்டிய சம்பளக் க/கு**

(அ) நடைமுறைப் பொறுப்புக் கூடுகிறது.

(ஆ) கட்டாயமாகப் பற்றெழுத வேண்டும்.

இதிலும் இரு வினாக்களுக்கும் 'ஆம்' என்ற பதில் கிடைப்பதால் இந்தக் கணக்கும் கூட்டப்படவேண்டியதில்லை.

3. **நிலையான சொத்துகள்மீது எழுதப்படும் தேய்மானம்**

தேய்மானம் என்பது நிலையான சொத்துகளை ஆண்டுதோறும் தொடர்ச்சியாக உபயோகித்திருப்பதாலோ மதிப்புக் குறைவாலோ குறைக்கப்படும் தொகையைக் குறிக்கும். தேய்மானக் க/கு குறிப்பாக எந்த ஒரு நடைமுறைச் சொத்தையோ, நடைமுறைப் பொறுப்பையோ பாதிப்பதில்லை. மேற்கூறிய இரு வினாக்களில் ஒரு வினாவுக்கு இல்லை என்ற பதில் கிடைத்துவிட்டால் தேய்மானத் தொகையை இலாபத்துடன் கூட்டிக்கொள்ள வேண்டும்.

கம்பெனித் தொடக்கச் செலவுகள்

கம்பெனியின் தொடக்கச் செலவுகள் ஆண்டுதோறும் படிப்படியாகக் கம்பெனியின் இலாப நட்டக் கணக்கில் பற்றெழுதப்படும். இவ்வாறு இலாப நட்டக் கணக்கில் பற்று எழுதினாலும் கம்பெனியில் வியாபார இலாப வழி கிடைத்த நிதிகுறைந்துவிடாது. ஆகையால், கம்பெனிக்கு வியாபார இலாப வழி கிடைத்த நிதியைக் காண இலாப நட்டக் கணக்கில் பற்றெழுத்தப்பட்ட துவக்கச் செலவுகளைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

இலாபத்திலிருந்து பொதுக்காப்பிருப்பு, கடன்கழிவு நிதி, இலாப ஈவுச் சமன்பாட்டு நிதி முதலியவைகளுக்கு ஒதுக்கப்படல் (Transfer to General Reserve Sinking Fund, Dividend Equalisation Fund, etc.)

இவையனைத்தும் இலாபத்தைக் கணக்கிட்ட பிறகு செய்யப்படும் இலாப ஒதுக்கீடுகளாகும். ஆகையால், வியாபார இலாபவழி ஏற்பட்ட நிதியைக் கணக்கிட இவைகளுக்காகச் செய்த எல்லா ஒதுக்கீடுகளையும் கூட்டிக் கொள்ள வேண்டும்.

கழிக்கப்பட வேண்டிய உருப்படிகள்

எ-கா: 1. பிற கம்பெனிகளிடமிருந்து நாம் பெற்ற வட்டி அல்லது இலாப ஈவுத் தொகையை வியாபாரவழி ஏற்பட்ட நிதியைக் கணக்கிடும்பொழுது கழிக்க வேண்டும்.

2. சென்ற ஆண்டில் வருமான வரிக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் எஞ்சிய தொகையை இலாப நட்டக் கணக்கில் வரவு

எழுதுவது வழக்கம். அவ்வாறு வரவு எழுதப்பட்டாலும் உண்மையில் அத் தொகையினுல் கம்பெனியின் நிதி பாதிக்கப்படுவதில்லை. ஆகையால் வருமானவரி ஒதுக்கீட்டில் எஞ்சிய தொகையை நிகர இலாபத்திலிருந்து கழிக்க வேண்டும்.

இலாபத்தைக் கணக்கிட உதவும் மாதிரி அட்டவணை

		ரூ.	ரூ.
இலாப நட்டக் க/கு இறுதி இருப்பு			80,000
கூட்டு:			
(i)	தேய்மானம்	4,000	
(ii)	துவக்கச் செலவு	1,000	
(iii)	கடன் பத்திரம் மீதான தள்ளுபடிக் க/கு	500	
(iv)	பொதுக் காப்பிருப்புக்கு மாற்றப்பட்டது	10,000	
(v)	கடன் கழிவு நிதிக்கு மாற்றப்பட்டது	2,500	
(vi)	கட்டட விற்பனையில் நட்டம்	1,200	
			19,200
			99,200
கழி:			
1.	முதலீடுகள் ஈட்டிய வட்டி அல்லது இலாப ஈவு	1,800	
2.	இயந்திர விற்பனையில் இலாபம்	1,400	
3.	வருமானவரி ஒதுக்கீடு க/கு கூடுதல் தொகை	1,000	
4.	ஆண்டின் துவக்கத்திலுள்ள இலாப நட்டக் க/கு இருப்பு	25,000	29,200
	வியாபார வழி நிதி		ரூ. 70,000

எடுத்துக்காட்டு: 1.

பின்வரும் குறிப்புகளைக் கொண்டு 1965ஆம் ஆண்டின் நிதி நடமாட்ட அறிக்கையைத் தயார் செய்யவும்:

சொத்துகள்	31-12-'65	31-12-1964
	ரூ.	ரூ.
ரொக்கம்	40,000	1,30,000
கடனாளிகள்	1,60.000	1,00,000
சரக்கிருப்பு	2,55,000	2,35,000
நிலம், கட்டடங்கள்	10,20,000	5,40,000
இயந்திரத் தொகுதி	35,44,000	28,04,000
மனைத்துணைப் பொருள்கள்	2,10,000	2,10,000
	ரூ. 52,29,000	40,19,000

பொறுப்புகள்		
கடனீந்தோர்	3,65,000	3,19,000
இலாப ஈவுக் க/கு	2,00,000	—
நீண்டகாலக் கடன்	5,35,000	—
சாதாரணப் பங்கு முதல் (Equity Share Capital)	40,00,000	36,00,000
இலாப நட்டக் க/கு	1,29,000	1,00,000
	52,29.000	40,19,000

நடைமுறைமுதல் மாற்றங்கள் அறிக்கை

நடைமுறைச்சொத்துகள்		1965	1964
		ரூ.	ரூ.
ரொக்கம்		40,000	1,30,000
கடனாளிகள்		1,60,000	1,00,000
சரக்கிருப்பு		2,55,000	2,35,000
	ரூ. (அ)	4,55,000	4,65,000

நடைமுறைப் பொறுப்புகள்			
		ரூ.	ரூ.
கடனீந்தோர்	(ஆ)	3,65,000	3,19,000
நடைமுறை முதல்	(அ - ஆ)	90,000	1,46,000
குறைந்துள்ள நடைமுறை முதல்		56,000	—
		1,46,000	1,46,000

ஒவ்வோர் உருப்படியாலும் நடைமுறை முதலில் ஏற்படும் மாற்றத்தை அறியும் அறிக்கை

	நடைமுறை முதலுக்குச் சாதகமான விளைவு	நடைமுறை முதலுக்குப் பாதகமான விளைவு
	ரூ.	ரூ.
ரொக்கம்	+	–
(40,000 – 1,30,000)		90,000
கடனாளிகள் (1,60,000 – 1,00,000)	60,000	–
கடனீந்தோர் (3,65,000 – 3,19,000)	–	46,000
சரக்கிருப்பு (2,55,000 – 2,35,000)	20,000	–
	(+) 80,000	(–) 1,36,000

நிதிமூலப் பயன்பாட்டு அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
பங்குகள் வெளியிட்டது	4,00,000	நிலம், கட்டடம் வாங்கியது	4,80,000
இலாப நட்டக் க/கு	29,000		
நீண்டகாலக் கடன் வாங்கியது	5,35,000	இயந்திரத் தொகுப்பு வாங்கியது	7,40,000
இலாப ஈவுக் கடன்	2,00,000		
நடைமுறை முதல் குறைந்தது	56,000		
	12,20,000		12,20,000

குறிப்பு:

1. 1964ஐ விட 1965-ல் பங்கு க/கு ரூ. 4,00,000 கூடியுள்ளது. (40,00,000 – 36,00,000). ஆகவே இது நிதிமூலமாகும்.

2. சென்ற ஆண்டைவிட இலாப நட்டக் கணக்கில் ரூ. 29,000 கூடியுள்ளது. இதுவும் நிதிமூலமாகும்.

3. 1965-ல் நீண்டகாலக் கடன் வாங்கப்பட்டுள்ளது. அத் தொகையை நிதிமூலமாகக் கருத வேண்டும்.

4. கம்பெனியின் இலாப ஈவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை இலாபத்தின் ஒரு பகுதியைக் குறிப்பிடுவதால் நிதிமூலமாகக் கருதப்பட்டுள்ளது.

5. நிலம், கட்டடங்கள் கணக்கில் 1965-ல் கூடியுள்ள தொகைக்குச் சொத்து வாங்கியதாகக் கொள்ளவும்.

6. அதுபோல, மனைத்துணைப் பொருள்கள் கணக்கிலும் கூடியுள்ள தொகையைச் சொத்துகள் கொள்முதலாகக் கொள்ள வேண்டும்.

7. இந்த நிலையில் நிதிநடமாட்ட அறிக்கையில் நிதிப் பயன்பாடு கூடுதலாகவும், நிதிமூலம் குறைவாகவும் உள்ளது. ஆகையால், அந்த வித்தியாசத் தொகைக்கு நடைமுறைமுதல் பயன் படுத்தப்பட்டுள்ளது. அதாவது நடைமுறைமுதல் குறைந்துள்ளது.

எடுத்துக்காட்டு 2: இராமனின் நிதிநிலை பின்வருமாறு. 1971-ன் நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

	டிசம்பர் 1970	டிசம்பர் 1971
சொத்துகள்	ரூ.	ரூ.
ரொக்கம்	4,000	3,600
கடனீந்தோர்	35,000	38,400
சரக்கிருப்பு	25,000	22,000
நிலம்	20,000	30,000
கட்டடம்	50,000	55,000
இயந்திரங்கள்	80,000	86,000
மோட்டார் வண்டி	–	25,000
	2,14,000	2,60,000
பொறுப்புகள்	ரூ.	ரூ.
கடனீந்தோர்	36,000	41,000
அனுமன் கடன் க/கு	—	20,000
பாங்கு கடன் க/கு	30,000	25,000
தவணைமுறை விற்பனையாளர் க/கு	–	20,000
முதல்.........	1,48,000	1,54,000
	2,14,000	2,60,000

1. 1971 டிசம்பரில் மோட்டார் வண்டி, தவணைமுறையில் வாங்கப்பட்டது. ரூ. 5,000 உடனடியாகக் கொடுக்கப்பட்டது. மீதித் தொகையை 20 மாதக் காலங்களில் 12% வட்டியுடன் கொடுக்க வேண்டும்.

2. 1971ஆம் ஆண்டில் உரிமையாளர் ரூ. 26,000 சொந்தச் செலவுக்காக எடுத்துள்ளார்.

3. இயந்திரங்கள்மீது எழுதப்பட்ட தேய்மானக் கணக்கு இருப்புப் பின்வருமாறு:

31-12-1970 ரூ. 27,000

31-12-1971 ரூ. 36,000

விளக்கங்கள்

1. நடைமுறை முதல் மாற்றம்

	டிசம்பர், 31 1970	டிசம்பர் 31 1971
நடைமுறைச் சொத்துகள்	ரூ.	ரூ.
ரொக்கம்	4,000	3,600
கடனீந்தோர்	35,000	38,400
சரக்கிருப்பு	25,000	22,000
	64,000	64,000
கழி: நடைமுறைப் பொறுப்புகள்	36,000	53,000
	28,000	11,000
நடைமுறை முதல்	—	17,000
	28,000	28,000

2. ஆண்டின் வியாபாரவழி இலாபம்

	ரூ.
ஆண்டின் இறுதி முதல்	1,54,000
கூட்டு: இவ்வாண்டு எடுப்பு	26,000
	1,80,000
கழி: ஆண்டின் தொடக்க முதல்	1,48,000
1971-ன் இலாபம்	32,000

3. இவ்வாண்டு எழுதப்பட்ட தேய்மானம்

	ரூ.
தேய்மான நிதிக் க/கு 31—12—71	36,000
கழி: தேய்மான நிதிக் க/கு 31—12—70	27,000
1971-ன் தேய்மானம்	ரூ. 9,000

4. இயந்திரங்கள் வாங்கியது

	ரூ.
இயந்திரங்கள் க/கு 31—12—71	86,000
கூட்டு: தேய்மான நிதி க/கு 31—12—71	36,000
இயந்திர முழு அடக்கவிலை	1,22,000
கழி: இயந்திரத்தின் 1—1—71-ன் முழு அடக்கவில்லை (80,000+27,000)	1,07,000
இயந்திரங்கள் வாங்கியது	ரூ. 15,000

5. தவணை முறை விற்பனையாளருக்குச் செலுத்தவேண்டிய தொகை ரூ. 25,000. இதில் இந்த ஆண்டுச் செலுத்தவேண்டிய ரூ. 12,000 நடைமுறைமுதல் பொறுப்பாகக் கணக்கிடப்பட்டது. எஞ்சிய ரூ. 8,000 நிதி மூலமாகக் காட்டப்பட்டுள்ளது.

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்		ரூ.	பயன்பாடு	ரூ.
இவ்வாண்டு இலாபம் (2)	32,000		நிலையான சொத்துகள் வாங்கியது	
கூட்டு:				
தேய்மானக் க/கு (3)	9,000	41,000	நிலம்	10,000
			கட்டடம்	5,000
அனுமனிடமிருந்து வாங்கிய கடன்		20,000	இயந்திரங்கள் (4)	15,000
தவணை முறை விற்பனையாளர் (5)		8,000	மோட்டார் வண்டி	25,000
			பாங்கு கடன் மீட்பு	5,000
நடைமுறை முதல் குறைவு (1)		17,000	வணிகர் எடுப்புக் க/கு	26,000
		ரூ. 86,000		ரூ. 86,000

எடுத்துக்காட்டு 3:

பின்வரும் இருப்புநிலைக் குறிப்புகளிலிருந்து ஒரு நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்:

பொறுப்புகள்	1970	1971
	ரூ.	ரூ.
பங்கு முதல்	6,00,000	7,00,000
பொதுக் காப்பிருப்பு நிதி	2,00,000	2,50,000
முதலீடுகள் விற்பனை இலாபக் க/கு	—	10,000
இலாப, நட்டக் க/கு	1,00,000	2,00,000
7% கடன்பத்திரங்கள்	3,00,000	2,00,000
கொடுக்கவேண்டிய செலவினங்கள்	10,000	12,000
கடனீந்தோர்	1,60,000	2,50,000
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	30,000	35,000
வருமானவரி ஒதுக்கீடு	70,000	75,000
	14,70,000	17,32,000

சொத்துகள்	1970	1971
	ரூ.	ரூ.
நிலையான சொத்துகள்	8,00,000	9,50,000
முதலீடுகள்	1,80,000	1,80,000
சரக்கிருப்பு	2,00,000	2,70,000
கடனாளிகள்	2,25,000	2,45,000
வரவுடைய உண்டியல்கள்	40,000	65,000
முன் செலுத்திய செலவுகள்	10,000	12,000
கடன் பத்திரங்கள் தள்ளுபடிக் க/கு	15,000	10,000
ரூ.	14,70,000	17,32,000

விவரங்கள்

1. 1971 ஆம் ஆண்டில் ரூ. 10,000-க்கு எழுதி இறக்கப்பட்ட மதிப்புடைய (Written down value) நிலையான சொத்து (ரூ. 30,000 எழுதப்பட்ட தேய்மானம்) ரூ. 8,000-க்கு விற்கப்பட்டது.

2. இவ்வாண்டில் ரூ. 80,000 அடக்கவிலையுள்ள முதலீடுகள் விற்கப்பட்டு அதே மதிப்புள்ள முதலீடுகள் வாங்கப்பட்டன.

3. கடன்பத்திரங்கள் 10% மதிப்புயர்வில் (Premium) மீட்கப் பட்டது.

4. 1970ஆம் ஆண்டில் வருமானவரி ரூ. 55,000.

5. தேய்மான நிதிக் க/கு.

31-12-1970 ரூ. 2,00,000

31-12-1971 ரூ. 2,50,000

விளக்கங்கள்

1. தேய்மானம்

தேய்மான நிதிக் க/கு 31-12-1971 ரூ. 2,50,000.		
கழி: தேய்மான நிதிக் க/கு 31-12-1970-ல் ரூ. 2,00,000		
கழி: விற்ற சொத்தின்மீதான தேய்மானம்	30,000	1,70,000
1971ஆம் ஆண்டின் தேய்மானம்		ரூ. 80,000

2. நிலையான சொத்துகள் வாங்கியது

நிலையான சொத்தின் முழு அடக்க விலை 31—12—1971 (ரூ. 9,50,000 + தேய்மான நிதி ரூ. 2,50,000)		12,00,000
கழி: நிலையான சொத்தின் 31—12—70-ல் அடக்கவிலை (ரூ. 8,00,000 + ரூ. 2,00,000) ரூ. 10,00,000		
கழி: விற்ற சொத்தின் அடக்கவிலை	ரூ. 40,000	9,60,000
1971-ல் சொத்துகள் வாங்கியது		2,40,000

3. சொத்து விற்பனையிலேற்பட்ட நட்டம்

	விற்ற சொத்தின் அடக்கவிலை	ரூ. 40,000
கழி:	தேய்மானம்	ரூ. 30,000
	மதிப்பிறக்கப்பட்ட தொகை	ரூ. 10,000
கழி:	விற்பனை விலை	ரூ. 8,000
	விற்பனையில் ஏற்பட்ட நட்டம்	ரூ. 2,000

4. முதலீடுகள் வாங்கியது

	முதலீடுகள் 31—12—1971-ல் இருப்பு		ரூ. 1,80,000
கூட்டு:	முதலீடுகள் விற்றது	80,000	
	விற்றதில் இலாபம்	10,000	90,000
			2,70,000
கழி:	முதலீடுகள் 31—12—70-ல் இருப்பு		1,80,000
			90,000
கழி:	விற்பனையில் இலாபம்		10,000
	1971-ல் முதலீகள் வாங்கியது		80,000

நடைமுறை முதல் மாற்ற அறிக்கை

		1970		1971
		ரூ.		ரூ.
கடனாளிகள்		2,25,000		2,45,000
சரக்கிருப்பு		2,00,000		2,70,000
வரவுடைய உண்டியல்கள்		40,000		65,000
முன் செலுத்திய செலவுகள்		10,000		12,000
		4,75,000		5,92,000
கழி: கொடுக்க வேண்டிய செலவுகள்	10,000		12,000	
கடனீந்தோர்	1,60,000	1,70,000	2,50,000	2,62,000
நடைமுறைமுதல்		3,05,000		3,30,000
நடைமுறைமுதல் கூடுதல்		25,000		

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
சொத்துகள் விற்பனை	8,000	நிலையான சொத்துகள் வாங்கியது (2)	2,40,000
முதலீடுகள்	90,000	முதலீடுகள் வாங்கியது (4)	80,000
பங்குகள் வெளியிடல்	1,00,000	கடன்பத்திரங்கள் மீட்பு	1,10,000
வியாபார இலாபம் (6)	3,42,000	1970-ல் இலாப ஈவு கொடுக்கப்பட்டது	30,000
		வருமானவரி செலுத்தியது	55,000
		நடைமுறை முதல் கூடுதல்	25,000
	5,40,000		5,40,000

விளக்கங்கள்

	ரூ.
5. வருமானவரி ஒதுக்கீடு 1970	70,000
வருமான வரி கட்டியது	55,000
	15,000
இவ்வாண்டு ஒதுக்கியது (1971-ல்)	60,000
1971-இறுதியில் வருமான வரி ஒதுக்கீடு	75,000

6. வியாபார இலாபம்

	ரூ.	ரூ.
31-12-71-ல் இலாப நட்டக் க/கு	—	2,00,000
கூட்டு: தேய்மானம் (1)	80,000	
சொத்து விற்பனையில் நட்டம் (3)	2,000	
கடன்பத்திரங்கள் தள்ளுபடி க/கு எழுதப்பட்டது	5,000	
பொதுக் காப்பிருப்பு நிதிக்கு	50,000	

கடன்பத்திரங்கள் மீட்பில் அளித்த மதிப்புயர்வு	10,000	
1971-க்கு அளிக்கப்பட்ட இலாப ஈவு	35,000	
வருமான வரி ஒதுக்கீடு (5)	60,000	2,42,000
		4,42,000
கழி: இலாப நட்டக் க/கு 31-12-'70-ல்		1,00,000
வியாபாரஇலாபம்		ரூ. 3,42,000

எடுத்துக்காட்டு 4: 1-1-68ஆம் தேதியன்றைய இருப்புநிலைக் குறிப்பும் 31-12-68ஆம் தேதியன்று மதிப்பீடு செய்து எதிர்பார்க்கப் படும் இருப்புநிலைக் குறிப்பும் அளிக்கப்பட்டுள்ளன. 1968ஆம் ஆண்டின் நிதி நடமாட்ட அறிக்கையைத் தயார் செய்யவும்.

பொறுப்புகள்	1—1—1968	31—12—1968
	ரூ.	ரூ.
சாதாரண பங்கு முதல் க/கு	20,00,000	25,00,000
பங்கு மதிப்புயர்வு (share premium)	—	1,00,000
குத்தகைச் சொத்து விற்பனையில் இலாபம்	—	25,000
கடன்பத்திரங்கள் மீட்பு இலாபம்	—	4,000
இலாப நட்டக் க/கு, கீ/கொ	4,50,000	4,50,000
இவ்வாண்டு இலாபம்	—	4,85,000
4% கடன் பத்திரங்கள்	5,00,000	4,00,000
கடனீந்தோர்	6,40,000	5,90,000
வருமானவரி ஒதுக்கீடு	3,10,000	31,200
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	1,00,000	—
	40,00,000	45,85,200

சொத்துகள்	1-1-1968	31-12-1968
	ரூ.	ரூ.
வில்லங்கமில்லாச் சொத்து	14,50,000	18,50,000
குத்தகைச் சொத்து	50,000	—
இயந்திரச் சாதனங்கள்	10,80,000	11,70,000
தேய்மான நிதி	(7,20,000)	(9,30,000)
முதலீடுகள்	1,60,000	2,24,000
வேலைமுற்றுப் பொருள்	1,70,000	1,50,000
சரக்கிருப்பு	2,70,000	3,60,000
கடனாளிகள்	6,20,000	6,47,200
பாங்கிருப்பு	2,00,000	1,84,000
	40,00,000	45,85,200

1968ஆம் ஆண்டில் ரூ. 1,30,000 அடக்க விலையுள்ள ஓர் இயந்திரம் (தேய்மானம் ரூ. 30,000) ரூ. 90,000-க்கு விற்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடைமுறை முதல் மாற்றங்கள்பற்றிய அறிக்கை

நடைமுறைச் சொத்துகள்	1-1-68	31-12-68
வேலை முற்றுப் பொருள்	1,70,000	1,50,000
சரக்கிருப்பு	2,70,000	3,60,000
கடனாளிகள்	6,20,000	6,47,200
பாங்கிருப்பு	2,00,000	1,84,000
	12,60,000	13,41,200
கழி:		
நடைமுறைப் பொறுப்புகள்	ரூ.	ரூ.
கடனீந்தோர்	6,40,000	5,90,000
வருமானவரி ஒதுக்கீடு	3,10,000	31,200
	9,50,000	6,21,200
நடைமுறை முதல்	3,10,000	7,20,000
கூடுதல்	4,10,000	—
	7,20,000	7,20,000

பேரேட்டுக் க/கு வடிவத்திலும் நிதிமூலப் பயன்பாடுகளைக் கண்டு கொள்ளலாம். இம் முறை இக் கணக்கில் விளக்கப் பட்டுள்ளது.

இயந்திரச் சாதனக் க/கு

ப	ரூ.		வ ரூ.
இருப்புக் கீ/கொ (10,80,000+7,20,000)	18,00,000	பாங்கு க/கு (விற்றது)	30,000
பாங்கு க/கு (*) (வாங்கியது)	4,30,000	தேய்மானக் க/கு	90,000
		இலாப நட்டக் க/கு (விற்பனையில் ஏற்பட்ட நட்டம்)	10,000
		இருப்புக் கீ/இ (11,70,000+9,30,000)	21,00,000
	22,30,000		22,30,000

குத்தகைச் சொத்துக் க/கு

வ	ரூ.		வ ரூ.
இருப்புக் கீ/கொ	50,000	பாங்கு க/கு (விற்பனை)	75,000
விற்பனையில் ஏற்பட்ட இலாபக் க/கு	25,000		
	75,000		75,000

முதலீடுகள் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	1,60,000	இருப்புக் கீ/இ	2,24,000
பாங்கு க/கு (வாங்கியவை)	64,000		
	2,24,000		2,24,000
இருப்புக் கீ/கொ	2,24,000		

குறிப்பு *இத் தொகை இரு பக்கங்களிடையேயுள்ள வேறுபாடாகும். (Balancing Figure)

சாதாரணமாகப் பேரேட்டில் பதியும் முறையே கையாளப் படுகிறது.

சாதாரண பங்குமுதல் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	25,00,000	இருப்புக் கீ/கொ	20,00,000
		பாங்கு க/கு (பங்குகள் வெளியிட்டது)	5,00,000
	25,00,000		25,00,000
		இருப்புக் கீ/கொ	25,00,000

பங்கு மதிப்புயர்வு க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	1,00,000	பாங்கு க/கு	1,00,000
		இருப்புக் கீ/கொ	1,00,000

தீர்மானிக்கப்பட்ட இலாபஈவுக் க/கு

	ரூ.		ரூ.
பாங்கு க/கு (கொடுக்கப்பட்டது)	1,00,000	இருப்புக் கீ/கொ	1,00,000

4% கடன்பத்திரங்கள் க/கு

ப	ரூ.		ரூ.
கடன்பத்திரங்கள் மீட்பு இலாபக் க/கு	4,000	இருப்புக் கீ/கொ	5,00,000
பாங்கு க/கு கொடுக்கப்பட்டது	96,000		
இருப்புக் கீ/இ	4,00,000		
	5,00,000		5,00,000
		இருப்புக் கீ/கொ	4,00,000

குத்தகைச் சொத்து விற்பனை இலாபக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	25,000	குத்தகைச் சொத்துக் க/கு	25,000
		இருப்புக் கீ/கொ	25,000

கடன்பத்திரங்கள் மீட்பு இலாபக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	4,000	4% கடன்பத்திரங்கள் க/கு	4,000
		இருப்புக் கீ/கொ	4,000

இலாப நட்டக் க/கு

	ரூ.		ரூ.
தேய்மானக் க/கு	3,00,000	இருப்புக் கீ/கொ	4,50,000
இயந்திரச் சாதனக் க/கு (நட்டம்)	10,000	இவ்வாண்டு இலாபம் (★)	7,95,000
இருப்புக் கீ/இ	9,35,000		
	12,45,000		12,45,000

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
வியாபார இலாபம்	7,95,000	இலாப ஈவு (கொடுத்தது)	1,00,000
சாதாரண பங்குகள்	5,00,000	வில்லங்கமில்லாச் சொத்து வாங்கியது	4,00,000
பங்கு மதிப்புயர்வு	1,00,000	கடன்பத்திரங்கள் மீட்பு	96,000
குத்தகைச் சொத்து விற்பனை	75,000	இயந்திரச் சாதனங்கள்	4,30,000
		முதலீடுகள் வாங்கியது	64,000
இயந்திரச் சாதனங்கள், விற்பனை	30,000	நடைமுறைமுதல் கூடுதல்	4,10,000
	15,00,000		15,00,000

எடுத்துக்காட்டு 5:

ஒரு கம்பெனியின் 1963, 1964-ன் இருப்புநிலைக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

சொத்துகள்	1963	1964
	ரூ.	ரூ.
நிலம், கட்டடங்கள்	2,00,000	2,50,000
இயந்திரச் சாதனங்கள்	3,50,000	3,60,000
கடனாளிகள்	1,47,000	1,38,000
சரக்கிருப்பு	2,50,000	2,74,000
பாங்கிருப்பு	83,000	1,01,000
தொடக்கச் செலவுகள்	5,000	4,000
	10,35,000	11,27,000

பொறுப்புகள்	1963	1964
பங்குமுதல் க/கு	5,00,000	5,00,000
இலாப நட்டக் க/கு	1,50,000	2,52,000
கடன்பத்திரங்கள்	2,00,000	2,00,000
கடனீந்தோர்	1,20,000	1,05,000
ஐயக்கடன் காப்பு	5,000	4,000
தேய்மான நிதிக் க/கு		
நிலம், கட்டடங்கள்	30,000	34,000
இயந்திரச் சாதனங்கள்	30,000	32,000
	10,35,000	11,27,000

மேல் விவரங்கள்

1. 1964-ன் நிகர இலாபம் ரூ. 1,52,000

2. இவ்வாண்டில் ரூ. 7,000 அடக்கவிலையுள்ள (எழுதப்பட்டுள்ள தேய்மானம் ரூ. 1,000) ஓர் இயந்திரம் ரூ. 5,000-க்கு விற்கப்பட்டது.

3. 1964-க்காக ரூ. 50,000 இலாபஈவு, பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

விளக்கங்கள்	1964	1963
	ரூ.	ரூ.
கடனாளிகள் (ஐயக்கடன் காப்பு நீக்கி)	1,34,000	1,42,000
சரக்கிருப்பு	2,74,000	2,50,000
பாங்கு இருப்பு	1,01,000	83,000
	5,09,000	4,75,000
கழி: கடனீந்தோர்	1,05,000	1,20,000
நடைமுறைமுதல்	4,04,000	3,55,000
கூடுதல்	—	49,000
	4,04,000	4,04,000

இலாப நட்டக் க/கு

	ரூ.		ரூ.
இலாப ஈவு	50,000	இருப்புக் கீ/கொ	1,50,000
இயந்திரச் சாதனக் க/கு	1,000	வியாபார இலாபம் (★)	1,61,000
இயந்திரச் சாதனங்கள் தேய்மானக் க/கு	3,000		
நிலம் கட்டடங்கள் தேய்மானக் க/கு	4,000		
தொடக்கச் செலவு	1,000		
இருப்புக் கீ/இ	2,52,000		
	3,61,000		3,61,000

இயந்திரச் சாதனக் க/கு

ப	ரூ.	வ	ரூ.
இருப்புக் கீ/கொ	3,50,000	இலாப நட்டக் க/கு	1,000
பாங்கு க/கு (★) (வாங்கியது)	17,000	பாங்கு க/கு	5,000
		தேய்மான நிதி	1,000
		இருப்பு கீ/இ	3,60,000
	3,67,000		3,67,000
இருப்புக் கீ/கொ	3,60,000		

இயந்திரச் சாதனங்கள் தேய்மான நிதிக் க/கு

	ரூ.		ரூ.
இயந்திரச் சாதனங்கள் க/கு	1,000	இருப்புக் கீ/கொ	30,000
இருப்புக் கீ/இ	32,000	தேய்மானக் க/கு (★)	3,000
	33,000		33,000
		இருப்புக் கீ/கொ	32,000

நிலம் கட்டடங்கள் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	2,00,000	இருப்புக் கீ/இ	2,50,000
பாங்கு க/கு (வாங்கியது)	50,000		
	2,50,000		2,50,000
இருப்புக் கீ/கொ	2,50,000		

நிலம் கட்டடங்கள் தேய்மானநிதிக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	34,000	இருப்புக் கீ/கொ	30,000
		தேய்மானக் க/கு	4,000
	34,000		34,000
		இருப்புக் கீ/கொ	34,000

தொடக்கச் செலவுகள் க/கு

ப	ரூ.	வ	ரூ.
இருப்புக் கீ/கொ	5,000	இலாப நட்டக் க/கு	1,000
		இருப்புக் கீ/இ	4,000
	5,000		5,000
இருப்புக் கீ/கொ	4,000		

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
வியாபார இலாபம்	1,61,000	நிலம் வாங்கியது	50,000
இயந்திர விற்பனை	5,000	இயந்திரம் வாங்கியது	17,000
		இலாப ஈவு கொடுத்தது	50,000
		நடைமுறை முதல் கூடுதல்	49,8:0
	1,66,000		1,66,000

எடுத்துக்காட்டு 6:

பின்வரும் இருப்புநிலைக் குறிப்புகளிலிருந்து ஒரு நிதி நடமாட்ட அறிக்கை தயார் செய்யவும்:

பொறுப்புகள்	1970	1971
	ரூ.	ரூ.
கடனீந்தோர்	39,500	41,135
செலுத்த வேண்டிய உண்டியல்கள்	33,780	11,525
பாங்கு அதிகப்பற்றுக் க/கு	59,510	—
வருமான வரி ஒதுக்கீடு	40,000	50,000
பொதுக் காப்பிருப்பு	50,000	40,000
இலாப நட்டக் க/கு	39,690	41,220
பங்கு முதல்	2,00,000	2,60,000
	4,62,480	4,53,880

சொத்துகள்	ரூ	ரூ
பாங்கிருப்பு	2,500	2,700
கடனாளிகள்	85,175	72,625
முன் செலுத்திய செலவுகள்	2,315	735
சரக்கிருப்பு	1,10,040	97,370
கட்டடங்கள்	1,48,500	1,44,250
இயந்திரச் சாதனங்கள்	1,12,950	1,16,200
நன்மதிப்பு	—	20,000
	4,62,480	4,53,880

கம்பெனியின் பேரேட்டிலிருந்து பின்வரும் செய்திகள் கிடைத்துள்ளன.

1. இடைக்கால இலாபஈவு கொடுத்தது ரூ. 26,000.

2. மற்றொரு கம்பெனியிடமிருந்து ரூ. 60,000 பெறுமான சொத்துகள் வாங்கப்பட்டன. அக் கம்பெனிக்கு ரூ. 60,000 பெறுமான இக் கம்பெனியின் பங்குகள் அளிக்கப்பட்டன. வாங்கிய சொத்துகளின் விவரம். சரக்கு ரூ. 21,630; இயந்திரங்கள் ரூ 18,360; தொழில் நன்மதிப்பு ரூ. 20,000; இதைத் தவிர வேறு சில விடுகருவிகள் (Loose Tools) ரூ. 5,650-க்கு வாங்கப்பட்டன.

3. இந்த ஆண்டு செலுத்திய வருமானவரி ரூ. 25,000; இவ்வாண்டு இலாபம் ரூ. 62,530.

நடைமுறை முதலில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய அட்டவணை

	1970	1971	சாதகமான விளைவு +	பாதகமான விளைவு —
நடைமுறைச் சொத்துகள்	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
ரொக்கம்	2,500	2,700	200	—
கடனாளிகள்	85,175	72,625	-	12,500
முன் செலுத்திய செலவுகள்	2,315	735	—	1,580
சரக்கிருப்பு	1,11,040	97,370	—	13,670
(அ)	2,01,030	1,73,430		
நடைமுறைப் பொறுப்புகள்				
கடனீந்தோர்	39,500	41,135	—	1,635
செலுத்திய வேண்டிய உண்டியல்	33,780	11,525	22,255	—
பாங்கு அதிகப்பற்றுக் க/கு	59,510	—	59,510	-
(ஆ)	1,32,790	52,660	81,965	29,435
நடைமுறை முதல் (அ — ஆ)	68,240	1,20,770	—	—
நடைமுறைமுதல் கூடுதல்	52,530	—	—	52,580
	1,20,770	1,20,770	81,965	81,965

வருமானவரி ஒதுக்கீடு க/கு

ப.	ரூ.		வ. ரூ.
பாங்குக் க/கு (வரி கொடுத்து)	25,000	இருப்புக் கீ/கொ	40,000
இருப்புக் கீ/இ	50,000	இலாப நட்டக் க/கு	35,000
	75,000		75,000
		இருப்புக் கீ/கொ	50,000

இலாப நட்டக் க/கு

	ரூ.		ரூ.
வருமானவரி ஒதுக்கீடு	35,000	இருப்புக் கீ/கொ	39,690
இடைக்கால இலாப ஈவு	26,000	வியாபார இலாபம் *	62,530
இருப்புக் கீ/இ	41,220		1,02,220
	1,02,220	இருப்புக் கீ/கொ	41,220

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
பங்கு முதல்	60,000	இயந்திரங்கள் வாங்கியவை (18,360 + 5,650)	24,010
வியாபார இலாபம்	62,530	நன்மதிப்பு	20,000
தேய்மானம்		இடைக்கால இலாப ஈவு	26,000
கட்டடங்கள்	4,250	வருமானவரி	25,000
இயந்திரங்கள்	20,760	நடைமுறை கூடுதல்	52,530
	1,47,540		1,47,540

கட்டடங்கள் க/கு

ப	ரூ.		வ ரூ.
இருப்புக் கீ/கொ	1,48,500	தேய்மானக் க/கு (*)	4,250
		இருப்புக் கீ/கொ	1,44,250
	1,48,500		1,48,500
இருப்புக் கீ/இ	1,44,250		

* இத் தொகை இரு பக்கங்களிடையேயுள்ள வேறுபாடாகும். (Balancing figure).

இயந்திரச் சாதனங்கள் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	1,12,950	தேய்மானக் க/கு	20,760
பங்கு முதல் க/கு	18,360	இருப்புக் கீ/இ	1,16,200
ரொக்கக் க/கு	5,650		
	1,36,960		1,36,960
இருப்புக் கீ/கொ	1,16,200		

எடுத்துக்காட்டு 7:

பின்வரும் குறிப்புகளிலிருந்து 1969-ன் நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்:

சொத்துகள்	**1968**	**1969**
	ரூ.	ரூ.
நிலையான சொத்துகள்	5,10,000	6,20,000
முதலீடுகள்	30,000	80,000
நடைமுறைச் சொத்துகள்	2,40,000	3,75,000
கடன் பத்திரங்கள்மீதான தள்ளுபடி	10,000	5,000
	7,90,000	10,80,000

பொறுப்புகள்	ரூ.	ரூ.
சாதாரண பங்கு முதல்	3,00,000	3,50,000
சலுகைப் பங்கு முதல்	2,00,000	1,00,000
8% கடன்பத்திரங்கள்	1,00,000	2,00,000
காப்பிருப்பு	1,10,000	2,70,000
ஐயக் கடன் பாதுகாப்பு	10,000	15,000
நடைமுறைப் பொறுப்புகள்	70,000	1,45,000
	7,90,000	10,80,000

குறிப்பு:

1. தேய்மான நிதிக் கணக்கில் இருப்பு:- 31—12—1968-ல் ரூ. 1,50,000; 31-12-1969-ல் ரூ. 1,90,000.

2. ரூ. 70,000 அடக்கவிலையுள்ள (எழுதப்பட்ட தேய்மானம் ரூ. 30,000) ஓர் இயந்திரம் ரூ. 25,000-க்கு விற்கப்பட்டது.

3. 1-1-69-ல் சலுகைப் பங்குகள் 5% மதிப்புயர்வில் மீட்கப் பட்டன.

4. 1968ஆம் ஆண்டுக்காக 15% இலாப ஈவு கொடுக்கப்பட்டது.

விடை

நடைமுறை முதல் மாற்ற அறிக்கை

	1968	1969
	ரூ.	ரூ.
நடைமுறைச் சொத்துகள்	2,40,000	3,75,000
கழி: ஐயக்கடன் காப்பு	10,000	15,000
	2,30,000	3,60,000
கழி: நடைமுறைப் பொறுப்புகள்	70,000	1,45,000
நடைமுறைமுதல்	1,60,000	2,15,000
நடைமுறைமுதல் கூடுதல்	55,000	—
	2,15,000	2,15,000

1. தேய்மான நிதி

31-12-1968	ரூ.	1,50,000
கழி: விற்பனை செய்யப்பட்ட இயந்திரம்மீதான தேய்மானம்	ரூ.	30,000
		1,20,000
கூட்டு: இவ்வாண்டின் தேய்மானக் க/கு	(*)	70,000
31-12-1969-ல் தேய்மான நிதிக் க/கு	ரூ.	1,90,000

2. நிலையான சொத்துகள் வாங்கியது

31-12-1968-ல் நிலையான சொத்துகளின் அடக்க விலை (5,10,000+ரூ. 1,50,000)	ரூ. 6,60,000
கழி: விற்பனை செய்த சொத்தின் அடக்கவிலை	70,000
	5,90,000
1969-ல்வாங்கப்பட்ட நிலையான சொத்துகள் (*)	2,20,000
31-12-69-ல் நிலையான சொத்துகளின் விலை (ரூ. 6,20,000 + ரூ. 1,90,000	8,10,000

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
வியாபார இலாபம்	3,09,000	நிலையான சொத்துகள் வாங்கியது	2,20,000
பங்குகள் வெளியீடு	50,000	முதலீடுகள் வாங்கியது	50,000
கடன்பத்திரங்கள் வெளியீடு	1,00,000	சலுகைப் பங்குகள் மீட்பு	1,05,000
இயந்திரம் விற்பனை	25,000	இலாப ஈவு	
		சலுகைப் பங்குகள்	9,000
		சாதாரணப் பங்குகள்	45,000
		நடைமுறைமுதல் கூடுதல்	55,000
	ரூ. 4,84,000		ரூ. 4,84,000

வியாபார இலாபம்	ரூ.
31-12-1969-ல் காப்பிருப்பு	2,70,000
கூட்டு: சலுகைப் பங்கு மீட்பதில் ஏற்பட்ட மதிப்புயர்வு	5,000
சலுகைப் பங்கின்மீதான இலாப ஈவு	9,000
சாதாரண பங்குகளின் மீதான இலாப ஈவு	45,000
இயந்திரம் விற்றதில் ஏற்பட்ட இலாபம்	15,000
தேய்மானம்	70,000
கடன்பத்திரங்கள் மீதான தள்ளுபடி	5,000
	4,19,000
கழி:	
31-12-68-ல் காப்பிருப்பு	1,10,000
வியாபார இலாபம்	ரூ. 3,09,000

எடுத்துக் காட்டு 8

தமிழ்நாடு கம்பெனி லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்புகளிலிருந்து நிதி நடமாட்ட அறிக்கையொன்று தயாரிக்கவும்:

சொத்துகள்	1964	1963
	ரூ.	ரூ.
இயந்திரச் சாதனங்கள்	25,000	20,000
வில்லங்கமில்லாச் சொத்து	1,00,000	—
முதலீடுகள்	—	15,000
சரக்கிருப்பும், வேலைமுற்றாப் பொருளும்	44,000	30,000
கடனீந்தோர்	30,000	20,000
ரொக்கம்	1,000	15,000
பொறுப்புகள்	2,00,000	1,00,000
பங்குமுதல்	50,000	50,000
முதலீடுகள் விற்பனை இலாபக் க/கு	3,000	—
தேய்மான நிதிக் க/கு (இயந்திரங்கள்)	12,000	8,000
இலாப நட்டக் க/கு	35,000	15,000
6% கடன்பத்திரங்கள்	50,000	—
பாங்குக் கடன்	20,000	—
கடனீந்தோர்	22,000	18,000
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	—	3,000
வருமானவரி ஒதுக்கீடு	8,000	6,000
	ரூ. 2,00,000	1,00,000

கம்பெனியின் இயக்குநர்கள் 1964ஆம் ஆண்டுக் கணக்கில் பின்வரும் மாற்றங்களைச் செய்யத் தீர்மானித்துள்ளனர்:

1. ஐயக்கடன் காப்புக்காக ரூ. 2,000 ஒதுக்குதல்
2. வேலைமுற்றாப் பொருளின் மதிப்பில் ரூ. 6,000 குறைத்தல்
3. பொதுக்காப்பிருப்பிற்கு ரூ. 5,000 கூட்டுதல்
4. 8% இலாபஈவு பரிந்துரைத்தல்

சிறப்புக் குறிப்பு: முதலில் இயக்குநர்கள் பரிந்துரை செய்தது போல் 1964ஆம் ஆண்டுக் கணக்கில் மாற்றங்களைச் செய்த பிறகு அமையும் இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்யவேண்டும்.

1964 டிசம்பர் 31-ல் உள்ளபடி இருப்புநிலைக் குறிப்பு

	ரூ.		ரூ.
பங்கு முதல்	50,000	இயந்திரச் சாதனங்கள்	25,000
முதலீடுகள் விற்பனை இலாப க/கு	3,000	வில்லங்கமில்லாச் சொத்து	1,00,000
தேய்மான நிதிக் க/கு (இயந்திரங்கள்)	12,000	சரக்கு, வேலைமுற்றுப் பொருள் (44,000—6,000)	38,000
6% கடன்பத்திரங்கள்	50,000		
பாங்குக் கடன்	20,000	கடனாளிகள் (30,000— 2,000)	28,000
கடனீந்தோர்	22,000	ரொக்கம்	1,000
அறிவிக்கப்பட்ட இலாப ஈவு	4,000		
வருமானவரி ஒதுக்கீடு	8,000		
பொதுக்காப்பிருப்பு	5,000		
இலாப நட்டக் க/கு (35,000 — 17,000)	18,000		
	1,92,000		1,92,000

பி. கு: மாற்றம் செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பையும் 1963ஆம் ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பையும் ஒப்பிட்டு நிதி நடமாட்ட அறிக்கையைத் தயாரிக்க வேண்டும்.

நடைமுறைமுதல் மாறுதல் அறிக்கை

நடைமுறைச் சொத்துகள்		1964	1963
		ரூ.	ரூ.
சரக்கும், வேலைமுற்றுப் பொருள்களும்		38,000	30,000
கடனாளிகள் (ஐயக்கடன் காப்பு நீக்கி)		28,000	20,000
ரொக்கம்		1,000	15,000
(அ)	ரூ.	67,000	65,000

நடைமுறைமுதல்

கடனீந்தோர்		22,000	18,000
வருமானவரி ஒதுக்கீடு		8,000	6,000
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு		4,000	3,000
(ஆ)	ரூ.	34,000	27,000
நடைமுறைமுதல் (அ—ஆ)		33,000	38,000
கூடுதல்		5,000	—
		38,000	38,000

வியாபார இலாபம் 1964

	ரூ
1964-ல் இலாப நட்டக் கணக்கு	18,000
கூட்டு: பொதுக் காப்பிருப்பு	5,000
	23,000
கழி: 1963-ல் இலாப நட்டக் க/கு	15,000
வியாபார இலாபம்	8,000

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
வியாபார இலாபம்	8,000	வாங்கியவை	
தேய்மானக் க/கு	4,000	வில்லங்க மில்லாச் சொத்து	1,00,000
முதலீடுகள் விற்பனை	18,000	இயந்திரச் சாதனங்கள்	5,000
கடன்பத்திரங்கள் வெளியிட்டது	50,000		
பாங்குக்கடன்	20,000		
நடைமுறைமுதல் கூடுதல்	5,000		
	ரூ. 1,05,000		ரூ. 1,05,000

எடுத்துக்காட்டு 9:

ஆடம் அண்டு ஈவ் லிமிடெட்டின் 1962—1963ஆம் ஆண்டுகளின் இருப்புநிலைக் குறிப்புகள் பின்வருவனவாம்;

	1963	1962
	ரூ.	ரூ.
பாங்கிருப்பு	45,000	1,30,000
கடனாளிகள்	1,40,000	90,700
சரக்கிருப்பு	1,96,000	1,42,500
நிலையான சொத்துகள்	6,00,000	3,60,000
முதலீடுகள்	10,000	11,250
முன் செலுத்திய செலவினங்கள்	21,000	14,000
	10,12,000	7,48,450

பின்வரும் விவரங்களும் அளிக்கப்படுகின்றன:

1. காப்பிருப்பு இலாப மிகுதிக் க/கு

1—1—63-ல் இருப்பு	1,48,000
கூட்டு: இவ்வாண்டு இலாபம்	1,98,500
	3,46,500
கழி: இலாப ஈவு கொடுத்தது	34,500
	3,12,000

2. நிலையான சொத்துகள்மீதான தேய்மானம் பின்வருவன:

31—12—1962-ல் ரூ. 1,80,000

31—12—1963-ல் ரூ. 1,60,000

3. சரிபாதிக்குத் தேய்மானம் எழுதப்பட்ட ரூ. 20,000 அடக்க விலையுள்ள ஓர் இயந்திரம் பயனற்றதாகக் கருதப்பட்டுக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. 1963-ல் மொத்தத் தேய்மானத் தொகை ரூ. 30,000.

4. ரூ. 5,000 அடக்கவிலையுள்ள முதலீடுகள் ரூ. 4,800-க்கு 1963-ல் விற்கப்பட்டது. மேலும் ரூ. 4,000 முகமதிப்புள்ள முதலீடுகள் ரூ. 3,750-க்கு வாங்கப்பட்டன. நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

நடைமுறைமுதல் மாறுதல் பற்றிய அட்டவணை மாற்றம்

நடைமுறைச் சொத்துகள்	1962	1963	சாதகம் (+)	பாதகம் (−)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
பங்கிருப்பு	1,30,000	45,000	—	85,000
கடனாளிகள்	90,700	1,40,000	49,300	—
சரக்கிருப்பு	1,42,500	1,96,000	53,500	—
முன் செலுத்திய செலவினங்கள்	14,000	21,000	7,000	—
	3,77,200	4,02,000		
கடனீந்தோர்	2,51,450	2,98,000	—	46,550
வருமானவரி ஒதுக்கீடு	65,000	1,72,000	—	1,07,000
	3,16,450	4,70,000		
நடைமுறைமுதல்	60,750	68,002	1,09,800	2,38,550
நடைமுறைமுதல் குறைவு	—	1,28,750	1,28,750	—
	60,750	60,750	2,38,550	2,38,550

குறிப்பு: 1962-ல் இருந்த நடைமுறைமுதல் (+) ரூ. 60,750, 1963-ல் (—) ரூ. 68,000 ஆகிறது. ஆக மொத்தத்தில் ரூ. 1,28,750 குறைகிறது.

விளக்கங்கள்

		ரூ.
நிலையான சொத்துகளின் அடக்க விலை (1963) (ரூ. 6,00,000+ரூ. 1,80,000)		7,80,000
நிலையான சொத்துகளின் அடக்கவிலை (1962)	5,20,000	
கழி: கணக்கிலிருந்து எடுக்கப்பட்டது	20,000	5,00,000
நிலையான சொத்துகள் வாங்கியது	ரூ.	2,80,000

வியாபார இலாபம்

	ரூ.
31—12—1963-ல் இலாப நட்ட க/கு	3,12,000
கூட்டு: இலாப ஈவு கொடுத்தது	34,500
தேய்மானம்	30,000
இயந்திரக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டது	10,000
முதலீடுகள் விற்பனையில் ஏற்பட்ட நட்டம்	200
	3,86,700
கழி: 31—12—62-ல் இலாப நட்ட க/கு	1,48,000
வியாபார இலாபம்	2,38,700

நிதி நடமாட்ட அறிக்கை

	ரூ.		ரூ.
வியாபார இலாபம்	2,38,700	நிலையான சொத்துகள்	2,80,000
பங்கு முதல்	33,000	கடன் மீட்பு	88,000
முதலீடுகள் விற்பனை	4,800	இலாப ஈவு	34,500
குறைந்த நடைமுறை முதல்	1,28,750	முதலீடுகள்	3,750
	ரூ. 4,05,250		ரூ. 4,05,250

எடுத்துக்காட்டு 10:

இராயலா லிமிடெட்டின் ஐந்தொகை பின்வருமாறு:

	1968 ப	1968 வ	1969 ப	1969 வ
பங்கு முதல்	—	2,00,000	—	2,00,000
வில்லங்கமில்லாச் சொத்து	—	—	—	47,600
விற்பனை இலாபக் க/கு 5% கடன்பத்திரங்கள்	—	—	—	50,000
கடன்பத்திரங்கள் தள்ளுபடி க/கு	—	—	1,000	—
வில்லங்கமில்லாச் சொத்து	1,12,500	—	1,51,000	—

இயந்திரச் சாதனங்கள்	2,48,000	—	2,96,000	—
இயந்திரச் சாதனங்கள் தேய்மான நிதிக் க/கு	—	1,14,200	—	1,25,350
நடைமுறைச் சொத்துகள்	1,86,150	—	1,78,950	—
நடைமுறைப் பொறுப்புகள்	—	1,09,250	—	82,250
இலாப நட்டக் க/கு சென்ற ஆண்டில் இருப்பு	—	92,200	—	1,22,000
நடப்பு ஆண்டு இலாபம்	—	29,800	—	36,850
1968ஆம் ஆண்டின் இலாப ஈவு	—	—	20,000	—
ஐயக்கடன் காப்பு	—	1,200	—	1,350
முதலீடுகள்	—	—	18,750	—
	5,46,650	5,46,650	6,65,700	6,65,700

விவரங்கள்

1. வில்லங்கமில்லாச் சொத்து விற்பனை செய்ததில் ஏற்பட்ட இலாபமும், எஞ்சிய வில்லங்கமில்லாச் சொத்துகளை மறுமதிப்பு செய்ததிலும் ஏற்பட்ட மிகுதி தொகையும், வில்லங்கமில்லாச் சொத்து விற்பனை இலாபக் கணக்கில் வரவெழுதப்பட்டுள்ளன.

2. 1969ஆம் ஆண்டில் ரூ. 24,000 அடக்கவிலையுள்ள ஓர் இயந்திரம் (எழுதப்பட்டுள்ள தேய்மான ரூ. 15,500) ரூ. 10,300-க்கு விற்பனை செய்யப்பட்டது.

3. 1—7—1969-ல் ரூ. 50,000 கடன்பத்திரங்கள் ரூ. 1,500 தள்ளுபடி செய்து வெளியிடப்பட்டது.

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்

நடைமுறைமுதல் மாற்ற அறிக்கை

	1968 ரூ.	1969 ரூ.
நடைமுறைச் சொத்துகள்	1,86,150	1,78,950
கழி: நடைமுறைப் பொறுப்புகள்	1,09,250	82,550
	76,900	96,400
நடைமுறை முதல் கூடுதல்	19,500	—
ரூ.	96,400	96,400

(அ) இவ்வாண்டு இலாபம்

	ரூ.
ஆண்டு இலாபம் ஐந்தொகைப்படி	36,850
கூட்டு: ஐயக்கடன் காப்பு	150
கடன்பத்திரங்கள் தள்ளுபடி எழுதப்பட்டது	500
	37,500
கழி: இயந்திர விற்பனையில் இலாபம்	1,800
சரிசெய்யப்பட்ட இலாபம் (Adjusted Profit)	35,700

(ஆ) இயந்திரச் சாதனங்கள் தேய்மானக் கணக்கு

ப	ரூ.	வ	ரூ.
இயந்திரச் சாதனக் க/கு	15,500	இருப்புக் கீ/கொ	1,14,200
இருப்புக் கீ/இ	1,25,350	தேய்மானம்	26,650
	1,40,850		1,40,850

(இ) வில்லங்கமில்லாச் சொத்துக் கணக்கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	1,12,500	பாங்கு க/கு (★)	9,100
வில்லங்கமில்லாச் சொத்து விற்பனை இலாபக் க/கு	47,600	இருப்புக் கீ/இ	1,51,000
	1,60,100		1,60,100
இருப்புக் கீ/கொ	1,51,000		

(ஈ) இயந்திரச் சாதனங்கள் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	2,48,000	பாங்குக் க/கு	10,300
இலாப நட்ட க/கு	1,800	தேய்மானக் க/கு	15,500
பாங்கு க/கு (★)	72,000	இருப்புக் கீ/இ	2,96,000
	3,21,800		3,21,800
இருப்புக் கீ/கொ	2,96,000		

நிதி நடமாட்ட அறிக்கை

	ரூ.		ரூ.
இவ்வாண்டு இலாபம்	35,700	இயந்திரச் சாதனங்கள் வாங்கியது	72,000
தேய்மானம்	26,650	முதலீடு வாங்கியது	18,750
கடன்பத்திரங்கள் வெளியீடு	48,500	இலாப ஈவு கொடுத்தது	20,000
வில்லங்கமில்லாச் சொத்து விற்பனை	9,100	நடைமுறை முதல் கூடுதல்	19,500
இயந்திரச் சாதனங்கள் விற்பனை	10,300		
	ரூ. 1,30,250		ரூ. 1,30,250

எடுத்துக்காட்டு 11: பாரத் தொழில் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்புகள் பின்வருவன:

சொத்துகள்	டிசம்பர் 1966	டிசம்பர் 1967
	ரூ.	ரூ.
இயந்திரங்கள், கட்டடங்கள்	1,72,778	2,07,782
முதலீடுகள்	1,17,500	90,000
சரக்கிருப்பு	83,164	95,438
கடனாளிகள்	67,186	65,638
முன்பணக் க/கு (Advance)	9,025	9,816
ரொக்க, பாங்கிருப்புகள்	40,409	30,337
கடன்பத்திரங்கள் தள்ளுபடி	4,305	2,867
	4,94,367	5,01,878

குறிப்பு: (★) இத் தொகை இருபக்கங்களிடையேயுள்ள வேறுபாடாகும் (Balancing Figure).

பொறுப்புகள்

	ரூ.	ரூ.
பங்கு முதல்	1,00,000	92,500
காப்பிருப்பும் இலாபமிகுதியும் (Reserves & Surplus)	80,231	80,753
வருநிகழ்வு ஒதுக்கீடு (Reserves for Contingency)	37,500	63,600
சரக்குகள் நட்டக் காப்பு ஒதுக்கீடு	2,000	8,500
தேய்மான நிதிக் க/கு	96,618	81,633
ஐயக்கடன் காப்புக் க/கு	4,630	3,815
4% கடன்பத்திரங்கள்	82,000	68,500
வட்டி, வரி முதலிய பொறுப்புகள்	12,037	21,263
கடனீந்தோர்	79,081	81,214
	4,94,367	5 01,878

மேல் விவரங்களாவன

1. 1967-ன் நிகர இலாபம் ரூ. 48,097.

2. 21—12—66-ல் பங்கு முதல் கணக்கில் 75 மீட்புச் சலுகைப் பங்குகளும் உள்ளன. இவை ரூ. 111 வீதம் மீட்கப்பட்டன. மீட்சிக்குப் பிறகு 10% இலாப ஈவு கொடுக்கப்பட்டது.

3. இவ்வாண்டில் ரூ. 31,365-க்கு இயந்திரங்கள் வாங்கப் பட்டன. மேலும் ரூ. 32,625 மதிப்புள்ள இயந்திரம் பயனற்றதாகக் கருதிக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டது. இந்த இயந்திரத்தின்மீது ரூ. 29,105-க்குத் தேய்மானம் எழுதப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் ரூ. 1,000-க்கு விற்கப்பட்டது. நிலையான சொத்துக்கணக்கில் ஏற்பட்ட கூடுதல் மேலும் கட்டடங்கள் கட்டியதைக் குறிப்பிடு கிறது.

4. ரூ. 5,000 மதிப்புள்ள கடன்பத்திரங்கள் ஒவ்வொரு ஆண்டும் மீட்கப்படுகின்றது. இவ்வாண்டில் வழக்கமாக மீட்பதை விட ரூ. 8,500 முகமதிப்புள்ள கடன்பத்திரங்கள் ரூ. 103 என்ற விலைக்கு மீட்கப்பட்டன.

5. இவ்வாண்டு ரூ. 11,400 வருநிகழ்வு ஒதுக்கீடு கணக்கில் பற்றெழுதப்பட்டது. 1960-ல் சர்ச்சையெழுப்பப்பட்ட வருமான வரிக்காகச் செலுத்தியதே ஆகும்.

6. காலப்போக்கினுல் ஏற்படும் சரக்கு மதிப்பிழப்பைச் சரிசெய்வதற்காக ஒவ்வொருஆண்டும் இலாப நட்டக் கணக்கில் பற்றெழுதப் படுகின்றது. அதுவே சரக்குகள் நட்டக் காப்பு ஒதுக்கீடு கணக்கு ஆகும்.

1967-ன் நிதிநடமாட்ட அறிக்கையைத் தயாரிக்கவும்.

நடைமுறை முதலில் ஏற்பட்ட மாறுதல்கள் அறிக்கை

நடைமுறைச் சொத்துகள்	1966	1967	சாதகம் (+)	பாதகம் (−)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
சரக்கிருப்பு	83,164	95,438	12,274	—
கடனாளிகள்	67,186	65,638	—	1,548
முன்பணக் க/கு	9,025	9,816	791	—
ரொக்கம்	40,409	30,337	—	10,072
	1,99,784	2,01,229		
நடைமுறைப் பொறுப்புகள்				
வட்டி, வரி முதலியன	12,307	21,263	—	8,956
கடனீந்தோர்	79,081	81,314	—	2,233
	91,388	1,02,577		
நடைமுறைமுதல்	1,08,396	98,652		
நடைமுறைமுதல் குறைவு	—	9,744	9,744	—
ரூ.	1,08,396	1,08,396	22,809	22,809

ப. பங்கு முதல் க/கு வ.

	ரூ.		ரூ.
பாங்கு க/கு (*)	8,325	இருப்புக் கீ/கொ	1,00,000
இருப்புக் கீ/இ	92,500	இலாப நட்டக் க/கு	825
	1,00,825		1,00,825
		இருப்புக் கீ/கொ	92,500

கட்டடங்கள் இயந்திரங்கள் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	1,72,778	தேய்மான நிதிக் க/கு	29,105
பாங்குக் க/கு (இயந்திரம் வாங்கியது)	31,365	ரொக்க க/கு	1,000
பாங்குக் க/கு (*) (கட்டடம் வாங்கியது)	36,264	இலாப நட்டக் க/கு (விற்பனையில் நட்டம்)	2,520
		இருப்புக் கீ/இ	2,07,782
	2,40,407		2,40,407
இருப்புக் கீ/கொ	2,07,782		

ப. **தேய்மான நிதிக் கணக்கு** வ.

	ரூ.		ரூ.
கட்டடங்கள் இயந்திரங்கள் க/கு	29,105	இருப்புக் கீ/கொ	96,618
இருப்புக் கீ/இ	81,633	இலாப நட்ட க/கு (இவ்வாண்டுத் தேய்மானம்)	14,120
	1,10,738		1,10,738
		இருப்புக் கீ/கொ	81,633

4% கடன்பத்திரங்கள் க/கு

	ரூ.		ரூ.
ரொக்கக் க/கு (மீட்சி)	5,000	இருப்புக் கீ/கொ	82,000
ரொக்கக் க/கு ,,	8,755	இலாப நட்டக் க/கு மதிப்புயர்வு	255
இருப்புக் கீ/இ	68,500		
	82,255		82,255
		இருப்புக் கீ/கொ	68,500

கடன்பத்திரங்கள் தள்ளுபடிக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	4,305	இலாப நட்டக் க/கு (*)	1,438
		இருப்புக் கீ/இ	2,867
	4,305		4,305
இருப்புக் கீ/கொ	2,867		

சரக்குகள் நட்டக் காப்புக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	8,500	இருப்புக் கீ/கொ	2,000
		இலாப நட்டக் க/கு (*)	6,500
	8,500		8,500
		இருப்புக் கீ/கொ	8,500

வருநிகழ்வு ஒதுக்கீடு க/கு

	ரூ.		ரூ.
ரொக்கக் க/கு	11,400	இருப்புக் கீ/கொ	37,500
இருப்புக் கீ/இ	63,600	இலாப நட்டக் க/கு (?)	37,500
	75,000		75,000
		இருப்புக் கீ/கொ	63,600

ப. **முதலீடுகள் க/கு** வ.

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	1,17,500	ரொக்கக் க/கு (விற்பனை) (?)	27,500
		இருப்புக் கீ/இ	90,000
	1,17,500		1,17,500
இருப்புக் கீ/கொ	90,000		

ஐயக்கடன் காப்புக் க/கு

	ரூ.		ரூ.
இலாப நட்டக் க/கு (*)	815	இருப்புக் கீ/கொ	4,630
இருப்புக் கீ/இ	3,815		
	4,630		4,630
		இருப்புக் கீ/கொ	3,815

இலாப நட்டக் க/கு

	ரூ.		ரூ.
பங்கு முதல் க/கு	825	இருப்புக் கீ/கொ	80,231
இலாப ஈவு (10%)	9,250	ஐயக்கடன் காப்பு	815
கட்டடங்கள் இயந்திரங்கள் க/கு	2,520	வியாபாரஇலாபம் (*)	72,115
4% கடன்பத்திரங்கள் க/கு	255		
கடன்பத்திரங்கள் தள்ளுபடிக் க/கு	1,438		
சரக்குகள் நட்டக் காப்பு	6,500		
வருநிகழ்வுக் காப்பு ஒதுக்கீடு	37,500		
தேய்மான நிதிக் க/கு	14,120		
இருப்புக் கீ/இ	80,753		
	1,53,161		1,53,161

எடுத்துக் காட்டு 12:

அளிக்கப்பட்டுள்ள செய்திகளைக் கொண்டு 1967-68ஆம் ஆண்டின் நிதி நடமாட்ட அறிக்கையைத் தயாரிக்கவும்:

	1967 ஜுன் ரூ.	1968 ஜுன் ரூ.
வியாபாரஇலாபம்	45,000	70,000
முதலீடுகள் விற்பனை இலாபம்	—	2,000
	45,000	72,000
வருமான வரி ஒதுக்கீடு	27,700	45,000
	17,300	27,000
இருப்புக் கீ/கொ	15,000	17,300
கடந்த ஆண்டுகளில் வருமானவரி ஒதுக்கீடுகளால் மீதம்	—	4,000
	32,300	48,300
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	15,000	15,000
	17,300	33,300
பொதுக்காப்பிற்கு மாற்றியது	—	10,000
	17,300	23,300

குறிப்பு: (*) இத் தொகை இரு பக்கங்களிடையேயுள்ள வேறுபாடாகும் (Balancing Figure)

இருப்புநிலைக் குறிப்பு

	1967		1968	
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
நிலையான சொத்துகள்	50,000		60,000	
கூட்டு: புதிதாக வாங்கியவை	10,000		8,000	
	60,000		68,000	
கழி: தேய்மானம்	20,000	40,000	32,000	36,000
நடைமுறைப் பொறுப்புகள்				
கடனீந்தோர்	70,000		90,000	
பாங்கு அதிகப்பற்றுக் க/கு	1,15,000		1,40,000	
கொடுக்க வேண்டிய செலவினங்கள்	8,000		9,200	
நடப்புவரிக் க/கு	19,700		30,000	
			15,000	
			2,84,200	
தீர்மானிக்கப்பட்ட இலாபசவு	15,000		2,84,250	
	2,27,700		2,84,250	
நடைமுறைச் சொத்துகள்				
முதலீடுகள்	12,000			
கடனாளிகள்	1,30,000		2,18,500	
சரக்கிருப்பு	1,78,000		2,00,000	
	3,20,000		4,18,500	
நிகர நடைமுறைச் சொத்து		92,000		1,34,300
		1,32,300		1,70,300
சாதாரணப் பங்குமுதல்		70,000		80,000
பொதுக்காப்பிருப்பு		25,000		35,000
இலாப நட்டக் க/கு		17,300		23,300
வருமானவரி ஒதுக்கீடுக் க/கு		20,000		32,000
		1,32,300		1,70,300

நடைமுறைமுதலில் மாற்றங்கள்

நடைமுறைச் சொத்துகள்	1967	1968
	ரூ.	ரூ.
முதலீடுகள்	12,000	—
கடனாளிகள்	1,30,000	2,18,500
சரக்கிருப்பு	1,78,000	2,00,000
	3,20,000	4,18,500

நடைமுறைப் பொறுப்புகள்		
	ரூ.	ரூ.
கடனீந்தோர்	70,000	90,000
கொடுக்க வேண்டிய செலவினங்கள்	8,000	9,200
பாங்கு க/கு அதிகப்பற்று	1,15,000	1,40,000
நடப்புவரிக் க/கு	19,700	30,000
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	15,000	15,000
நடைமுறைப் பொறுப்புகள் மொத்தம்	2,27,700	2,84,200
நடைமுறைமுதல்	92,300	1,34,300
கூடுதல்	42,000	—
	1,34,300	1,34,300

வருமானவரி ஒதுக்கீட்டுக் க/கு

	ரூ.		ரூ.
இலாபநட்டக் க/கு	4,000	இருப்புக் கீ/கொ	20,000
ரொக்கக் க/கு (★)	29,000	இலாப நட்டக் க/கு	45,000
இருப்புக் கீ/கொ	32,000		65,,000
	65,000	இருப்புக் கீ/கொ	32,000

பொதுக்காப்பிருப்புக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	35,000	இருப்புக் கீ/கொ	25,000
		இலாப நட்டக் க/கு (★)	10,000
	35,000		35,000
		இருப்புக் கீ/கொ	35,000

சாதாரணப் பங்குமுதல் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	80,000	இருப்புக் கீ/கொ	70,000
		ரொக்கக் க/கு (★)	10,000
	80,000		80,000
		இருப்புக் கீ/கொ	80,000

தேய்மான நிதிக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	32,000	இருப்புக் கீ/கொ	20,000
		இலாப நட்டக் க/கு	12,000
	32,000		32,000
		இருப்புக் கீ/கொ	32,000

நிலையான சொத்துக் கணக்கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	60,000	இருப்புக் கீ/இ	68,000
ரொக்கக் க/கு	8,000		
	68,000		68,000
இருப்புக் கீ/கொ	68,000		

இலாப நட்டக் க/கு

	ரூ.		ரூ.
வருமானவரி ஒதுக்கீட்டுக் க/கு	45,000	இருப்புக் கீ/கொ	17,300
பொதுக் காப்பிருப்பு	10,000	வருமானவரிஒதுக்கீட்டுக் க/கு	4,000
தேய்மானம்	12,000	வியாபார இலாபம் (★)	69,000
இருப்புக் கீ/இ	23,300		
	90,300		90,300
		இருப்புக் கீ/கொ	23,300

நிதி நடமாட்ட அறிக்கை

	ரூ.		ரூ.
பங்கு முதல் வெளியீடு	10,000	நிலையான சொத்துகள்	17,300
வியாபார இலாபம்	69,000	வரி செலுத்தியது	29,000
		நடைமுறைமுதல் கூடுதல்	42,000
	79,000		79,000

குறிப்பு: ★ இத் தொகை இரு பக்கங்களிடையேயுள்ள வேறுபாடாகும் (Balancing Figure).

எடுத்துக்காட்டு 13: நன்மதிப்புக் கம்பெனி லிமிடெட் பின்வரும் இருப்புநிலைக் குறிப்புகளை அளிக்கிறது.

	1962	1963
பொறுப்புகள்	ரூ.	ரூ.
சாதாரணப் பங்கு முதல்	5,00,000	6,00,000
8% மீட்புச் சலுகைப் பங்குகள்	2,00,000	—
முதல் மீட்புச் சேமநிதி (Capital Redemption Reserve)	—	1,00,000
பங்கு மதிப்புயர்வு	50,000	50,000
இலாப நட்டக் க/கு	1,40,000	2,70,000
பொதுக் காப்பிருப்பு	1,00,000	1,30,000
வருமானவரிக் காப்பிருப்பு	70,000	90,000
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	50,000	60,000
கடனீந்தோர்	1,40,000	1,80,000
தேய்மான நிதிக் க/கு	1,80,000	2,30,000
	14,30,000	17,10,000
சொத்துகள்	ரூ.	ரூ.
நிலையான சொத்துகள்	8,50,000	10,40,000
முதலீடுகள்	1,00,000	80,000
தொடக்கச் செலவுகள்	40,000	30,000
நடைமுறைச் சொத்துகள்	4,40,000	5,60,000
	14,30,000	17,10,000

1. 1963ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு கொடுக்கப்பட்டது. இதைத் தவிர மீட்புச் சலுகைப் பங்குகள் மீதான இலாபஈவும் 30—6—63 முடிய கொடுக்கப்பட்டது.

2. 30—6—63-ல் மீட்புச் சலுகைப்பங்குகள் 5% மதிப்புயர்வில் மீட்கப்பட்டது. மீட்பினல் ஏற்பட்ட மதிப்புயர்வு (நட்டம்) பங்குகள் வெளியீட்டினுல் ஏற்பட்ட மதிப்புயர்வில் (இலாபம்) ஈடு செய்யப்பட்டது.

3. 1962ஆம் ஆண்டின் வருமானவரிப் பொறுப்பு ரூ 55,000 எனத் தீர்மானிக்கப்பட்டது. 1962ஆம் ஆண்டின் வருமானவரிக் காப்பிருப்பு மிகுதிப் பொதுக் காப்பிருப்பிற்கு மாற்றப்பட்டது.

4. 1963ஆம் ஆண்டில் ரூ. 30,000 அடக்க விலையுள்ள ஒரு நிலையான சொத்து (எழுதப்பட்டுள்ள தேய்மானம் 16,000) ரூ. 10,000-க்கு விற்கப்பட்டது.

5. ரூ. 20,000 அடக்கவிலையுள்ள முதலீடுகள் ரூ. 16,000-க்கு விற்கப்பட்டன.

நிதிநடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

	1962	1963
	ரூ.	ரூ.
நடைமுறைச் சொத்துகள்	4,40,000	5,60,000
கழி: நடைமுறைப் பொறுப்புகள்	1,40,000	1,80,000
நடைமுறை முதல்	3,00,000	3,80,000
கூடுதல்	80,000	—
	3,80,000	3,80,000

ப முதலீடுகள் க/கு வ

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	1,00,000	ரொக்கக் க/கு	16,000
		இலாப நட்டக் க/கு	4,000
		இருப்புக் கீ/இ	80,000
	1,00,000		1,00,000
இருப்புக் கீ/கொ	80,000		

தேய்மான நிதிக் க/கு

	ரூ.		ரூ.
நிலையான சொத்துக் க/கு	16,000	இருப்புக் கீ/கொ	1,80,000
இருப்புக் கீ/இ	2,30,000	இலாப நட்டக் க/கு	66,000
	2,46,000		2,46,000
		இருப்புக் கீ/கொ	2,30,000

நிலையானச் சொத்துக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	8,50,000	தேய்மான நிதிக் க/கு	16,000
ரொக்கக் க/கு	2,20,000	ரொக்கக் க/கு	10,000
		இலாப நட்டக் க/கு	4,000
		இருப்புக் கீ/இ	10,40,000
	10,70,000		10,70,000
இருப்புக் கீ/கொ	10,40,000		

இலாப நட்டக் க/கு

ப	ரூ.	வ	ரூ.
முதலீடு விற்பனையில் நட்டம்	4,000	இருப்புக் கீ/கொ	1,40,000
இலாப ஈவு	60,000	வியாபார இலாபம் (★)	4,87,000
தேய்மானக் க/கு	66,000		
முதல் மீட்புச் சேமநிதி	1,00,000		
பொதுக் காப்பிருப்பு	15,000		
வருமான வரிக் க/கு	90,000		
தொடக்கச் செலவு	10,000		
மீட்புச் சலுகைமீதான இலாப ஈவு	8,000		
இயந்திரங்கள் விற்பனையில் நட்டம்	4,000		
இருப்புக் கீ/இ	2,70,000		
	6,27,000		6,27,000

நிதி நடமாட்ட அறிக்கை

	ரூ.		ரூ.
பங்குகள் வெளியீடு	1,00,000	சலுகைப் பங்குகள் மீட்பு	2,10,000
+ மதிப்புயர்வு	10,000	இலாப ஈவு	50,000
இயந்திர விற்பனை	10,000	சலுகைப் பங்கு இலாப ஈவு	8,000
முதலீடுகள் விற்பனை	16,000	வருமான வரி	55,000
இலாப நட்டக் க/கு	4,87,000	நிலையானச் சொத்து வாங்கியது	2,20,000
		நடமுறைமுதல் கூடுதல்	80,000
	6,23,000		6,23,000

எடுத்துக்காட்டு 15:

ஏ, பி, சி கம்பெனி லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்புகள் பின்வருவன:

சொத்துகள்	1959	1960
	ரூ.	ரூ.
குத்தகைச் சொத்து	1,20,000	1,20,000
இயந்திரங்கள்	84,000	80,000
மனைத்துணைப் பொருள்	19,000	21,000
முதலீடுகள்	50,000	80,000
கடனாளிகள்	27,000	37,000
சரக்கிருப்பு	62,000	73,000
ரொக்க இருப்பு	24,000	20,000
பங்குகள் வெளியீட்டுச் செலவுகள்	—	200
	3,86,000	4,31,200
பங்கு முதல்	1,20,000	1,50,000
மதிப்புயர்வு	—	15,000
பொதுக் காப்பிருப்பு	60,000	65,000
இலாப நட்டக் க/கு	6,000	8,000
6% கடன்பத்திரங்கள்	80,000	60,000

தேய்மான நிதிக் க/கு		
குத்தகைச் சொத்து	36,000	42,000
இயந்திரங்கள்	32,000	38,000
மனைத்துணைப் பொருள்	6,000	7,000
வருமான வரி ஒதுக்கீடு	17,000	23,000
கடனீந்தோர்	29,000	25,000
	3,86,000	4,33,000

1. 1—4—54-ல் ரூ. 4,000-க்கு வாங்கிய ஓர் இயந்திரம் 30—9—59-ல் ரூ. 800-க்கு விற்கப்பட்டது. அதே தேதியில் ரூ. 2,000-க்கு மனைத்துணைப் பொருள் வாங்கப்பட்டது.

2. இயந்திரத்தின்மீது 10% மும் மனைத்துணைப் பொருள்மீது 5%-மும் தேய்மானம் எழுதப்பட்டு வருகிறது.

3. 31—3—1960-ல் முடிவடைந்த ஆண்டிற்காக 15% இலாப ஈவு ரூ. 1,50,000 பங்குமுதல்மீது கொடுக்கப்பட்டது.

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

இயந்திரங்கள் க/கு

ப	ரூ.	வ	ரூ.
இருப்புக் கீ/கொ	84,000	தேய்மான நிதிக் க/கு	2,200
		ரொக்கக் க/கு	800
		இலாப நட்டக் க/கு	1,000
		இருப்புக் கீ/இ	80,000
	84,000		84,000
இருப்புக் கீ/கொ	80,000		

மனைத்துணைப் பொருள் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/கொ	19,000	இருப்புக் கீ/இ	21,000
ரொக்கக் க/கு	2,000		
	21,000		21,000
இருப்புக் கீ/கொ	21,000		

இயந்திரங்கள் தேய்மானக் க/கு

	ரூ.		ரூ.
இயந்திரங்கள் க/கு	2,200	இருப்புக் கீ/கொ	32,000
இருப்புக் கீ/இ	38,000	இயந்திரங்கள் க/கு	200
		தேய்மானக் க/கு	8,000
	40,200		40,200
		இருப்புக் கீ/கொ	38,000

மனைத்துணைப் பொருள் தேய்மான நிதிக் க/கு

	ரூ.		ரூ.
இருப்புக் கீ/இ	7,000	இருப்புக் கீ/கொ	6,000
		இலாப நட்டக் க/கு	1,000
	7,000		7,000
		இருப்புக் கீ/கொ	7,000

இலாப நட்டக் க/கு

	ரூ.		ரூ.
தேய்மானக் க/கு	9,200	இருப்புக் கீ/கொ	6,000
பொதுக் காப்பிருப்பு	5,000	வியாபார இலாபம் (★)	45,700
குத்தகைச் சொத்து	6,000		
இலாப சவு	22,500		
இயந்திர விற்பனையில் நட்டம்	1,000		
இருப்புக் கீ/இ	8,000		
	51,700		51,700

நிதி நடமாட்ட அறிக்கை

நடைமுறைமுதலில் ஏற்பட்ட மாற்றங்கள்—அறிக்கை

	1959	1960
நடைமுறைச் சொத்துகள்	ரூ.	ரூ.
கடனாளிகள்	27,000	37,000
சரக்கிருப்பு	62,000	73,000
ரொக்க இருப்பு	25,000	20,000
	1,13,000	1,30,000
நடைமுறைப் பொறுப்புகள்		
கடனீந்தோர்	29,000	25,000
வருமானவரி ஒதுக்கீடு	17,000	23,000
	46,000	48,000
நடைமுறைமுதல்	67,000	82,000
கூடுதல்	15,000	—
	82,000	82,000

நிதி நடமாட்ட அறிக்கை

	ரூ.		ரூ.
வியாபார இலாபம்	45,700	பங்கு வெளியீட்டுச் செலவு	2,000
பங்குகள் வெளியீடு முனைமத்தில்	45,000	முதலீடுகள் கொள்முதல்	30,000
இயந்திர விற்பனை	800	மனைத்துணைப் பொருள்	2,000
		கடன்பத்திரங்கள் மீட்பு	20,000
		இலாபஈவு கொடுத்தது	22,500
		நடைமுறை முதலில் கூடுதல்	15,000
	ரூ. 91,500		ரூ. 91,500

பயிற்சி

1. 'பி' அண்டு 'சி' கம்பெனியின் பின்வரும் சொத்து பொறுப்புக் குறிப்பிலிருந்து 1962—63-ன் நிதி நடமாட்ட அறிக்கையைத் தயாரிக்கவும்:

சொத்துகள்	**1962**	**1963**
	சூன்	சூன்
	ரூ.	ரூ.
நிலையானச் சொத்துகள்	2,50,000	3,50,000
நடைமுறைச் சொத்துகள்	1,45,000	1,30,000
ஒப்புறுதிக் கழிவு	10,000	7,000
இலாப நட்டக் க/கு (பற்றிருப்பு)	40,000	68,000
	4,45,000	5,55,000

பொறுப்புகள்		
சாதாரணப் பங்கு முதல்	1,50,000	1,50,000
கடன்	30,000	60,000
கடனீந்தோர்	1,00,000	1,50,000
பாங்கு அதிகப்பற்றுக் க/கு	90,000	1,30,000
தேய்மான நிதிக் க/கு	75,000	65,000
	4,45,000	5,55,000

மேல்விவரங்கள்

(அ) ரூ. 10,000 அடக்கவிலையுள்ள ஓர் இயந்திரம் (எழுதப் பட்டுள்ள தேய்மானம் ரூ. 6,000) ரூ. 3,000-க்கு விற்பனை செய்யப் பட்டது.

(ஆ) கடந்த ஆண்டுகளில் தேய்மானத்திற்காகத் தேவைக்கு மீறிய தொகை ஒதுக்கிவிட்டதால் இவ்வாண்டு அது சரிசெய்யப் பட்டது.

(இ) பொதுவாகச் சரக்கிருப்பை 10% குறைவாக மதிப்பிடுவது (under valuation) வழக்கமாக இருந்தது. இந்த ஆண்டின் இலாப நட்டக் க/கு தயாரிக்கப்பட்ட பிறகு 30-6-63-ல் சரக்கிருப்புச் சரியான அடக்கவிலைக்கு மதிப்பிடப்பட்டு, அக் கூடுதல் தொகை ஒப்புறுதிக் கழிவுக் கணக்கில் ஈடு செய்யப்பட்டது. தற்பொழுது சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 30,000.

2. அடியிற்கண்ட இருப்புநிலைக் குறிப்புகளிலிருந்து ஒரு நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்:

பொறுப்புகள்	1965	1966
	ரூ.	ரூ.
பாங்கு அதிகப்பற்றுக் க/கு	1,860	—
ஐயக் கடன் காப்பு	800	900
தேய்மான நிதிக் க/கு		
இயந்திரங்கள்	17,400	20,700
மனைத்துணைப் பொருள்கள்	1,360	1,580
மோட்டார் வண்டி	7,900	7,600
கடனீந்தோர்	12,800	11,700
வருமானவரி ஒதுக்கீடு	7,600	9,000
கடன்பத்திரங்கள்	20,000	40,000
பங்கு முதல்	1,10,000	1,19,400
பொதுக் காப்பிருப்பு	10,000	14,000
இலாப நட்டக் க/கு	7,080	9,090
	1,97,300	2,33,470

சொத்துகள்	1965	1966
ரொக்க இருப்பு	100	160
பாங்கிருப்பு	—	2,080
கடனாளிகள்	38,160	42,480
சரக்கிருப்பு	49,920	46,470
முதலீடுகள்	16,000	—
இயந்திரங்கள்	73,600	1,04,800
மனைத்துணைப் பொருள்	4,400	4,800
மோட்டார் வண்டி	14,800	14,400
கட்டடங்கள்	—	18,000
கடனீந்தோர்மீது தள்ளுபடிக்காப்பு	320	280
	1,97,300	2,33,470

மேல்விவரங்கள்

1. ரூ. 2,300 அடக்கவிலையுள்ள ஒரு மோட்டார் வண்டி (எழுதப் பட்டுள்ள தேய்மானம் ரூ. 660) ரூ. 600-க்கு விற்கப்பட்டது.

2. ரூ. 700 வருமானவரி செலுத்தப்பட்டது.

3. ரூ. 10,000 இலாப ஈவு கொடுக்கப்பட்டது.

3. பாரத் டிரேடிங் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்புகளிலிருந்து ஒரு நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்:

சொத்துகள்	**1962**	**1961**
	ரூ.	ரூ.
நிலையானச் சொத்துகள்	3,80,000	3,72,000
முதலீடுகள்	50,000	1,00,000
சரக்கிருப்பு	90,500	55,600
கடனாளிகள்	1,67,800	1,18,300
ரொக்கப் பாங்கி இருப்புகள்	47,500	49,800
தொடக்கச் செலவுகள்	—	7,200
	7,35,800	7,02,900
பொறுப்புகள்		
பங்குமுதல்	4,00,000	3,60,000
பொதுக்காப்பிருப்பு	60,000	1,10,000
இலாப நட்டக் க/கு	33,450	20,450
கடனீந்தோர்	1,95,350	1,33,650
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	15,000	28,800
வருமானவரி ஒதுக்கீடு	32,000	50,000
	7,35,800	7,02,900

கூடுதல் செய்திகள்

(அ) நிலையானச் சொத்துகளின்மீதான தேய்மான நிதிக் க/கு 31—12—62-ல், ரூ. 1,40,000; 31—12—1961-ல் ரூ. 1,08,000.

(ஆ) இவ்வாண்டில் ரூ. 40,000 தேய்மானத்திற்காக எழுதப் பட்டது.

(இ) ரூ. 9000 அடக்கவிலையுள்ள ஓர் இயந்திரம் (எழுதப் பட்டுள்ள தேய்மானம் ரூ. 8,000) ரூ. 3000-க்கு விற்கப்பட்டது.

(ஈ) ரூ. 50,000 அடக்கவிலையுள்ள முதலீடுகள் பயனற்றதாகக் கருதப்பட்டமையால் பொதுக்காப்பில் ஈடுசெய்யப்பட்டது.

(உ) இவ்வாண்டில் ரூ. 10,000 இடைக்கால இலாபஈவாக அளிக்கப்பட்டது. மேலும் 1962ஆம் ஆண்டிற்காக இயக்குநர்கள் ரூ. 15,000 இலாபஈவு பரிந்துரைத்துள்ளனர்.

4. பீட்டா கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்புகளாவன:

பொறுப்புகள்	1966	1967
	ரூ.	ரூ.
சாதாரணப் பங்குமுதல்	3,00,000	4,00,000
சலுகைப் பங்குமுதல்	1,50,000	1,00,000
காப்பு முதல்	—	20,000
பொதுக்காப்பிருப்பு	40,000	50,000
இலாப நட்டக் க/கு	30,000	58,000
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	42,000	50,000
கடனீந்தோர்	25,000	47,000
செலுத்தவேண்டிய உண்டியல்	20,000	16,000
கொடுக்கவேண்டிய செலவுகள்	30,000	36,000
வருமானவரி ஒதுக்கீடு	40,000	50,000
	6,77,000	8,17,000

சொத்துகள்		
நன்மதிப்பு	1,00,000	80,000
நிலங்கள், கட்டடங்கள்	2,00,000	1,70,000
இயந்திரங்கள்	80,000	2,00,000
முதலீடுகள்	20,000	30,000
கடனாளிகள்	1,40,000	1,70,000
சரக்கிருப்பு	77,000	1,09,000
வரவேண்டிய உண்டியல்	20,000	30,000
ரொக்க இருப்பு	15,000	10,000
பாங்கிருப்பு	10,000	8,000
தொடக்கச் செலவு	15,000	10,000
ரூ.	6,77,000	8,17,000

குறிப்பு 1. ஒரு சிறிய நிலம் 1967-ல் விற்கப்பட்டது. இதில் ஏற்பட்ட இலாபம் காப்புமுதல் கணக்கில் வரவு எழுதப்பட்டுள்ளது.

2. ரூ. 22,000 அடக்கவிலையுள்ள ஓர் இயந்திரம் ரூ. 10,000-க்கு விற்கப்பட்டது. அத் தேதியில் அச் சொத்தின் தேய்மானம் நீக்கிய மதிப்பு ரூ. 12,000 ஆகும்.

3. இவ்வாண்டில் முதலீடுகளில் ரூ. 3,000 இலாப ஈவு கிடைத்தது. இதில் ரூ. 1,000 முதலீடுகள் வாங்கும் தேதிக்கு முன் ஏற்பட்ட இலாபத்தைக் குறிக்கிறது.

4. ரூ. 20,000 இடைக்கால இலாப ஈவு (Interim Dividend) கொடுக்கப்பட்டது.

பயிற்சி 5. சிந்தாமணி லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து ஒரு நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்:

பொறுப்புகள்:	30—6—65	30—6—66
	ரூ.	ரூ.
செலுத்தப்பட்ட பங்கு முதல்	13,00,000	14,00,000
பொதுக்காப்பிருப்பு	60,000	40,000
இலாப நட்டக் க/கு	36,000	38,000
ஒற்றிக் கடன்	—	5,60,000
பாங்கு அதிகப்பற்றுக் க/கு	69,260	1,29,780
செலுத்த வேண்டிய உண்டியல்	40,000	38,000
கடனீந்தோர்	76,000	1,12,000
தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	78,000	72,000
	16,59,260	23,89,780

சொத்துகள்	ரூ.	ரூ.
நன்மதிப்பு	2,40,000	2,20,000
கட்டடங்கள்	8,00,000	11,76,000
இயந்திரங்கள்	1,44,000	3,94,000
மனைத்துணைப் பொருள்கள்	6,000	5,500
பிற கம்பெனிகளில் பங்குகள்	80,000	2,34,000
சரக்கிருப்பு	2,44,000	2,38,000
கடனாளிகள்	1,25,600	1,04,400
ரொக்க இருப்பு	1,560	1,280
வரவுடைய உண்டியல்கள்	7,600	6,400
முன்செலுத்திய செலவுகள்	4,500	6,200
தொடக்கச் செலவுகள்	6,000	4,000
	16,59,260	23,89,780

மேல் விவரங்கள் :

1. இவ்வாண்டு எழுதப்பட்ட தேய்மானம்

(அ) கட்டடங்கள் 2½% வீதம் ரூ. 10,00,000 அடக்கவிலை மீது

(ஆ) இயந்திரங்கள் 8% வீதம் ரூ. 4,00,000 „

(இ) மனைத்துணைப் பொருள்கள் 5% வீதம் ரூ. 10,000 „

2. ரூ. 1,60,000 அடக்கவிலையுள்ள பிற கம்பெனிகளின் பங்குகள் வாங்கப்பட்டன. ரூ. 6,000 இலாபஈவும் முதலீடுகளின் மீது பெற்றது. முதலீடுகள் வாங்கும் தேதிக்கு முன்னதாக ஏற்பட்ட இலாபத்தைக் குறித்ததால் ரூ. 6,000 முதலீடுகள் கணக்கில் வரவெழுதப்பட்டது.

3. நன்மதிப்புப் பொதுக்காப்பிருப்பில் சரிசெய்யப்பட்டுள்ளது.

4. 1966-க்கு ரூ. 52,000 இடைக்கால இலாப ஈவு அளிக்கப் பட்டது.

5. காமதேனு லிமிடெட்டின் 1966, 1965ஆம் ஆண்டுகளின் இருப்பு நிலைக் குறிப்புகளாவன.

	1966	1965
	ரூ.	ரூ.
ரொக்க இருப்பு	2,87,800	1,70,650
கடனாளிகள்	1,53,000	1,38,760
சரக்கிருப்பு	2,87,670	2,35,800
முன்செலுத்திய செலவுகள்	4,600	3,200
நடைமுறைச் சொத்துகள்	7,33,070	5,48,410
முதலீடுகள்	25,000	1,05,000
கடன்பத்திரங்கள் தள்ளுபடி	5,000	6,875
காப்புரிமை (Patent)	24,000	30,000
நன்மதிப்பு	5,000	85,000
இயந்திரங்கள் சொத்துகள்	4,13,000	4,26,000
	12,05,070	12,01,285
கடனீந்தோர்	1,43,000	1,12,000
இலாபஈவுப் பொறுப்பு	25,000	—
வருமானவரி ஒதுக்கீடு	48,000	8,000
கடன் பத்திரங்கள் மீது வட்டிக்கடன்	3,000	3,750
	2,19,000	1,23,750

6% கடன்பத்திரங்கள்	1,00,000	1,25,000
பங்குமுதல்	5,75,000	5,25,000
காப்பிருப்புகள்	2,52,000	2,52,000
இலாப மிகுதி	59,070	1,75,535
	12,05,070	12,01,285

கூடுதல் செய்திகள்

1. இயந்திரங்கள், சொத்துகள்மீதான தேய்மான நிதிக் க/கு பின்வருமாறு:

31 -12—1965 ரூ. 4,24,000

31—12—1966 ரூ. 4,11,000

1966-ல் எழுதப்பட்ட தேய்மானம் ரூ. 66,000

2. ரூ. 30,000, தேய்மானம் நீக்கிய மதிப்புள்ள ஓர் இயந்திரம் ரூ. 2,00,000-க்கு விற்கப்பட்டது. அந்த இயந்திரத்தின்மீது எழுதப்பட்ட மொத்தத் தேய்மானம் ரூ. 40,000.

3. ரூ. 80,000 அடக்கவிலையுள்ள முதலீடுகள் ரூ.1,00,000-க்கு விற்கப்பட்டன.

4. 1966ஆம் ஆண்டில் ரூ. 25,000 முகமதிப்புள்ள கடன் பத்திரங்கள் 5% மதிப்புயர்வில் மீட்கப்பட்டன.

5. 31—12—66-ல் இலாப மிகுதி பின்வருமாறு கணக்கிடப் பட்டது:

	ரூ.
31—12—1965-ல் இருப்பு	1,75,535
கழி: 1966-ல் நிகர நட்டம்	66,465
	1,09,070
கழி: தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு	50,000
1966-ல் இருப்பு	ரூ. 59,070

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்

7. கலிங்கா அண்டு கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. 1969-ன் விற்பனை ரூ. 2,10,000 வரி

ஒதுக்கீட்டிற்குப் பிறகு வியாபாரத்தின் நிகர வருமானம் ரூ. 7,000. மற்ற உருப்படிகளைத் தவிர பின்வருவன:

	ரூ.
விற்ற பொருளின் அடக்கவிலை	1,65,000
தேய்மானம்	5,000
சம்பளம், கூலி	20,000
மோட்டார் விற்றதில்	1,000(வரவெழுதப்பட்டது)
இலாப ஈவு கொடுத்தது	6,000

பி. கு: ரூ. 6,000 அடக்கவிலையுள்ள மோட்டார் வண்டி (எழுதப்பட்டுள்ள தேய்மானம் ரூ. 4,000) ரூ. 3,000-க்கு விற்கப் பட்டது.

இருப்புநிலைக் குறிப்பு

சொத்துகள்	1969	1970
	ரூ.	ரூ.
ரொக்க இருப்பு	5,000	6,000
கடனாளிகள்	14,000	14,000
சரக்கிருப்பு	22,000	8,000
முன் செலுத்திய காப்புறுதி	200	250
முன் செலுத்திய வாடகை	150	100
முன் செலுத்திய சொத்து வரி	300	400
நிலம்...	4,000	8,000
கட்டடங்கள், மோட்டார் வண்டிகள்	20,000	37,000
	65,650	73,750
கடனீந்தோர்	20,000	18,000
கொடுக்கவேண்டிய செலவுகள்	2,000	4,000
வருமானவரிப் பொறுப்பு	1,000	1,100
பங்கு முதல்	30,000	37,000
இலாப மிகுதி	12,650	13,650
	65,650	73,750
பி. கு: தேய்மான நிதி	10,000	11,000

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

8. 1966, 1967ஆம் ஆண்டுகளின் இருப்புநிலைக் குறிப்புகள் பின் வருமாறு: இயந்திரச் சாதனங்கள் கணக்கில் ஏற்பட்ட ஒரே ஒரு

மாற்றமாவது: ரூ. 15,000 அடக்கவிலையுள்ள ஓர் இயந்திரம் ரூ. 6,000-க்கு விற்கப்பட்டது. அத் தேதியில் அந்த இயந்திரத்தின் தேய்மானம் நீக்கிய மதிப்பு (written down value) ரூ. 7,000 ஆகும்.

இருப்புநிலைக் குறிப்பு

		1966	1967
		ரூ.	ரூ.
	ரொக்க இருப்பு	74,000	37,000
	கடனாளிகள்	54,000	47,000
	சரக்கிருப்பு	3,12,000	2,77,000
	முன் செலுத்திய செலவு	6,000	4,000
	நிலம்	60,000	60,000
	காப்புரிமை	55,000	65,000
	இயந்திரச் சாதனங்கள்	4,20,000	4,80,000
கழி:	தேய்மானம்	(1,05,000)	(1,20,000)
	ரூ.	8,76,000	8,50,000
	கடனீந்தோர்	58,000	94,000
	செலுத்தவேண்டிய உண்டியல்	28,000	8,000
	வருமானவரிச் செலுத்தவேண்டியது	89,000	17,000
	கடன்பத்திரங்கள்	2,20,000	60,000
	பங்கு முதல்	2,50,000	4,60,000
	இலாப மிகுதி	2,31,000	2,11,000
	ரூ	8,76,000	8,50,000

இலாப மிகுதிபற்றிய அட்டவணை

			ரூ.
	நிகர விற்பனை		19,70,000
கழி:	விற்றபொருள் அடக்கவிலை		14,80,000
			4,90,000
கழி:	நடப்புச் செலவுகள் (தேய்மானங்கள் உள்ளடங்கியது. இயந்திரச் சாதனங்கள் ரூ. 23,000, காப்புரிமை ரூ. 6,000)		5,00,000
	நிகர நட்டம்		10,000
கழி:	பிற வருமானங்கள்		7,000
			(−) 3,000
கூட்டு:	31—12—66-ல் இலாப மிகுதிக் க/கு		+ 2,31,000
			2,28,000
கழி:	இலாப ஈவு	16,000	
	இயந்திர விற்பனையில் நட்டம்	1,000	17,000
			2,11,000

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்

9. யூனிவர்சல் டிரேடிங் கம்பெனி லிமிடெட்டின் 1968, 1969ஆம் ஆண்டுகளின் இருப்புநிலைக் குறிப்புகள் பின்வருவனவாம்:

சொத்துகள்	**1968**	**1969**
	ரூ.	ரூ.
வில்லங்கமில்லாச் சொத்து	1,00,000	1,00,000
இயந்திரச் சாதனங்கள்	1,04,000	1,00,000
மனைத்துணைப் பொருள்	7,000	9,000
முதலீடுகள்	60,000	80,000
கடனாளிகள்	30,000	70,000
சரக்கிருப்பு	60,000	65,000
ரொக்க இருப்பு	30,000	45,000
	3,91,000	4,69,000
பங்கு முதல்	1,00,000	1,55,000
பொதுக் காப்பிருப்பு	50,000	60,000
இலாப நட்டக் க/கு	10,000	17,000
6% கடன்பத்திரங்கள்	70,000	50,000
தேய்மான நிதிக் க/கு		
இயந்திரச் சாதனங்கள்	50,000	56,000
மனைத்துணைப் பொருள்	5,000	6,000
வருமான வரி ஒதுக்கீடு	20,000	30,000
கடனீந்தோர்	86,000	95,000
	3,91,000	4,69,000

(அ) ரூ. 4,000 அடக்கவிலையுள்ள ஓர் இயந்திரம் (தேய்மானம் ரூ. 2,000) 30—9—1969-ல் ரூ. 800-க்கு விற்கப்பட்டது.

(ஆ) 30—6—69-ல் ரூ. 2,000-க்கு மனைத்துணைப் பொருள் வாங்கப்பட்டது.

(இ) 2½% இலாப ஈவு 1968ஆம் ஆண்டிற்காக அளிக்கப்பட்டது.

நிதி நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

9. ரொக்க நடமாட்ட அறிக்கை

(Cash Flow Statement)

நிதி நடமாட்ட அறிக்கையின் பயன்களைப்பற்றிச் சென்ற அத்தியாயத்தில் படித்தோம். பொதுவாக நம்மிடம் நிலவும் ஒரு தவறான கருத்து என்னவென்றால் ரொக்க நடமாட்ட அறிக்கைக்கும் நிதி நடமாட்ட அறிக்கைக்கும் எந்த வேறு பாடும் இல்லை என்பதேயாகும். உண்மையில் அதிக வேறுபாடு இல்லையென்றாலும், அவ்வறிக்கைகளைப் பயன்படுத்துவதில் வேறு பாடு இருக்கத்தான் செய்கிறது. நெடுங்காலத் திட்டங்களுக்குத் துணையாக நிற்பது நிதிநடமாட்ட அறிக்கையாகும். ஆனால், குறுகிய காலத் திட்டங்களுக்கு உதவியாக இருப்பது ரொக்க நடமாட்ட அறிக்கையாகும். ஏனெனில், குறுகிய காலத் திட்டங்களில் ரொக்க நடமாட்டத்தைப்பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாதது. ஆனால், நெடுங்காலத் திட்டங்களில் சரியான ரொக்கநிலைபற்றிக் கருத்துரைப்பது இயலாத செயலாகும். ஆகவே, அத் திட்டங்களுக்கு நிதி நடமாட்ட (Fund Flow) அறிக்கையைப் பயன்படுத்துகிறோம்.

ரொக்க நடமாட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் இரு கொள்கை களைக் கையாளுகிறோம். அவையாவன:

(அ) உண்மை ரொக்கக் கொள்கை.

(ஆ) கற்பனை ரொக்கக் கொள்கை.

அளிக்கப்படும் செய்திகளைக் கொண்டு தயாரிக்கப்படுவதால் இரு கொள்கைகளையும் கையாளுகிறோம். செய்திகள் முழுமையாக இருந் தால் உண்மை ரொக்கக் கொள்கையைப் பயன்படுத்துகிறோம். முழுவிவரங்கள் தரப்படவில்லையென்றால் கற்பனை ரொக்கக் கொள் கையைப் பயன்படுத்துகிறோம்.

பொறுப்புகள் கூடுதல் அல்லது புதியதாக உண்டாக்குதல்

பொறுப்புகள் புதியதாக உண்டானால் வியாபாரத்தில் ரொக்கம் கூடுகிறது. அவ்வாறு நிகழ்வதற்கு நடைமுறைப் பொறுப்போ நிலையான பொறுப்போ கூடி இருக்கலாம்.

நெடுங்காலப் பொறுப்புகள் கூடினால் ரொக்கம் கூடுவது கண்ணுக்குப் புலப்படுகிறது. ஆனால், நடைமுறைப் பொறுப்புகள் கூடும் பொழுது ரொக்கம் கூடுவது கண்களுக்குப் புலனாவதில்லை. இச் சமயம் கற்பனை ரொக்கக் கொள்கையைக் கையாள வேண்டும்.

எ. கா. கச்சாப்பொருள்கள் கடனாக வாங்கப்படுகின்றன. ரூ. 15,000; இதில் கற்பனை ரொக்கக் கொள்கையின்படி ரூ. 15,000 கச்சாப்பொருள்களை அளித்தவர்களிடமிருந்து கடனாகப் பெற்றதாகக் கொள்ள வேண்டும். இப்பொழுது ரூ 15,000 ரொக்கம் வியாபாரத்தில் உட்செல்லுதல் புரிகிறது.

சொத்துகள்: நடைமுறைச் சொத்து அல்லது நிலையான சொத்துக் குறைந்தால் ரொக்கம் கிடைக்கிறது. அவ்வாறு ரொக்கம் கிடைப்பது உண்மையாகவோ கற்பனைக் கொள்கைப்படியாகவோ (Notional) இருக்கலாம்.

வியாபார இலாபம்: இலாபத்தினால் வியாபாரத்தில் ரொக்கம் கிடைக்கிறது.

கற்பனை ரொக்கக் கொள்கையும் உண்மை ரொக்கக் கொள்கையும்.

கற்பனை ரொக்கக் கொள்கையைக் கையாளும்பொழுது ஒவ்வொரு நடவடிக்கையாலும் ஒரே காலத்தில் ரொக்கம் கூடுவதாகவும், குறைவதாகவும் தோன்றும். நடவடிக்கையைப் பற்றிய முழு விவரமும் தெரியாமலிருக்கும்பொழுதுமட்டில் கற்பனை ரொக்கக் கொள்கையைக் கையாளவேண்டும். பின்வரும் எடுத்துக் காட்டுகள் மூலம் இந்த உண்மையை அறியலாம்:

எ.கா. 1: 1972ஆம் ஆண்டு முடிவில் இயந்திரங்கள் கணக்கில் ரூ. 2,50,000 இருப்புஉள்ளது. 1972ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ரூ. 1,00, 000 இருப்பு உள்ளது. இவ்வாண்டில் மூன்று இயந்திரங்கள் ரூ. 30,000-க்கு ரொக்கத்திற்கும், ரூ. 20,000-க்குக் கடனிலும் ரூ. 1,00,000-க்குப் பங்கு அளித்தும் வாங்கப்பட்டன. மேற்கூறப்பட்ட விவரங்கள் அனைத்தும் தெரிவிக்கப்படாமல் இருந்தால் ரூ. 1,50,000 ரொக்கப் பயன்பாடாகவும், ரூ. 1,20,000 ரொக்க மூலமாகவும் அறிக்கையில் காட்டப்படுகிறது. மேற்கூறிய விவரங்கள் அளிக்கப்பட்டிருந்தால் ரூ. 1,20,000 மொத்தத் தொகையாகிய ரூ. 1,50,000-லிருந்து கழிக்கப்பட்டு ரூ. 30,000 மட்டும் பயன்பாடாக எழுதப்படுகிறது.

எ. கா. 2: இரு இருப்புநிலைக் குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கடனாளிகள் (Debtors) ரூ. 40,000 கூடியுள்ளது புரிகிறது. அதன் மேல் விவரங்கள்,

	ரூ.
கடனுக்குச் சரக்கு விற்றது	20,000
கடனுக்கு இயந்திரம் விற்றது	10,000
வரவுடைய உண்டியல்	6,500
ரொக்கக் கைமாற்று (Advance)	3,500
	40,000

கடனாளிகள் கணக்கில் ரூ. 3,500-தான் ரொக்கத்தால் பாதிக்கப் படுகிறது. ஆகையால், ரொக்க நடமாட்ட அறிக்கையில் ரூ. 3,500-ஐப் பயன்பாடாகக் காட்டவேண்டும். பிறகு, மற்ற உருப்படிகளிலிருந்து பின்வருமாறு குறைக்கவேண்டும்:

(அ)	மொத்த விற்பனையிலிருந்து	ரூ. 20,000
(ஆ)	இயந்திர விற்பனையிலிருந்து	ரூ. 10,000
(இ)	செலுத்த வேண்டிய உண்டியல் கூடுதலிலிருந்து	ரூ. 6,500

வியாபார இலாபத்தைக் கணக்கிடுதல்-ரொக்க நடமாட்ட அறிக்கைக்காக இலாப நட்டக் கணக்கில் காணப்படும் இலாபம் வியாபாரத்தில் ரொக்கம் கூடியதைக் காட்டுவதாகக் கொள்வது தவறாகும். இலாப நட்டக் கணக்கின்படி நட்டம் காண்பிக்கப்பட்டாலும் வியாபாரத்தில் ரொக்கம் கூடியிருக்கக்கூடும் சூழ்நிலையைத் தவிர்க்க முடியாது. அதுபோலவே வியாபாரத்தில் இலாபம், இலாப நட்டக்கணக்குப்படி இருந்தாலும், உண்மையில் ரொக்கம் கூடியில்லாத நிலையும் இருக்கலாம். புதிர்போலத் தோன்றும் இந் நிலைக்குரிய காரணங்கள் பின்வருவனவாம்:

(அ) இலாப நட்டக் கணக்கில் ரொக்கமல்லாப் பற்றுகள் (Non-Cash Debits) மிகையாக விருத்தல்.

(ஆ) இலாப நட்டக் கணக்கில் ரொக்கமல்லா வரவுகள் மிகையாகவிருத்தல்.

ஆகையால், இலாபநட்டக் கணக்கில் காணப்பட்டுள்ள இலாப/நட்டத் தொகையை மறுபடியும் சரிசெய்யவேண்டும். அப்படி மாற்றியமைக்கப்பட்ட பிறகு வியாபார இலாபத்தால் ஏற்பட்ட ரொக்கக் கூடுதல் கிடைக்கிறது.

எ.கா.

31—12—72-ல் முடிவடைந்த இலாப நட்டக் க/கு

	ரூ.	ரூ.		ரூ.
கச்சாப் பொருள்		4,00,000	விற்பனை	13,00,000
கூலி	2,00,000		இலாப ஈவு	10,000
கூட்டு:				
கொடுக்க வேண்டியது	50,000	2,50,000	தள்ளுபடி வர வேண்டியது	15,000
சம்பளம்		1,00,000	நிகர நட்டம்	25,000
கூட்டு:				
கொடுக்க வேண்டியது		40,000		
அலுவலகச் செலவுகள்		1,10,000		
விற்பனைச் ,,		1,50,000		
தேய்மானம்		2,00,000		
தொடக்கச் செலவுகள்		25,000		
நன்மதிப்பு		75,000		
		13,50,000		13,50,000

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது ரூ. 25,000 ரொக்கம் குறைந்ததாக நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில் ரொக்கம் இலாபத்தால் கூடியிருக்கிறது. ரொக்கமில்லாப் பற்றுகளால் ரொக்கம் பாதிக்கப்படுவதில்லை. ஆகையால், ரொக்கமல்லாப் பற்றுகளின் மொத்தத் தொகையைக் கூட்ட வேண்டும். மேலும், இலாபஈவு ரூ. 10,000 வியாபாரமல்லா வரவைக் குறிப்பிடுவதாலும் ரூ. 15,000 வரவேண்டிய தள்ளுபடி ரொக்கமல்லா வரவைக் குறிப்பதாலும் கழித்துவிடவேண்டும். பிறகு, முடிவாகக் கிடைக்கும் தொகையே வியாபார இலாபமாகும்.

		ரூ.
இலாப நட்டக் க/குப்படி நட்டம்		(—) 25,000
கூட்டு : ரொக்கமல்லாப் பற்றுகள்		
கொடுக்க வேண்டிய கூலி	50,000	
சம்பளம் கொடுக்க வேண்டியது	40,000	
தேய்மானம்	2,00,000	
தொடக்கச் செலவுகள்	25,000	
நன்மதிப்பு	75,000	+ 3,90,000
		(+) 3,65,000

கழி:

இலாப ஈவு வியாபார மல்லா வரவு	ரூ. 10,000	
வரவேண்டிய கழிவு ரொக்கமல்லா வரவு	ரூ. 15,000	(—)25,000
வியாபார இலாபம்		ரூ. 3,40,000

ரொக்க நடமாட்ட அறிக்கையைத் தயாரிக்கும் முறை

(அ) நிதிநடமாட்ட அறிக்கையைப் போலவே இரு பகுதி களாகப் பிரித்துக்கொண்டு இரு பகுதிகளிலும் மூலம், பயன்பாடு இவ்விரண்டையும் எழுத வேண்டும். இரு பகுதிகளிடையே உள்ள வேறுபாடு ரொக்கம் கூடியுள்ளது அல்லது குறைந்துள்ளதைக் குறிப்பிடுகிறது.

(ஆ) மேற்கூறப்பட்ட அறிக்கையிலேயே தொடக்க ரொக்க இருப்பை இடப்பகுதித் தொடக்கத்திலும் இறுதி இருப்பை வலப் பகுதி முடிவிலும் எழுதித் தயாரிக்கப்படும் அறிக்கை இரு பகுதி களையும் சமமாக்குகிறது.

ரொக்க நடமாட்ட அறிக்கையின் பயன்கள்

1. வியாபாரத்தின் ரொக்கநிலைபற்றி அறிய இவ்வறிக்கை மிகவும் ஏதுவாயிருக்கிறது. குறுகிய காலத்திட்டங்களுக்கு ரொக்க நடமாட்ட அறிக்கை மிகவும் தேவையாக உள்ளது. மேலாண்மைக்கு ரொக்க மதிப்பீடுகள் (Cash budgets) செய்வதில் பயனுள்ள வகையில் இவ்வறிக்கை பயன்படுகிறது.

2. நெடுங்காலக் கடன்களை மீட்டல், புதிய இயந்திரங்கள் வாங்குதல், இலாபஈவுக் கொள்கைகளைத் தீர்மானித்தல் போன்றவை களில் இவ்வறிக்கை மிகவும் பயனுள்ள செய்திகளை மேலாண்மைக்கு அளிக்கிறது. அதாவது, வியாபார இலாபத்தில் உண்டாகும் கூடுதல் ரொக்கம் பற்றிய செய்தியாகும்.

3. சென்ற ஆண்டின் ரொக்க நடமாட்ட அறிக்கையை அவ்வாண்டின் ரொக்க மதிப்பீட்டுடன் (ஆண்டுத் தொடக்கத்தில் தயாரிக்கப்படுவது) ஒப்பிட்டுப் பார்த்தால், எவ்வாறு திட்டமிட்டபடி ரொக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியலாம். அவ்வாறு ஒப்பிடுதல் பல நடவடிக்கைகள் கட்டுப்பாடு இல்லாமல் வளர்ந்து வரும் போக்கைத் தவிர்க்கிறது.

4. இலாப நட்டக் க/குப்படி இலாபமிருந்தாலும் அத் தொகைக்கு ஏற்ப ஏன் ரொக்கமில்லை என்ற வினவுக்குப் பதிலளிப்பதற்கு நிதி மேலாளருக்கு உதவியாக அமைந்துள்ளது.

5. குறுகிய காலத் திட்டங்களுக்கு ரொக்க நடமாட்ட அறிக்கை மிகவும் பயன்படுகிறது. இதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் விளக்கலாம். எ.கா. உதாரணமாக ஒரு கம்பெனி 10 ஆண்டுகளுக்குப் பிறகு கடனை மீட்க வேண்டுமென்று கொள்வோம். அப்பொழுது கம்பெனியின் நிதிநிலையை அறிய நிதி நடமாட்ட அறிக்கையைப் பயன்படுத்துகிறோம். அதேசமயம் அக் கம்பெனி இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு கடனை மீட்க முடியுமா? என்ற கேள்விக்குக் கம்பெனியின் நிதிநடமாட்ட அறிக்கையைவிட, கம்பெனியின் ரொக்க நடமாட்ட அறிக்கையே பொருளுள்ளதாக உள்ளது.

முடிவுரை: இவ்வாறு பல பயன்களையுடைய ரொக்க நடமாட்ட அறிக்கையைத் தற்காலங்களில் சிலர் விரும்பத்தகாத முறைகளில் பயன்படுத்துகிறார்கள். வியாபார இலாபத்தில் ஏற்படும் ரொக்கக் கூடுதலைக் கம்பெனியின் மொத்தப் பங்குகளுடன் ஒப்பிட்டு அறிக்கைகள் வெளியிடுகிறார்கள். மொத்தப் பங்குகளுடன் ஒப்பிட வேண்டிய தொகை கம்பெனியின் இலாபமேயொழிய இலாபத்தினால் ஏற்படும் ரொக்கத்தை அல்ல. இவ்வாறு பங்குதாரர்கள் ஏமாற்றப் படுவது தவிர்க்கப்படவேண்டும். இதுபற்றிக் கம்பெனிகளிடம் நல்லுணர்வு ஏற்படவேண்டும்; அல்லது முதலீடு செய்பவர்கள் இவ்வறிக்கைபற்றிய உண்மைநிலையைப் புரிந்து கொள்ளவேண்டும்.

எடுத்துக் காட்டு 1

திரு. சுந்தரத்தின் நிதிநிலைமை பின்வருமாறு:

	1—1—1971	31—1—1971
	ரூ.	ரூ.
கடனீந்தோர்	29,000	25,000
முதல்	7,39,000	6,15,000
	7,68,000	6,40,000

	ரூ.	ரூ.
ரொக்கம்	40,000	30,000
கடனாளிகள்	20,000	17,000
சரக்கிருப்பு	8,000	13,000
கட்டடங்கள்	1,00,000	80,000
நிலையான சொத்துகள்	6,00,000	5,00,000
	7,68,000	6,40,000

1. திரு. சுந்தரம் சொந்தத் தேவைக்காக ரொக்கம்/சரக்கு எதுவும் எடுக்கவில்லை,

2. எந்த நிலையான சொத்தும் வாங்கப்படவில்லை.

ரொக்க நடமாட்ட அறிக்கையைத் தயாரிக்கவும்.

விளக்கங்கள்

1. நிகரநட்டம்.

		ரூ.
ஆண்டிறுதியில் முதல்		6,15,000
ஆண்டுத் தொடக்கத்தில் முதல்		7,39,000
நிகர நட்டம்		1,24,000

2. வியாபார நட்டம்

இலாப நட்டக் க/குப்படி நட்டம்		1,24,000
கழி: ரொக்கமல்லாப் பற்றுகள்		
கட்டடம்மீது தேய்மானம் (1,00,000 – 80,000)	20,000	
பிற சொத்துகளின்மீது தேய்மானம் (6,00,000 – 5,00,000)	1,00,000	1,20,000
		4,000

ரொக்க நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
ரொக்க இருப்பு 1—1—1971	40,000	சரக்கு வாங்கியது	5,000
கடனாளிகள் குறைந்தது	3,000	கடனீந்தோர் குறைந்தது	4,000
		வியாபார நட்டம்	4,000
		ரொக்க இருப்பு 31—12—'71	30,
	43,000		43,000

குறிப்பு: ரொக்க நடமாட்ட அறிக்கையில் எல்லா நடைமுறைச் சொத்துகளும் பொறுப்புகளும் நேரிடையாகவே இடம்பெற்று

விடுகின்றன. ஆனால், நிதி நடமாட்ட அறிக்கையில் நடைமுறைச் சொத்துகளும் பொறுப்புகளும் நடைமுறைமுதல் மாறுதல்கள் அறிக்கை மூலம் மறைமுகமாக நிதி நடமாட்ட அறிக்கையில் இடம் பெறுகின்றன.

எ. கா. 2: ஏ, பி, சி கம்பெனியில் 1—1—'70-ல் பின்வரும் இருப்புகள் உள்ளன:

		ரூ.
	நிலையான சொத்து	6,00,000
கழி:	தேய்மானம்	2,10,000
		3,90,000
	பாங்கிருப்பு	35,000
	பிற நடைமுறைச் சொத்துகள்	2,50,000
	நடைமுறைப் பொறுப்புகள்	1,10,000
	பங்கு முதல் (ரூ.100 மதிப்புள்ள பங்குகள்)	3,00,000

1970ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சிகளாவன;

(அ) ரூ. 60,000 தேய்மானம் எழுதப்பட்ட பிறகு கம்பெனியின் இலாபம் ரூ. 60,000

(ஆ) ரூ. 1,00,000 அடக்கவிலையுள்ள நிலையான சொத்துகளைக் கம்பெனி வாங்கும். மேலும் ரூ. 50 000 அடக்கவிலையுள்ள ஓர் இயந்திரத்தை (எழுதப்பட்டுள்ள தேய்மானம் ரூ. 35,000) ரூ. 20,000-க்கு விற்கலாம்.

(இ) பிற நடைமுறைச் சொத்துகள் ரூ. ,295,000 ஆகவும், நடைமுறைப் பொறுப்புகள் ரூ. 1,30,000 ஆகவும் இருக்குமென நம்பப்படுகிறது.

(ஈ) 10% வரி நீக்கிய இலாப ஈவு (Tax-free dividend) கொடுக்கப் படும் என நம்பப்படுகிறது. வரி விகிதம் 25%. 1970ஆம் ஆண்டு இறுதியில் பாங்கி இருப்பைக் கணக்கிடுக.

(i) செயல் விளக்கங்கள்

1.	இலாபம்	58,000
கூட்டு:	தேய்மானம்	60,000
		1,18,000
கழி:	இயந்திர விற்பனையில் இலாபம்	5,000
		1,13,000

(ii) இலாப ஈவு	ரூ.
10%	30,000
வருமான வரி	10,000
	40,000

இலாப ஈவில் 25% வருமானவரி கழித்துக் கொண்டு எஞ்சிய தொகையைத்தான் பங்குதாரர்களுக்குக் கொடுக்க வேண்டும். ரூ.100 இலாப ஈவாக இருந்தால் ரூ. 25-ஐக்கழித்துக் கொண்டு ரூ. 75 மட்டில் தரவேண்டும். நிகர தொகையாக ரூ. 30,000 கொடுக்க வேண்டும். அதற்கான வருமானவரி $= \frac{30,000 \times 25}{75}$ = ரூ. 10,000.

ரொக்க நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
தொடக்க பாங்கிருப்பு (1—1—1970)	35,000	நிலையான சொத்து வாங்கியது	1,00,000
வியாபார இலாபம்	1,13,000	நடைமுறைச் சொத்து கூடியுள்ளது	45,000
நிலையான சொத்து விற்பனை	20,000	இலாப ஈவு	40,000
நடைமுறைப் பொறுப்பு கூடியுள்ளது	30,000	இறுதி இருப்பு (★) (31—12—1970)	13,000
	ரூ. 1,98,000		1,98,000

எடுத்துக்காட்டு 3:

சேரன் போக்குவரத்து லிமிடெட்டின் 31-12-1969, 31-12-1970 ஆகிய தேதிகளில் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

	1969	1970
	ரூ.	ரூ.
பங்கு முதல்	5,00,000	6,00,000
பொதுக் காப்பிருப்பு	1,00,000	1,30,000
இலாப நட்டக் க/கு	70,000	90,000
6% கடன்பத்திரங்கள்	4,00,000	3,00,000
கட்டடம்மீதான அடைமானக் கடன்	—	50,000

கடனீந்தோர்	2,18,000	1,44,000
கொடுக்க வேண்டிய கூலி	4,000	6,000
வருமானவரி ஒதுக்கீடு	80,000	1,50,000
	13,72,,000	14,70,000
நிலையான சொத்துகள்	12,000,000	13,50,000
சரக்கிருப்பு	2,50,000	3,50,000
கடனாளிகள்	2,00,000	1,70,000
பாங்கிருப்பு	1,00,000	30,000
முன் செலுத்திய செலவு	2,000	5,000
தொடக்கச் செலவுகள்	20,000	15,000
	13,72,000	14,70,000

இலாப நட்டக் கணக்கு

	ரூ.		ரூ.
தொடக்கச் சரக்கிருப்பு	2,50,000	விற்பனை	20,00,000
கொள்முதல்	15,00,000	இறுதி சரக்கிருப்பு	3,00,000
கூலி	48,000		
மொத்த இலாபம்	5,02,000		
	23,00,000		23,00,000
பல செலவுகள்	1,47,000	மொத்த இலாபம்	5,02,000
தொடக்கச் செலவுகள்	5,000		
தேய்மானம்	50,000		
வருமானவரி ஒதுக்கீடு	1,50,000		
பொதுக்காப்பிருப்பு	30,000		
இலாப ஈவு	1,00,000		
இருப்புக் கீ/இ	20,000		
	5,02,000		5,02,000

மேல் விவரங்கள்

1. தேய்மான நிதி 31—12—69-ல் ரூ. 4,00,000
31—12—70-ல் ரூ. 4,50,000

2. 1970ஆம் ஆண்டில் ரூ. 1,50,000 அடக்கவிலையுள்ள ஒரு கட்டடம் வாங்கப்பட்டது. அதற்காக ரூ. 1,00,000 ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. மீதித் தொகைக்குக் கட்டடம் வாங்கியவரிடமே அடைமானம் வைக்கப்பட்டது.

தயாரிக்கவும்

1. நிதி நடமாட்ட அறிக்கை.
2. ரொக்க நடமாட்ட அறிக்கை.

நிலையான சொத்து	ரூ.
31—12—1970-ல் இருப்பு	13,50,000
கழி: 31—12—1969-ல் இருப்பு	12,00,000
நிலையான சொத்துகள் வாங்கியது	1,50,000
கழி: அடைமானம்	50,000
ரொக்கம் அதிகரிக்கப்பட்டது	1,00,000

கூலிக்குச் செலவான ரொக்கம்	ரூ.
இலாப நட்டக் க/குப்படி கூலித் தொகை	48,000
கழி: 31—12—70-ல் கொடுக்க வேண்டிய கூலி	6,000
	42,000
கூட்டு: 31—12—69-ல் கொடுக்க வேண்டிய கூலி	4,000
	46,000
கழி: 1969-க்காகக் கொடுத்த ரொக்கம்	4,000
1970-க்காகக் கொடுத்த ரொக்கம்	42,000

பல செலவுகள்	ரூ.
இலாப நட்டக் க/கு	1,47,000
கூட்டு: 31—12—70-ல் முன் செலுத்தியது	5,000
	1,52,000
கழி: 31—12—69-ல் முன் செலுத்தியது	2,000
	1,50,000

வருமானவரி கொடுத்தது	ரூ.
31—12—69-ல் வருமானவரி ஒதுக்கீடு இருப்பு	80,000
கூட்டு: இலாப நட்டக் கணக்கில் ஒதுக்கியது	1,50,000
	2,30,000
கழி: 31—12—70-ல் இருப்பு	1,50,000
ரொக்கம் கொடுத்தது	80,000

வியாபார இலாபம்			ரூ.
இலாப நட்டக் க/கு	31—12—70		90,000
		ரூ.	
கூட்டு: தேய்மானம்		50,000	
தொடக்கச் செலவுகள்		5,000	
கூலி (48,000—46,000)		2,000	
பொதுக் காப்பிருப்பு		30,000	
வருமானவரி ஒதுக்கீடு		1,50,000	
இலாப ஈவு		1,00,000	3,37,000
			4,27,000
கழி: 31—12—69-ல் இருப்பு		70,000	
பல செலவுகள் (1,50,000 - 1,47,000)		3,000	73,000
வியாபார இலாபம்			3,54,000

குறிப்பு:

(அ) இலாப நட்டக்க/குப்படி கூலி ரூ. 48,000 ஆனால் ரூ. 46,000 மட்டில் ரொக்கமாகச் செலவாகிறது. ஆகையால் ரூ. 2,000 இலாபத்துடன் கூட்டப்படுகிறது.

(ஆ) இலாப நட்டக்க/குப்படி பல செலவுகள் ரூ. 1,47,000 ஆனால் ரொக்கமாக ரூ. 1,50,000 செலவாகியுள்ளது. ஆகையால் ரூ. 3,000 இலாபத்திலிருந்து கழிக்கப்படுகிறது.

ரொக்க நடமாட்ட அறிக்கை

	ரூ.		ரூ.
பாங்கிருப்பு (1-1-70)	1,00,000	கடன்பத்திரங்கள் மீட்பு	1,00,000
பங்குகள் வெளியீடு	1,00,000	கடனீந்தோர் குறைந்தது	74,000
கடனாளிகள் கூடுதல்	30,000	வருமானவரி கொடுத்தது	80,000
வியாபார இலாபம்	3,54,000	கட்டடம் வாங்கியது	1,00,000
		சரக்குக் கூடுதல்	1,00,000
		இலாபஈவு	1,00,000
		பாங்கிருப்பு (31-12-70)	30,000
	5,84,000		5,84,000

குறிப்பு: நிதி நடமாட்ட அறிக்கையைத் தயாரிக்க வியாபார இலாபத்தையும், நடைமுறைமுதல் கூடுதல், குறைவு பற்றிய அட்டவணையும் தயாரிக்க வேண்டும். நிதி நடமாட்ட அறிக்கைக்குக் கணக்கிடப்படும் வியாபார இலாபம் வேறுபட்டிருக்கிறது. ஏனெனில் நிதி நடமாட்ட அறிக்கையில் கற்பனை ரொக்கக் கொள்கையைக் கையாளுவதில்லை.

நடைமுறை முதல் மாற்றங்கள்

நடைமுறைச் சொத்துகள்	1969	1970
	ரூ.	ரூ.
பாங்கிருப்பு	1,00,000	30,000
சரக்கிருப்பு	2,50,000	3,50,000
கடனாளிகள்	2,00,000	1,70,000
முன் செலுத்திய செலவுகள்	2,000	5,000
	5,52,000	5,55,000
நடைமுறைப் பொறுப்புகள்		
கடனீந்தோர்	2,18,,000	1,44,000
வருமானவரி ஒதுக்கீடு	80,000	1,50,000
கொடுக்க வேண்டிய கூலி	4,000	6,000
	3,02,000	3,00,000
நடைமுறைமுதல்	2,50,000	2,55,000
கூடுதல்	5,000	—
	2,55,000	2,55,000

சரிக்கட்டப்பட்ட இலாப நட்டக் க/கு

	ரூ.		ரூ.
தேய்மானம்	50,000	தொடக்க இருப்பு	70,000
தொடக்கச் செலவுகள்	5,000	வியாபார இலாபம் (★)	2,05,000
பொதுக் காப்பிருப்பு	30,000		
இலாப ஈவு	1,00,000		
இறுதி இருப்பு	90,000		
	2,78,000		2,75,000

நிதி நடமாட்ட அறிக்கை

மூலம்	ரூ.	பயன்பாடு	ரூ.
பங்குகள் வெளியீடு	1,00,000	நிலையான சொத்து கொள்முதல்	1,00,000
வியாபார இலாபம்	2,05,000	கடன்பத்திரங்கள் மீட்பு	1,00,000
		இலாப ஈவு	1,00,000
		நடைமுறை முதல் கூடுதல்	5,000
	3,05,000		3,05,000

பயிற்சிகள்

1. ஒரு கம்பெனியின் நிதி நிலைமை மோசமடைந்துள்ளது. ஆண்டுத் தொடக்கத்தில் ரூ. 1,80,000 பாங்கில் இருந்தது. ஆனால், ஆண்டு இறுதியில் ரூ. 68,750 பாங்கில் அதிகப்பற்று வாங்கத் தேவைப்பட்டது. ரூ. 2,40,000 இலாபம் எங்குச் சென்றது என்று விழிக்கிறார்கள். இப் புதிருக்கு விடை காணவும். உங்களுக்கு அளிக்கப்படும் செய்திகளாவன:

	1968	1969
	ரூ.	ரூ.
நிலையான சொத்துகள்	7,50,000	11,20,000
சரக்கிருப்பு	1,90,000	3,30,000
கடனாளிகள்	3,80,000	3,35,000
பாங்கிருப்பு	1,80,000	68,750 (வ)
கடனீந்தோர்	2,70,000	3,30,000
பங்கு முதல் (பங்கு மதிப்பு ரூ. 10)	2,50,000	3,00,000
வரவுடைய உண்டியல்	87,500	95,000

5,000 பங்குகள் 1—1—69 அன்று ரூ. 15 என்ற விதத்தில் வெளியிடப்பட்டன. ரூ. 1,37,500 வருமான வரிக்காகக் கொடுக்கப்பட்டது. இலாபஈவு கொடுக்கப்பட்டதுபற்றிய விவரம்:

1968 ஆம் ஆண்டிற்காக 10% இலாபஈவு கொடுக்கப்பட்டது. (25% வரி கழித்த பிறகு)

1969 ஆம் ஆண்டிற்காக இடைக்கால இலாபஈவு 5% கொடுக்கப் பட்டது (வரி நீங்கலாக).

2. இராயல் லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்புகள் அளிக்கப் பட்டுள்ளன.

	1971	1970
	ரூ.	ரூ.
ரொக்கம்	20,000	28,100
கடனாளிகள்	21,100	30,800
முன்செலுத்திய செலவு	3,000	3,950
சரக்கிருப்பு	89,200	93,400
நிலையான சொத்துகள்	2,00,000	1,52,000
	2,93,300	2,48,250
கடனீந்தோர்	48,000	28,000
கடன்பத்திரங்கள்	—	50,000
பங்குமுதல்	1,50,000	1,00,000
மதிப்புயர்வு	10,000	—
இலாப நட்டக் க/கு	85,300	70,250
	2,93,300	2,48,250

மேல் விவரங்கள்

1. இவ்வாண்டு இலாபம் ரூ. 27,000
2. தேய்மானம் ரூ. 10,000
3. இலாபஈவு கொடுத்தது ரூ. 12,000
4. ரூ. 78,000-க்கு ஒரு கட்டடம் வாங்கப்பட்டது. ரூ. 30,000 அடக்க விலையுள்ள ஓர் இயந்திரம் பயனற்றதாகக் கருதிவிடப் பட்டது. அந்த இயந்திரத்தின்மீது சேர்ந்துள்ள தேய்மானம் ரூ. 30,000. ரொக்க நடமாட்ட அறிக்கை தயாரிக்கவும்.

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

1. Principles of Management Accounting, BY MANMOHAN & GOYAL.
2. Management Accountancy, BY J. BATTEY.
3. Lectures on Costing, BY SWAMINATHAN.
4. Management Accounting Principles, BY R. N. ANTHONY.
5. Lectures on Management Accountancy, BY B. K. BASU.
6. Management Accountancy, BY BROWN AND HOWARD.
7. Managerial Accounting, BY MURPHY M. E.,
8. Wheldon's Cost Accounting and Costing Methods, BY WHELDON
9. Accounting for Management Control, HOMGREN. C. T.

கலைச்சொற்கள்

A

Abandonment Decision — கைவிடும் முடிவு
Absorption Costing — சேர்ப்பு அடக்கவிலை
Acid Test Ratio — கடுஞ்சோதனை விகிதம்
Administration of Finance — நிதி நிர்வாகம்
Advance — முன்பணம்
Angle of Incidence — படுகோணம்
Annuity Table — ஆண்டுப்படி அட்டவணை
Average Collection Period — சராசரி வசூல் காலம்
Average Daily Sales — சராசரி நாள் விற்பனை

B

Bills Payable — செலுத்தவேண்டிய உண்டியல்கள்
Bonus Shares — மேலூதியப் பங்கு
Break-Even Chart — இலாப நட்டமற்ற நிலையறி படம்
Break-Even Point — இலாப நட்டமற்ற நிலைப்புள்ளி
Break-Even Sales — இலாப நட்டமற்ற நிலை விற்பனை
Budget — மதிப்பீடு
Budgetary Control — மதிப்பீட்டுக் கட்டுப்பாடு

C

Capitalisation — முதலாக்கல்
Capital Gearing Ratio — பங்குமுதல் விகிதம்
Capital Reserve — முதலினக் காப்பு
Capital Expenditure — முதலினச் செலவு
Cash Budget — ரொக்க மதிப்பீடு
Cash Discount — ரொக்கத் தள்ளுபடி

Cash Flow Statement — ரொக்க நடமாட்ட அறிக்கை
Cost-Volume-Profit relationship — அடக்கவிலை-அளவு-இலாபத் தொடர்பு
Charges — பற்றினங்கள்
Credit Period — கடன் காலவரையறை
Contingencies — வருநிகழ்வுகள்
Contribution — பங்களிப்பு
Control — கட்டுப்பாடு
Controller — கட்டுப்பாட்டு அதிகாரி
Control Adviser — கட்டுப்பாட்டு அறிவுரையாளர்
Cost Accounting — அடக்கவிலைக் கணக்குப் பதிவியல்
Cost Control — அடக்கவிலைக் கட்டுப்பாடு
Cost Data — அடக்கவிலை விவரம்
Cost Records — அடக்கவிலைப் பதிவேடுகள்
Cost Benefit Analysis — அடக்கவிலைப் பயன் ஆய்வு
Consumer Resistance — நுகர்வோர் எதிர்ப்புத்திறன்
Co-ordination — ஒருங்கிணைப்பு
Cum-dividend — இலாப ஈவுடன்
Current Asset — நடைமுறைச் சொத்து
Current Ratio — நடைமுறை விகிதம்

D

Debenture — கடன்பத்திரம்
Debt-Equity Ratio — புற, அகப்பொறுப்புகள் விகிதம்
Debtors Turnover Ratio — கடனாளிகள் விற்பனை விகிதம்
Decision Making — முடிவெடுத்தல்
Denominator — பகுதி எண்
Direct Cost — நேரடி அடக்கவிலை
Discounted Cash Flow Method — தள்ளுபடிக்குட்பட்ட ரொக்க நடமாட்ட முறை
Dividend Equilisation Fund — இலாபஈவுச் சமன்பாட்டு நிதி

E

Excessive Present Value — கூடுதலான தற்போதைய மதிப்பு
Executive — செயல்துறை அதிகாரி

F

Financial Accounting — நிதிநிலைக் கணக்குப் பதிவு
Forecasting — முன் மதிப்பீடு செய்தல்
Fixed Asset Turn over Ratio — நிலையான சொத்துகள் விற்பனை விகிதம்

Fund — நிதி
Fund Flow Statement — நிதி நடமாட்ட அறிக்கை
Fund Position — நிதி நிலை

H

Hierarchy of Control — கட்டுப்பாட்டின் படி நிலை

I

Idle Fund — பயன்படுத்தா நிதி
Industry — தொழில்
Inflexibility — மாறுத் தன்மையுடைய
Interpretation of Ratio — விகிதங்களின் பொருளாய்வு
Inventory Turn over Ratio — சரக்கிருப்பு விற்பனை விகிதம்
Investments — முதலீடுகள்

K

Key Factor — முக்கிய காரணி

L

Lag in Payment — செலுத்துதலிலுள்ள கால இடைவெளி
Log Chart — கப்பலின் வேகநிலையறி படம்
Long Term Loan — நீண்ட காலக் கடன்கள்
Line Officer — நேரடி அதிகாரி

M

Make or Buy Decision — தயாரிக்கும் அல்லது வாங்கும் முடிவு
Management — மேலாண்மை
Management Accountancy — மேலாண்மைக் கணக்குப் பதிவியல்
Marginal Costing — இறுதிநிலைச் செலவு
Margin of Safety — பாதுகாப்புப் பகுதி
Master Budget — தொகுப்பு மதிப்பீடு

N

Naked Debentures — வெற்றுக் கடன்பத்திரம்
Net Current Assets — நிகர நடைமுறைச் சொத்துகள்
Notional Cash Concept — கற்பனை ரொக்கக் கொள்கை
Numerator — தொகுதி எண்

O

Organisation — அமைப்பு
Operating Ratio — நடைமுறைச் செலவு விகிதம்
Operating Supervisor — நடைமுறைக் கண்காணிப்பாளர்
Over Capitalisation — மிகை முதலாக்கல்
Over Trading — மிகை வணிகம்

P

Part of a Machine — பொறியின் ஒரு பகுதி
Pay Back Period — முதலீடு மீட்புக் காலம்
Percentage Ratio — விழுக்காடு விகிதம்
Period of Manufacture — தயாரிப்புக் காலம் அல்லது உற்பத்திக் காலம்
Philosophy of Management — மேலாண்மைத் தத்துவம்
Profit Volume Ratio — பங்களிப்பு விகிதம்
Proposed Dividend — தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு
Proprietory Ratio — உரிமையாளர் விகிதம்

R

Return on Total Resources — மொத்த முதலினங்கள் ஈட்டிய மீள்வரவு விகிதம்

S

Sales Budget — விற்பனை மதிப்பீடு
Sinking Fund — கடன்கழிவு நிதி
Sources And Application of Fund — நிதிநிலைப் பயன்பாட்டு அறிக்கை
Staff Officer — அலுவலர் அதிகாரி
Status of Controller — கட்டுப்பாட்டு அதிகாரியின் தகுநிலை
Standard Costing — திட்ட அடக்க விலை

T

Tax Free Dividend — வரி நீக்கிய இலாபஈவு
Tax Liability — வரிப் பொறுப்பு
Time Adjusted Rate of Return — காலத்திற்கேற்பச் சரிசெய்யப் பட்ட மீள்வரவு
Top Management — உயர் மேலாண்மை
Transfer to General Reserve — பொதுக் காப்பிருப்புக்கு மாற்றம்

U

Under Capitalisation — குறை முதலாக்கல்
Unit — அலகு, ஒன்று

V

Variable Cost — மாறுஞ் செலவு

W

Where got, Where gone — எங்குக் கிடைத்தது எங்குச் சென்றது
Working Capital — நடைமுறை முதல்
Working Days — வேலை நாள்கள்
Written Down Value — எழுதி இறக்கப்பட்ட மதிப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

1975 ஏப்ரல் வரை 650 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

★

மேலும், விரைவில் வெளிவருபவை

பொறியியல்	—	39 நூல்கள்
சட்டம்	—	17 ,,
மருத்துவம்	—	18 ,,
இயற்பியல்	—	23 ,,
வேதியியல்	—	20 ,,
தாவரவியல்	—	13 ,,
விலங்கியல்	—	14 ,,
கணிதம்	—	17 ,,
வணிகவியல்	—	37 ,,
பொருளாதாரம்	—	21 ,,
புவியியல்	—	11 ,,
வரலாறு	—	29 ,,
மனையியல்	—	1 ,,
தத்துவம்	—	4 ,,
உளவியல்	—	8 ,,
புள்ளியியல்	—	8 ,,
கல்வி	—	14 ,,
நிலப்பொதியியல்	—	6 ,,
அரசியல்	—	19 ,,

கிடைக்குமிடம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,

சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்